
# TNPSC தேர்வுப் பெட்டகம்


## நடப்பு நிகழ்வுகள் - மே 2020


www.tnpscthervupettagam.com









SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ........ 8
தமிழ்நாடு செய்திகள் ........ 27
காவிரி நீர் மேலாண்மை ஆணையம் ........ 27
சிங்கம்பட்டி ஜமீன் ........ 27
தேசியச் செய்திகள் ........ 28
ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத் திட்டம் ........ 28
CARES திட்டம் ........ 28
மத்திய அலுவல் கட்டிடம் (விஸ்டா) ........ 28
சொட்டு நீர்ப் பாசனம் ........ 29
மூங்கில் மாநாடு ........ 29
இந்தியாவில் மதுபானம் மற்றும் GST ........ 29
இந்தியாவில் இறப்புச் சான்றிதழ் ........ 30
சாரஸ் சேகரிப்பு ........ 30
GARUD ........ 31
தர்பார் மாற்றம் (தலைநகர் மாற்றம்) ........ 31
கில்ஜிட் – IMD ........ 32
இந்தியாவில் இணையச் சேவை ஊடுருவல் ........ 32
இந்தியாவில் இணையச் சேவைப் பயன்பாடு ........ 32
வந்தே பாரத் திட்டம் ........ 33
கைலாஷ் மானசரோவருக்கு புதிய சாலை ........ 33
பிரதமர் ஆராய்ச்சி தோழமைத் திட்டம் (PMRF) ........ 34
திட்டங்கள் மீதான NBW அனுமதி ........ 35
சாகர் திட்டம் ........ 36
மாதிரிப் பதிவுகள் முறை ........ 36
அடல் ஓய்வூதியத் திட்டம் ........ 37
இந்திய மாநில அளவிலான நோய்த் தீவிர முன்னெடுப்பு ........ 38
தோல்கா தேர்தல் குறித்த தீர்ப்பு ........ 38
தற்சார்பு மீதான பிரதமரின் அறிவிப்புகள் ........ 39
ஆத்ம நிர்பர் பாரத் அபியான் ........ 39
சொஹ்ராய் கோவர் ஓவியம் ........ 41
இந்தியா-சீனா எல்லைத் தகராறு ........ 42
முழுமையான நீதிக்கான உச்ச நீதிமன்றத்தின் அதிகாரம் ........ 42
பொதுக் கணக்குக் குழு தலைவர் ........ 43
மாநிலங்களுக்குக்கான நிதிப் பகிர்வு ........ 43
அரிசியின் நேரடி விதைப்பு ........ 44
இந்தியாவின் ஆத்ம நிர்பர் பாரத் அபியான் ........ 44
EventBot ........ 45
திட்டம் 39A ........ 45
குடியரசுத் தலைவரின் ஊதியக் குறைப்பு ........ 46

சசேத் கப்பல் ... 46
ஆத்மநிர்பர் பாரத் – 5வது நிதித் தொகுப்பு ... 47
61வது குதிரைப் படை ... 49
கழிவுகளற்ற நகரங்களின் நட்சத்திரத் தரவரிசை ... 49
அதிதீவிரப் புயல் – ஆம்பன் ... 50
கொனார்க் சூரியக் கோயில் – சூரிய நகரி திட்டம் ... 50
புதிய பொதுத் துறை தனியார்மயமாக்கல் கொள்கை ... 51
உலகில் PPE உற்பத்தியாளர் ... 52
பணி நேரத்தை அதிகரிப்பதற்கான அவசரச் சட்டம் ... 52
குடோல் முன்னெடுப்பு ... 53
CoAST இந்தியா (ஒன்றிணைதல்/கோவிட் நடவடிக்கை உதவிக் குழு) ... 53
ஜம்மு காஷ்மீரில் சட்டப்படியான வாழ்வகத்தின் வரையறை ... 54
சம்பா சுரங்கப் பாதை ... 55
ஜம்மு காஷ்மீருக்கான சட்டப்படியான வாழ்வகம் குறித்த விதிகள் ... 55
பிரதான் மந்திரி கரீப் கல்யாண் யோஜனா ... 56
இந்தியாவில் நோய்த் தடுப்பு மருந்தின் மேம்பாடு ... 56
சர்வதேசச் செய்திகள் ... 57
சிறந்த அமெரிக்கப் பொருளாதார மறுமலர்ச்சி தொழில் குழுக்கள் ... 57
தென் சீனக் கடலில் அமெரிக்க கப்பல்கள் ... 57
USCIRF வருடாந்திர அறிக்கை 2020 ... 58
உலகளாவியத் தீவிரவாதக் குறியீடு 2019 ... 58
நிரந்தரப் பிரதிநிதி - ஐ.நா தூதர் ... 58
சிறப்பு 301 அறிக்கை ... 59
உள்நாட்டு இடப்பெயர்வு பற்றிய உலகளாவிய அறிக்கை - 2020 ... 59
மீகாங் நதி தகராறு ... 60
நிதிநிலை அறிக்கையின் வெளிப்படைத்தன்மை ... 61
e-RMB – டிஜிட்டல் நாணயம் ... 61
ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் புள்ளி விவரம் மற்றும் குறிகாட்டிகள் 2019-20 ... 61
மிகவும் புகழ்பெற்ற மத்திய வங்கி ... 62
அணி சேரா இயக்க மாநாடு ... 62
தாயகத்திலேயே இழத்தல் ... 63
போர்ப் பதக்கம் ... 63
ஈரானின் புதிய நாணயம் ... 64
கடுமையான நடவடிக்கைக் குறியீடு ... 64
உலகளாவிய ஊட்டச்சத்து அறிக்கை 2020 ... 65
உலக சுகாதார அமைப்பின் தலைமை ... 65
பார்வையாளர் நாடாக தைவான் ... 66
கோவிட் – 19 உலகளாவிய ஒற்றுமைச் சோதனை ... 66
தைவான் – சீனா பிரச்சினை ... 67
WTO-ன் தலைமை ... 67
காலாபானி பிரச்சினை ... 68
73வது உலக சுகாதார மன்றத்தின் சந்திப்பு ... 68

பால்டிக் பயணக் குமிழி ........ 69
இஸ்ரேல் பிரதமர் ........ 69
புதிய நீர் வழிகள் ........ 70
உலக சுகாதார அமைப்பு நிறுவனம் ........ 71
புதிய வளர்ச்சி வங்கியின் புதிய தலைவர் ........ 71
பொருளாதாரச் செய்திகள் ........ 71
ஒரே தேசம் ஒரே குடும்ப அட்டை (ரேஷன் அட்டை) ........ 71
E – NAM ........ 72
முக்கியத் துறைகள் ........ 73
காடுகளின் சிறு உற்பத்திப் பொருட்கள் ........ 73
மீன்வளத் துறைக்கான அறிவுறுத்தல்கள் ........ 74
இந்தியாவில் நிலக்கரி (Coking Coal) ........ 74
இந்தியாவில் தேங்காய் நார் உற்பத்தி ........ 74
PM CARES நிதி ........ 75
PM – KISAN திட்டம் ........ 76
ஆத்மநிர்பர் திட்டம் – இரண்டாவது நிதித் தொகுப்பு ........ 76
ஆத்மநிர்பர் பிரச்சாரம் – 3வது நிதித் தொகுப்பு ........ 77
ஆத்மநிர்பர் பிரச்சாரம் – நான்காவது நிதித் தொகுப்பு ........ 77
GOAL திட்டம் ........ 78
FME ........ 78
ECLGS ........ 79
பிரதான் மந்திரி மத்சய சம்பாதா யோஜனா ........ 79
பாதுகாப்புச் சோதனை உள்கட்டமைப்புத் திட்டம் ........ 80
பிரதான் மந்திரி வய வந்தனா யோஜனா ........ 81
பொது நிதியியல் விதிகள் ........ 81
புவிசார் தேங்காய் நார் ஜவுளிகள் ........ 82
அரசின் கடன் குறித்த நிலை அறிக்கை ........ 82
உலக எஃகு அறிக்கை ........ 82
FSDC ........ 83
இந்திய அணிகலன்கள் குறித்த அறிக்கை ........ 83
இந்தியாவில் அந்நிய நேரடி முதலீடு – 2019 / 20 ........ 83
மின்னணு நிரந்தரக் கணக்கு எண் (e-PAN/electronic Permanent Account Number) ........ 84
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 84
19 விண்மீனிடை சிறுகோள்கள் ........ 84
கோவிட் நோய்த் தொற்றிற்கான மருத்துவச் சோதனைகள் ........ 85
ஹப்பிள் விண்வெளித் தொலைநோக்கி ........ 87
நானோ – நுண்ணுயிர் கிருமி நாசினி ........ 87
மைக்கோபாக்டீரியம் MW ........ 88
திறன்மிகு குப்பைக் கூடை ........ 88
கோவிட் நடவடிக்கை ஒத்துழைப்பு ........ 88
நானோ பிளிட்ஸ் முப்பரிமாணம் (NanoBlitz-3D) ........ 89
கோவிட் – 19 கூறுகளைத் துரிதப்படுத்துதல் ........ 89

விலங்குவழித் தொற்று நோய்கள் ..... 89
PRACRITI ..... 90
ருதார் செயற்கை சுவாசக் கருவி ..... 91
இரண்டு கருந்துளைகள் ஒன்றிணைதல் ..... 91
பெலுடா மற்றும் Crispr தொழில்நுட்பம் ..... 92
மீள் செவுள்களிலிருந்து வினையூக்கி ..... 93
ஓசோன் அடுக்கு ..... 93
திரவ ஒப்புருவாக்கக் குறியீடு ..... 93
BUBBLE – வங்காள விரிகுடா எல்லையடுக்கு சோதனை ..... 94
தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரியைக் கண்டறிதல் (Bug Snifer) ..... 95
ரெம்டெசிவிர் மருந்து ..... 95
eCovSens ..... 95
புறஊதாக் கதிர் வெடிப்பமைவு ..... 96
ஆரோக்கிய சேது மித்திர் ..... 97
புதிய கோவிட் அறிகுறிகள் ..... 97
ஓரின நகல் சமநிலைப்படுத்தும் எதிர்ப் பொருள் ..... 98
ஹைபோக்சியா ..... 98
டாக்கிஸ் – இத்தாலிய நிறுவனம் ..... 98
கொரானா வைரஸ் ஆய்வுக் கூடச் சோதனை முறை ..... 99
CARD திட்டம் ..... 99
ஆயுஷ் மருத்துவப் பரிசோதனைகள் ..... 100
முதல் துணியாலான முகமூடி ..... 100
ஒளிக் கண்டுபிடிப்பான் ..... 100
பழுப்பு நிற குள்ளக் கோள்கள் ..... 100
மனித ஓரின நகல் நோய் எதிர்ப்பொருள் – இந்தியா ..... 102
இந்தியாவில் பாவிபிரவிர் மருந்துச் சோதனை ..... 102
PiCoVacc – சீனாவின் தடுப்பு மருந்து ..... 102
இந்தியக் கொரானா வைரஸ் தடுப்பு மருந்து ..... 103
கோவிட் கவச் எலிசா சோதனை ..... 103
DRUVS சிற்றறை (கேபினெட்) ..... 104
சூரிய ஒளி சக்திக்கான சந்தையில் இந்தியா முன்னிலை 2020 - அறிக்கை ..... 105
ஸ்வஸ்த் வாயு ..... 105
COBAS 6800 ..... 106
Z – சோதனை (ஸ்கேன்) முறை ..... 106
உட்செலுத்தக் கூடிய பட்டு-பட்டிழைப் புரதத்தை அடிப்படையாகக் கொண்ட ஹைட்ரோ கூழ்மம் (ஹைட்ரோ ஜெல்) ..... 107
இலகுரக கார்பன் (கரிமப்பொருள்) நுரை ..... 107
சூப்பர் பூமி (மிகப்பெரிய பூமி) ..... 108
சூரிய ஒளி மந்த நிலை ..... 108
12,000 எச்பி மின்சார இரயில் என்ஜின் ..... 109
அகாப்பே சித்திர மாக்னா ..... 109
சிண்டெமிக் ..... 109

சாதனமற்ற முறையில் சுயப் பரிசோதனை ........ 110
ANTIA ........ 110
WFIRST ........ 111
மேக வரைபடம் ........ 112
ஆர்டி-விளக்கை அடிப்படையாகக் கொண்ட சோதனை ........ 112
விரைவான நிலையற்ற நீல ஒளியியல் (FBOT) ........ 112
SERS உணர்தல் ........ 113
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 113
JNTBGRI ........ 113
சூறாவளிப் பெயர்களின் புதிய பட்டியல் ........ 114
பீட்டர்ஸ்பெர்க் காலநிலை உரையாடல் ........ 115
இந்தியாவில் காற்று மாசுபாடு ........ 116
CRISIL ஆராய்ச்சி அறிக்கை – புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ........ 116
உலக ஆற்றல் ஆய்வு – 2020 ........ 117
விசாகப்பட்டினம் வாயுக் கசிவு ........ 117
வங்காளப் புலி ........ 118
கடுமையான பொறுப்புடைமை ........ 119
ஸ்பைனோசாரஸ் எஜிப்டிகஸ் ........ 120
பயிர்கள் மீதான காசநோய் மருந்துகளுக்குத் தடை ........ 120
இந்தியாவில் கார்பன் டை ஆக்ஸைடு உமிழ்வுகள் ........ 121
உலகளாவிய ஆற்றல் மாற்றக் குறியீடு (GET Index - Global Energy Transition Index) ........ 122
உலகளாவிய வன வளங்கள் குறித்த ஆய்வு – 2020 ........ 122
ஃபெரல் குதிரை (Feral horse) ........ 123
சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பகுதி (ESA) ........ 124
பல்லுயிர்ப் பாதுகாப்பு குறித்த 5 முன்னெடுப்புகள் ........ 125
உலகளவில் முக்கியத்துவம் வாய்ந்த பாரம்பரிய வேளாண் முறைகள் (GIAHS) ........ 125
மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்துப் புதிய தாவர இனங்கள் ........ 126
இந்தியாவில் வெட்டுக் கிளிகள் தாக்குதல் ........ 126
சேல்கி பரிந்துரைக்கப்பட்ட காப்புக் காடுகள் (PRF) ........ 127
பஞ்சாப்பில் தாளடி எரிப்பு ........ 127
அனல் காற்று ........ 128
கங்கை ஓங்கில் (டால்பின்) சரணாலயம் ........ 129
சாரு கடற்காய் ........ 129
மாநிலச் செய்திகள் ........ 130
காஷ்மீர் குங்குமப் பூ ........ 130
கஜோங் மற்றும் சக்மா ........ 130
ஆப்பிரிக்கப் பன்றிக் காய்ச்சல் ........ 131
மத்தியப் பிரதேசத்தின் கோவிட் – 19 நோய்த் தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகள் ........ 131
ப்ரூ – ரியாங் அகதிகள் பிரச்சினை ........ 132
ஆயுஷ் கவச் செயலி ........ 132
பிஷ்னு சேந்திரா பார்வா ........ 133
நிஹாக் ........ 133

உத்தரப் பிரதேசத்தில் தொழிலாளர் சட்டங்கள் ........ 133
பெங்களூருவில் மிகப்பெரிய அளவில் ஏற்பட்ட ஒலி ........ 133
ஒடிசாவில் ஒப்பந்தப் பண்ணையம் ........ 134
புத்திமாரி நதி ........ 134
பீகாரின் புவிசார் குறியீடு கொண்ட தயாரிப்புகள் ........ 134
பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ........ 135
சர்வதேச அரபி மொழி புனைவுப் பரிசு – 2020 ........ 135
புலிட்சர் பரிசு 2020 ........ 135
ஆர்டர் ஆஃப் ரைசிங் சன் (உதய சூரியனின் ஆணை) விருது ........ 135
2019 ஆம் ஆண்டின் அலெக்சாந்தர் டால்ரிம்பிள் விருது ........ 136
ராம்கின்கர் பாய்ஜ் ........ 137
ஆண்டின் ராணுவப் பாலின ஆதரவாளர் விருது ........ 137
விளையாட்டுச் செய்திகள் ........ 138
MRF சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் டெஸ்ட் போட்டித் தரவரிசை ........ 138
உமிழ்நீரைப் பயன்படுத்தத் தடை ........ 138
முக்கிய தினங்கள் ........ 138
தொழிலாளர் தினம் - மே 01 ........ 138
மகாராஷ்டிரா / குஜராத் தினம் - மே 01 ........ 138
உலக சூரை மீன் தினம் – மே 2 ........ 139
சர்வதேச வானியல் தினம் – மே 2 ........ 139
உலகப் பத்திரிக்கைச் சுதந்திர தினம் – மே 03 ........ 140
உலகச் சிரிப்பு தினம் – மே 03 ........ 140
சர்வதேசத் தீயணைப்பு வீரர்கள் தினம் – மே 04 ........ 141
நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் தினம் – மே 04 ........ 141
உலக ஆஸ்துமா தினம் – மே 05 ........ 141
சர்வதேச மருத்துவத் தாதிகள் தினம் – மே 05 ........ 142
வெசாக் – புத்த பூர்ணிமா - முழு நிலவு தினம் – மே 07 ........ 142
உலகத் தடகள தினம் – மே 07 ........ 142
உலக செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறை நாள் – மே 8 ........ 143
ஐரோப்பாவின்  வெற்றி தினம் – மே 8 ........ 143
உலக இரத்த அழிவுச்சோகை தினம் – மே 8 ........ 143
உலக இடம்பெயரும் பறவைகள் தினம் (WMBD) – மே 09 ........ 144
உலக நியாயமான வர்த்தக தினம் – மே 09 ........ 145
உலக கை சுகாதார தினம் – மே 05 ........ 145
உலக அன்னையர்கள் தினம் – மே 10 ........ 145
தேசியத் தொழில்நுட்ப தினம் – மே 11 ........ 146
சர்வதேச செவிலியர்கள் தினம் – மே 12 ........ 146
அருகி வரும் உயிரினங்கள் தினம் – மே 15 ........ 147
சர்வதேச குடும்பங்கள் தினம் – மே 15 ........ 147
சர்வதேச ஒளி தினம் – மே 16 ........ 148
45வது சிக்கிம் தினம் – மே 16 ........ 148
உலக உயர் இரத்த அழுத்த தினம் – மே 17 ........ 149

உலகத் தகவல் சமூக தினம் – மே 17 ........ 149
உலக எய்ட்ஸ் தடுப்பு மருந்து தினம் – மே 18 ........ 149
சர்வதேச அருங்காட்சியக தினம் – மே 18 ........ 149
உலக தேனீ தினம் – மே 20 ........ 150
உலக அளவையியல் தினம் – மே 20 ........ 150
உரையாடல் மற்றும் வளர்ச்சிக்கான கலாச்சாரப் பன்முகத் தன்மைக்கான உலக தினம் ........ 150
முதலாவது சர்வதேச தேயிலை தினம் – மே 21 ........ 150
தேசிய தீவிரவாத எதிர்ப்பு தினம் – மே 21 ........ 151
சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மை தினம் – மே 22 ........ 151
உலக ஆமைகள் தினம் – மே 23 ........ 151
சர்வதேச மகப்பேறியல் புழை ஒழிப்பு தினம் மே – 23 ........ 151
உலக கடல் பசு தினம் – மே 28 ........ 152
சர்வதேச ஐக்கிய நாடுகள் அமைதி காப்புப் படையினர் தினம் – மே 29 ........ 152
கோவா மாநில தினம் – மே 30 ........ 153
உலகப் புகையிலை எதிர்ப்பு தினம் – மே 31 ........ 153

# TNPSC துளிகள்

- சமீபத்தில் இடப்பெயர்வு மற்றும் வளர்ச்சிக் குறிப்பு அறிக்கையானது உலக வங்கியின் கீழ் இயங்கும் இடப்பெயர்வு, தாய்நாட்டிற்குப் பணம் அனுப்புதல் பிரிவு மற்றும் வளர்ச்சிப் பொருளாதாரம் என்ற அமைப்பினால் தயாரிக்கப்பட்டு, வெளியிடப் பட்டுள்ளது.
- இந்திய விமான நிலைய ஆணையமானது (AAI - Airport Authority of India) திருச்சி சர்வதேச விமான நிலையத்தை வகை-I என்ற பிரிவிலிருந்து வகை-II என்ற பிரிவிற்கு மேம்படுத்தி உள்ளது.
    - அதே சமயத்தில் தூத்துக்குடி, பிரயாக்ராஜ், ஜபல்பூர், ஹீப்ளி மற்றும் கோரக்பூர் போன்ற விமான நிலையங்கள் வகை-IV என்ற பிரிவிலிருந்து வகை-III என்ற பிரிவிற்கு மாற்றப் பட்டு உள்ளது.
- சுவீடன் நாடானது கொரான வைரஸ் தொற்றைக் கையாளுவதற்கு மந்தை நோய் எதிர்ப்புச் சக்தி என்ற அணுகுமுறையைக் கையில் எடுத்துள்ளது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும் மேம்படுத்தப்பட்ட அறிவியல் ஆராய்ச்சிக்கான ஜவஹர்லால் நேரு மையத்தை (JNCASR - Jawaharlal Nehru Centre for Advanced Scientific Research) சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் அல்சைமர் நோய்க்காக ஒரு இயற்கைப் பொருளை (மருந்து) கண்டறிந்துள்ளனர்.
    - பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் பெர்பெரைன் என்ற பொருளானது பெர்-டி ஆக மாற்றப்படுகின்றது.
- இயந்திர மனிதச் சாதனமான மருத்துவமனை நல உதவி இயந்திர மனிதச் சாதனம் (HCARD - Hospital Care Assistive Robotic Device) ஆனது முன்கள சுகாதார நலப் பணியாளர்களுக்கு உதவுவதற்காகத் தொடங்கப் பட்டுள்ளது.
    - இது மேற்கு வங்காளத்தின் துர்காபூரில் அமைந்துள்ள சிஎஸ்ஐஆர் ஆய்வகத்தினால் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- பிரிக்ஸ் அமைப்பில் உள்ள வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கோவிட் – 19 நோய்த் தொற்றைத் தடுப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க இருக்கின்றனர்.
    - இந்த அமைப்பின் சுழற்சி முறைத் தலைவரான ரஷ்யாவினால் இந்தக் காணொலிக் கருத்தரங்கு நடத்தப்பட இருக்கின்றது.
- கேரள அரசு அம்மாநிலத்தின் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் ஊதியத்தில் அடுத்த 6 மாத காலத்திற்கு 6 நாட்கள் என்ற அளவில் ஊதியப் பிடித்தத்திற்கான (மாதம் 6 நாட்கள்) அவசரச் சட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவச் சேர்க்கைக்கான தேசியத் தகுதி காண் நுழைவுத் தேர்வானது அரசியலமைப்பின் கீழ் உள்ள சிறுபான்மையினர் உரிமைகளை மீறவில்லை என்று இந்திய உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.
    - இந்தத் தீர்ப்பானது 2012 ஆம் ஆண்டில் வேலூரில் உள்ள கிறிஸ்டியன் மருத்துவக் கல்லூரியினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீது வழங்கப் பட்டுள்ளது.
- ஜெர்மனியானது தனது நாட்டில் ஹெஸ்புல்லாஹ் அமைப்பை ஒரு தீவிரவாத அமைப்பாக அறிவித்துள்ளது.
    - ஹெஸ்புல்லாஹ் என்பது லெபனான் நாட்டில் உள்ள ஷியா பிரிவு இஸ்லாமிய அரசியல் கட்சியாகும்.

- இந்தியக் குத்துச் சண்டைக் கூட்டமைப்பானது சர்வதேசக் குத்துச் சண்டை மன்றத்திற்குப் போட்டியை நடத்துவதற்கான கட்டணத்தைச் செலுத்தத் தவறியதைத் தொடர்ந்து, 2021 ஆம் ஆண்டில் ஆண்களுக்கான உலகக் குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டியை நடத்துவதற்கான உரிமையை இந்தியா இழந்துள்ளது.
  - தற்பொழுது இந்தப் போட்டித் தொடரானது செர்பியாவினால் நடத்தப்பட இருக்கின்றது.
- பஞ்சாப் மாநில அரசானது கோவிட் – 19 நோய்த் தொற்றுப் பரவலைக் கையாளுவதற்காக மே 17 ஆம் தேதி வரை ஊரடங்கை நீட்டித்துள்ளது.
- ஒரு தலைசிறந்த வங்கித் துறை நிபுணரான சுரேஷ் என் படேல் என்பவர் மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்தின் புதிய ஊழல் கண்காணிப்பு ஆணையராக நியமிக்கப் பட்டுள்ளார்.
  - இவருக்கு மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையரான சஞ்சய் கோத்தாரி அவர்களால் காணொலி மூலம் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.
- நாகாலாந்து மாநில அரசானது பெட்ரோல் மற்றும் டீசலின் மீது கோவிட் – 19 செஸ் கட்டணத்தை விதித்துள்ளது. இந்தியாவில் கோவிட் – 19 செஸ் கட்டணத்தை அறிமுகப் படுத்திய முதலாவது மாநிலம் நாகாலாந்து ஆகும்.
- மணிப்பூரின் சக்-ஹாவ் என்று அழைக்கப்படும் கருப்பு அரிசி, உத்தரப் பிரதேசத்தின் கோரக்பூர் களிமண் பொம்மைகள் (டெரகோட்டா) மற்றும் கோவில்பட்டியின் கடலை மிட்டாய் ஆகியவற்றிற்குப் புவிசார் குறியீடு வழங்கப் பட்டுள்ளது.
  - 2004-05 ஆம் ஆண்டில், டார்ஜிலிங் தேநீருக்கு இந்தியாவில் முதல் புவிசார் குறியீடு வழங்கப் பட்டது குறிப்பிடத்தக்கது ஆகும்.
- தேசிய உள்கட்டமைப்புத் தொடர் (National Infrastructure Pipeline) குறித்த அதானு சக்கரவர்த்தி தலைமையிலான பணிக்குழு தனது இறுதி அறிக்கையை நிதி அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளது.
  - 2025 நிதியாண்டில் 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாறும் இந்தியாவின் இலக்கை நிறைவேற்றுவதில் தேசிய உள்கட்டமைப்புத் தொடரானது குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கும்.
- இந்தியாவின் பஹால் திட்டத்திற்கு 3 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்குவதாக சர்வதேச மேம்பாட்டிற்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனமானது அறிவித்துள்ளது.
  - பஹால் என்பது மலிவான சுகாதார அணுகல் மற்றும் நீண்ட ஆயுளுக்கான ஒரு கூட்டாண்மை ஆகும்.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் கீழ் இயங்கும் பல்கலைக் கழகமாக கருதப்படும் மேம்படுத்தப் பட்ட தொழில்நுட்பத்திற்கான பாதுகாப்பு நிறுவனமானது, "அதுல்யா" எனப்படும் நுண்ணலை உயிர்க்கொல்லியை வடிவமைத்துள்ளது.
  - கோவிட்-19 வைரஸை சிதையச் செய்ய இது பயன்படுத்தப் படுகிறது.
- கோவிட்-19 மீது கவனம் செலுத்துவதற்காக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும் தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தொடர்புக் குழுவானது YASH என்பதை அறிமுகப் படுத்தியுள்ளது.
  - YASH (Year of Awareness on Science and Health) – என்பதன் விரிவாக்கம் அறிவியல் மற்றும் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு ஆண்டு என்பதாகும்.
- ஐக்கிய அமெரிக்காவின் தேசிய வானூர்தியியல் மற்றும் விண்வெளி நிர்வாகமானது சந்திரனில் தரையிறங்குவதற்கான புதிய முறைகளை உருவாக்க ஸ்பேஸ்எக்ஸ், ப்ளூ ஆரிஜின் மற்றும் டைனடிக்ஸ் ஆகிய மூன்று விண்வெளி நிறுவனங்களைத்

தேர்ந்தெடுத்துள்ளது.

  - இது 2024 ஆம் ஆண்டிற்குள் விண்வெளி வீரர்களை சந்திரனுக்குக் கொண்டுச் செல்லும்.

- இந்திய ரயில்வேயானது பொது முடக்கத்தின் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் சிக்கித் தவிக்கும் பொது மக்களை அவர்களின் சொந்த ஊர்களுக்குத் திரும்பிக் கொண்டு வருவதற்காக ஷ்ராமிக் சிறப்பு இரயில் சேவைகளைத் (Shramik Special trains) தொடங்கியுள்ளது.

- கிசான் சபா செயலியானது சிஎஸ்ஐஆர் – தில்லியில் உள்ள மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் (CSIR – CRRI/Central Road Research Institute) தொடங்கப் பட்டுள்ளது.

  - இது விவசாயிகளை விநியோகச் சங்கிலியில் இணைப்பதற்கும் சரக்குப் போக்குவரத்து மேலாண்மை அமைப்பில் இணைப்பதற்கும் வேண்டி பணியாற்றுகின்றது.

- திக்ரி பெக்ரா என்பது பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களில் நடைமுறையில் உள்ள ஒரு சமுதாயக் காவல் முறையாகும்.

  - இந்த மாநிலங்களில் 20 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய தீவிரவாத இயக்கங்களின் எழுச்சிக்குப் பிறகும் காலா கச்சாக் குழுவின் குற்றங்களைத் தடுப்பதற்காகவும் வேண்டி இது தொடங்கப் பட்டது.

- சமீபத்தில் அருணாச்சலப் பிரதேச மாநில முதல்வரான பெமா காந்து அம்மாநிலத்தின் மேலை சுபன்ஸ்ரீ மாவட்டத்தில் தபோரிஜோவில் பாயும் சுபன்ஸ்ரீ நதியின் மீது சீரமைத்துக் கட்டப்பட்ட "ஹாங்பன் தாதா" என்ற ஒரு முதன்மைப் பாலத்தைத் திறந்து வைத்தார்.

  - இந்த சீரமைப்புப் பணியை "அருணன்ங்க்" (ARUNANK) என்ற திட்டத்தின் கீழ் எல்லைச் சாலைகள் அமைப்பானது மேற்கொண்டது.

- திருநெல்வேலி மாநகராட்சி நிர்வாகமானது மாநிலத்தின் (தமிழ்நாடு) முதலாவது சமூக விலகல் திரையரங்கை உருவாக்கியுள்ளது.

- சமீபத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரரான உமர் அக்மல் என்பவர் ஊழல் தொடர்பான விவகாரங்களை வெளிப்படுத்தாத காரணத்திற்காக பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தினால் விளையாடுவதற்கு 3 ஆண்டுகளுக்குத் தடை செய்யப் பட்டுள்ளார்.

- மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தூய்மையான கங்கைக்கான தேசியத் திட்டமானது "IDEAthon" என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.

  - இது கோவிட் – 19 நோய்த் தொற்று எவ்வாறு நதி மேலாண்மை உத்திகளை மாற்றியமைக்கும் என்பதை ஆராயும் "நதி மேலாண்மையின் எதிர்காலம்" என்பதின் மீது கவனம் செலுத்துகின்றது.

- ரோப்பரில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமானது ஒரு தனிச்சுதந்திர தொகுதி உதவியாளர்களை அல்லது வார்டு பாட்டுகளை ('WardBot') வடிவமைத்து உள்ளது.

  - இது தனிமைப்படுத்தப்பட்ட அறைகளில் உள்ள கோவிட் – 19 நோயாளிகளுக்கு மருந்துகள் மற்றும் உணவுகளைச் சென்று வழங்கும் திறன் கொண்டது.

- அசாம் மாநில அரசானது மருந்துகளை வீடுகளுக்கேச் சென்று வழங்குவதற்காக "தன்வந்தரி" என்ற ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

  - இதன்படி 200 ரூபாய்க்குக் கீழே உள்ள மருந்துகள் அங்குள்ள நோயாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட இருக்கின்றன.

- இமாச்சலப் பிரதேச மாநில சுகாதாரத் துறையானது மின்னணு சஞ்சீவனி-ஒபிடி என்ற

இணையவாயிலின் மூலம் நோயுற்றவர்களுக்கு, அவர்களின் குடியிருப்புகளில் இலவசமாக ஆன்லைனில் (நிகழ்நேர) அறிவுரைகளை வழங்குதல் என்ற ஒரு தனித்துவமான கருத்தாக்கத்தை உருவாக்கியுள்ளது.

- கோவிட் – 19 நோய்த் தொற்றின் ஒரு பகுதியாக பிளாஸ்மா சிகிச்சையைச் சோதனை முயற்சியாகத் தொடங்கிய நாட்டின் முதலாவது அங்கீகரிக்கப்பட்ட ஆய்வு மையம் அகமதாபாத்தில் உள்ள சர்தார் வல்லபாய் படேல் மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஆகும்.
- பஜாஜ் ஆட்டோ நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரான ராகேஷ் சர்மா என்பவர் சர்வதேச மோட்டார் சைக்கிள் உற்பத்தியாளர் சங்கத்தின் (IMMA - International Motorcycle Manufacturers Association) தலைவராக 2 ஆண்டு காலத்திற்கு நியமிக்கப் பட்டு உள்ளார்.
    - IMMA என்பது உலக அளவில் இரு சக்கர வாகனங்களின் உற்பத்தித் தொழிற்துறையைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு சங்கமாகும்.
- “பாரத் சந்தை” என்று அழைக்கப்படும் ஒரு தேசிய மின்னணு முறையிலான வர்த்தகச் சந்தையானது அகில இந்திய வர்த்தகர்கள் கூட்டமைப்பினால் (CAIT - Confederation of All India Traders) தொடங்கப் பட்டுள்ளது.
    - இந்த முன்னெடுப்பானது மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தினால் வழி நடத்தப்பட்டு, ஆதரிக்கப் படுகின்றது.
- அமெரிக்க அதிபரான டொனால்டு டிரம்ப் இந்திய-அமெரிக்கரான அசோக் மைக்கேல் பிண்டோ என்பவரை சர்வதேச மறுகட்டமைப்பு மற்றும் வளர்ச்சி வங்கிக்கான (IBRD - International Bank of Reconstruction and Development) அமெரிக்கப் பிரதிநிதியாக நியமித்துள்ளார்.
    - IBRD, அதன் கடன் வழங்கும் அமைப்புகள் மற்றும் சர்வதேச வளர்ச்சி மன்றம் ஆகியவை இணைந்து “உலக வங்கி” என்று அழைக்கப்படுகின்றன.
- அமெரிக்கக் கருவூலத் துறையானது கோவிட் – 19 தொற்றின் மத்தியில் அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு உதவுவதற்காக வேண்டி இந்த வருடத்தின் இரண்டாம் காலாண்டில் 3 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்குக் கடன் வாங்கப் படும் என்று கூறியுள்ளது.
- ஆர்க்டிக் காலநிலை மற்றும் அதன் சுற்றுச்சூழலைக் கண்காணிப்பதற்காக இந்த ஆண்டின் இறுதியில் ரஷ்யா தனது முதலாவது ஆர்க்டிகா.எம் என்ற செயற்கைக் கோளை விண்ணில் செலுத்த இருக்கின்றது.
- 2021 ஆம் ஆண்டின் இளையோர் காமன்வெல்த் போட்டியானது டோக்கியோ ஒலிம்பிக் போட்டியின் தேதியுடன் ஒத்துப் போவதால் அது 2023 ஆம் ஆண்டிற்குத் தள்ளி வைக்கப் பட்டுள்ளது.
    - 17வது இளையோர் காமன்வெல்த் போட்டியானது 2021 ஆம் ஆண்டில் டிரினிடாட் மற்றும் டோபாகோவில் நடைபெறுவதாக இருந்தது.
- இந்தியக் கடற்படையானது வெளிநாட்டில் இருக்கும் இந்தியக் குடிமக்களை இந்தியாவிற்கு அழைத்து வரும் தனது முயற்சியின் ஒரு பகுதியாக “சமுத்திர சேது” (கடற் பாலம்) என்ற ஒரு நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.
    - இந்த நடவடிக்கையின் கீழ், ஐஎன்எஸ் ஜலஸ்வா மற்றும் மஹர் ஆகியவை இந்தியக் குடிமக்களை மீட்டுக் கொண்டு வருவதற்காக மாலத் தீவில் உள்ள மாலி துறைமுகத்திற்குக் கிளம்பியுள்ளது.
- சீனாவின் புதிய லாங் மார்ச் 5பி என்ற செயற்கைக் கோளை ஏந்திச் செல்லும் விண்கலனானது தனது முதலாவது விண்வெளிப் பயணத்தைத் தொடங்கியுள்ளது.
    - இது விண்வெளிக்குள் நாட்டின் புதிய தலைமுறை விண்வெளி வீரர்களை

கொண்டுச் செல்லும் சோதனை முயற்சி மற்றும் விண்வெளியில் இருந்து சரக்கைத் திரும்பக் கொண்டு வரும் சோதனை முயற்சி ஆகியவற்றை மேற்கொள்கிறது.

❖ சுரக்சித் தாதா – தாதி & நானா – நானி அபியான் ஆனது பிரமல் நிறுவனம் என்ற அமைப்புடன் இணைந்து நிதி ஆயோக்கினால் தொடங்கப் பட்டது.
  - இது கோவிட் நோய்த் தொற்றின் போது மூத்தக் குடிமக்களின் உடல் நலத்தை உறுதி செய்வதின் மீது கவனம் செலுத்துகின்றது.

❖ ஜார்க்கண்ட் மாநில அரசானது மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தின் கீழ் பணியாளர்களின் பணி நேரத்தை அதிகரிப்பதற்காக மூன்று திட்டங்களைத் தொடங்கியுள்ளது.
  - பிர்சா ஹரித் கிராம யோஜனா, நீலாம்பர் – பீதாம்பர் ஜல் சம்ரித் யோஜனா மற்றும் வீர் சாஹித் போட்டோ ஹோ கேல் விகாஸ் யோஜனா ஆகியவை இந்த 3 திட்டங்களாகும்.

❖ அமெரிக்க அதிபர் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பிற்கான அமெரிக்காவின் தூதராக இந்திய-அமெரிக்கத் தூதரக அதிகாரியான மணீஷா சிங் என்பவரை நியமித்துள்ளார்.

❖ ஒரு நிகழ்நேர மாநாடான உலகளாவிய மீட்பு சர்வதேச உறுதிப்பாட்டு கருத்தரங்கானது சமீபத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தினால் தொடங்கப் பட்டுள்ளது.
  - இருப்பினும், அமெரிக்க மற்றும் இரஷ்யா ஆகிய நாடுகள் இந்த கருத்தரங்கில் பங்கேற்கவில்லை.

❖ மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறை அமைச்சகமானது "ஆற்றல் செயல்திறன் நடவடிக்கைகளின் தாக்கம் – 2018/19" என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
  - இந்த அறிக்கையானது ஆற்றல் மற்றும் கார்பன் டை ஆக்ஸைடு உமிழ்வுகளின் வருடாந்திரக் குறைத்தலை ஆய்வு செய்கின்றது.

❖ முஸ்தபா கட்ஹிமி என்பவர் ஈராக்கின் புதிய பிரதமராக உருவெடுத்துள்ளார்.
  - இதற்கு முன்பு, அரசாங்கத்திற்கு எதிரான மிகப்பெரிய போராட்டங்களின் காரணமாக 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அடேல் அப்துல் மஹிதி என்பவர் அந்நாட்டின் பிரதமர் பதவியிலிருந்து விலகினார்.

❖ வங்கியியல் தொடர்பான நடவடிக்கைகளில் பங்கு கொள்ளும் கூட்டுறவு வங்கிகள் "வங்கித் துறை நிறுவனத்தின்" வரையறைக்குள் வரும் என்று இந்திய உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.
  - இது தொடர்பாக, இந்திய நாடாளுமன்றமானது சர்பேசி சட்டம், 2002ன் கீழ் கடனை மீட்பதற்கான நடைமுறையை வழங்கக்கூடிய அதிகாரத்தைக் கொண்டு உள்ளது.

❖ மகாராஷ்டிர மாநில அரசானது ஜுன் 30 ஆம் தேதி வரை அம்மாநிலம் முழுவதும் உள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கான பணி நேரத்தை 12 மணி நேரமாக நீட்டித்துள்ளது.
  - இடப்பெயர்வுத் தொழிலாளர்கள் தங்களது சொந்த ஊர்களுக்குத் திரும்பி உள்ளதால் தொழிற்சாலைகள் எதிர்கொள்ளும் தொழிலாளிகளின் பற்றாக்குறையின் காரணமாக இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.

❖ "சஞ்ஜீவனி" என்ற செயலியானது ஆயுஷ் அமைச்சகத்தினால் உருவாக்கப் பட்டுள்ளது.
  - இது கோவிட் – 19 நோய்த் தொற்றைத் தடுப்பதில் ஆயுஷ் முறையை

அடிப்படையாகக் கொண்ட இடையீடுகளின் தாக்கம் குறித்து ஆய்வு செய்வதற்கு உதவ இருக்கின்றது.

- தமிழ்நாடு மாநில அரசானது தனது பணியாளர்களின் ஓய்வு பெறும் வயதை 58லிருந்து 59 ஆக அதிகரிக்க முடிவு செய்துள்ளது.
  - இது அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்கள், கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் ஆகியோருக்குப் பொருந்தும்.
- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டமானது இந்தியாவின் நல்லெண்ணத் தூதராக உள்ள நடிகை தியா மிர்சாவின் பதவிக் காலத்தை 2022 ஆம் ஆண்டு வரை நீட்டித்துள்ளது.
- அமெரிக்காவை மையமாகக் கொண்ட விஸ்டா ஈக்விட்டி பார்ட்னர்ஸ் என்ற நிறுவனமானது, விரைவில் 2.32 சதவீதப் பங்குகளுக்காக ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்தின் தளங்களில் முதலீடு செய்யும்.
  - இது குறுகிய காலத்தில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனம் பெற இருக்கும் மூன்றாவது பெரிய முதலீடாகும்.
- COVID-19 தொற்றுக்கு எதிராகப் போராடுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையும் அதன் கூட்டாளர் நிறுவனங்களும் 6.7 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள ஒரு உலகளாவிய முறையீட்டை அறிமுகப் படுத்தியுள்ளன.
  - இந்த உதவி "உலகளாவிய மனிதாபிமான மீட்புத் திட்டத்தின்" கீழ் செய்யப்பட உள்ளது.
- வழக்கமாக லோகஸ்ட் என்ற வெட்டுக் கிளிகள் ஜூலை-அக்டோபர் மாதத்தில் தான் வரும். ஆனால் இவை தற்போது அதற்கு முன்னரே இராஜஸ்தானில் கண்டறியப் பட்டுள்ளன.
  - இவை (Locusts) சிறிய அளவு மூக்கைக் கொண்ட ஒரு வகை வெட்டுக்கிளி இனமாகும்.
- ஆசியக் கட்டமைப்பு முதலீட்டு வங்கியானது (AIIB - Asian Infrastructure Investment Bank) இந்தியாவினால் தொடங்கப்பட்டுள்ள “கோவிட் – 19 அவசரகால எதிர்வினை மற்றும் சுகாதார அமைப்பு தயார்நிலைத் திட்டத்திற்காக” 500 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியளிக்க ஒப்புதல் அளித்துள்ளது.
  - இது தேசிய சுகாதாரத் திட்டம், தேசிய நோய்க் கட்டுப்பாட்டு மையம் மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் ஆகியவற்றினால் செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகமானது இந்திய விமானப் படையின் 37 விமானத் தளங்களின் கட்டமைப்புகளை நவீனப்படுத்துவதற்காக டாடா பவர் என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- கேரளாவில் திருவனந்தபுரத்தில் உள்ள மேம்படுத்தப்பட்ட நச்சுயிரியல் மையமானது சர்வதேச மருத்துவ நச்சுயிரியலாளர்கள் மன்றமான புகழ்பெற்ற உலகளாவிய வைரஸ் அமைப்பிற்கான (GVN - Global Virus Network) உறுப்பினர் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.
  - புகழ்பெற்ற GVN அமைப்பின் உறுப்பினர் அங்கீகாரத்தைப் பெறும் நாட்டின் முதலாவது நிறுவனம் இதுவாகும்.
- ஜார்க்கண்ட் மாநிலமானது உணவுப் பாதுகாப்பு மற்றும் தர ஒழுங்குமுறை, 2011 என்ற விதிமுறையின் கீழ் அடுத்த 1 ஆண்டுக் காலத்திற்கு மக்னீசியம் கார்பனேட்டைக் கொண்டுள்ள பான் மசாலாவின் உற்பத்தி, விற்பனை மற்றும் கையிருப்பு நிலைக்குத்

தடை விதித்துள்ளது.

- மகாராஷ்டிரா மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களுக்கு அடுத்து பான் மசாலா மீது தடை விதித்த 3வது மாநிலம் ஜார்க்கண்ட் ஆகும்.

❖ தமிழ்நாடு அரசானது இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநரான சி.ரங்கராஜன் தலைமையில் ஓர் உயர் மட்டக் குழுவை அமைத்துள்ளது.

- இது தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் பல்வேறு துறைகளில் கோவிட் - 19 நோய்த் தொற்று ஏற்படுத்திய ஒட்டு மொத்த உடனடித் தாக்கம் குறித்து ஆய்வு செய்ய இருக்கின்றது.

❖ சீனாவைக் குறிக்கும் விதமாக கொரானா நோய்ப் பாதிப்பானது இரண்டாம் உலகப் போரின் போது பேர்ல் துறைமுகத்தின் மீது ஜப்பான் நடத்திய தாக்குதல் அல்லது 9/11 தீவிரவாதத் தாக்குதல் ஆகியவற்றை விட மிக அதிகமாக அமெரிக்காவை மிகக் கடுமையாகத் தாக்கியுள்ளது என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

❖ "மகாகவச் செயலி" என்ற ஒரு நிகழ்நேர எண்முறை அல்லது டிஜிட்டல் தொடர்பு கண்காணிப்புச் செயலியானது மகாராஷ்டிரா அரசினால் தொடங்கப் பட்டுள்ளது.

- இது நோய்த் தொற்று தொடர்பைக் கண்காணித்தல், புவியியல் ரீதியாக பாதுகாப்பு அரண் அமைத்தல், தனிமைப்படுத்தப்பட்ட கோவிட் – 19 நோயாளிகளைக் கண்காணிப்பதற்கு சுகாதார அதிகாரிகளுக்கு உதவுதல் மற்றும் பங்களிப்பு அளித்தல் ஆகியவற்றை மேற்கொள்ள குடிமக்களை அனுமதிக்கின்றது.

❖ சமீபத்தில் இந்தியாவின் மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகமானது இராணுவப் பொறியியல் சேவைகளில் உள்ள 9304 பதவிகளை ஒழிக்க (நீக்க) ஒப்புதல் வழங்கியுள்ளது.

- இந்தப் பதவிகள் ஷேகாத்கர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஒழிக்கப் பட்டுள்ளன.

❖ உலக சுகாதார அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் அஞ்சல் நிறுவனம் ஆகியவை இணைந்து பெரியம்மை நோய் ஒழிப்பின் 40வது நினைவு தினத்தை அனுசரிப்பதற்காக ஒரு நினைவு அஞ்சல் தபால் தலையை வெளியிட்டுள்ளன.

- 1980 ஆம் ஆண்டில், இந்த அமைப்பானது இந்த உலகம் பெரியம்மையிலிருந்து விடுபட்டு விட்டதாக அதிகாரப் பூர்வமாக அறிவித்தது.

❖ மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் கீழ் செயல்படும் நுகர்வோர் விவகாரங்கள் துறையானது சுரக்சா விற்பனைக் கூடம் என்ற ஒரு முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.

❖ பெங்களூரு நகர மாநகராட்சியானது அம்மாநகர மக்களுக்காக சுவாசக் கோளாறு தொடர்பான ஆரோக்கியத்தை சுயமாக தன்னைத் தானே சோதனை செய்வதின் தேவை குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக "பிராண வாயு" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

❖ நீட்டிய ஆமை அல்லது சால் வன ஆமை என்ற ஆமை இனத்தின் ஒரு வகையானது தென்கிழக்கு ஆசியா மற்றும் இந்தியத் துணைக் கண்டத்தின் சில பகுதிகளில், அதிலும் குறிப்பாக வடகிழக்கு இந்தியாவில் காணப்படும் ஒரு வகை உயிரினமாகும்.

- பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் சிவப்பு நிறப் பட்டியலில் இது ஒரு "மிகவும் அருகிய இனமாக" பட்டியலிடப்பட்டுள்ளது.

❖ உத்தரப் பிரதேச மாநில அரசானது பொது முடக்கத்தின் போது இதர மாநிலங்களிலிருந்து உத்தரப் பிரதேச மாநிலத்திற்கு திரும்பி வரும் இடப்பெயர்வுத்

தொழிலாளர்களுக்காக "பிரவசி ராஹத் மித்ரா" என்ற ஒரு கைபேசி செயலியைத் தொடங்கியுள்ளது.

❖ ஐரோப்பிய இதயம் என்ற ஒரு பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட ஒரு சமீபத்திய ஆய்வின்படி, பெண்களை விட ஆண்களே கோவிட் - 19 நோய்த் தொற்றிற்கு அதிக அளவு பாதிப்பிற்கு உள்ளாகின்றனர்.
  ○ இந்த ஆய்வானது ஆண்களின் இரத்தத்தில் இருக்கும் ஏசிஇ2 என்ற நொதியின் உயர்வரம்பு நிலையானது கொரானா வைரஸ் ஆரோக்கியமான நுண்ணுயிரிகளைத் தாக்க வழிவகை செய்கின்றது.

❖ இரத்த வெள்ளை அணுக்களின் எதிர்வினையை ஒழுங்குபடுத்துவதற்காக அறியப் படும் வைட்டமின் D ஆனது அதிக அளவிலான அழற்சி சைட்டோகைனிசை (நோய்த் தொற்றை எதிர்த்துப் போராடுவதற்கான உடலின் நோய் எதிர்ப்பு வினை) வெளியிடுவதிலிருந்து இரத்த வெள்ளை அணுக்களைத் தடுக்கின்றது.
  ○ கோவிட் வைரசானது "சைட்டோகைன் புயல்" என்று அழைக்கப்படும் அதிகப்படியான ஒரு அழற்சி சார்ந்த சைட்டோகைனிற்குக் காரணமாக இருக்கின்றது.

❖ ஈரானைச் சேர்ந்த ஏவுகணையானது ஓமன் வளைகுடாவில் நடைபெற்ற ஒரு பயிற்சியின் போது தனது சொந்த உதவிக் கப்பலையேத் தாக்கியது.

❖ தமிழ்நாட்டின் தஞ்சாவூர் நெட்டி வேலைப்பாடு (சடை வகை கலைப் பணி) மற்றும் பெரம்பலூரின் அரம்பாவூர் மரச் செதுக்கல் வேலைப்பாடு ஆகியவை புவிசார் குறியீட்டைப் பெற்றுள்ளன.
  ○ தஞ்சாவூர் நெட்டி வேலைப்பாடு என்பது (தஞ்சாவூர் சடை வேலைப்பாடு) அஸ்சைனோமீன் அஸ்பெரா என்ற சதுப்பு நிலத் தாவரத்திலிருந்துப் பெறப்பட்ட சடையிலிருந்துத் தயாரிக்கப்பட்டதாகும்.

❖ சுருள்பாசி நிலக்கடலை மிட்டாய் ஆனது மைசூரில் உள்ள மத்திய உணவுத் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையத்தினால் (CFTRI - Spirulina groundnut Chikki) உருவாக்கப் பட்டுள்ளது.
  ○ சுருள்பாசி என்பது மனிதர்கள் மற்றும் விலங்குகளினால் நுகரப்படும் ஒரு நீல நுண்ணுயிரியின் (நீலம் மற்றும் பச்சை நிறப் பாசி) உயிரினத் தொகுதியாகும்.

❖ மத்திய சிறு, குறு, நடுத்தரத் தொழிற்துறை அமைச்சகமானது (MSME - Micro Small and Medium Enterprises) சாம்பியன்ஸ் (Champions – நவீன செயல்முறைகளின் உருவாக்கம் மற்றும் உணர்வுமிக்க பயன்பாடு) என்ற ஒரு இணைய தளத்தைத் தொடங்கியுள்ளது.
  ○ இந்த இணைய தளமானது இந்திய MSMEகளுக்கு உதவுவதற்காக நவீன தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் மற்றும் தேசிய நோய்க் கட்டுப்பாட்டு மையம் ஆகியவை இணைந்து செரோ எனும் ஆய்வை நடத்த இருக்கின்றது.
  ○ செரோ சோதனை என்பது தனிநபர்களின் இரத்த சீரம்களைச் சோதனை செய்தல் மற்றும் கோவிட் – 19 நோய்த் தொற்றிற்கு எதிராக நோய் எதிர்ப்புப் பொருளின் இருப்பைக் கண்டறிதல் என்பதாகும்.

❖ மத்தியப் பிரதேச மாநில அரசானது "எப்ஐஆர் ஆப்கே துவார் யோஜனா" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
  ○ காவல் துறையில் இது போன்ற ஒரு புத்தாக்கத் திட்டத்தைத் தொடங்கிய நாட்டின் முதலாவது மாநிலம் மத்தியப் பிரதேசம் ஆகும்.

❖ அமெரிக்க நோய்க் கட்டுப்பாட்டு மற்றும் தடுப்பு மையமானது கோவிட் – 19 நோய்த் தொற்றிற்கு எதிரான இந்தியாவின் எதிர்வினைகளுக்கு உதவுவதற்காக 8.6 மில்லியன்

அமெரிக்க டாலர் நிதியை இந்தியாவிற்கு வழங்க இருக்கின்றது.

- அமெரிக்க நாடானது பொதுச் சுகாதாரத்தில் உலகில் நாடுகளிடையே இருதரப்பு உதவியை அளிக்கும் ஒரு மிகப்பெரிய நாடாக விளங்குகின்றது.

❖ இராஜஸ்தான் மாநில அரசானது சந்தைகளில் கொண்டு வரப்படும், வாங்கப்படும் அல்லது விற்கப்படும் வேளாண் பொருள்களின் மீது 2% கிரிஷக் கல்யாண் என்ற ஒரு கட்டணத்தை விதிக்க இருக்கின்றது.

❖ குஜராத் மாநில அரசானது வேளாண் பொருட்கள் உற்பத்திச் சந்தை சட்டம் என்பதின் வரம்பை விரிவுபடுத்துவதற்காக குஜராத் வேளாண் பொருட்கள் உற்பத்தி மற்றும் கால்நடைச் சந்தை (ஊக்குவிப்பு மற்றும் வசதி) சட்டம், 1963 என்று அழைக்கப்படும் சட்டத்தின் மீது அவசரச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளது.

- இது கால்நடையை வேளாண் உற்பத்திப் பொருட்களின் கீழ் கொண்டு வருவதையும் விவசாயிகளுக்கு சிறந்த சந்தை அணுகலை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ பரோசா என்பது ஒடிசாவின் மத்தியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு என்று பிரத்தியேகமாக ஆலோசனை வழங்கும் ஒரு உதவி மையமாகும்.

❖ இந்திய உச்ச நீதிமன்றமானது ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தில் 4ஜி இணையச் சேவையை மீண்டும் கொண்டு வர மறுத்துள்ளது.

- இதற்கு முன்பு 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், அனுராதா பசின் வழக்கு அல்லது காஷ்மீர் இணையச் சேவை வழக்கு என்று பிரபலமாக அறியப்படும் ஒரு வழக்கில், ஜம்மு காஷ்மீரில் கொண்டு வரப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மறு ஆய்வு செய்ய உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

❖ 2021 ஆம் ஆண்டின் 17 வயதுக்குட்பட்டோருக்கான (FIFA Under 17) பிபா பெண்கள் உலகக் கோப்பைப் போட்டியை இந்தியா நடத்த இருக்கின்றது.

❖ அகில இந்தியக் கால்பந்து கூட்டமைப்பானது 2020 ஆம் ஆண்டின் அர்ஜுனா விருதுக்காக N.பாலா தேவி மற்றும் சந்தேஷ் ஜின்கான் ஆகியோரைப் பரிந்துரை செய்துள்ளது.

- அர்ஜுனா விருதானது மத்திய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தினால் வழங்கப்படும் ஒரு கௌரவ விருதாகும்.

❖ சமீபத்தில் விவசாயிகள் எதைப் பயிரிட்டு வளர்க்க வேண்டும் என்று கூறிய நாட்டின் முதலாவது மாநிலமாக தெலுங்கானா உருவெடுத்துள்ளது.

- அம்மாநில அரசானது தற்பொழுது பயிர்ச் சாகுபடியை வரைமுறைப் படுத்த இருக்கின்றது. அம்மாநில அரசு 50 லட்சம் ஏக்கர் அளவில் மட்டும் நெற் பயிர்களை வளர்க்கவும் 10 இலட்சம் ஏக்கர் அளவில் மட்டும் சிவப்பு கிராம் எனப்படும் கொள்ளு வகைப் பருப்பை வளர்க்கவும் வரையறை செய்துள்ளது.

❖ ரூர்க்கி-ஐ.ஐ.டியின் பேராசிரியர் கமல் ஜெயின் ஒரு மென்பொருளை உருவாக்கியுள்ளதாகக் கூறியுள்ளார்.

- இது நிமோனியாவின் எந்த விதமான அறிகுறிகளையும் கண்டறிய உதவுகிறது. மேலும் இது சந்தேகத்திற்குரிய நோயாளியின் மீது எக்ஸ்-கதிர் சோதனையை (X-ray scan) பயன்படுத்தி ஐந்து விநாடிகளுக்குள் கோவிட்-19 அல்லது வேறு ஏதேனும் நுண்ணுயிரியால் (பாக்டீரியா) இந்த நிமோனியா ஏற்பட்டதா என்பதைக் கண்டறிய உதவும்.

❖ மற்றொரு கிரகத்தில் இயங்கும் விமானங்களை முயற்சிக்கும் முதல் வானூர்தி என்று கருதப்படுகின்ற நாசாவின் செவ்வாய் ஹெலிகாப்டர் என்ற வானூர்திக்கு

'இஞ்செனூயிட்டி' (புத்திக் கூர்மை என்று பொருள்) என்று பெயரிடப் பட்டுள்ளது.

  - இந்தப் பெயரை இந்திய வம்சாவளிப் பெண்ணான வனீசா ரூபானி என்பவர் வழங்கியுள்ளார்.

- ❖ ரிலையன்ஸ் தொழிலகங்களின் தலைவரான முகேஷ் அம்பானி, மார்க் ஜுக்கர்பெர்க்கின் பேஸ்புக் நிறுவனத்துடன் ஒரு மிகப்பெரும் ஒப்பந்தத்தைச் செய்த பின்னர் மீண்டும் ஆசியாவின் முதல் பணக்காரர் ஆகியுள்ளார்.
  - ப்ளூம்பெர்க் கோடீஸ்வரர்கள் குறியீட்டின் படி, அவர் சீனக் கோடீஸ்வரர் மற்றும் அலி பாபா நிறுவனத்தின் இணை நிறுவனரான ஜாக் மாவை பின்னுக்குத் தள்ளியுள்ளார்.
- ❖ அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நியூயார்க்கின் கிழக்கு மாவட்டத்துக்கான மாவட்ட நீதிமன்றத்தில் இந்திய-அமெரிக்கரான சரிதா கோமதி ரெட்டியை நீதிபதியாக நியமித்துள்ளார்.
  - இவர் தெலுங்கானாவைச் சேர்ந்தவர் ஆவார்.
- ❖ ஆரம்ப மற்றும் இடைநிலைப் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவுக்கான உணவுப் பங்கீட்டை வழங்கும் நாட்டின் முதல் மாநிலமாக மத்தியப் பிரதேசம் உருவெடுத்துள்ளது.
  - இதன் கீழ், உணவுக்கான பணம் பெற்றோரின் வங்கிக் கணக்குகளுக்கு மாநில அரசிடம் இருந்து இணைய வழியில் மாற்றப் படும்.
- ❖ Resistance Front (எதிர்ப்பு முன்னணி) என்பது லஷ்கர்-இ-தொய்பா என்ற பயங்கரவாதக் குழுவின் ஒரு கிளைப் பிரிவாகும்.
  - இது காஷ்மீரில் உள்ள பயங்கரவாதக் குழுவின் புதிய பெயராகும்.
- ❖ தூர்தர்ஷனில் மீண்டும் மறுஒளிபரப்பு செய்யப்படும் ராமானந்த் சாகரின் ஒரு பிரபலமான தொலைக்காட்சித் தொடரான 'ராமாயணம்' 7.7 கோடி பார்வையாளர்களைக் கொண்டு தற்போது உலகிலேயே அதிகம் பார்க்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியாக மாறியுள்ளது.
  - வால்மீகியின் ராமாயணம் மற்றும் துளசிதாஸின் ராமச்சரித மனாசை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தொடரை ராமானந்த் சாகர் தயாரித்துள்ளார்.
- ❖ பாகிஸ்தான் வரலாற்றில் முதல்முறையாக, பாகிஸ்தான் விமானப்படையின் விமானியாக ராகுல் தேவ் என்ற இந்து மதத்தைச் சேர்ந்தவர் ஒருவர் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- ❖ கோவிட் 19 தொற்றுநோய்க்கான இந்தியாவின் முதல் சோதனைப் பேருந்தானது மும்பையில் மகாராஷ்டிரா தினத்தன்று துவங்கப் பட்டது.
  - இந்தப் பேருந்து, முன்னாள் ஐஐடி மாணவர்கள் பேரவையின் சி-19 பணிக் குழுவால் மேற்கொள்ளப்பட்ட ஒரு முன்முயற்சி ஆகும்.
- ❖ தாய்மைக்குப் பிறகு டென்னிஸ் விளையாட்டிற்கு வெற்றிகரமாக திரும்பியதற்காக ஃபெட் கோப்பை ஹார்ட் விருது (Fed Cup Heart Award) எனும் விருதை வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை டென்னிஸ் நட்சத்திரமான சானியா மிர்சா பெற்றுள்ளார்.
  - ஃபெட் கோப்பை ஹார்ட் விருதானது சர்வதேச டென்னிஸ் கூட்டமைப்பின் ஒரு முன்முயற்சி ஆகும்.
- ❖ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO - Shanghai Cooperation Organisation) வெளியுறவுத் துறை அமைச்சர்களின் சந்திப்பில் இந்தியா காணொலி வாயிலாகக் கலந்து கொண்டது.
  - இது தற்போதைய தலைமை நாடான ரஷ்யாவினால் நடத்தப் பட்டது.

- சமீபத்தில் இந்திய இராணுவம் இந்தியக் குடிமக்களுக்காக 3 ஆண்டு கால தன்னார்வ பணிச் சேவையைச் சோதனை அடிப்படையில் பரிந்துரைத்துள்ளது. இது நிரந்தரப் பணி/சேவை என்ற கருத்துருவிலிருந்து உள்ளிருப்புப் பயிற்சி/தற்காலிக சேவை என்ற கருத்துருவிற்கு மாறும் முயற்சியாகும்.
    - இந்திய இராணுவமானது தனது குடிமக்களை அதிகாரிகள் மற்றும் இதர பிரிவுகள் என்ற இரண்டிலும் ஈடுபடுத்தத் திட்டமிட்டுள்ளது.
- அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சிச் செயல்பாடுகள் ஆகியவற்றின் மூலம் பொருளாதாரத்தை மீட்டெடுத்தல் என்பது தேசியத் தொழில்நுட்ப தினத்தன்று நடத்தப்பட்ட ஒரு டிஜிட்டல் கருத்தரங்காகும்.
    - இது இந்தியத் தொழிற்துறைக் கூட்டமைப்புடன் இணைந்து அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் ஒரு தனிச்சுதந்திர அமைப்பான தேசிய வளர்ச்சி வாரியத்தினால் ஒருங்கிணைக்கப் பட்டது.
- பிரிக்ஸ் அமைப்பின் புதிய வளர்ச்சி வங்கியானது கோவிட் – 19 நோய்த் தொற்றை எதிர்த்துப் போராடுவதற்காக இந்தியாவிற்கு 1 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற அளவில் ஒரு உதவியினை "அவசர கால உதவித் திட்டக் கடனாக" வழங்க இருக்கின்றது.
- ஜம்மு காஷ்மீர் மற்றும் ஹரியானா ஆகிய மாநில அரசுகள் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் அதன் ஊரகப் பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்புகளை வழங்கும் வகையில் செயல்பட்டு வருகின்றன. அத்திட்டத்தின் தேசிய இலக்கான 2024-25 ஆம் ஆண்டிற்கு முன்னதாகவே இந்த மாநில அரசுகள் இதனை அடைய இருக்கின்றன.
    - இந்த 2 மாநில அரசுகளும் தங்களது திட்டங்களை மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சகத்தின் குடிநீர் மற்றும் துப்புரவுத் துறையிடம் அளித்துள்ளன.
- இந்தியா 32வது காமன்வெல்த் சுகாதாரத் துறை அமைச்சர்களின் சந்திப்பில் காணொலி மூலமாகக் கலந்து கொண்டது.
    - இதன் கருத்துரு, "கோவிட் – 19 நோய்க்கு எதிராக ஒரு ஒருங்கிணைக்கப் பட்ட காமன்வெல்த் எதிர்வினையை வழங்குதல்" என்பதாகும்.
- சமீபத்தில் ஐக்கிய நாடுகள் ஆனது உலகப் பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள், 2020 என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் அமைப்பானது மே 16 ஆம் தேதியை அமைதியாக ஒன்றிணைந்து வாழ்தலுக்கான சர்வதேச தினமாக அனுசரிக்கின்றது.
    - இது 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பொதுச் சபையினால் அதிகாரப் பூர்வமாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியானது மேற்கு வங்கத்தில் நீர்ப்பாசன வசதிகள் மற்றும் வெள்ள மேலாண்மையை மேம்படுத்துவதற்காக 145 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவிலான கடனிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
    - இந்தத் திட்டமானது மேற்கு வங்கத்தின் தாமோதர் பள்ளத்தாக்கின் மீது கவனம் செலுத்த இருக்கின்றது.
- மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையானது தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் மீதான தேசியக் கல்வித் திட்டத்தின் (NMEICT - National Mission of Education in Information and Communication Technology) கீழ் "சமார்த் நிறுவன வளத் திட்டமிடல்" என்ற ஒரு மின்னணு முறையிலான ஆளுகைத் தளத்தை உருவாக்கியுள்ளது.
    - இந்தத் தளமானது குருஷேத்திராவில் உள்ள தேசியத் தொழில்நுட்ப நிறுவனத்தில் செயல்படுத்தப் படுகின்றது.

- உலக வங்கியானது "இந்தியாவின் கோவிட் – 19 சிறப்புப் பாதுகாப்பு" எதிர்வினைத் திட்டத்தை ஊக்கப்படுத்தும் விதமாக இந்தியாவிற்கு 1 பில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
    - இந்த நிதியானது ஏழைக் குடும்பங்கள், கடுமையாக பாதிக்கப்பட்ட மற்றும் பாதிப்படையும் குடும்பங்களுக்கு நிதியுதவியை அளிப்பதற்காகப் பயன்படுத்தப் பட இருக்கின்றது.
- "எச்ஐவி"யைப் போன்று புதிய கொரானா வைரஸானது எப்பொழுதும் இருக்கக் கூடிய நோய் என்றும் முழுமையாக இதை ஒழிக்க முடியாது என்றும் உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.
    - சின்னம்மை மற்றும் மலேரியா போன்று மக்கட் தொகையில் அது எப்பொழுதும் தொடர்ந்து இருந்து, பரவலாகக் காணப்பட்டால் அந்நோய் "எப்பொழுதும் இருக்கக் கூடிய நோய்" (Endemic) என்று அழைக்கப் படுகின்றது.
- சின்கோனாவின் பட்டையிலிருந்து எடுக்கப்பட்ட அல்காலாய்டு குயினைனின் நினைவாக "குயினைன் நோங்லாடியூ" என்று ஒரு கிராமத்திற்கு பெயரிடப்பட்டு உள்ளது.
    - இது தோட்டப் பயிரிடுதல் காரணமாக "குயினைன்" என்று அழைக்கப்படும் மேகாலயாவில் உள்ள ஒரு கிராமமாகும்.
- இந்திய வானிலை ஆய்வு மையமானது வங்காள விரிகுடாவில் உள்ள இந்தியக் கடலோரப் பகுதிகளுக்கு "ஆம்பன் புயல்" என்ற ஒரு புயல் எச்சரிக்கையை விடுத்துள்ளது.
    - இந்தப் புயலின் பெயரானது தாய்லாந்து நாட்டினால் பரிந்துரைக்கப்பட்டதாகும். இது 2004 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பரிந்துரைக்கப்பட்ட 64 புயல் பெயர்களைக் கொண்ட அசல் பட்டியலில் உள்ள கடைசிப் பெயராகும்.
- மின்னணு - தேசிய வேளாண் சந்தை முன்னெடுப்பானது 1000 சந்தைகள் என்ற தனது நிர்ணயிக்கப்பட்ட சந்தைக்கான இலக்கை எட்டியுள்ளது.
    - இது "ஒரு தேசம் ஒரு சந்தை" என்ற தளத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டுள்ளது
- டெங்கு குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வேண்டி மத்திய சுகாதாரத் துறை அமைச்சகத்தினால் பரிந்துரைக்கப்பட்டதின் படி மே 16 ஆம் தேதியன்று தேசிய டெங்கு தினத்தை இந்தியா அனுசரித்தது.
- தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையமானது தேசியப் இடப்பெயர்வுத் தகவல் அமைப்பைத் தொங்கியுள்ளது.
    - இது இடப்பெயர்வுத் தொழிலாளர்களுக்கான ஒரு மைய நிகழ்நேரக் களஞ்சியம் ஆகும்.
- துகள் உலோக மற்றும் புதிய பொருட்களுக்கான மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஸ்ரீ சித்திரத் திருநாள் மருத்துவ அறிவியல் மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து ஒரு புதிய உயிரியல் ரீதியாக மக்கும் வகையில் காதினுள் வைக்கப்படும் ஒரு உள்வைப்புப் பொருளை உருவாக்கியுள்ளனர்.
    - இந்த உள்வைப்புப் பொருட்கள் இரும்பு – மாங்கனீசு கலவையிலிருந்து உருவாக்கப் பட்டுள்ளன.
- சமீபத்தில், பாகிஸ்தான் நாடானது டயமெர்-பாஷா எனும் அணையின் கட்டமைப்பிற்காக வேண்டி சீனா ஆற்றல் என்ற ஒரு நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டு உள்ளது.

- இது கைபர் பக்துன்குவா மற்றும் கில்ஜிட் பல்திஸ்தான் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட வட பாகிஸ்தானில் சிந்து நதியின் மீது அமைந்துள்ளது.

❖ சமீபத்தில் மதுரை இரயில் நிலையமானது தனது சிறந்த சேவைக்காக ஐஎஸ்ஓ 14001 தரச் சான்றிதழை (ISO - International Organization for Standardization/ சர்வதேசத் தரப்படுத்தல் ஆணையம்) பெற்றுள்ளது.

- ஐஎஸ்ஓ 14001 என்பது செயலூக்கம் உடைய சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பிற்கான (EMS - Environmental management system) தேவைகளைக் குறிப்பிடும் ஒரு சர்வதேசத் தரமாகும்.

❖ இந்தியாவிற்குச் செயற்கை சுவாசக் கருவிகளை அமெரிக்கா வழங்க உள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

❖ கொரானா வைரஸ் நோய்த் தொற்றை கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட தேசிய அளவிலான பொது முடக்கத்தைத் தொடர்ந்து தனது விளையாட்டுத் தொடரை மீண்டும் தொடங்கிய உலகின் முதலாவது முக்கியமான விளையாட்டுப் போட்டி ஜெர்மனியின் பண்டெஸ்லிகா ஆகும்.

- பண்டெஸ்லிகா என்பது “பெடரல் லீக்” எனப்படும் ஜெர்மனியில் நடத்தப்படும் ஒரு முதன்மையான கால்பந்துப் போட்டியாகும்.

❖ அமெரிக்க முதலீட்டு நிறுவனமான “ஜெனரல் அட்லான்டிக்” எனும் நிறுவனமானது ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்தில் 1.34% பங்கை, அதாவது ரூ.6600 கோடி மதிப்பிலான பங்கை முழுவதும் பிரித்தெடுக்கப்பட்ட அடிப்படையில் கையகப் படுத்த இருக்கின்றது.

- முகநூல் நிறுவனம், சில்வர் லேக் மற்றும் விஸ்டா சமபங்கு உரிமையாளர்கள் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களைத் தொடர்ந்து கடந்த 30 நாட்களில் ஜியோ நிறுவனத்தில் செய்யப்பட்ட 4வது மிகப்பெரிய முதலீடு இதுவாகும்.

❖ ஒரு புதிய உயிரினமானது சுட்டுரைப் படத்தைப் பயன்படுத்திச் சமீபத்தில் கண்டறியப்பட்டது. இதற்கு ட்ரோகுளோமைசிஸ் டிவிட்டரி என்று பெயரிடப் பட்டுள்ளது.

- இது “லேபோல் பெனியேல்ஸ்” என்ற ஒரு ஒட்டுண்ணி வகைப் பூஞ்சை இனத்தைச் சேர்ந்ததாகும்.

❖ தேசிய சட்ட சேவைகள் ஆணையமானது (NALSA - National Legal Services Authority) தனது அதிகாரப்பூர்வ செய்தி மடலான நியாயா தீப் எனும் இதழில் பொது முடக்கத்தின் போது விடுதலை செய்யப்பட்ட விசாரணைக் கைதிகளின் எண்ணிக்கை குறித்த தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.

- உத்தரப் பிரதேசத்தில் (9977) அதிக எண்ணிக்கையிலான விசாரணைக் கைதிகள் விடுதலை செய்யப் பட்டுள்ளனர். இதற்கு அடுத்து ராஜஸ்தானில் 5460 விசாரணைக் கைதிகளும் தமிழ்நாட்டில் 4547 விசாரணைக் கைதிகளும் பஞ்சாப்பில் 3698 விசாரணைக் கைதிகளும் மகாராஷ்டிராவில் 3400 விசாரணைக் கைதிகளும் விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

❖ இந்திய அரசானது எல்லை உள்கட்டமைப்பை உருவாக்குவதற்காக செகாத்கர் குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளைச் செயல்படுத்தியுள்ளது.

- இக்குழுவானது 2018 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டதாகும்.

❖ தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியானது ரூ.20,500 கோடியை விடுவித்துள்ளது.

- இந்த நிதியானது கூட்டுறவு வங்கிகள் மற்றும் வட்டார ஊரக வளர்ச்சி வங்கிகள்

ஆகியவற்றிற்கு ஒரு முன்னணி வள நிதியாகச் செயல்பட இருக்கின்றது.

- ஆப்கானிஸ்தானின் அதிபரான அஷ்ரப்கானி மற்றும் எதிரணியைச் சேர்ந்தவரான அப்துல்லாஹ் அப்துல்லாஹ் ஆகியோர் அதிகாரப் பகிர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளனர். இதன் மூலம் பல மாதங்களாக நீடித்து வந்த அரசியல் பிரச்சினை அந்நாட்டில் முடிவுக்கு வந்துள்ளது.
- மே 18 ஆம் தேதியன்று தமிழ்நாடு முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி சென்னையிலிருந்து காணொலிக் காட்சி மூலம் திருப்பூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டினார்.
- சார்ஸ் – Cov–2 வைரசிற்கு எதிராக நோய் எதிர்ப்புச் சக்தியை உற்பத்தி செய்து நேர்மறை விளைவுகளை ஏற்படுத்திய உலகின் முதலாவது தடுப்பு மருந்து மாடர்னா கொரானா வைரஸ் தடுப்பு மருந்தாகும்.
  - "mRNA – 1273" என்ற எதிர்ப்பு மருந்தானது தேசிய சுகாதார நிறுவனத்துடன் இணைந்து அமெரிக்காவில் உள்ள உயிரித் தொழில்நுட்ப நிறுவனமான மாடர்னா நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.
- ஹன்கோ என்பது ஜப்பானின் ஒரு தனிப்பட்ட அஞ்சல் தலையாகும்.
  - ஜப்பானில் மிகப் பழமையான ஹன்கோ என்ற பாரம்பரியத்தின் கீழ், தொழிலாளர்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக அலுவலகங்களுக்கு வந்து செல்ல வேண்டும்.
- சமீபத்தில், பினாங்கா அந்தமானிசிஸ் என்ற ஒரு அரிய வகைப் பனை இனமானது திருவனந்தபுரத்தில் (கேரளா) உள்ள ஜவஹர்லால் நேரு வெப்ப மண்டலத் தாவரவியல் தோட்டம் மற்றும் ஆராய்ச்சி மையத்தில் (JNTBGRI - Jawaharlal Nehru Tropical Botanic Garden and Research Institute) வெற்றிகரமாகப் பயிரிடப்பட்டது.
  - பினாங்கா அந்தமானிசிஸ் என்பது தெற்கு அந்தமான் தீவின் ஹாரியத் மலை தேசியப் பூங்காவினைப் பூர்வீகமாகக் கொண்ட ஓர் அரிய வகைப் பனை மரமாகும்.
- மத்திய சுகாதாரத் துறை அமைச்சரான ஹர்ஷ் வர்தன் உலக சுகாதார அமைப்பின் நிர்வாக வாரியத்தின் தலைவராக பொறுப்பேற்க இருக்கின்றார். இவர் அடுத்த 3 ஆண்டுகளுக்கு இப்பதவியில் நீடிப்பார்.
  - 34 உறுப்பினர்களைக் கொண்ட இந்த வாரியத்தின் தற்போதைய தலைவரான ஜப்பானின் டாக்டர் கிரோகி நகாடானி என்பவருக்குப் பதிலாக இவர் நியமிக்கப் படவுள்ளார்.
- மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகமானது "இந்தியாவில் தயாரிப்போம்" என்ற திட்டத்திற்கு ஊக்கமளிப்பதற்காக பாதுகாப்பு சார்ந்த 26 பொருட்களின் கொள்முதலுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
  - இது பொதுக் கொள்முதல் ஆணை, 2017 என்ற ஆணையின் மீதான ஒரு திருத்தத்தின் மூலம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- மே 19 ஆம் தேதியன்று தமிழ்நாடு முதல்வர் எடப்பாடி கே. பழனிச்சாமி திருவள்ளூர் மாவட்டத்தின் பெரும்பாக்கத்தில் ஒரு அரசு மருத்துவக் கல்லூரியின் கட்டுமானத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
  - இந்தக் கட்டுமானப் பணிக்கான 60% நிதியானது மத்திய அரசினாலும் மீதம் உள்ள நிதியானது மாநில அரசினாலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
- தமிழ்நாடு சுகாதாரத் துறையானது சென்னையில் 3 நகராட்சி மண்டலங்களில் மிக அதிகம் பாதிக்கப்பட்ட 34 வார்டு பகுதிகளில் கோவிட் – 19 வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக ஒரு தீவிர "நுண் திட்டத்தை" தொடங்கியுள்ளது.

- ஐரோப்பிய நாடான ஸ்லோவேகியா நாடானது கொரானா வைரஸ் தொற்றிலிருந்து குறைந்த எண்ணிக்கையிலான தனிநபர் தலா இறப்பு விகிதத்தைப் பதிவு செய்துள்ளது.
- ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் பயனாளிகளின் எண்ணிக்கை 1 கோடியைத் தொட்டு உள்ளது.
  - ஆயுஷ்மான் பாரத் திட்டமானது 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- உத்தரப்பிரதேசத்தின் நொய்டாவில் உள்ள ஜீவார் என்ற விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக சுவிட்சர்லாந்து நாட்டின் நிறுவனமான சூரிச் சர்வதேச விமான நிலைய நிறுவனத்திற்கு (Zurich Airport International AG) உள்துறை அமைச்சகமானது பாதுகாப்பு அனுமதியை வழங்கி உள்ளது.
  - இந்தப் பசுமைவழித் திட்டமானது புது தில்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திற்கு ஒரு மாற்றாக கருதப்படுகிறது.
- மத்திய நிதி அமைச்சகம் தேசிய எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுப் பிரச்சாரத்திற்கான அடிப்படைத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கப் போவதாக அறிவித்து உள்ளது.
  - 2020 ஆம் ஆண்டில் நாட்டின் ஒவ்வொரு குழந்தையும் 3 ஆம் வகுப்பில் அடிப்படையான கல்வியறிவு மற்றும் எண்ணறிவை அடைவதை இந்தத் திட்டம் உறுதி செய்கிறது.
- நேரடி வங்கிப் பரிமாற்றத்தின் மூலம் மாநில விவசாயிகளுக்கு "குறைந்தபட்ச வருமானம் கிடைப்பதை" உறுதி செய்வதற்காக சத்தீஸ்கர் அரசாங்கத்தால் ராஜீவ் காந்தி நியாய யோஜனா என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
  - முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவு தினமான மே 21 அன்று இந்த திட்டம் தொடங்கப் பட்டுள்ளது.
- மத்தியப் பிரதேசத்தில் மாநிலம் வழியாகச் செல்லும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக மத்தியப் பிரதேச காவல் துறையால் சரண் படுகா என்ற பிரச்சாரம் தொடங்கப் பட்டுள்ளது.
  - இந்தப் பிரச்சாரத்தின் கீழ் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு அவர்களின் பாத வலியைக் குறைக்க காலணிகள் மற்றும் செருப்புகள் (shoes and slippers) வழங்கப் பட்டன.
- கேரளாவின் அனக்கம்போயில்-கல்லடி-மேப்படி பாதையில் ஒரு இருவழிச் சுரங்கப் பாதையை அமைக்க மத்திய அரசானது அனுமதி அளித்துள்ளது.
  - 6.5 கி.மீ தூரமுள்ள இந்த சுரங்கப்பாதை நாட்டின் மூன்றாவது நீளமான சுரங்கப் பாதையாக இருக்கும்.
- மகாராஷ்டிராவில் விவசாயிகளின் நலனுக்காக மீ அன்னபூர்ணா என்ற திட்டம் தொடங்கப் பட்டுள்ளது.
- சமீபத்தில் புனேவில் உள்ள அகர்கர் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கோதுமையில் "Rht14" மற்றும் "Rht18" என்று 2 மாற்று குள்ளத் தன்மையுடைய மரபணுக்களைக் கண்டறிந்துள்ளனர்.
  - இது நெற்பயிர்க் கழிவு எரிப்பை (தாளடிப் பயிர் எரிப்பு) குறைக்க உதவ இருக்கின்றது.
- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் பாதுகாப்புத் துறையில் இருக்கும் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மின்னணு முறையிலான ஒரு மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.
  - இந்த மாநாடானது 2025 ஆம் ஆண்டு வாக்கில் 25 பில்லியன் மதிப்பிற்கு பாதுகாப்பு

உற்பத்தி என்ற தனது இலக்கை அடைய இந்தியாவிற்கு உதவ இருக்கின்றது.

- சமீபத்தில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் ரஷ்யாவுடன் கடந்த 18 ஆண்டுகளாக நீடித்து வரும் திறந்த வான்வெளி ஒப்பந்தத்திலிருந்து விலகும் தனது திட்டத்தை அறிவித்துள்ளார்.
  - இந்த ஒப்பந்தமானது 2002 ஆம் ஆண்டில் இராணுவ வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்காக கையெழுத்திடப் பட்டது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது ரெப்போ விகிதத்தை 4.4%லிருந்து 4% ஆகக் குறைத்து அறிவித்துள்ளது.
  - தலைகீழ் ரெப்போ விகிதமானது 3.35% ஆகக் குறைக்கப் பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டிற்கான உலகத் தேனீக்கள் தினத்திற்கான கருத்துரு, "தேனீக்கள் ஈடுபடுதல்" என்பதாகும்.
  - உணவு மற்றும் வேளாண் அமைப்பின் தரவுத் தளத்தின்படி, 2017-18 ஆம் ஆண்டிற்கான தேன் உற்பத்தியில் உலக அளவில் இந்தியா (64.9 ஆயிரம் டன்கள்) எட்டாவது இடத்தில் உள்ளது. தேன் உற்பத்தியில் 551 ஆயிரம் டன்களுடன் சீனா முதலிடத்தில் உள்ளது.
- "கே.கே.ஆர்" என்ற நியூயார்க்கில் உள்ள ஒரு தனியார் பங்கு நிறுவனமானது ஜியோ தளத்தில் 2.32% பங்கிற்காக 1.5 பில்லியன் அமெரிக்க டாலரை முதலீடு செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது.
  - முகநூல், சில்வர் லேக், விஸ்டா பங்குதாரர்கள் மற்றும் ஜெனரல் அட்லாண்டிக் ஆகிய நிறுவனங்களுக்குப் பிறகு ரிலையன்ஸ் ஜியோவில் மேற்கொள்ளப் பட்ட 5வது முதலீடு இதுவாகும்.
- தெற்கு ஜெர்மனியில் உள்ள பிலிப்ஸ்பெர்க் அணு ஆற்றல் ஆலையை அந்த நிறுவனத்தின் இயக்குனர்கள் மூடத் தொடங்கியுள்ளனர்.
  - ஜெர்மனி ஆறிற்கும் மேற்பட்ட அணு ஆலைகளைக் கொண்டுள்ளது. ஆனால் இவை 2022 ஆம் ஆண்டின் இறுதியில் மூடப்பட இருக்கின்றன.
- கொரானா வைரஸின் காரணமாக இந்தியா முழுவதும் அமல்படுத்தப் பட்டுள்ள பொது முடக்கம் நீக்கப்பட்ட பின்பு படிப்படியாக விளையாட்டுப் பயிற்சிகளை மீண்டும் தொடங்குவதற்கு வேண்டி ஒரு தரநிலைச் செயல்பாட்டு நெறிமுறையை (SOP - Standard Operating Procedure) தயாரிப்பதற்காக 6 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை இந்திய விளையாட்டு ஆணையம் (SAI - Sports Authority of India) அமைத்து உள்ளது.
  - இது SAI-யின் செயலாளரான ரோகித் பரத்வாஜ் அவர்களால் தலைமை தாங்கப்பட இருக்கின்றது.
- மன்னார் வளைகுடா கடல்சார் தேசியப் பூங்காவின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலத்திற்குள் கடல்நீரைக் குடிநீராக்கும் ஒரு ஆலையை அமைப்பதற்கான ஒரு பரிந்துரைக்கு மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது.
  - இந்தத் திட்டமானது ராமநாதபுரத்தின் கடலாடி தாலூகாவில் உள்ள குதிரைமொழி என்ற கிராமத்தில் அமைய இருக்கின்றது.
- இந்தியப் பொருளாதார அறிஞரான அபாஸ் ஜா என்பவர் தெற்கு ஆசியப் பகுதியில் காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை குறித்த ஒரு முக்கியமான பதவிக்கு உலக வங்கியால் நியமிக்கப் பட்டுள்ளார்.
- தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வரான ஜெயலலிதாவின் இல்லமான "வேதா நிலையமானது" ஒரு நினைவு இல்லமாக மாற்றப்பட இருக்கின்றது.
- இஸ்ரேல் நாடானது இந்தியக் கவிஞரான இரவீந்தரநாத் தாகூரின் பிறந்த

தினத்தையடுத்து டெல் அவில் நகரில் உள்ள ஒரு தெருவிற்கு அவரது பெயரைச் சூட்டியுள்ளது.

- ❖ உலக தைராய்டு தினமானது மே 25 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப் படுகிறது.
- ❖ புலம்பெயர்ந்தோரின் நலனுக்காக ஓர் இடம்பெயர்வு ஆணையத்தை அமைக்கப் போவதாக உத்தரப் பிரதேச அரசானது அறிவித்துள்ளது.
  - புலம்பெயர்ந்தோரின் திறனைப் பொருத்து அந்தப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வேலை மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை முதன்மையாகக் கொண்டு இந்த இடம்பெயர்வு ஆணையம் செயல்பட உள்ளது.
- ❖ சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் பிஎஸ்-VI விதிமுறைக்கு வேண்டி எல்-7 வகைக்கான (நான்கு சக்கர வண்டி) உமிழ்வு விதிமுறைகளை அறிவித்துள்ளது.
  - 400 கிலோவிற்கு மேல் நிறை கொண்ட நான்கு சக்கர வாகனங்கள் எல்-7 பிரிவின் கீழ் சேர்க்கப் பட்டுள்ளன. இது முழுமையாக ஒரு மகிழுந்தைப் போன்று இருக்கும் வகையில் மூன்று சக்கர வாகனத்திற்கான அளவில் நான்கு சக்கரங்களைக் கொண்டிருக்கும்.
- ❖ மிசோரம் மாநிலமானது விளையாட்டுத் துறைக்கு ‘தொழில்துறை’ என்ற தகுதிநிலையை வழங்கியுள்ளது. இவ்வாறு செய்த முதல் மாநிலம் இதுவாகும்.
  - இது முதலீட்டை ஈர்ப்பதன் மூலம் விளையாட்டு நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ ரிக்டர் அளவுகோலில் 5.5 என்று பதிவாகிய ஒரு நிலநடுக்கமானது மணிப்பூர் மாநிலத்தைத் தாக்கியுள்ளது.
  - தேசிய நிலநடுக்க மையத்தின்படி, இந்த நிலநடுக்கமானது மணிப்பூரின் மொய்ராங்கிற்கு தென் மேற்கில் 13 கிலோ மீட்டர் தொலைவில் மையம் கொண்டிருந்தது.
- ❖ சமீபத்தில் “புனிட்டஸ் சாண்க்டஸ்” என்ற ஒரு புதிய சிறிய நன்னீர் வாழ் மீன் இனமானது தமிழ்நாட்டின் வேளாங்கண்ணியில் கண்டறியப் பட்டது.
  - இது பொதுவாக கேரளாவில் “பரல்” என்றும் தமிழ்நாட்டில் “கெண்டை” என்றும் அழைக்கப் படுகின்றது.
- ❖ உத்தரப் பிரதேச மாநில அரசானது பொது முடக்கத்தின்போது அம்மாநிலத்திற்குத் திரும்பிய புலம்பெயர்ந்த தொழிலாளர்களைப் பற்றிய தனது முதலாவது திறன் தகவல் அமைப்பை வெளியிட்டுள்ளது.
  - அவர்களின் திறன் மற்றும் அனுபவம் ஆகியவற்றைப் பொறுத்து அம்மாநிலத்தில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

- ❖ இந்தியாவின் ஆரோக்கிய சேது என்ற செயலியானது உலகின் மிகப்பெரிய தடம் தொடர்பு கண்காணிப்புச் செயலியாக உருவெடுத்துள்ளது. இது 40 நாட்களில் மட்டும் 11 கோடி 40 லட்சம் மக்களைச் சென்றடைந்துள்ளது.
- ❖ சமீபத்தில் உலக சுகாதார அமைப்பானது விமர்சனத்திற்கு உள்ளான மலேரியா நோய் எதிர்ப்பு மருந்தான “ஹைட்ராக்ஸிகுளோரோகுயின்” என்ற மருந்தின் சோதனையை நிறுத்தி வைப்பதாக அறிவித்துள்ளது. இது கோவிட் – 19 சிகிச்சைக்குப் பயன்படுத்தப் படுகின்றது.
- ❖ கூகுள் பிளே ஸ்டோரானது கேரளாவில் மதுவை விநியோகிக்கப் பயன்படுத்தப்பட

இருக்கும் "BevQ" என்ற செயலிக்கு வேண்டி தனது ஒப்புதல் வழங்கியுள்ளது.

- மத்திய அரசானது "MyGov" குழுவால் நடத்தப்பட இருக்கும் தீங்கு விளைவிக்கும் பிழை (BUG) கண்காணிப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
    - இந்தத் திட்டமானது ஆரோக்கிய சேது செயலிக்குள் பாதுகாப்புக் குறைபாடுகளை கண்டுபிடிக்கும் பாதுகாப்பு ஆராய்ச்சியாளர்களுக்கு வெகுமதிகளை வழங்க வழிவகை செய்கின்றது.
- ஆங்கிலேய எழுத்தாளரான J.K. ரௌலிங் "The Ickabog" என்ற தனது புதிய குழந்தைகள் புத்தகத்தின் முதல் 2 அத்தியாயங்களை வெளியிட்டுள்ளார்.
    - 2007 ஆம் ஆண்டில் "ஹாரி பாட்டர்" மற்றும் "கொடிய புனிதம்" ஆகியவை வெளியிடப்பட்டதற்குப் பிறகு அவரது முதலாவது குழந்தைகள் புத்தகம் இதுவே ஆகும்.

- உலகம் முழுவதும் மே 30 ஆம் தேதியன்று இ-சிகரெட்டுகளைப் போன்று இருக்கும் ஒரு சாதனத்திற்கான உலக தினமானது அனுசரிக்கப்பட இருக்கின்றது. இது உலகப் புகையிலை எதிர்ப்பு தினத்திற்கு முந்தைய தினத்தில் அனுசரிக்கப்பட இருக்கின்றது.
    - இது இ-சிகரெட்டுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் புகை பிடிக்கும் பழக்கத்தை விட முடியாத நபர்களுக்கு உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மே 28 ஆம் தேதி தேதியானது உலகப் பட்டினித் தினமாக அனுசரிக்கப் படுகின்றது.
    - இது பட்டினித் திட்டத்தின் ஒரு முன்னெடுப்பாகும்.
- கர்நாடக மாநில அரசானது தனது அனைத்துக் குடிமக்களின் தரவுகளைச் சேகரிப்பதற்காக "மாநில சுகாதாரப் பதிவேட்டை" தொடங்கவுள்ளதாக அறிவித்து உள்ளது.
    - நாட்டில் இந்த வகையைச் சேர்ந்த ஒரு முதலாவது பதிவேடு இதுவாகும்.
- நீண்ட தொலைவு கொண்ட விமானப் பயணத்திற்கான முன்னோக்கு விமானப் பயணச் செயல் திட்டத்தின் கீழ் ரஷ்யா தனது முதலாவது மறைந்து இருந்து தாக்கும் வகையிலான குண்டு வீசும் விமானத்தைக் கட்டமைத்துள்ளது.
- தொகுப்பு வேக நடவடிக்கை என்பது கோவிட் – 19 தடுப்பு மருந்துகள், சிகிச்சை முறைகள் மற்றும் நோய்க் கண்டறிதல் ஆகியவற்றின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காகவும் ஊக்கப்படுத்துவதற்காகவும் அமெரிக்காவின் கூட்டாட்சி அரசாங்கத்தினால் தொடங்கப்பட்ட ஒரு பொது-தனியார் பங்களிப்புத் திட்டமாகும்.
- இந்திய ரிசர்வ் வங்கியானது ஆத்மநிர்பர் பாரத் என்ற திட்டத்தின்கீழ், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு நீட்டிக்கப்பட இருக்கும் கடன்களுக்கு அபாயமற்ற தகுதி நிலை (Zero risk weight) என்ற ஒன்றை வங்கிகள் வழங்க அனுமதிக்க இருக்கின்றது.
    - அபாயமற்றத் தகுதி நிலை என்பது இந்தக் கடன்களுக்கு வங்கிகள் கூடுதலாக மூலதனத்தைப் பிணையாக வைக்க வேண்டியதில்லை என்பதைக் குறிக்கின்றது.
- கொரானா வைரஸ் அற்ற நாடாக தன்னைத் தானே அறிவித்த ஐரோப்பாவின் முதலாவது நாடு மான்டிநீக்ரோ ஆகும்.
    - மான்டிநீக்ரோ ஆனது ஒரு பால்கன் நாடாகும்.
- அமெரிக்காவானது ஹாங்காங்கை சீனாவிடமிருந்துப் பிரிந்து இருக்கும் ஒரு தன்னாட்சிப் பிரதேசமாக கருதவில்லை என்று கூறியுள்ளது.

- இது அமெரிக்காவுடனான ஹாங்காங்கின் சிறப்பு வர்த்தக நிலையின் இழப்பிற்கு வழி வகுக்கும். மேலும் இது அந்நாடு ஒரு சர்வதேச நிதி மையமாக தனித்து நிற்பதற்கும் அச்சுறுத்தலாக இருக்கும்.

❖ மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சகம் "மின்னணு பாரம்பரியக் களஞ்சியம் மற்றும் மின்னணு கலைஞர் களஞ்சியம் ஆகியவற்றை உருவாக்கிட வேண்டி பரிந்துரை செய்துள்ளது. எனவே இதன் மூலம் புகழ்பெற்ற கலைஞர்கள் தங்களது கலைகளைக் கற்பிப்பதற்கு வேண்டி காணொளி நிகழ்ச்சித் தொகுதிகளை உருவாக்கலாம்.

❖ சீன நாடாளுமன்றம் ஹாங்காங்கிற்காக ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றி உள்ளது. இது முதன்முறையாக ஹாங்காங் சிறப்பு நிர்வாகப் பகுதிக்காக வேண்டி (SAR - Special Administrative Region) தேசியப் பாதுகாப்புச் சட்டங்களை வரைவு செய்ய சீனாவிற்கு (பெய்ஜிங்) அதிகாரம் அளிக்கின்றது.

❖ உத்தரப் பிரதேச மாநில அரசானது அம்மாநிலத்தில் 800 கிலோ மீட்டர் சாலையை மூலிகைச் சாலையாக மேம்படுத்த இருக்கின்றது.

- இந்த மூலிகைச் சாலையானது தனது இரு புறங்களிலும் உள்ள நிலப்பகுதியில் மருத்துவ மற்றும் மூலிகை மரங்களைக் கொண்டிருக்கும்.

❖ மத்தியப் பிரதேச மாநில அரசானது புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு உதவுவதற்காக வேண்டி ரோஜ்கர் சேது யோஜனா என்ற திட்டத்தைத் தொடங்கி உள்ளது.

- இந்தத் திட்டமானது புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க இருக்கின்றது.

❖ தற்பொழுது மத்திய நெகிழிப் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனமானது மத்தியப் பெட்ரோலிய வேதியியல் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் என்று பெயர் மாற்றப் பட்டுள்ளது.

- இந்தப் பெயர் மாற்றமானது தமிழ்நாடு சமூகப் பதிவுகள் சட்டம், 1975 என்ற சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்டுள்ளது.

❖ உலக சுகாதார நிறுவனத்தின்படி, சீரம் இந்திய நிறுவனம், பாரத் பயோடெக், சைடஸ் கேடிலா மற்றும் இந்திய தடுப்பு மருந்து நிறுவனம் ஆகியவை கோவிட் – 19 தடுப்பு மருந்தை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ள இந்திய நிறுவனங்களாகும்.

❖ புகழ்பெற்ற ஜோதிடரான பேஜன் டருவாலா என்பவர் குஜராத்தில் உள்ள அகமதாபாத்தில் காலமானார்.

- பேஜன் டருவாலா என்பவர் "ஆயிரம் ஆண்டுகால தீர்க்க தரிசனம்" என்ற புத்தகத்தில் கடந்த 1000 ஆண்டுகளில் 100 சிறந்த ஜோதிடர்களிடையே தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளார்.

❖ சத்தீஸ்கர் மாநிலத்தின் முதலாவது முதலமைச்சரான அஜித் யோகி சமீபத்தில் காலமானார்.

- இவர் சத்தீஸ்கர் மாநிலத்தில் 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை இந்திய தேசியக் காங்கிரசின் சார்பாக முதலமைச்சராகப் பதவி வகித்தார்.

❖ தியரி டெலபோர்ட் என்பவர் விப்ரோ நிறுவனத்தின் புதிய தலைமை செயல் அதிகாரி மற்றும் மேலாண் இயக்குநராக உருவெடுத்துள்ளார்.

- இதற்கு முன்பு, இவர் கேப்ஜெமினி குழுமத்தின் தலைமைச் செயல்பாட்டு அதிகாரியாகப் பணியாற்றினார்.

# தமிழ்நாடு செய்திகள்

## காவிரி நீர் மேலாண்மை ஆணையம்

- காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை ஜல் சக்தி அமைச்சகத்தின் கீழ் கொண்டு வர மத்திய அரசானது முடிவு செய்துள்ளது.
- முன்பு இது நீர்வளம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சகத்தின் கீழ் இருந்தது.
- ‘காவிரி நீர் மேலாண்மை ஆணையம்’ மற்றும் ‘காவிரி நீர் ஒழுங்குமுறைக் குழு’ ஆகியவற்றை உள்ளடக்கிய காவிரி நீர் மேலாண்மைத் திட்டத்தை மத்திய அரசானது 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அறிவித்தது.
- தீர்ப்பாயத்தின் உத்தரவை உரிய மனப்பான்மையுடன் மேற்கொள்ளப் படுவதை உறுதி செய்யவே காவிரி நீர் ஒழுங்குமுறைக் குழுவானது அமைக்கப்பட்டது.

| State | Quantity of water allocated **(Latest)** |
|---|---|
| Karnataka | 284.75 tmcft, including 4.75 tmcft for Bengaluru |
| Tamil Nadu | 404.25 tmcft |
| Kerala | 30 tmcft |
| Puducherry | 7 tmcft |

## சிங்கம்பட்டி ஜமீன்

- ஜமீன்தாராரன முருகதாஸ் தீர்த்தபதி காலமானார்.
- திருநெல்வேலிக்கு அருகிலுள்ள சிங்கம்பட்டி எனும் ஒரு சிறிய பாளையத்தில் வசித்து வந்த இவர் இந்தியாவில் கடைசியாக முடிசூட்டப்பட்ட மன்னர் ஆவார்.
- சிங்கம்பட்டி ஜமீனில் 31-வதாக முடிசூட்டப்பட்ட மன்னர் இவர் ஆவார்.



# தேசியச் செய்திகள்

## ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத் திட்டம்

- சமீபத்தில் யூரியா அல்லாத உரங்களுக்கான மானியத்திற்கு ரூபாய் 22,186 கோடியை மானியமாக மத்திய அரசானது ஒப்புதல் அளித்துள்ளது.
- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத் திட்டத்தின் கீழ் அம்மோனியம் பாஸ்பேட் எனும் உரத்தையும் சேர்க்க ஒப்புதல் அளித்தது.
- ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத் திட்டமானது, 2010 ஆம் ஆண்டு முதல் வேதியியல் மற்றும் உர அமைச்சகத்தின் உரங்கள் துறையினால் செயல்படுத்தப் பட்டு வருகின்றது.
- ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத் திட்டத்தின் கீழ், வருடாந்திர அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட அளவு மானியமானது, அதன் ஊட்டச்சத்து உள்ளடக்கத்தைப் பொறுத்து மானிய விலையில் உள்ள பாஸ்பேடிக் & பொட்டாசிக் உரங்களின் ஒவ்வொரு வகையிலான தரத்திற்கும் வழங்கப்படுகிறது.
- யூரியா அல்லாத உரங்களுக்கான மானியத்தைக் கட்டுப்படுத்த ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத் திட்டமானது முயல்கிறது. மேலும் அது மானியச் சுமையை ஓரளவிற்குக் கணிசமாகக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இத்திட்டத்தின் கீழ் யூரியா தவிர மற்ற உரங்கள் அனைத்தும் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட உள்ளன.
- இந்தத் திட்டமானது இரண்டாம் நிலை ஊட்டச்சத்துக்களான என், பி, கே மற்றும் எஸ் மீதும் (நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் மற்றும் சல்பர்) மற்றும் மைக்ரோ ஊட்டச் சத்துக்களிலும் கவனம் செலுத்துகிறது.

## CARES திட்டம்

- கோவிட் – 19 செயல்பாடு கொண்ட எதிர்வினை மற்றும் செலவின உதவித் திட்டம் என்பது "CARES" (COVID-19 Active Response and Expenditure Support Programme) என்ற திட்டமாகும்.
- இதன் மூலம் இந்திய அரசு மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவை 1.5 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உள்ளன.
- இது புதிமையான கொரானா வைரஸ் நோய்த் தொற்றிற்காக அரசின் எதிர்வினை நடவடிக்கைக்கு உதவ இருக்கின்றது.

## மத்திய அலுவல் கட்டிடம் (விஸ்டா)

- வல்லுநர் மதிப்பீட்டுக் குழுவானது ரூ.922 கோடி செலவில் புதிய பாராளுமன்ற கட்டிடத்திற்கான பரிந்துரைக்கு அனுமதி வழங்கியுள்ளது.
- தற்பொழுதுள்ள நாடாளுமன்றமானது 93 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப் பட்டதாகும்.
- புதுதில்லியில் உள்ள மத்தியக் கட்டிடமானது நாடாளுமன்ற வளாகம், ராஷ்டிரபதி பவன், இந்தியா நுழைவாயில், வடக்கு & தெற்குப் பகுதி, தேசிய ஆவணக் காப்பகம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- இது எட்வின் லூட்டேயன்ஸ் மற்றும் பேக்கர் ஆகியோரால் வடிவமைக்கப் பட்டதாகும்.

*இத்திட்டம் பற்றி*

- இத்திட்டம் மத்தியச் செயலகத்தின் வடக்கு மற்றும் தெற்கு அலுவலகப் பகுதிகள், பாராளுமன்றக் கட்டிடம் மற்றும் 3 கிலோமீட்டர் நீளமுடைய ராஜ பாதை ஆகியவற்றைப் புதுப்பிக்கத் திட்டமிடுகின்றது.
- இத்திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குள் ஒரு புதிய பாராளுமன்றக் கட்டிடமும், 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் ஒரு பொதுத் தலைமைச் செயலகமும் கட்டி முடிக்கப்படும்.
- ஒரு புதிய முக்கோண வடிவிலான பாராளுமன்றக் கட்டிடம் கட்டப்படும்.
- தற்போதைய வடக்கு மற்றும் தெற்குப் பகுதி அலுவலகங்கள் அருங்காட்சியகங்களாக மாற்றப் படும்.
- பிரதம மந்திரி அலுவலகம், பிரதம மந்திரி மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் ஆகியோரது வீடுகள் மறுநிர்மாணம் செய்யப்படும்.
- ஆனால் எந்தப் புதியக் கட்டிடமும் இந்தியா நுழைவாயிலை விட பெரியதாக இருக்காது.

## சொட்டு நீர்ப் பாசனம்

- 2019 – 20 ஆம் நிதியாண்டில், சொட்டு நீர்ப்பாசன விரிவாக்கத்தில் தேசிய அளவில் தமிழ்நாடு (2,06,853.25 ஹெக்டேர்) முதலிடத்தில் உள்ளது.
- இதற்கு அடுத்து கர்நாடக மாநிலம் 1,41,103.56 ஹெக்டேருடன் 2வது இடத்திலும் குஜராத் மாநிலம் 1,08,322.00 ஹெக்டேருடன் 3வது இடத்திலும் உள்ளன.
- இது பிரதான் மந்திரி கிரிஷி சின்சாய் யோஜனா (PMKSY - Pradhan Mantri Krishi Sinchayee Yojana) என்ற ஒரு திட்டத்தின் ஒரு பகுதியாக எட்டப் பட்டுள்ளது.
- இது நீர் சேமிப்புத் தொழில்நுட்பங்களின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் "சிறு துளி அதிக விளைச்சல்" என்ற கருத்தாக்கத்தை ஊக்கப் படுத்தும் ஒரு திட்டமாகும்.

## மூங்கில் மாநாடு

- மத்திய வடகிழக்கு வளர்ச்சித் துறைக்கான இணையமைச்சர் காணொளியின் மூலம் மூங்கில் மாநாட்டில் கலந்து கொண்டார்.
- இது மூங்கில் வளங்களின் உதவியுடன் நாட்டின் பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்ய இருக்கின்றது.
- இந்தியாவின் வடகிழக்குப் பகுதியானது நாட்டின் 60% மூங்கில் இருப்பைக் கொண்டுள்ளது.
- இந்திய வனச் சட்டம், 1927 என்ற சட்டமானது மூங்கிலைப் புல் வகை இனமாக மாற்றுவதற்காக 2017 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது.

## இந்தியாவில் மதுபானம் மற்றும் GST

- மாநிலங்கள் பொதுவாக மதுபானத்தின் மீது மிகக் கடுமையான சுங்கத் தீர்வையை விதிக்கின்றன.
- தில்லி அரசானது மதுபான விலையின் மீது சிறப்புக் கொரானாக் கட்டணமாக 70% அளவிற்கு கட்டண உயர்வை விதித்துள்ளது.

- உத்தரப் பிரதேச மாநில அரசானது மதுபானத்தின் மீது சிறப்பு வரியை விதிக்கின்றது. இந்த மாநிலம் வசூலிக்கப்பட்ட இந்த நிதியை பராமரிக்கப்படாத அல்லது தெருவில் சுற்றித் திரியும் கால்நடையைப் பராமரிக்கப் பயன்படுத்துகின்றது.
- தமிழ்நாடு மாநில அரசானது மதுபானத்தின் மீது மதிப்புக் கூட்டு வரியை (VAT – Value Added Tax) விதிக்கின்றது.
- மதுபான விற்பனையானது குஜராத் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களில் தடை செய்யப் பட்டுள்ளது.
- மற்ற அனைத்து மாநிலங்களிலும், மதுபானமானது அரசின் கருவூலத் தொகைக்கு ஒரு குறிப்பிட்ட பங்களிப்பை ஆற்றுகின்றது.
- மாநில சுங்கத் தீர்வையானது மதுபானத்தின் மீது விதிக்கப் படுகின்றது.
- "மாநில நிதியியல் : 2019-20 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை குறித்த ஆய்வு" என்ற இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கையின்படி, மதுபானத்தின் மீதான சுங்கத் தீர்வையானது பெரும்பாலான மாநிலங்களின் மாநில வருவாயிற்கு 10% முதல் 15% பங்களிப்பை ஆற்றுகின்றது.
- இது மாநில வருவாயிற்கு 2வது அல்லது 3வது மிகப்பெரிய பங்களிப்பாகும்.
- மாநில அரசுகள் மதுபானத்தை GST வரம்பிற்குள் கொண்டு வர விரும்பாததற்கு இதுவே முக்கியக் காரணமாகும்.

## இந்தியாவில் இறப்புச் சான்றிதழ்

- இந்தியாவில் பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் பிறப்புகள் மற்றும் இறப்புகளின் பதிவுகள் சட்டம், 1969ன் கீழ் வழங்கப் படுகின்றன.
- இச்சட்டத்தின் கீழ், மத்திய அரசானது இந்தியாவின் தலைமைப் பதிவாளரை நியமிக்க முடியும்.
- மாநில அரசுகள் இறப்புச் சான்றிதழ்களை வழங்கும் உரிமையைக் கொண்டிருந்தாலும், இது போன்ற சான்றிதழ்கள் வழங்குதல் குறித்த ஆணைகளை மத்திய அரசு மாநிலங்களுக்குப் பிறப்பித்து உள்ளது.
- பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் படி, மாநில அரசுகள் தனக்குரிய அதிகாரங்களைக் கொண்டிருந்தாலும், மத்திய அரசு பிறப்பிக்கும் ஆணைகளை மாநில அரசுகள் பின்பற்ற வேண்டும்.

## சாரஸ் சேகரிப்பு

- மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சகமானது "அரசு மின்னணுச் சந்தைத் தளம்" (GeM - Government E Marketplace) மீது "சாரஸ் சேகரிப்பு" என்ற ஒரு சேகரிப்பைத் தொடங்கியுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகம், GeM, தீன் தயாள் அந்தியோதயா யோஜனா, தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் (Day-NRLM - National Rural Livelihood Mission) ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- சாரஸ் சேகரிப்பானது சுய உதவிக் குழுக்களினால் தயாரிக்கப்படும் தினசரிப் பயன்பாட்டுப் பொருட்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- GeM என்பது தேசியப் பொதுக் கொள்முதல் தளமாக அரசாங்கத்தால் நிர்வகிக்கப் படும் ஒரு தளமாகும். இது மத்திய மற்றும் மாநில அரசுகளினால் அதற்குத் தேவைப் படும் சரக்குகள் மற்றும் சேவைகளைக் கொள்முதல் செய்வதற்காகத்

தொடங்கப்பட்டுள்ளது.




## GARUD

- விமானப் போக்குவரத்துத் துறையின் பொது இயக்குநர் கொரானா வைரஸ் தொடர்பான ஆளில்லா விமான நடவடிக்கைகளுக்கு விரைவாக விலக்கு அளிப்பதற்காக "GARUD" என்ற ஒரு தளத்தைத் தொடங்கியுள்ளார்.
- GARUD என்பது "ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி நிவாரணம் அளிப்பதற்கான அரசு அங்கீகாரம்" என்பதாகும்.


## தர்பார் மாற்றம் (தலைநகர் மாற்றம்)

- ஜம்மு காஷ்மீர் உயர் நீதிமன்றமானது தர்பார் மாற்றம் தொடரப்படுவது (தலைநகர் மாற்றம்) குறித்து ஒரு இறுதி முடிவு எடுக்க வேண்டும் என்று மத்திய அரசு மற்றும் ஒன்றியப் பிரதேச நிர்வாகத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது.
- இது ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீநகர் (கோடைக்காலத் தலைநகர்) மற்றும் ஜம்முவிற்கு (குளிர்காலத் தலைநகர்) இடையே தலைநகர் மாற்றப்பட்டு வரும் 148 ஆண்டு கால நடைமுறை ஆகும்.
- இந்த நடைமுறையானது 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஜம்மு காஷ்மீரின் மகாராஜாவான ரன்பீர் சிங் என்பவரால் தொடங்கப்பட்டது.



## கில்ஜிட் – IMD

- இந்திய வானிலை அமைப்பானது (IMD - Indian Meteorological Department) ஜம்மு-காஷ்மீருக்கான தனது வானிலைத் துணை மண்டலத்தில் ஜம்மு-காஷ்மீர், கில்ஜிட்-பலூசிஸ்தான், லடாக் மற்றும் முசபராபாத் ஆகிய பகுதிகளை இணைக்கத் தொடங்கியுள்ளது.
- இந்த மாற்றமானது கில்ஜிட்-பலூசிஸ்தான் பகுதியில் தேர்தலை நடத்தும் பாகிஸ்தானின் முடிவை அடுத்து மேற்கொள்ளப் பட்டுள்ளது.



प्रादेशिक मौसम विज्ञान केंद्र, नई दिल्ली
भारत मौसम विज्ञान विभाग
पृथ्वी विज्ञान मंत्रालय

Regional Meteorological Centre, New Delhi
India Meteorological Department
Ministry of Earth Sciences

Dated: 06 MAY 2020
Time of Issue 1200 HRS IST

WEATHER WARNING FOR NORTHWEST INDIA

| MET-SUBDIVISION | 06 May | 07 May | 08 May | 09 May | 10 May |
|---|---|---|---|---|---|
| Jammu & Kashmir, Ladakh, Gilgit-Baltistan and Muzaffarabad | Thunderstorm /Lightning accompanied with gusty winds (Speed 30-40 kmph) and hail at isolated places. | NIL | NIL | Thunderstorm /Lightning at isolated places. | Thunderstorm /Lightning accompanied with gusty winds (Speed 30-40 kmph) at isolated places. |
| | | NO WARNING | NO WARNING | | |

## இந்தியாவில் இணையச் சேவை ஊடுருவல்

- சமீபத்தில் இந்தியாவின் இணையம் மற்றும் கைபேசி மன்றமானது ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, இந்தியாவின் ஊரகப் பகுதிகளில் இணையத்தைப் பயன்படுத்தும் பயனாளிகளின் எண்ணிக்கையானது (227 மில்லியன்) நகர்ப்புறப் பகுதிப் பயனாளிகளுடன் (205 மில்லியன்) ஒப்பிடும் பொழுது 10% அதிகரித்துள்ளது.
- இணையச் சேவைப் பயன்பாட்டைப் பொறுத்த வரையில், அமெரிக்கா (88%) மற்றும் சீனாவிற்கு (61%) அடுத்து இந்தியா (40%) உள்ளது.
- இணையச் சேவையைப் பயன்படுத்துவதில் ஆண்களை விட பெண்களே அதிகமாக உள்ளனர்.
- இணையச் சேவையைப் பயன்படுத்துவதில் மாநிலங்களில் தில்லி முதலிடத்திலும், அதற்கு அடுத்து கேரள மாநிலமும் உள்ளது.

## இந்தியாவில் இணையச் சேவைப் பயன்பாடு

- உலகின் முன்னணி தரவு, கண்ணோட்டம் மற்றும் ஆலோசனை வழங்கும் ஒரு நிறுவனமான கந்தார் எனும் நிறுவனமானது இந்தியாவில் டிஜிட்டல் தகவமைப்பு மற்றும் பயன்பாட்டுப் போக்குகள் குறித்த அறிக்கையான “ICUBE 2019” என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.

- இந்தியாவில் இருக்கும் மாதாந்திர இணையப் பயன்பாட்டாளர்கள் அனைவரும் இணையத்தை அணுக கைபேசியை ஒரு சாதனமாகப் பயன்படுத்துகின்றனர்.
- 84%ற்கும் மேற்பட்ட பயனாளிகள் பொழுதுபோக்குப் பயன்பாடுகளுக்காக இணையத்தைப் பயன்படுத்துகின்றனர்.

## வந்தே பாரத் திட்டம்

- இந்திய அரசு "வந்தே பாரத் திட்டத்தை" தொடங்கி இருக்கின்றது.
- இது மிகப்பெரிய மீட்பு நடவடிக்கைகளில் ஒன்றாக கருதப்படுகின்றது.
- இது உலகம் முழுவதும் சிக்கித் தவிக்கும் இந்தியர்களைத் தாயகம் அழைத்து வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த "வந்தே பாரத் திட்டம்" முழுவதும் ஏர் இந்தியா நிறுவனத்தினால் மேற்கொள்ளப் படுகின்றது.




## கைலாஷ் மானசரோவருக்கு புதிய சாலை

- உத்தரகாண்ட் வழியாக கைலாஷ் மானசரோவரை வேகமாகச் சென்று அடைய ஒரு புதிய சாலைக்கான பணிகள் முடிவடைந்தன.
- கைலாஷ் மானசரோவர் என்பது திபெத்தின் இமயமலைப் பகுதியில் அமைந்துள்ள ஒரு புண்ணிய யாத்திரைத் தளமாகும்.
- பாதுகாப்பு அமைச்சரான ராஜ்நாத் சிங் இந்தச் சாலையை திறந்து வைத்தார்.
- இது கடல் மட்டத்திலிருந்து 17,000 அடி உயரத்தில் இந்திய-சீன எல்லையில் உள்ள லிபுலேக் கணவாய் (உத்தரகாண்ட்) வரை அமைக்கப் பட்டிருக்கிறது.
- இது உத்தரகாண்டின் பித்தோராகரில் உள்ள தர்ச்சுலா என்ற நகரத்துடன் அந்தக் கணவாயை இணைக்கிறது.
- எல்லைச் சாலைகள் அமைப்பானது (BRO - Border Roads Organisation) இந்தத் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது.
- இந்தியா, சீனா மற்றும் நேபாளத்தின் முக்கோணச் சந்திப்புக்கு அருகில் லிபுலேக் கணவாய் உள்ளது.
- 6638 மீட்டர் உயரமுடைய கைலாஷ் சிகரம் இமயமலையின் கைலாஷ் வரம்பில் இருக்கும் ஒரு உயர்ந்த சிகரமாகும். கைலாஷ் வரம்பு என்பது சீனாவின் தன்னாட்சிப்

பகுதியான திபெத்தில் இருக்கும் இமயமலையின் வெளிப்புறப் பிரிவில் ஒரு பகுதியாகும்.

- கைலாஷ் சிகரம் போன் மதம், புத்த மதம், இந்து மதம் மற்றும் சமண மதம் ஆகிய நான்கு சமயங்களுக்கு புனிதத் தளமாகக் கருதப்படுகின்றது.
- இச்சிகரம் சிந்து மற்றும் பிரம்மபுத்திரா நதிகளின் மூலமான மானசரோவர் ஏரி மற்றும் சட்லஜ் நதியின் மூலமான ராகாஸ்தல் ஏரி ஆகியவற்றுக்கு அருகில் உள்ளது.
- கைலாஷ் மானசரோவர் யாத்திரை உத்தரகாண்ட்டில் இருக்கும் லிபுலேகா கணவாய் மற்றும் சிக்கிமில் இருக்கும் நாதுலா கணவாய் ஆகிய இரு வழிகளில் மேற்கொள்ளப் படுகின்றது.




## பிரதமர் ஆராய்ச்சி தோழமைத் திட்டம் (PMRF)


- இத்திட்டத்தின் ஒரு புதிய திருத்தமானது மாணவர்களின் கேட் மதிப்பெண்ணை மத்திய கல்வி நிறுவனங்களைத் தவிர மற்ற அனைத்துக் கல்வி நிறுவனங்களுக்கும் கட்டாயம் ஆக்கியுள்ளது.
- PMRF (Prime Minister Research Fellowship Scheme) திட்டமானது முதன்முதலில் 2018-19 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- இந்த திட்டமானது உயர்கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சியின் தரத்தினை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- அதாவது, அந்த நிறுவனங்கள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பட்டங்களை வழங்க வேண்டும்.
- இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்கள், பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனம் மற்றும் முன்னிலையில் உள்ள மத்தியப் பல்கலைக்கழகங்கள், தேசியத் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஆகியவை PMRF திட்டத்தின் கீழ் தகுதி பெற்ற நிறுவனங்களாகும்.

## திட்டங்கள் மீதான NBW அனுமதி

- பிரதம மந்திரியின் தலைமையிலான தேசிய வனவுயிர் வாரியமானது (NBW - National Board for Wildlife) கடைசியாக 2014 ஆம் ஆண்டில் கூடியது.
- 6 ஆண்டுகளுக்குப் பிறகு இது சமீபத்தில் கூடி பின்வரும் திட்டங்களுக்கு தனது அனுமதியினை வழங்கியுள்ளது.
- கர்நாடகாவில் உள்ள ஷராவதி சிங்கவால் குரங்குச் சரணாலயத்தில் ஆழ்துளைக் கிணறுகளை அமைத்தல்.
- உத்தராகாண்டின் டேராடூன் மற்றும் டெஹ்ரி கார்வால் மாவட்டங்களில் பரவி இருக்கும் பினோாங் வனவிலங்குச் சரணாலயத்திற்கு அருகில் லக்வார் பல்நோக்குத் திட்டத்தை (300 மெகா வாட்) அமைத்தல் மற்றும் அதனைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வருதல்.
- தெலுங்கானாவின் அம்ராபாத் புலிகள் வலசைப் பாதையின் வழியாக ஒரு இரயில்வே பாதையை அமைத்தல்.
- கோவாவில் மொல்லெம் வனவிலங்குச் சரணாலயத்தின் வழியாக நெடுஞ்சாலை விரிவாக்கம்.
- அருணாச்சலப் பிரதேசத்தின் திபாங் பள்ளத்தாக்கில் உள்ள திபாங் நதியில் எட்டாலின் நீர்மின் திட்டம்.
- திபாங் என்பது அருணாச்சலப் பிரதேசம் மற்றும் அசாம் ஆகிய மாநிலங்கள் வழியாகப் பாயும் பிரம்மபுத்திரா நதியின் ஒரு கிளை நதியாகும்.

### *திபாங் பள்ளத்தாக்கு*

- திபாங் பள்ளத்தாக்கு என்பது இந்தியாவின் பல்லுயிர்ப் பெருக்க மண்டலங்களில் ஒன்றாக உள்ளது.
- இது இடு மிஸ்மி சமூகத்திற்கான வாழ்விடமாகவும் உள்ளது.
- இது துணை-வெப்ப மண்டல பசுமை மாறா நீண்ட இலைகள் கொண்ட காடுகள் மற்றும் துணை வெப்ப மண்டல மழைக் காடுகளாகும்.
- இந்தத் திட்டமானது இமயமலையில் மிகவும் செறிந்த பல்லுயிர்ப் பெருக்க புவியியல் மண்டலத்தின் கீழும் உலகின் மிகப்பெரிய பல்லுயிர்ப் பெருக்க இடங்களில் ஒன்றின் கீழும் வருகின்றது.
- பரிந்துரைக்கப்பட்ட இந்தத் திட்டமானது பேலியோ ஆர்க்டிக், இந்தோ-சீனா, இந்தோ-மலேயா உயிரிப் புவியியல் பகுதிகளில் அமைந்துள்ளது.



## சாகர் திட்டம்




- இந்திய அரசு "சாகர் திட்டம்" என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- இது மாலத்தீவு, மொரீஷியஸ், மடகாஸ்கர், செசல்ஸ் மற்றும் கோமரோஸ் ஆகிய நாடுகளுக்கு உணவுப் பொருட்கள், கோவிட் – 19 தொடர்பான ஆயுர்வேத மருந்துகள், ஹைட்ராக்சிகுளோரோகுயின் (HCQ) மாத்திரைகள் ஆகியவற்றை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இது மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகம் மற்றும் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் ஆகியவற்றின் நெருங்கிய ஒத்துழைப்பின் மூலம் மேற்கொள்ளப் படுகின்றது.
- இது இந்தியப் பெருங்கடலில் இந்தியாவின் தொலை நோக்குத் திட்டமான "சாகர்" (SAGAR - Security and Growth for All in the Region) என்பதின் கீழ் மேற்கொள்ளப் படுகின்றது.
- 2015 ஆம் ஆண்டில், இந்தியப் பெருங்கடலில் உள்ள அனைவருக்குமான பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய "சாகர்" என்ற இந்தியப் பெருங்கடலின் மீதான தனது தொலைநோக்குத் திட்டத்தை இந்தியாவானது தொடங்கியது.

## மாதிரிப் பதிவுகள் முறை


- சமீபத்தில் இந்தியாவின் தலைமைப் பதிவாளர் 2018 ஆம் ஆண்டிற்கான தனது மாதிரிப் பதிவுகள் முறை (SRS - Sample Registration System) அறிக்கையில் பிறப்பு விகிதம், இறப்பு விகிதம் மற்றும் குழந்தைகள் இறப்பு விகிதம் குறித்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.
- இந்த விகிதங்கள் மொத்த மக்கள் தொகையில் ஆயிரம் நபர்களுக்கு என்ற அளவில் கணக்கிடப் படுகின்றது.
- SRS என்பது தேசிய மற்றும் மாநில அளவில் குழந்தைகள் இறப்பு விகிதம், பிறப்பு விகிதம், இறப்பு விகிதம் மற்றும் இதர பிறப்பு மற்றும் இறப்புக் குறிகாட்டிகளின் நம்பத் தகுந்த வருடாந்திரக் கணிப்புகளை வழங்குவதற்கான மக்கட் தொகை சார்ந்த ஓர் ஆய்வாகும்.
- இந்தியாவின் தலைமைப் பதிவு அமைப்பானது 1961 ஆம் ஆண்டில் இந்திய அரசினால் மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் நிறுவப்பட்டதாகும்.

***2018 ஆம் ஆண்டு SRS-ன் சிறப்பம்சங்கள்***

- இந்தியாவின் பிறப்பு விகிதமானது 1971 ஆம் ஆண்டில் 36.9 லிருந்து 2018 ஆம் ஆண்டில் 20 ஆகக் குறைந்துள்ளது.
- பிறப்பு விகிதமானது கடந்த 40 ஆண்டுகளாக நகர்ப்புறப் பகுதிகளுடன் ஒப்பிடப்படும் போது கிராமப்புறப் பகுதிகளில் அதிகமாக தொடர்ந்து நீடிக்கின்றது.
- பிறப்பு விகிதத்தில் பீகார் மாநிலம் (26.2) தொடர்ந்து முதலிடத்திலும் அந்தமான் நிக்கோபர் தீவானது (11.2) கடைசி இடத்திலும் உள்ளன.
- இந்தியாவின் இறப்பு விகிதமானது 1971 ஆம் ஆண்டில் 14.9லிருந்து 2018 ஆம் ஆண்டில் 6.2 ஆகக் குறைந்துள்ளது.
- இந்தக் குறைவானது கிராமப்புறப் பகுதிகளில் மிக அதிக அளவில் உள்ளது.
- சத்தீஸ்கர் மாநிலமானது 8 என்ற அளவில் மிக உயரிய இறப்பு விகிதத்தையும் தில்லியானது 3.3 என்ற அளவில் மிகக் குறைந்த இறப்பு விகிதத்தையும் கொண்டு உள்ளன.
- பச்சிளங் குழந்தை இறப்பு விகிதமானது (IMR - Infant mortality rate) 1971 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படும் போது 129 என்ற அளவிலிருந்து தற்போது 32 ஆகக் குறைந்துள்ளது.
- மத்தியப் பிரதேச மாநிலமானது 48 என்ற அளவில் மிக அதிக IMRயையும் நாகாலாந்து 4 என்ற அளவில் மிகக் குறைந்த IMRயையும் கொண்டுள்ளன.

## அடல் ஓய்வூதியத் திட்டம்

- 2015 ஆம் ஆண்டு மே 09 ஆம் தேதி அன்று அடல் ஓய்வூதியத் திட்டமானது தொடங்கப் பட்டது.
- இது தனது 5 ஆண்டு காலச் செயல்பாடுகளை நிறைவு செய்துள்ளது.
- இந்தத் திட்டமானது சுவாலம்பன் என்ற திட்டத்திற்குப் பதிலாக கொண்டு வரப் பட்டுள்ளது.
- இது முதியோர்களின் வருமானப் பாதுகாப்பை அளிப்பதற்காகத் தொடங்கப் பட்டதாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் 18 வயது முதல் 40 வயதுக்குட்பட்ட எந்தவொரு இந்தியக் குடிமக்களாலும் பதிவு செய்ய முடியும்.




- இது 60 வயதை எட்டியவுடன் ரூ. 1000 முதல் ரூ. 5000 வரையிலான குறைந்தபட்ச உறுதிப்படுத்தப்பட்ட ஓய்வூதியத்தை அளிக்கின்றது.

- இது மத்திய நிதித்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையத்தினால் (PFRDA - Pension Fund Regulatory and Development Authority) செயல்படுத்தப் படுகின்றது.

## இந்திய மாநில அளவிலான நோய்த் தீவிர முன்னெடுப்பு

- இது இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் மற்றும் இந்தியப் பொதுச் சுகாதார கூட்டமைப்பு ஆகியவற்றினால் இணைந்து தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது குழந்தைகள் வளர்ச்சி மற்றும் குழந்தைகள் இறப்பு குறித்த மாவட்ட அளவிலான போக்குகள் மீதான தனது அறிக்கையை வழங்கி உள்ளது.
- 2000 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் குழந்தை இறப்பு விகிதமானது 49% என்ற அளவில் குறைந்துள்ளது.
- குழந்தைகள் இறப்பு மற்றும் குழந்தை வளர்ச்சி ஆகியவை மேம்பட்டிருந்தாலும் இந்தியாவில் மாவட்டங்களுக்கிடையேயான பாகுபாடானது அதிகமாக உள்ளது.
- இந்த அறிக்கையின்படி 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இறப்பிற்கான முக்கியமான காரணங்கள் வயிற்றோட்ட நோய்கள், குறைப்பிரசவம், சுவாசத் தொற்றுப் பிரச்சினைகள், பிறப்பின் போதான குழந்தைகளின் குறைந்த எடை, பிறப்பின் போது குழந்தைகளுக்கு ஏற்படும் மூச்சுத் திணறல் ஆகியனவாகும்.




## தோல்கா தேர்தல் குறித்த தீர்ப்பு

- 2017 ஆம் ஆண்டில் தோல்கா தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாஜக கட்சியின் அமைச்சரான பூபேந்திரசின்ஹ் சுடசாமாவின் தேர்தல் வெற்றியை "முறைகேடு மற்றும் மோசடி செய்தல்" என்பதின் அடிப்படையில் செல்லாது என்று குஜராத் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.
- இந்தியத் தேர்தல் ஆணையமானது தோல்கா சட்டமன்றத் தொகுதி தொடர்பான தேர்தல் மனு மீதான குஜராத் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு விவரங்கள் குறித்து ஆய்வு

செய்வதற்காக உமேஷ் சின்ஹாவின் தலைமையில் 3 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது.

## தற்சார்பு மீதான பிரதமரின் அறிவிப்புகள்

- இந்தியப் பிரதமர் 21 ஆம் நூற்றாண்டில் உலகத்தை வழி நடத்தவிருக்கும் தற்சார்பு இந்தியாவின் 5 தூண்களை அறிவித்துள்ளார்.
- பொருளாதாரமானது கூடுதல் மாற்றத்தை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல் மிகப்பெரிய ஒரு வளர்ச்சியையும் கொண்டு வர இருக்கின்றது.
- கட்டமைப்பு வளர்ச்சியானது நவீன இந்தியாவின் அடையாளமாக இருக்கின்றது.
- அடிப்படை அமைப்பானது கடந்த நூற்றாண்டின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டதோடு மட்டுமல்லாமல், 21 ஆம் நூற்றாண்டின் கனவுகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவும் தொழில்நுட்பத்தால் செயல்படக் கூடியதாகவும் உள்ளது.
- இந்தியாவின் மக்கள் தொகையானது நமது வலிமையாகவும் தற்சார்பு இந்தியாவிற்கான ஒரு ஆற்றல் மூலாதாரமாகவும் இருக்கின்றது.
- தேவை : விநியோகச் சங்கிலி மற்றும் அதற்கான தேவையானது பொருளாதாரத்தை வளர்ச்சி பெறச் செய்ய இருக்கின்றது. இது அதன் முழுத் திறனையும் அடைவதற்கான வலிமையை வழங்க இருக்கின்றது.




## ஆத்ம நிர்பர் பாரத் அபியான்

- இந்தியப் பிரதமர் மோடி தற்சார்பு இந்தியா என்ற நிலையை அடைவதற்காக ரூ.20 இலட்சம் கோடி மதிப்பிலான ஒரு சிறப்புப் பொருளாதாரத் தொகுப்பினை அறிவித்துள்ளார்.
- இந்தப் பொருளாதாரத் தொகுப்பானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% ஆக உள்ளது.

- இந்தப் புதிய பொருளாதாரத் தொகுப்பானது பொது முடக்கத்தின் காரணமாக மிகவும் பாதிப்படைந்த தொழிலாளர்கள், நடுத்தர வர்க்கத்தினர், விவசாயிகள் மற்றும் தொழிற்துறையினருக்கு நிவாரணம் அளிப்பதற்குப் பயன்படுத்தப்பட இருக்கின்றது.
- இந்தப் பொருளாதாரத் தொகுப்பானது நிலம், தொழிலாளர், நிதிப் புழக்கம், சட்டம் மற்றும் உள்ளூர்த் தன்மை ஆகிய உற்பத்தி விநியோகச் சங்கிலியின் 5 முக்கியமான நிலைகளின் மீதான விவகாரங்களைக் களைய இருக்கின்றது.
- இந்தத் பொருளாதாரத் தொகுப்பானது உள்நாட்டு விநியோகச் சங்கிலியை வலுப்படுத்துவதற்கு உதவுவதோடு மட்டுமல்லாமல் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப் படும் பொருட்களை நுகர்வதை ஊக்கப்படுத்தவும் பயன்பட இருக்கின்றது.
- இந்தப் புதிய திட்டத்தின் கீழ் மத்திய நிதித்துறை அமைச்சர் 15 பல்வேறு நடவடிக்கைகளை அறிவித்துள்ளார்.
- இந்தத் திட்டமானது உள்நாட்டுப் பொருள்களுக்கான நுகர்வு என்பதின் மீதும் கவனம் செலுத்த இருக்கின்றது.

***சிறப்பம்சங்கள்***

- மத்திய அரசானது முதலீடுகளின் வரம்பை அதிகப்படுத்தியதன் மூலம் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறைகளின் (MSME – Micro Small Medium Enterprises) வரையறையை மாற்றியமைத்துள்ளது.
- மேலும் இதற்கு முன்பு முதலீடுகள் மட்டுமே MSMEகளை வரையறுக்கப் பயன்படுத்தப் பட்டன.
- தற்போது மாற்றியமைக்கப்பட்ட திருத்தத்தின் மூலம் முதலீடுகள் மற்றும் விற்றுமுதல் ஆகிய இரண்டும் MSMEகளை வரையறுக்கப் பயன்படுத்தப்பட இருக்கின்றன.
- ஒரு நிறுவனம் MSME வகையின் கீழ் வர வேண்டும் என்றால் அந்நிறுவனம் முதலீடு மற்றும் விற்றுமுதல் ஆகிய 2 நிபந்தனையையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
- மேலும், தற்போது புதிய வரையறையின்படி, உற்பத்தி மற்றும் சேவை என்பதை அடிப்படையாகக் கொண்ட MSME நிறுவனங்களுக்கான வகையீடானது நீக்கப் பட்டுள்ளது.

## Existing and Revised Definition of MSMEs

| Existing MSME Classification | | | |
|---|---|---|---|
| Criteria : Investment in Plant & Machinery or Equipment | | | |
| Classification | Micro | Small | Medium |
| Mfg. Enterprises | Investment<Rs. 25 lac | Investment<Rs. 5 cr. | Investment <Rs. 10 cr. |
| Services Enterprise | Investment<Rs. 10 lac | Investment< Rs. 2 cr. | Investment<Rs. 5 cr. |

| Revised MSME Classification | | | |
|---|---|---|---|
| Composite Criteria : Investment And Annual Turnover | | | |
| Classification | Micro | Small | Medium |
| Manufacturing & Services | Investment< Rs. 1 cr. and Turnover < Rs.5 cr. | Investment< Rs. 10 cr. and Turnover < Rs.50 cr. | Investment< Rs. 20 cr. and Turnover < Rs.100 cr. |

- MSME துறைக்காக பிணைத் தொகை அற்ற வகையில் ரூ. 3 இலட்சம் கோடி கடன் தொகையானது (Collateral free) ஒதுக்கப் பட்டுள்ளது.
- இந்த வசதியானது ரூ. 25 கோடியிலான செலுத்தப்படாத கடன்களைக் கொண்ட நிறுவனங்கள் அல்லது ரூ.100 கோடியை வருடாந்திர விற்று முதலாகக் கொண்டுள்ள நிறுவனங்களுக்கும் சேர்த்து நீட்டிக்கப் பட்டுள்ளது.
- அசல் தொகை மீதான கடன் நிறுத்தி வைப்புக் காலமாக 12 மாதங்களுடன் சேர்த்து கடன் திருப்பிச் செலுத்தும் காலம் 4 ஆண்டுகளாக உள்ளது.
- வட்டித் தொகையானது உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டதாக இருக்கும்.
- இக்கடன்களுக்கு எந்தவொரு உத்தரவாதக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும், 100% கடன் உத்தரவாதப் பிணையானது வங்கிகள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கு அசல் மற்றும் வட்டி ஆகிய இரண்டின் மீதும் வழங்கப்படும்.
- ரூ. 200 கோடி வரையிலான அரசாங்க ஒப்பந்தங்களுக்கு (அரசு கொள்முதல்) இனிமேல் உலகளாவிய ஒப்பந்ததாரர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- மூலாதாரத்திலிருந்து வரிப் பிடித்தம் மற்றும் மூலாதாரத்திலிருந்து வரி வசூல் ஆகிய விகிதங்கள் 25% என்ற அளவில் குறைக்கப்பட உள்ளன.
- இது 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை தொடரும்.
- விவாத் சே விஸ்வாஸ் என்ற திட்டத்தின் கால வரம்பானது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.
- தற்பொழுது தொழிலாளர் வைப்பு நிதித் திட்டத்தின் கீழ், பங்களிப்பானது 12% தொழிலாளியினாலும் 12% ஆனது முதலாளியினாலும் பங்களிக்கப் படுகின்றது.
- அடுத்த 3 மாதங்களுக்கு, தனியார் நிறுவன முதலாளிகள் மற்றும் பணியாளர்கள் 10% மட்டுமே செலுத்த வேண்டும்.

## சொஹ்ராய் கோவர் ஓவியம்

- சமீபத்தில் ஜார்க்கண்ட்டின் சொஹ்ராய் கோவர் ஓவியம் மற்றும் தெலுங்கானாவின் டெலியா ரூமல் ஆகியவற்றிற்குப் புவிசார் குறியீடு வழங்கப் பட்டுள்ளது.
- சொஹ்ராய் கோவர் ஓவியமானது பாரம்பரிய மற்றும் மரபுகளைக் கொண்ட சுவர் சித்திரக் கலையாகும்.
- சுவர் சித்திரம் என்பது ஓவியக் கலைப் பணியின் எந்தவொரு வேலைப்பாடும் நேரடியாகச் சுவற்றின் மீதோ, கூரையின் மீதோ அல்லது நிரந்தர மேற்பரப்பின் மீதோ பொருத்தப் படுவதாகும்.
- டெலியா ரூமல் கைத்தறிக் கலையானது இயற்கைப் பழச் சாயங்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் இகாத் பாரம்பரியக் கலையைக் கொண்டுள்ளது.
- இகாத் என்பது ஜவுளிகளை வடிவமைக்கப் பயன்படுத்தப்படும் ஒரு வகை சாயம் பூசும் முறையாகும்.
- டெலியா ரூமல்கள் அப்போதைய ஹைதராபாத் நிசாமின் அரசவையில் இருந்த இளவரசிகளினால் முகத்திரையாகவும் மத்திய ஆசியாவில் அராபியர்களினால் தலைப்பாகைத் துணியாகவும் அணியப்பட்டன.



## இந்தியா-சீனா எல்லைத் தகராறு

- ❖ இந்திய மற்றும் சீனப் படையினர்கள் சமீபத்தில் உண்மையான கட்டுப்பாட்டு எல்லையில் இரண்டு இடங்களில் மோதிக் கொண்டுள்ளனர்.
- ❖ இந்த சம்பவங்கள் சிக்கிமில் உள்ள நாகு லா எனும் பகுதியிலும், லடாக்கின் பாங்கோங் சோ ஏரிக்கு அருகே உள்ள பகுதியிலும் நடந்துள்ளன.
- ❖ நாகு லா செக்டாரானது முகுதாங் அல்லது சோ லாமு (டீஸ்டா நதி துவங்குமிடம்) எனும் பகுதிக்கு அருகில் அமைந்துள்ளது.
- ❖ பாங்கோங் சோ என்பது டெதிஸ் புவிப் பெருங்குழிவுனால் உருவான ஒரு உப்பு நீர் ஏரியாகும்.
- ❖ இந்த நீர்நிலைகளில் மூன்றில் ஒரு பங்கு இந்தியக் கட்டுப்பாட்டில் உள்ளது, மீதமுள்ளவை சீனக் கட்டுப்பாட்டில் உள்ளது.




## முழுமையான நீதிக்கான உச்ச நீதிமன்றத்தின் அதிகாரம்

- ❖ இந்தியாவின் தலைமை நீதிபதி போப்டே தலைமையிலான உச்சநீதிமன்றத்தின் ஒன்பது நீதிபதிகள் கொண்ட அமர்வானது, முழுமையான நீதியை உறுதி செய்ய உச்ச நீதிமன்றங்கள் எந்தவொரு கட்டுப்பாடற்ற அதிகாரத்தையும் எடுத்துக் கொள்ளலாம் என அறிவித்துள்ளது.
- ❖ சீராய்வு மனுக்களில் சட்டத்தின் மீதான கேள்விகளை ஒரு பெரிய அமர்விற்குக் குறிப்பிட்டு மாற்றுவதில் இந்த நீதிமன்றத்தின் விருப்பப்படிச் செயல்படுவதில் எந்தவிதமான சிக்கலும் இல்லை என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

- ஒரு உயரிய நீதிமன்றமாக இருப்பதால், எந்தவொரு விஷயமும் அதன் அதிகார எல்லைக்குள் வருகிறதா இல்லையா என்பதை இந்த நீதிமன்றம் பரிசீலிக்க வேண்டும்.
- வரையறுக்கப்பட்ட அதிகார வரம்பைக் கொண்ட நீதிமன்றத்தைப் போலல்லாமல், உயரிய நீதிமன்றம் தனது சொந்த அதிகார வரம்பைப் பற்றிய கேள்விகளைத் தானே தீர்மானிக்க உரிமை உண்டு.
- இவ்வழக்கில் ஒன்பது உறுப்பினர் அடங்கிய அமர்வு அரசியலமைப்பின் 142வது பிரிவையும் அதற்காகச் செயல்படுத்தியது.
- இது சபரிமலை வழக்கின் சீராய்வு தொடர்பானது.

## பொதுக் கணக்குக் குழு தலைவர்

- மக்களவையில் காங்கிரஸ் தலைவரான ஆதீர் ரஞ்சன் சவுத்ரி மீண்டும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- ஒவ்வோர் ஆண்டும், மக்களவை சபாநாயகர் பொதுக் கணக்குக் குழு உள்ளிட்ட பல்வேறு குழுக்களை மீண்டும் அமைப்பார்.
- இது பாரம்பரியமாக பிரதான எதிர்க்கட்சியின் பிரதிநிதியால் தலைமை தாங்கப் படுகிறது.
- பொதுக் கணக்குக் குழு பாராளுமன்றத்தின் மிக அதிகாரம் வாய்ந்த ஒரு குழுவாகும்.
- தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் வழங்கும் அனைத்து அறிக்கைகளையும் பரிசீலித்து அதன் மீது அரசாங்கத்திற்குப் பரிந்துரைகளை வழங்க இதற்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.
- அரசின் எந்தவொரு கணக்குகள் மற்றும் நிதி ஒட்டம் மற்றும் அதன் முறைகேடு தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ந்து அது தொடர்பாக எந்தவொரு அரசாங்க அதிகாரிகளையும் தனியார் நபர்களையும் விசாரிக்க அழைப்பாணை விடுத்து அதனை இந்தக் குழு ஆராயலாம்.
- எந்தவொரு விஷயத்தையும் தேர்வு செய்து அதனை விவாதிக்க இதன் தலைவருக்கு அதிகாரம் இருந்தாலும், அதில் உள்ள வாக்களிக்கும் முறை ஆளும் கட்சிக்கு அவ்வறிக்கையின் மீதான முடிவுகளை எடுக்க உதவுகிறது.

## மாநிலங்களுக்குக்கான நிதிப் பகிர்வு

- நிதி அமைச்சகம் மே 11 அன்று கோவிட் -19 நோய்ப் பரவல் மற்றும் அதற்கான சிகிச்சைக்கு எதிராக போராட வேண்டி 14 மாநிலங்களுக்கு 6,195 கோடி ரூபாயை வழங்கியுள்ளது.
- இந்த மானியத்தை 15வது நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ளது.
- கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க மாநில அரசுகளுக்கு இந்த மானியம் உதவும் என்று நிதி அமைச்சகம் தெரிவித்து உள்ளது.
- மாநிலங்களுக்கு ஏற்படும் எந்தவொரு இழப்பையும் ஈடு செய்ய மைய அரசிடமிருந்து வழங்கப்படும் ஒரு மானியமாக நிதி ஆணையத்தால் வழங்கப்படும் ஒரு முறையே இந்த மானியமாகும்.
- கிராம உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் மானிய உதவியினையடுத்து நிதி ஆணையத்தின் இரண்டாவது மிகப்பெரிய உதவியாக இந்த மானியம் அமைகின்றது.

## அரிசியின் நேரடி விதைப்பு

- தொழிலாளிகளின் பற்றாக்குறை காரணமாக "அரிசியின் நேரடி விதைப்பை" ஏற்றுக் கொள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானாவைச் சேர்ந்த விவசாயிகள் ஊக்கப்படுத்தப் பட்டு வருகின்றனர்.
- இந்த முறையில், எந்தவொரு நாற்றுப் பண்ணை ஏற்பாடும் செய்யப் படுவதில்லை.
- அதற்கு மாற்றாக, விதைகள் சக்தி வாய்ந்த இழுவை இயந்திரத்தின் உதவியுடன் நிலப் பகுதியில் நேரடியாக விதைக்கப் படுகின்றன.
- இது 25% வரை நீரைச் சேமிக்க உதவுகின்றது.
- இது உரங்களின் பயன்பாடு மற்றும் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கின்றது.
- இதன்மூலம் மண் வளத்திற்கு குறைந்தபட்ச அளவிலான இடர் மட்டுமே ஏற்படுகின்றது.

## இந்தியாவின் ஆத்ம நிர்பர் பாரத் அபியான்

- இந்தியாவின் நிதித் தொகுப்பானது முழுமையான அரசாங்கச் செலவிடல் அல்ல.
- இந்த நிதித் தொகுப்பானது இந்திய ரிசர்வ் வங்கியின் செலவிடுதலையும் உள்ளடக்கியுள்ளது.
- இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP – Gross Domestic Product) செலவிடல் சதவீதத்தின் அடிப்படையில் அமெரிக்கா, ஜப்பான், ஸ்வீடன், ஆஸ்திரேலியா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளினால் அறிவிக்கப்பட்ட ஊக்கத் தொகைக்கு அடுத்த இடத்தில் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.
- எனினும், அதன் மதிப்பின் அடிப்படையில், இந்தியாவின் நிதித் தொகுப்பானது 19வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- பெல்ஜியம் மற்றும் லக்ஸம்பெர்க் போன்ற சிறிய பொருளாதார நாடுகள் முறையே 20.7% மற்றும் 19.2% என்ற அளவில் தங்களது GDPயில் 5 சதவிகித அளவிலான பங்கைச் செலவிடுகின்றன.
- இந்தத் தரவரிசையானது பொருளியலறிஞர் செய்குன் எல்ஜினால் வெளியிடப்பட்ட கோவிட் – 19 பொருளாதார ஊக்கக் குறியீட்டில் உள்ள தரவுகளை ஆராய்ந்த பின்னரே தயாரிக்கப் பட்டது.
- 20 இலட்சம் கோடி மதிப்பிலான கொரானா வைரஸ் நோய்க்கு எதிரான ஊக்கத் தொகையானது கிரீஸ், நியூசிலாந்து, வியட்நாம், போர்ச்சுக்கல் மற்றும் ரோமானியா ஆகிய நாடுகளின் GDPயை விட அதிகமாகும்.
- இந்தியாவின் ஊக்கத் தொகையானது 284 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற அளவில் பாகிஸ்தானின் GDPற்குச் சமமானதாகும்.
- GDPயின் அடிப்படையில் G20 நாடுகளிடையே 5வது மிகப்பெரிய நிதித்தொகுப்பு இதுவாகும்.

| Country | Package Details | Value in terms of GDP |
|---|---|---|
| **Japan** | USD 1.1 trillion recovery package | 21.1% of its GDP |
| **United States (US)** | USD 2.7 trillion packages (largest in pure dollar terms) | 13% of its GDP |
| **Sweden** | - | 12% of its GDP |
| **Australia** | - | 10.8% of its GDP |

| | | |
|---|---|---|
| **Germany** | USD 815 billion package | 10.7% of its GDP |
| **India** | USD 265 billion (Rs 20 lakh crore) | 10% of its GDP |
| **France** | - | 9.3% of GDP |
| **Spain** | €200 billion | 7.3% of GDP |
| **Italy** | Approx. USD 815 billion package | 5.7% of GDP |
| **UK** | £1.25 billion | 5% of GDP |

## EventBot

- இந்தியாவின் அவசரகால கணினி எதிர்வினை அணியானது (CERT - Computer Emergency Response of Team) “EventBot” என்று அழைக்கப்படும் ஒரு புதிய தீம்பொருளுக்கு எதிராக ஒரு எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.
- CERT அமைப்பின்படி இந்தத் தீம்பொருள் ஆனது ஆண்ட்ராய்டு இயங்குதளத்தில் உள்ள கைபேசிப் பயன்பாட்டாளர்களிடமிருந்து சுயவிவர நிதியியல் தொடர்பான தகவல்களைத் திருடுகின்றது.
- “EventBot” தீம்பொருளானது ட்ரோஜனைப் பரப்புகின்றது.
- CERT ஆனது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.




## திட்டம் 39A

- இது புது தில்லியில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி அமைப்பான திட்டம் 39A எனும் அமைப்பினால் வெளியிடப்படும் ஒரு அறிக்கை ஆகும்.
- இந்த ஆய்வானது மத்தியப் பிரதேசம், தில்லி மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசத்தினைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- மரண தண்டனைகள் இங்கு அதிகமாக வழங்கப்படுவதன் காரணமாக இந்த மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.
- தில்லியில் உள்ள விசாரணை நீதிமன்றங்கள் சமூகத்தின் கூட்டு உளச்சான்றின் அடிப்படையில் மரண தண்டனையை வழங்குகின்றன.
- “சமூகத்தின் கூட்டு உளச்சான்று” என்ற கருத்தின் அடிப்படையில் மரண தண்டனை வழங்குவது நியாயம் என்ற வாதம் 1983 ஆம் ஆண்டு மச்சி சிங் (எதிர்) பஞ்சாப் அரசு என்ற வழக்கின் தீர்ப்பில் இந்திய உச்ச நீதிமன்றத்தினால் முதன்முறையாகப் பயன்படுத்தப்பட்டது.

- சமீபத்தில் கூட்டு உளச்சான்றானது 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திய வழக்கான முகேஷ் எதிர் தில்லி தேசியத் தலைநகர்ப் பகுதி அரசு என்ற தில்லி கூட்டுப் பாலியல் வழக்கில் 2017 ஆம் ஆண்டில் இந்திய உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பில் குறிப்பிடப் பட்டது.
- இந்த ஆய்வானது பச்சன் சிங் எதிர் பஞ்சாப் அரசு என்ற வழக்கின் 1980 ஆம் ஆண்டுத் தீர்ப்பில் இந்திய உச்ச நீதிமன்றத்தால் வகுக்கப்பட்ட தண்டனைச் செயல்முறையை விசாரணை நீதிமன்றங்கள் கடைபிடிப்பதில்லை என்பதையும் கண்டறிந்து வெளிப்படுத்தியுள்ளது.
- இந்த வழக்கில், இந்திய உச்சநீதிமன்றத்தின் ஒரு அரசியலமைப்பு அமர்விடம் மரண தண்டனையின் அரசியலமைப்பு செல்லுபடித் தன்மை குறித்து முடிவெடுக்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டது.
- 2015 ஆம் ஆண்டில் ஏ.பி.ஷா அவர்களின் தலைமையிலான சட்ட ஆணையமானது மரண தண்டனையை ஒழிக்கப் பரிந்துரைத்தது.
- எனினும், சட்ட ஆணையம் இந்தப் பரிந்துரையை தீவிரவாதச் செயல்கள் தொடர்பற்ற வழக்குகளுக்கு மட்டுமே வழங்கியுள்ளது.

NLU DELHI P39A PROJECT 39A EQUAL JUSTICE EQUAL OPPORTUNITY

## குடியரசுத் தலைவரின் ஊதியக் குறைப்பு

- சமீபத்தில் இந்தியக் குடியரசுத் தலைவரான ராம்நாத் கோவிந்த் கோவிட் – 19ற்கு எதிரான நடவடிக்கையில் இந்திய அரசிற்கு உதவுவதற்காக தனது ஊதியத்தில் 30% வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.
- 2018 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையானது நாட்டின் குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவரின் ஊதியங்களை உயர்த்தியுள்ளது.
- தற்பொழுது, இந்தியக் குடியரசுத் தலைவரின் மாதாந்திர ஊதியமானது முந்தைய 1.5 இலட்சத்திலிருந்து 5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- மேலும், துணைக் குடியரசுத் தலைவரின் ஊதியமானது 1.10 இலட்சத்திலிருந்து 4 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- மாநில ஆளுநரின் ஊதியமானது 3.5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- குடியரசுத் தலைவரின் பதவிக் காலத்தின் போது அவரின் ஊதியங்கள் மற்றும் கொடுப்பனவுகளைக் குறைக்கக் கூடாது என்று சரத்து 59 கூறுகின்றது.
- ஆனால் இந்த சூழ்நிலையில், குடியரசுத் தலைவர் தனது சொந்த விருப்பத்தின் பேரில் இந்தத் தொகையை நன்கொடையாக வழங்குகின்றார். அவரது ஊதியத்தின் மீது அத்தொகை பிடித்தம் செய்யப்படவில்லை.
- இதே சரத்தானது குடியரசுத் தலைவர் தனது அதிகாரப்பூர்வ இல்லத்தை வாடகைக் கட்டணம் எதுவுமின்றிப் பயன்படுத்தவும் அனுமதிக்கின்றது.

## சசேத் கப்பல்

- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் இந்தியக் கடலோரக் காவற் படைக் கப்பலான சசேத் என்ற கப்பலையும் சி-451 மற்றும் சி-450 என்ற 2 இடைமறிப்புப் படகுகளையும் கோவாவில் பாதுகாப்புப் படையின் பணியில் இணைத்துள்ளார்.

- சசேத் கப்பல் ஆனது 5 கடலோரக் காவல் கண்காணிப்புக் கப்பல் தொகுதிகளின் முதலாவது கப்பலாகும்.
- இது கோவா கப்பல் கட்டும் தளத்தினால் உள்நாட்டிலேயே வடிவமைத்துத் தயாரிக்கப் பட்டுள்ளது.



## ஆத்மநிர்பர் பாரத் – 5வது நிதித் தொகுப்பு

- இறுதி நிதித் தொகுப்பு மீதான அறிவிப்புடன் சேர்த்து, அனைத்து நிதித் தொகுப்பினாலும் சேர்த்து வழங்கப் பட்ட ஒட்டுமொத்த ஊக்கத் தொகை ரூ. 20,97,053 கோடியாகும்.

***சுகாதாரம்***

- எதிர்கால நோய்த் தொற்றுச் சிகிச்சைகளுக்காக இந்தியாவைத் தயார்படுத்துதல்.
- மத்திய அரசு அனைத்து மாவட்டங்களிலும் நோய்த் தொற்றுச் சிகிச்சைக்கு வேண்டிய மருத்துவமனை வளாகங்களை அமைக்க இருக்கின்றது.
- மாவட்டங்களில் ஒருங்கிணைந்தப் பொதுச் சுகாதார ஆய்வகங்கள் அமைக்கப்பட இருக்கின்றன.
- சுகாதாரத்திற்கான தேசிய நிறுவனத் தளமானது இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தினால் தொடங்கப்பட இருக்கின்றது.
- தேசிய டிஜிட்டல் சுகாதார செயல்திட்டமானது செயல்படுத்தப்பட இருக்கின்றது.

***கல்வி***

- பிரதான் மந்திரி eVIDYA – டிஜிட்டல்/நிகழ்நேரக் கல்வியை பல நிலைகளில் அணுகுவதற்கான ஒரு திட்டமானது உடனடியாகத் தொடங்கப்பட இருக்கின்றது.
- இது ஆன்லைன் (நிகழ்நேர) கல்வி தொடர்பான முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்காகத் தொடங்கப்பட இருக்கின்றது.
- இது "ஒரு தேசம் ஒரு டிஜிட்டல் தளம்" மற்றும் "ஒரு வகுப்பு ஒரு அலைவரிசை" என்ற 2 முக்கியமான முன்னெடுப்புகளை உள்ளடக்கவுள்ளது.
- மனோதர்பன் : மனநல மற்றும் உணர்ச்சி நலம் ஆகியவற்றிற்காக மாணவர்கள், ஆசிரியர்கள், குடும்பங்கள் ஆகியோர்களுக்கு உளவியல் ரீதியிலான சமூக உதவியைக் கொடுப்பதற்கான ஒரு முன்னெடுப்பானது விரைவில் தொடங்கப்பட இருக்கின்றது.
- 2025 ஆம் ஆண்டுவாக்கில் ஒவ்வொரு குழந்தையும் 5ஆம் வகுப்பு நிலையில் (5வது கிரேடு) கற்றல் நிலைகள் மற்றும் சிறந்த விளைவுகளை எட்டுவதை உறுதி செய்வதற்காக தேசிய அடித்தள கல்வியறிவு மற்றும் எண்ணறிவுத் திட்டமானது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தொடங்கப்பட இருக்கின்றது.

***மாநில நிதி நிலைகள்***

- 2020-21 ஆம் ஆண்டிற்கான மாநிலங்களின் கடன் வாங்குவதற்கான நிகர உச்ச வரம்பு ரூ.6.41 இலட்சம் கோடியாகும். இது மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 3% என்ற விகிதத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- தற்பொழுது மாநிலங்களின் கடன் வாங்கும் வரம்பானது 2020-21 ஆம் ஆண்டில் 3%லிருந்து 5% ஆக உயர்த்தப் பட்டுள்ளது.
- கடன் வாங்குதலின் ஒரு பகுதியானது குறிப்பிட்ட சில சீர்திருத்தங்களுடன் இணைக்கப்பட இருக்கின்றது.
- தேசிய அளவிலான "ஒரு தேசம் ஒரு குடும்ப அட்டை", எளிதில் தொழில் தொடங்குவதை மேம்படுத்துதல், மின் விநியோகச் சீர்திருத்தங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி வருவாய்களைச் சீரமைத்தல் ஆகியவை இந்த சீர்திருத்தங்களாகும்.

***பொதுத் துறை நிறுவனங்கள் (PSEs)***

- பொது நலன் கருதி PSEகளின் (Public Sector Enterprises) இருப்பு தேவைப்படும் உத்திசார் துறைகளைக் கொண்ட ஒரு பட்டியலானது அறிவிக்கப்பட இருக்கின்றது.
- உத்திசார் துறைகளில், குறைந்தது ஒரு நிறுவனம் பொதுத் துறையாகவே இருக்கும். தனியார் துறையும் இதில் அனுமதிக்கப்பட இருக்கின்றது.

***இதர அறிவிப்புகள்***

- சுயம் பிரபா டிடிஎச் (DTH – Direct To Home) அலைவரிசைகளானது இணைய வசதியைப் பெறாதவர்களை அணுகுவதற்காக மற்றும் அவர்களுக்கு உதவுவதற்காக தொடங்கப்பட இருக்கின்றது.



## 61வது குதிரைப் படை

- இந்திய இராணுவமானது 61வது குதிரைப் படையை பீரங்கிகளுடன் கூடிய ஒரு நிரந்தர ஆயுதம் கொண்ட படைப்பிரிவாக மாற்ற இருக்கின்றது.
- உலகில் குதிரைகளைக் கொண்ட ஒரே படைப்பிரிவு இதுவாகும்.
- ஜெய்ப்பூரை மையமாகக் கொண்டுள்ள மிகப்பெரிய ஒரு பாரம்பரியப் படைப்பிரிவு (சடங்குகளுடன் கூடிய) இதுவாகும்.



## கழிவுகளற்ற நகரங்களின் நட்சத்திரத் தரவரிசை

- மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகமானது 2019-20 ஆம் ஆண்டிற்கான கழிவுகளற்ற நகரங்களின் நட்சத்திரத் தரவரிசையை வெளியிட்டு உள்ளது.



- இதில் ஏறத்தாழ 5 நகரங்களுக்கு 5 நட்சத்திரக் குறியீடானது வழங்கப் பட்டுள்ளது.
- அம்பிகாபூர், சூரத், ராஜ்கோட், மைசூரு, இந்தூர், நவி மும்பை ஆகியவை இந்த 5 நகரங்களாகும்.

## அதிதீவிரப் புயல் – ஆம்பன்

- ஆம்பன் அதிதீவிரப் புயலாக மாறியுள்ளது.
- 1999 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பானி புயலைத் தொடர்ந்து இந்தியாவினால் எதிர்கொள்ளப்படும் இரண்டாவது அதிதீவிரப் புயல் இதுவாகும்.
- இந்திய வானிலை ஆய்வு மையத்தின் படி இந்த அதிதீவிரப் புயலானது ஒடிசா மற்றும் மேற்கு வங்கத்தின் கடற்கரையைத் தாக்க இருக்கின்றது.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசியப் பேரிடர் மீட்புப் படையானது மீட்பு மற்றும் எதிர்வினை ஆற்றுவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றது.
- ஒரு புயல் பற்றிய முன்னிறிவிப்பானது இந்திய வானிலை ஆய்வு மையத்தினால் வழங்கப் படுகின்றது.
- சூறாவளிப் புயலானது வங்காள விரிகுடாவில் உருவாவதை விட அரபிக் கடலில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே உருவாகின்றது.

## கொனார்க் சூரியக் கோயில் – சூரிய நகரி திட்டம்

- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறை அமைச்சகமானது ஒடிசாவில் உள்ள கொனார்க் சூரியக் கோயில் மற்றும் கொனார்க் நகரம் முழுவதையும் சூரிய ஒளி ஆற்றலில் இயங்கும் தன்மையுடையதாக ஆக்கியுள்ளது.
- இது 13வது நூற்றாண்டில் கங்கை வம்சத்தின் தலைசிறந்த ஆட்சியாளரான முதலாம் நரசிம்மதேவரால் கட்டப் பட்டுள்ளது.
- இதன் இருண்ட (கருப்பு) வண்ணத்தின் காரணமாக இந்தக் கோயில் "கருப்பு பகோடா" என்று அழைக்கப் படுகின்றது.
- இதே போன்று பூரி ஜெகன்நாத் கோயில் "வெள்ளைப் பகோடா" என்று அழைக்கப் படுகின்றது.
- கொனார்க் ஆனது ஒடிசாவின் தங்க முக்கோணத்தின் மூன்றாவது தொடர் இணைப்பாகும்.
- முதலாவது தொடர் இணைப்பு பூரி ஜெகன்நாத் மற்றும் இரண்டாவது தொடர் இணைப்பு புவனேஸ்வர் (ஒடிசாவின் தலைநகரம்) ஆகும்.
- இந்தக் கோயிலானது 1984 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளப் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளது.
- இந்தக் கோயிலானது கலிங்கா கட்டிடக்கலை மற்றும் அதன் பாரம்பரியத்தை வடிவமைத்து அமைக்கப்பட்டுள்ளது.
- இங்கு ஒவ்வொரு ஆண்டும் சந்திரபாகா மேளா நடத்தப் படுகின்றது.



## புதிய பொதுத் துறை தனியார்மயமாக்கல் கொள்கை

- புதிய பொதுத் துறைக் கொள்கையானது பொதுத் துறைகளை மூலோபாய மற்றும் மூலோபாயமற்றவை என வகைப்படுத்தும்.
- மூலோபாயத் துறைகளில் உள்ள மத்தியப் பொதுத் துறை நிறுவனங்களில் அதிகபட்சம் நான்கு மற்றும் குறைந்தபட்சம் ஒன்று என்ற அளவில் அரசாங்கம் அதைத் தக்க வைத்துக் கொள்ளும்.
- மூலோபாயமற்ற துறைகளில் உள்ள மற்ற அனைத்துப் பொதுத் துறை நிறுவனங்களும் ஒன்று தனியார்மயமாக்கப் படும் அல்லது ஒன்றிணைக்கப்படும் அல்லது அதனை வைத்திருக்கும் தலைமை நிறுவனங்களின் கீழ் அவை கொண்டு வரப்படும்.
- இது மத்திய அரசின் நிர்வாகச் செலவைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்தியாவில் மூலோபாயத் துறை பொதுத் துறை நிறுவனங்கள் பின்வருமாறு
    - பாதுகாப்பு உபகரணங்களுக்கான ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள்
    - பாதுகாப்பு விமானம் மற்றும் போர்க் கப்பல்கள்
    - அணு ஆற்றல்
    - விவசாயம், மருத்துவம் மற்றும் மூலோபாயமற்றத் தொழில்துறைக்கு வேண்டிய கதிர்வீச்சின் பயன்பாடுகள்
    - இரயில் துறை
- மத்திய அரசின் 51% பங்குகளை வைத்திருக்கும் நிறுவனங்கள் பொதுத் துறை நிறுவனங்களாக அறியப் படுகின்றன.
- தனியார்மயமாக்கல் என்பது உரிமை, மேலாண்மை மற்றும் கட்டுப்பாட்டை மாற்றுவதின் மூலம், அந்தத் துறைகளைப் பொதுத் துறையிடமிருந்து தனியார் துறைக்கு மாற்றுவதாகும்.




## உலகில் PPE உற்பத்தியாளர்


- உலகில் தனிநபர் பாதுகாப்பு உபகரணத்தின் (PPE - Personal Protective Equipment) இரண்டாவது மிகப்பெரிய உற்பத்தியாளர் நாடு இந்தியா ஆகும்.
- உலகில் PPE உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடு சீனா ஆகும்.
- தற்பொழுது இந்தியா ஒவ்வொரு நாளும் 2.06 இலட்சம் PPE உபகரணங்களை உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றது.
- சமீபத்தில் ஜவுளிக் குழுவானது PPE மீதான செயற்கை இரத்தத்தை உட்செலுத்தல் என்ற ஒரு சோதனையைத் தொடங்கியுள்ளது.




## பணி நேரத்தை அதிகரிப்பதற்கான அவசரச் சட்டம்

- மத்திய அரசானது தொழிலாளர்களின் பணி நேரங்களை மாநில அரசுகள் தங்களின் தேவைக்கேற்ப அதிகரித்துக் கொள்ள அனுமதியளித்திட வேண்டி ஒரு அவசரச் சட்டத்தை இயற்ற உள்ளது.
- இந்த அவசரச் சட்டமானது பணியாளர்களின் பற்றாக்குறை என்ற பிரச்சினையைக் களைய இருக்கின்றது.
- இது நிறுவனங்கள் சமூக விலகலைக் கடைபிடிக்க வழிவகை செய்கின்றது.

- மேலும் இது தொழில்சார் பாதுகாப்பு, பணி நிலைமை மற்றும் சுகாதாரம் குறித்த நெறிமுறைகளையும் செயல்படுத்த இருக்கின்றது.
- இந்த நெறிமுறையானது பணி நேரங்களை அறிவிக்க மாநிலங்களுக்கு உதவ இருக்கின்றது.
- தற்பொழுது, சட்டத்தின் படி பணியாளர்களின் குறிப்பிடப்பட்ட பணி நேரம் ஒரு நாளைக்கு 8 மணி நேரமாகும்.
- மத்தியப் பட்டியலில் உள்ள சட்டங்களை மாநில அரசுகள் திருத்த முடியாது.
- மாநில அரசுகள் மாநிலப் பட்டியல் மற்றும் பொதுப் பட்டியல் ஆகியவற்றில் உள்ள சட்டங்களின் மீது மட்டுமே திருத்தங்களை மேற்கொள்ள முடியும்.




## குடோல் முன்னெடுப்பு

- ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரின் இளைஞர் விவகாரங்கள் குறித்த தூதுவர் கோவிட் – 19 நோய்த் தொற்றிற்கு எதிரான ஒரு ஒருங்கிணைந்த போராட்டத்திற்காக வேண்டி உலகளாவிய 10 முன்னெடுப்புகளில் மணிப்பூரின் குடோலையும் பட்டியலிட்டு உள்ளார்.
- குடோல் என்பது "Ya_ALL" என்ற இம்பாலில் உள்ள ஒரு அரசுசாரா அமைப்பின் மூலம் கூட்டாக இணைந்து நிதியளிக்கப்படும் ஒரு முன்னெடுப்பாகும்.
- இது இந்தியாவின் முதலாவது திருநர் கால்பந்து அணியை உருவாக்கியுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது எல்ஜிபி-டிக்யூஐ+ சமூகம் (LGBTQI+), எச்ஐவியுடன் வாழும் சமூகம், தினக் கூலித் தொழிலாளர்கள், குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினர் ஆகியோரின் உணவு, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை உறுதி செய்ய உதவ இருக்கின்றது.

## CoAST இந்தியா (ஒன்றிணைதல்/கோவிட் நடவடிக்கை உதவிக் குழு)

- இது புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் நீண்ட நெடிய பயணம் குறித்து நிகழ் நேரத்தில் அவர்களின் பயணத்தைக் காட்டும் வகையில் இந்திய வரைபடத்துடன் கூடிய புவியியல் தகவல் அமைப்பால் செயல்படுத்தப்படும் ஒரு முகப்புப் பலகையாகும்.
- இது குஜராத்தின் ஆனந்த் மாவட்டத்தில் உள்ள வனச் சூழலியல் பாதுகாப்பு அமைப்பைத் தனது முக்கியச் செயல்பாட்டு அமைப்பாகக் கொண்டு இந்திய ஆய்வு மையத்தினால் வடிவமைக்கப் பட்டுள்ளது.

## ஜம்மு காஷ்மீரில் சட்டப்படியான வாழ்வகத்தின் வரையறை

- 2020 ஆம் ஆண்டு ஆணையானது எந்தவொரு நபர் கடந்த 15 ஆண்டுகளாக ஜம்மு ஜாஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தில் வசிக்கின்றாரோ அல்லது கடந்த ஏழு ஆண்டுகளாக ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தில் படித்து, அங்குள்ள கல்வி நிறுவனத்தில் 10வது/12வது தேர்வை எதிர் கொண்டாரோ அல்லது நிவாரண மற்றும் புனர்வாழ்வு ஆணையினரால் புலம்பெயர்ந்தோராகப் பதிவு செய்யப்பட்ட நபரோ அவரைச் சட்டப்படியான வாழ்வகத்தைக் கொண்டு உள்ள நபர் என்று வரையறை செய்கின்றது.
- மேலும் இது அகில இந்தியப் பணி, பொதுத் துறை நிறுவனங்கள், மத்திய அரசின் தனிச் சுதந்திர அமைப்புகள், பொதுத் துறை வங்கிகள், சட்டப்பூர்வ அமைப்புகளின் அதிகாரிகள், மத்தியப் பல்கலைக்கழகங்கள் மற்றும் மத்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி மையங்கள் உள்ளிட்ட பணிப் பிரிவுகளில் “மொத்தம் 10 ஆண்டுகள் அங்கு தங்கியிருந்துப் பணி புரிந்துக் கொண்டு இருக்கும் மத்திய அரசு அலுவலர்களின் குழந்தைகள் அனைவரையும் சட்டப்பூர்வ வாழ்வகத்தைப் பெறத் தகுதியுடையவர்” என்று கூறுகின்றது.
- மேலும் “சட்டப்பூர்வ வாழ்வகம்” என்ற அங்கீகாரமானது “பணி தொடர்பாக (அ) வணிகம் அல்லது இதர தொழில்சார் அல்லது தொழில்முறை காரணங்களுக்காக ஜம்மு காஷ்மீருக்கு வெளியே வாழும் இந்த ஒன்றியப் பிரதேச பெற்றோர்களின் குழந்தைகளுக்கும் பொருந்தும். ஆனால் இவர்களது பெற்றோர்கள் மேலே வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.


NEW RULES

- **Domicile rights extended to all migrants who have been registered** by Relief and Rehab Commissioner in the erstwhile state
- Anyone who has **studied for a period of 7 years and appeared in Class 10th or 12th exams** in J&K is eligible for domicile certificate
- Change in rules, though **only for lower-end govt jobs**, is politically significant as state employment was previously in accordance with definition of permanent residents

## சம்பா சுரங்கப் பாதை

- இது உத்தரகாண்டின் ரிஷிகேஷ்-தாராசு ரோடு தேசிய நெடுஞ்சாலையில் மிக அதிக மக்கள் தொகை பரவல் கொண்ட சம்பா நகரத்தின் கீழ், எல்லைச் சாலைகள் அமைப்பினால் (BRO - the Border Roads Organisation) அமைக்கப்பட்ட 440 மீட்டர் நீளம் கொண்ட ஒரு சுரங்கப் பாதையாகும்.
- இந்த சுரங்கப் பாதையானது மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள BROவினால் அமைக்கப் பட்டுள்ளது.
- இது சார்தாம் பரியோஜனா என்ற திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது பத்ரிநாத், கேதர்நாத், கங்கோத்திரி மற்றும் யமுனோத்திரி ஆகிய இந்து சமய புனிதத் தளங்களை இணைக்கும் வகையில் 900 கிலோ மீட்டர் தொலைவுள்ள நெடுஞ்சாலைகளை மேம்படுத்தும் மற்றும் அகலப்படுத்தும் ஒரு முயற்சியாகும்.
- இந்தத் திட்டமானது மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தினால் மேற்கொள்ளப் படுகின்றது.




## ஜம்மு காஷ்மீருக்கான சட்டப்படியான வாழ்வகம் குறித்த விதிகள்

- மத்திய உள்துறை அமைச்சகமானது 2010 ஆம் ஆண்டின் சட்டமான "ஜம்மு காஷ்மீர் குடிமைப் பணிகள்" (அதிகாரப் பரவலாக்கம் மற்றும் ஆள்சேர்ப்புச் சட்டம்) என்ற ஒரு சட்டத்தைத் திருத்தியுள்ளது.
- இது "நிரந்தக் குடியிருப்பாளர்கள்" என்ற கூற்றுக்கு மாற்றாக அதனை "ஜம்மு காஷ்மீர் ஒன்றியத்தின் சட்டப்படியான வாழ்வகம்" என்பதைக் கொண்டு மாற்றியுள்ளது.
- இது ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டம், 2019-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்பு (மாநில சட்டங்களை ஏற்றுக் கொள்ளுதல்) ஆணை, 2020-ன் மூலமாக சட்டப்படியான வாழ்வகத்தை மறுவரையறை செய்கின்றது.
- 2010 ஆம் ஆண்டின் சட்டமானது "மாவட்ட, கோட்ட மற்றும் மாநில" அளவிலான பதவிகளைக் கொண்டுள்ள குடிமைப் பணிகளை அவர்களுக்கு உரித்தாக அறிவித்தது.
- இதற்கு முன்பு, ஜம்மு காஷ்மீரின் நிரந்தரக் குடியிருப்பாளர்கள் மட்டுமே அரசிதழ்

பதிவு பெற்ற மற்றும் அரசிதழ் பதிவு பெறாத பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

- "சட்டப்படியான வாழ்வகம்" என்ற சான்றிதழை வழங்குவதற்கான அதிகாரமானது தாசில்தாரிடம் (வருவாய் அதிகாரி) உள்ளது.

***சட்டப்படியான வாழ்வகம் பற்றி***

- சட்டப்படியான வாழ்வகம் – ஒரு நபர் தனது நிரந்தர வாழ்விடமாக ஒரு நாட்டை குறிப்பதைக் குறிக்கின்றது.
- இது ஒருவர் தனது நிரந்தர இல்லத்தை ஒரு இடத்தில் ஏற்படுத்துவதைக் குறிக்கின்றது. அங்கு அவர் நிரந்தரக் குடியிருப்பாளராகக் கருதப்படுகின்றார்.
- ஒருவரின் சட்டப்படியான வாழ்வகத்திற்கு ஒரு உதாரணம் ஒருவர் வசிக்கும் சொந்த மாநிலமாகும்.

## பிரதான் மந்திரி கரீப் கல்யாண் யோஜனா

- பிரதான் மந்திரி கரீப் கல்யாண் யோஜனாவின் (PMGKY - Pradhan Mantri Garib Kalyan Yojana) கீழ் ஏறத்தாழ 9 கோடியே 60 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர் என்று மத்திய அரசு கூறியுள்ளது.
- இது முக்கியமாக PM-கிசான் என்ற திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- PMGKY ஆனது பொது முடக்கத்தின் போது பாதிக்கப் பட்டிருக்கும் மக்களின் வாழ்வை எளிமைப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- PM – கிசான் ஆனது 2019 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் தகுதியுள்ள விவசாயிகளின் வங்கிக் கணக்கில் ஒவ்வொரு ஆண்டும் ரூ.6000 தொகையானது மூன்று தவணைகளில் செலுத்தப் படுகின்றது.
- இந்தத் திட்டமானது சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளை இலக்காகக் கொண்டு உள்ளது.

## இந்தியாவில் நோய்த் தடுப்பு மருந்தின் மேம்பாடு

- செல் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையமானது (CCMB - Centre for Cellular and Molecular Biology) கோவிட் – 19 நோயாளிகளின் மாதிரிகளிலிருந்து கோவிட் – 19 தொற்றின் நிலையான ஒரு முடிவுக் கலாச்சாரத்தை உருவாக்கியுள்ளது.
- CCMB நச்சுயிரியல் வல்லுநர்கள் பல்வேறு தனித்த வைரஸ்களிலிருந்து தொற்றக் கூடிய வைரஸ்களைப் பிரித்தெடுத்துள்ளனர்.
- ஆய்வகத்தில் இந்த வைரஸைப் பிரித்தெடுக்கும் திறனானது CCMB நச்சுயிரியல் வல்லுநர்களை கோவிட் – 19 நோயை எதிர்த்துப் போராடுவதற்கு வேண்டிய மருந்துச் சோதனை மற்றும் தடுப்பு மருந்து வளர்ச்சி ஆகியவை நோக்கிப் பணியாற்ற அனுமதிக்கும்.
- அதிக எண்ணிக்கையிலான வைரஸ்கள் பிரித்தெடுக்கப்பட்டு, அவை செயல்படாததாக மாற்றப்பட்டால், அவற்றைச் செயல்படாத வைரஸ் தடுப்பு மருந்தாகப் பயன்படுத்த முடியும்.
- செயல்படாத வைரஸ்கள் உடலினுள் உட்செலுத்தப் பட்டால், மனித நோய் எதிர்ப்புச் சக்தி அமைப்பானது நோய் நுண்மம் தொடர்பான நோய் எதிர்ப்புப் பொருளை உற்பத்தி செய்ய ஊக்குவிக்கின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## சிறந்த அமெரிக்கப் பொருளாதார மறுமலர்ச்சி தொழில் குழுக்கள்

- 2019–20 கரோனா வைரஸ் தொற்றுநோயின் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதாரத் தாக்கத்தை எதிர்த்துப் போராட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் 'சிறந்த அமெரிக்கப் பொருளாதார மறுமலர்ச்சி தொழில் குழுக்களை' உருவாக்கியுள்ளார்.
- அவர்களில் 6 உறுப்பினர்கள் இந்திய-அமெரிக்கச் சமூகத்திலிருந்து சிறந்த அமெரிக்கப் பொருளாதார மறுமலர்ச்சிக் குழுவுக்கு அமெரிக்க ஜனாதிபதியால் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.
- இதில் கூகிளின் சுந்தர் பிச்சை மற்றும் மைக்ரோசாப்டின் சத்யா நாதெள்ளா, ஐபிஎம்மின் அரவிந்த் கிருஷ்ணா, மைக்ரானின் சஞ்சய் மெஹ்ரோத்ரா, பெர்னோட் ரிக்கார்ட்டைச் சேர்ந்த ஆன் முகர்ஜி மற்றும் மாஸ்டர்கார்டில் இருந்து அஜய் பங்கா ஆகியோர் அடங்குவர்.
- டிம் குக், மார்க் ஜுக்கர்பெர்க், எலோன் மஸ்க் மற்றும் பில் ஃபோர்டு ஆகியோர் டிரம்ப்பால் நியமிக்கப்பட்ட அக்குழுவின் மற்ற முக்கிய உறுப்பினர்கள் ஆவர்.
- இது வெள்ளை மாளிகையால் ஏற்படுத்தப் பட்ட கரோனா வைரஸ் பணிக்குழுவைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட இரண்டாவது பணிக் குழுவாகும்.
- வெள்ளை மாளிகையின் கரோனா வைரஸ் பணிக் குழுவிற்கு அமெரிக்க துணைத் தலைவர் மைக் பென்ஸ் தலைமை வகிக்கிறார்.

## தென் சீனக் கடலில் அமெரிக்க கப்பல்கள்

- சர்ச்சைக்குரிய தென் சீனக் கடலில் அமெரிக்க போர்க் கப்பல்கள் நுழைந்துள்ளன.
- ஒரு ஆஸ்திரேலிய போர்க் கப்பலும் இதனுடன் இணைந்துள்ளது.
- வியட்நாம், மலேசியா மற்றும் சீனா ஆகிய நாடுகளால் உரிமை கோரும் பகுதியின் அருகே இவை நுழைந்துள்ளன.



- ஆற்றல் வளம் நிறைந்த தென் சீனக் கடலின் பெரும்பாலான தீவுகளை தனது வரைபடங்களில் யு-வடிவ "ஒன்பது-கோடு வரிசைக்குள்", சீனா தனக்குரியது என்று கூறுகிறது.
- ஆனால் இது அதன் அண்டை நாடுகளால் அங்கீகரிக்கப் படவில்லை.
- சர்ச்சைக்குரிய நீரில் உள்ள பாரசெல் மற்றும் ஸ்ப்ராட்லி தீவுகளில் சீனா இரண்டு மாவட்டங்களை சமீபத்தில் நிறுவியதாக சீனா கூறியதையடுத்து வியட்நாம் நாடானது சமீபத்தில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

***இதைப்பற்றி***

- தென் சீனக் கடல் ஒரு குறுங்கடலாகும் (marginal sea).
- இது பசிபிக் பெருங்கடலின் ஒரு பகுதியாகும். இது கரிமாட்டா மற்றும் மலாக்கா ஜலசந்தி முதல் தைவான் ஜலசந்தி வரையிலான ஒரு பகுதியை உள்ளடக்கி உள்ளது.
- தென் சீனக் கடலில் உள்ள ஒன்பது - கோடு வரிசை என்பது அப்பகுதியின் மீதான சீனாவின் உரிமைக் கோரலைக் குறிக்கின்றது.
- இதில் பாரசெல் தீவுகள், ஸ்ப்ராட்லி தீவுகள், பிரதாஸ் தீவுகள், மேக்கிள்ஸ் களப் பகுதி மற்றும் ஸ்கார்பாரோ நிலப் பகுதி ஆகியவை அடங்கும்.
- "நிலத்தின் பெருஞ்சுவர்" என்று அழைக்கப்படும் சீனாவின் நில மீட்பின் ஒரு பகுதியை இந்த உரிமைக் கோருதல் உள்ளடக்கி இருக்கின்றது.

## USCIRF வருடாந்திர அறிக்கை 2020

- சர்வதேச மதச் சுதந்திரம் குறித்த அமெரிக்க ஆணையமானது (USCIRF - U.S. Commission on International Religious Freedom) தனது வருடாந்திர அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது இந்தியாவை சீனா, வட கொரியா, சவுதி அரேபியா மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளின் வரிசையில் வைத்துள்ளது.
- இது "குறிப்பிட்ட கவலைக்கிடமான நாடுகள்" என்ற கீழ்நிலைத் தரவரிசைக்கு இந்தியாவைத் தரம் இறக்கியுள்ளது.

## உலகளாவியத் தீவிரவாதக் குறியீடு 2019

- இது ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கொள்கை வகுக்கும் நிறுவனமான "பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான மையத்தினால்" வெளியிடப் பட்டுள்ளது.
- இந்தியா முந்தைய ஆண்டின் எட்டாவது இடத்திலிருந்து தற்பொழுது 7வது இடத்திற்குச் சரிந்துள்ளது.
- ஆப்கானிஸ்தான், ஈராக், நைஜீரியா, சிரியா, பாகிஸ்தான் மற்றும் சோமாலியா ஆகிய நாடுகள் இந்தியாவிற்கு முன்பு உள்ள நாடுகளாகும்.

## நிரந்தரப் பிரதிநிதி - ஐ.நா தூதர்

- ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தரப் பிரதிநிதியாக வெளி விவகார அமைச்சகத்தின் தற்போதைய செயலாளரான டி.எஸ்.திருமூர்த்தியை இந்தியா நியமித்துள்ளது.
- நிரந்தர திட்டமென்பது ஒவ்வொரு உறுப்பு நாடுகளும் ஐக்கிய நாடுகளுக்கு அனுப்பும் ஒரு தூதரகப் பணி ஆகும்.

- இது ஒரு நிரந்தரப் பிரதிநிதி தலைமையிலானது. அவர் "ஐ.நா தூதர்" என்றும் குறிப்பிடப் படுகிறார்.
- இது நாடுகளின் பிரதிநிதித்துவம் தொடர்பான வியன்னா ஒப்பந்தத்தின் கீழ் வருகிறது.
- ஜனவரி 1, 1942 அன்று வாஷிங்டனில் நடந்த ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தில் கையெழுத்திட்ட ஐக்கிய நாடுகள் சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் இந்தியாவும் இருந்தது.
- ஏப்ரல் 25 முதல் ஜூன் 26, 1945 வரை சான் பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க சர்வதேச அமைப்பின் ஐக்கிய நாடுகள் மாநாட்டில் இந்தியாவும் பங்கேற்றது.

## சிறப்பு 301 அறிக்கை

- அமெரிக்காவின் வர்த்தகப் பிரதிநிதியானது தனது வருடாந்திரச் சிறப்பு 301 என்ற அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டுள்ளது.
- அறிவுசார் சொத்துரிமைச் சட்டங்கள் காரணமாக அமெரிக்காவின் நிறுவனங்கள் மற்றும் தயாரிப்புகளுக்கான வர்த்தகத் தடைகளை இது அடையாளம் காட்டுகின்றது.
- இந்த அறிக்கை "முன்னுரிமை வெளிநாட்டு நாடுகளின்" பட்டியலைக் கொண்டு உள்ளது. அவை போதிய அறிவுசார் சொத்துரிமைச் சட்டங்களைக் கொண்டிருக்கவில்லை என்று தீர்மானிக்கப் பட்டுள்ளன.
- மேலும் இந்த அறிக்கை "முன்னுரிமை கண்காணிப்புப் பட்டியல்" மற்றும் "கண்காணிப்புப் பட்டியல்" ஆகியவற்றையும் கொண்டு உள்ளது.
- போதுமான அறிவுசார் சொத்துரிமைப் பாதுகாப்பு மற்றும் அமலாக்கம் இல்லாததால் இந்தியா தொடர்ந்து 'முன்னுரிமை கண்காணிப்புப் பட்டியலில்' உள்ளது.
- அர்ஜென்டினா, அல்ஜீரியா, சிலி, ரஷ்யா, இந்தோனேசியா, சவுதி அரேபியா, வெனிசுலா மற்றும் உக்ரைன் ஆகியவை இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
- இந்தப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட நாடுகள் கனடா, குவைத் மற்றும் தாய்லாந்து ஆகியன ஆகும்.

## உள்நாட்டு இடப்பெயர்வு பற்றிய உலகளாவிய அறிக்கை - 2020

- இது உள்நாட்டு இடப்பெயர்வு கண்காணிப்பு மையத்தால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த மையம் நார்வே அகதிகள் மன்றத்தின் ஒரு பகுதியாகும்.
- தெற்காசியா, கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளில் வெப்ப மண்டலப் புயல்கள் மற்றும் பருவமழை காரணமாக பெரும்பாலான பேரழிவு காரணமான இடப்பெயர்வுகள் தூண்டப் பட்டுள்ளன.
- வங்கதேசம், சீனா, இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியவை தலா நான்கு மில்லியனுக்கும் அதிகமான இடப்பெயர்வுகளை 2019 ஆம் ஆண்டில் பதிவு செய்துள்ளன.
- 2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் கிட்டத்தட்ட ஐந்து மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர் - இதுவரையில் உலகிலேயே இதுவே அதிக எண்ணிக்கையாகும்.
- 2019 ஆம் ஆண்டு இந்தியாவில் 1901 ஆம் ஆண்டு முதல் ஏழாவது மிக வெப்பமான ஆண்டாகும்; 2019 ஆம் ஆண்டின் பருவமழை 25 ஆண்டுகளில் இதன் அதிகமான பருவமழையாகும்.

- 2019 ஆம் ஆண்டில் எட்டு வெப்பமண்டலப் புயல்களும் இந்தியாவைத் தாக்கின.




## மீகாங் நதி தகராறு

- சமீபத்தைய ஒரு ஆய்வின்படி, மீகாங் ஆறின் மீதான சீனாவின் நடவடிக்கைகள் நீண்ட காலமாக சர்ச்சைக்குரியதாக அமைந்துள்ளது.
- அமெரிக்க நிதியுதவி பெற்ற இந்த ஆய்வு புவியின் மீதான கண்கள் (Eyes on Earth) என்ற ஒரு ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை நிறுவனத்தால் மேற்கொள்ளப் பட்டது.
- இந்த அறிக்கை ஐ.நா ஆதரவுடைய நீடித்த வளர்ச்சி கொண்ட நிலையான உள்கட்டமைப்பு கூட்டாண்மை மற்றும் கடைநிலை மீகாங் நதி முன்முயற்சி ஆகியவற்றால் இணைந்து வெளியிடப் பட்டுள்ளது.
- இது அமெரிக்காவுடன் கம்போடியா, லாவோஸ், மியான்மர், தாய்லாந்து மற்றும் வியட்நாமும் இணைந்த ஒரு பன்னாட்டுக் கூட்டாகும்.
- மீகாங் நதி ஆறு நாடுகளின் வழியே பாய்கிறது.
- லங்காங் நதி என்றும் அழைக்கப்படும் இது சீனாவிலிருந்துத் தொடங்குகிறது.
- இது கம்போடியா, லாவோஸ், தாய்லாந்து மற்றும் மியான்மர் போன்ற நாடுகளில் பாய்கிறது.
- இது வியட்நாம் வழியாக தென் சீனக் கடலைச் சேர்கிறது.
- இந்த நதி தென்கிழக்கு ஆசிய நாடுகளின் உயிர்நாடியாக விளங்குகிறது.



## நிதிநிலை அறிக்கையின் வெளிப்படைத்தன்மை

- நிதிநிலை அறிக்கைக்கான வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமைத் தன்மையில், 117 நாடுகளில் இந்தியா 53 ஆவது இடத்தில் உள்ளது.
- இது சர்வதேச நிதிநிலைக் கூட்டாண்மை நடத்திய திறந்த நிதிநிலைக் கணக்கெடுப்பின் படி அமைந்துள்ளது.
- இந்தப் பட்டியலில் நியூசிலாந்து முதலிடத்தில் உள்ளது.
- தென்னாப்பிரிக்கா, மெக்ஸிகோ மற்றும் பிரேசில் ஆகியவை இதில் சிறந்து விளங்கும் மற்ற நாடுகளாகும்.

## e-RMB – டிஜிட்டல் நாணயம்

- சீனாவானது, தனது 4 நகர்ப்புறப் பகுதிகளில் டிஜிட்டல் யுவான் நாணயத்தை சோதனை முயற்சியாகத் தொடங்கியுள்ளது.
- டிஜிட்டல் நாணயத்தைத் தொடங்கிய முதலாவது மிகப்பெரிய பொருளாதார நாடு என்ற சாதனையை இது அடைய இருக்கின்றது.
- சீனாவின் மக்கள் வங்கி மட்டுமே இந்த டிஜிட்டல் யுவான் நாணயத்தை விநியோகிக்க இருக்கின்றது.




## ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் புள்ளி விவரம் மற்றும் குறிகாட்டிகள் 2019-20

- இது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் (DST - Department of Science and Technology) கீழ் உள்ள தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேலாண்மைத் தகவல் மையத்தினால் (NSTMIS - National Science and Technology Management Information) 2018 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- R&D துறையில் (Reseaech & Development) இந்தியாவின் மொத்தச் செலவினம் 2008 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மூன்று மடங்காக உயர்ந்து உள்ளது.
- ஆராய்ச்சி சார்ந்த வெளியீடுகள் அதிகரித்ததன் மூலம், உலக அளவில் இந்தியா 3வது இடத்தில் உள்ளது.
- அதற்கான இரண்டு முக்கியமான பங்களிப்புகள் DST (63%) மற்றும் மத்திய உயிரித் தொழில்நுட்பத் துறை (14%) ஆகியவையாகும்.
- அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகள் முதல் 2 இடங்களைப் பிடித்துள்ளன.
- மேலும் அறிவியல் மற்றும் பொறியியல் படிப்பில் முனைவர் பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கையில் இந்தியா 3வது இடத்தில் உள்ளது.

- இந்தியாவின் தலா R&D செலவினமானது தனிநபர் வாங்கும் சக்தி திறன் அடிப்படையில் 2007-08 ஆம் ஆண்டில் 29.2 அமெரிக்க டாலரிலிருந்து 2017-18 ஆம் ஆண்டில் 47.2 அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது.
- இந்தியா 2017-18 ஆம் ஆண்டில் R&D மீது தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.7% அளவிற்குச் செலவிட்டது.
- பிரிக்ஸ் நாடுகளிடையே, பிரேசில் 1.3%த்தையும் ரஷ்யக் கூட்டமைப்பு 11%த்தையும் சீனா 2.1%த்தையும் தென் ஆப்பிரிக்கா 0.8%த்தையும் செலவிடுகின்றன.
- உலகின் குடியிருப்பாளர் காப்புரிமைத் தாக்கல் நடவடிக்கையில் இந்தியா 9வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பின்படி, இந்தியாவின் காப்புரிமை அலுவலகமானது உலகின் காப்புரிமைத் தாக்கல் செய்யும் அலுவலகங்களிடையே 7வது இடத்தில் உள்ளது.
- R&D துறையில் பெண்களின் பங்களிப்பானது 13%லிருந்து 24% ஆக அதிகரித்து உள்ளது.




## மிகவும் புகழ்பெற்ற மத்திய வங்கி

- உலகில் உள்ள அனைத்து மத்திய வங்கிகளிடையே அதிக எண்ணிக்கையிலான சுட்டுரை பின்தொடர்பவர்களை இந்திய ரிசர்வ் வங்கி (RBI - Reserve Bank of India) கொண்டுள்ளது. 7.45 லட்சம் நபர்கள் இதன் சுட்டுரையைப் பின்தொடர்கின்றனர்.
- சுட்டுரையில் மிகவும் புகழ்பெற்ற மத்திய வங்கியாக உருவெடுத்துள்ள இது அமெரிக்க பெடரல் ரிசர்வ் வங்கி மற்றும் ஐரோப்பிய மத்திய வங்கி ஆகியவற்றைப் பின்னுக்குத் தள்ளியுள்ளது.
- RBIற்கு அடுத்த இடத்தில் இந்தோனிசிய வங்கி உள்ளது.
- மூன்றாவது இடத்தில் மெக்சிகோவின் தலைமை வங்கியான பேன்கோ டி மெக்சிகோ என்ற வங்கி உள்ளது.

## அணி சேரா இயக்க மாநாடு

- இந்தியப் பிரதமர் அணிசேரா இயக்க மாநாட்டில் (NAM - Non-Aligned Movement) காணொளி வாயிலாக இந்தியாவின் சார்பாக கலந்து கொண்டார்.
- இது NAMன் தற்போதைய தலைமை நாடான அசர்பைஜானின் அதிபரான இஹாம் அலியேவ் என்பவரின் முன்னெப்பினால் நடத்தப்பட்டது.

- இந்த மாநாட்டின் கருத்துரு, "கோவிட் – 19 தொற்றிற்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றிணைதல்" என்பதாகும்.
- 2014 ஆம் ஆண்டில் இந்தியாவின் பிரதமராக மோடி பதவியேற்றதிலிருந்து, அவரால் கலந்து கொள்ளப்பட்ட முதலாவது NAM மாநாடு இதுவாகும்.
- 2016 ஆம் ஆண்டு மாநாடு வெனிசுலா நாட்டிலும் 2019 ஆம் ஆண்டு மாநாடு அசர்பைஜான் நாட்டிலும் நடத்தப்பட்டது.
- 2012 ஆம் ஆண்டில், ஈரானின் டெக்ரான் நகரில் நடைபெற்ற NAM மாநாட்டில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொண்டார்.

***NAM பற்றி***

- NAM என்பது 120 நாடுகள் கொண்ட வளரும் நாடுகளின் அணிசேரா இயக்க மன்றமாகும்.
- இது எந்தவொரு வலிமை மிக்க கூட்டமைப்புகளுடனோ அல்லது அதற்கு எதிராகவோ கூட்டணி அமைக்காது.
- ஐக்கிய நாடுகளுக்குப் பிறகு, NAM ஆனது அதிக எண்ணிக்கையிலான உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.
- NAM-ல் உறுப்பினராக உள்ள நாடுகள் ஐக்கிய நாடுகளில் உள்ள உறுப்பு நாடுகளில் ஏறத்தாழ மூன்றில் 2 பங்கு நாடுகள் உள்ளன. இது உலக மக்கள் தொகையில் 55% அளவைக் கொண்டுள்ளது.
- இந்த அமைப்பானது 1955 ஆம் ஆண்டின் பாண்டுங் கருத்தரங்கில் ஏற்படுத்த ஒப்புக் கொள்ளப் பட்டது.
- இது 1961 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இந்தியாவின் ஜவஹர்லால் நேரு, யுகோஸ்லேவியாவின் அதிபரான ஜோசப் ப்ரோஸ் டிட்டோ மற்றும் எகிப்து நாட்டு அதிபரான கமால் அப்துல் நாசர் ஆகியோர் இந்த முன்னெடுப்பின் முக்கியமான தலைவர்களாவர்.

## தாயகத்திலேயே இழத்தல்

- ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியமானது "தாயகத்திலேயே இழத்தல்" (Lost at home) என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- பிரச்சினைகளின் காரணமாக அதிக எண்ணிக்கையிலான உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்த குழந்தைகள் மத்தியக் கிழக்கு, வடக்கு ஆப்பிரிக்க மற்றும் சஹாரா ஆப்பிரிக்காவைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ளனர்.
- சிரிய அரபுக் குடியரசு, காங்கோ மக்களாட்சிக் குடியரசு மற்றும் ஏமன் ஆகிய பகுதிகளில் பாதிக்கும் மேற்பட்ட நபர்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

## போர்ப் பதக்கம்

- ரஷ்ய அதிபரான விளாடிமிர் புடின் வட கொரிய அதிபரான கிம் ஜோங் உன்னிற்கு ஒரு நினைவுப் போர்ப் பதக்கத்தை வழங்கினார்.
- இந்தப் பதக்கமானது இரண்டாம் உலகப் போரில் நாஜிக்களுக்கான எதிரான வெற்றியின் 75வது ஆண்டு நினைவு தினத்தைக் குறிப்பதற்காக வழங்கப் பட்டுள்ளது.


## ஈரானின் புதிய நாணயம்

- ஈரான் தனது நாணயத்தை மறு பெயரிட்டு மறு மதிப்பிட முடிவு செய்துள்ளது.
- ஈரானின் பணமானது அடுத்து "டோமன்" என்று அழைக்கப்பட இருக்கின்றது.
- ஈரானின் தற்போதைய நாணயம் "ரியால்" என்று அழைக்கப்படுகின்றது.
- தற்பொழுது 1 டோமன் ஆனது 10,000 ரியாலுக்குச் சமமாகும்.
- இது ரியாலில் 4 சுழியங்களின் குறைப்பைக் குறிக்கின்றது.
- ஜெக்ரான் என்பது மற்றொரு நாணய மதிப்பாகும்.
- 100 ஜெக்ரான் சேர்ந்தது 1 டோமனாகும்.



## கடுமையான நடவடிக்கைக் குறியீடு

- கடுமையான நடவடிக்கைக் குறியீடானது ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தினால் உருவாக்கப் பட்டுள்ளது.



- இது நாட்டின் நடவடிக்கைகள் எவ்வாறு கடுமையாக உள்ளன என்பதையும் இந்த நடவடிக்கைகள் நோய்த் தொற்று பரவலை எந்த நிலையில் வைத்துள்ளன என்பதையும் காட்டுகின்றது.
- இந்தக் குறியீட்டின்படி, இந்தியா மற்ற நாடுகளை விட மிகக் கடுமையான நடவடிக்கைகளை முன்கூட்டியே விதித்துள்ளது.
- ஆஸ்திரேலியா, தாய்லாந்து, தைவான் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளுக்கு அடுத்து இந்தியா 0.7 என்ற மதிப்பெண்ணைப் பெற்றுள்ளது.

## உலகளாவிய ஊட்டச்சத்து அறிக்கை 2020

- இது உலகளாவிய ஊட்டச்சத்தின் நிலை குறித்த உலகின் ஒரு முன்னணி தனிச் சுதந்திரமுடைய ஆய்வறிக்கையாகும்.
- 2025 ஆம் ஆண்டுவாக்கில் உலகளாவிய அளவில் ஊட்டச்சத்து இலக்குகளை எட்டத் தவறும் 88 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.
- மேலும் இது ஊட்டச்சத்துக் குறைபாட்டில் அதிக அளவிலான உள்நாட்டுப் பாகுபாடுகளுடன் காணப்படும் நாடுகளில் ஒன்றாகவும் அடையாளம் காணப் பட்டுள்ளது.
- நைஜீரியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுடன் சேர்த்து 3 மோசமான நாடுகளிடையே ஒன்றாக இந்தியாவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.
- உலகளாவிய ஊட்டச்சத்து அறிக்கையானது 2013 ஆம் ஆண்டில் வளர்ச்சி முன்னெடுப்பிற்கான முதலாவது ஊட்டச்சத்து மாநாட்டில் கருத்துருவாக்கம் செய்து வெளியிடப் பட்டது.
- இது பங்குதாரர் குழுமம், தனிச் சுதந்திர வல்லுநர் குழு மற்றும் அறிக்கைச் செயலகம் (உலகச் சுகாதார அமைப்பு மற்றும் உணவு & வேளாண் அமைப்பு இதில் பங்கு பெறவில்லை) ஆகியவற்றைக் கொண்ட ஒரு பலதரப்புக் குழுவினைக் கொண்ட முன்னெடுப்பாகும்.




## உலக சுகாதார அமைப்பின் தலைமை

- ஜப்பானின் பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் 2020 ஆம் ஆண்டு மே மாதத்தில் உலக சுகாதார அமைப்பின் (WHO - World Health Organization) தலைமைப் பதவியை இந்தியா ஏற்க இருக்கின்றது.
- இந்தியா இப்பதவியை அடுத்த 3 ஆண்டுகளுக்கு வகிக்க இருக்கின்றது.

## பார்வையாளர் நாடாக தைவான்

- அமெரிக்க செனட் சபையானது உலக சுகாதார அமைப்பில் (WHO -World Health Organization) தைவானைப் பார்வையாளர் நாடாக ஆக்கும் வகையில் சட்டம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.
- இது தொடர்பாக, இதற்கான ஆதரவைப் பெறுவதற்காக ஆஸ்திரேலியா, இந்தியா, பிரேசில், ஜப்பான், இஸ்ரேல் மற்றும் கொரியக் குடியரசு ஆகிய நாடுகளுக்கிடையே ஒரு மாநாடு நடத்தப் பட்டது.
- இந்த மாநாட்டில் இந்தியாவும் கலந்து கொண்டது.
- தற்பொழுது தைவான் சீனக் குடியரசினால் ஆளப் படுகின்றது.
- எனினும், சீனா தனது “ஒற்றை சீனா என்ற கொள்கையின்” கீழ் தைவானை தன்னுடன் இணைக்கப்பட்ட ஒரு பகுதியாக உரிமை கோருகின்றது.
- மறுபுறம் தைவான் மக்கள் தனி நாடு கோருகின்றனர்.




## கோவிட் – 19 உலகளாவிய ஒற்றுமைச் சோதனை

- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது (ICMR - Indian Council for Medical Research) இந்தச் சோதனையில் பங்கேற்க இருக்கின்றது.
- ICMR தேசிய எய்ட்ஸ் ஆராய்ச்சி நிறுவனமானது இந்தியாவில் ஒற்றுமைச் சோதனைக்கான தேசிய ஒத்துழைப்புத் தளமாகப் பெயரிடப்பட்டுள்ளது.
- குஜராத்தில் உள்ள 4 முக்கியமான நகரங்களில் உள்ள மருத்துவமனைகள் இந்தச் சோதனையில் பங்கேற்க இருக்கின்றன.
- வதோதரா, அகமதாபாத், சூரத் மற்றும் ராஜ்கோட் ஆகியவை இந்த நகரங்களாகும்.
- உலக சுகாதார அமைப்பானது 4 சிகிச்சை முறைகளின் திறன் மற்றும் துல்லியத் தன்மையைச் சோதனை செய்வதற்காக 4 மிகப்பெரிய சோதனைகளைத் தொடங்கி உள்ளது.
- இந்த சிகிச்சை முறைகள் பின்வருமாறு:
  - ஹைட்ராக்ஸிகுளோரோகுயின்
  - ரெம்டெசிவிர்
  - லோபினாவிர் – ரிட்டோனாவிர்
  - இன்டர்பெரோன் என்ற மருந்துடன் லோபினாவிர் - ரிட்டோனாவிர்

- லோபினாவிர் மற்றும் ரிட்டோனாவிர் ஆகியவை தற்பொழுது எச்ஐவி தொற்று நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப் படுகின்றன.
- ரெம்டெசிவிர் மருந்திற்கு உலகில் எந்தவொரு நாட்டிலும் ஒப்புதல் அளிக்கப்பட வில்லை.
- எனினும் ரெம்டெசிவிர் மருந்தானது ரெகஸ்சஸ் வகை குரங்குகளில் எபோலா வைரசைத் தடுக்கின்றது.

## தைவான் – சீனா பிரச்சினை

- 1949 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சீனாவின் உள்நாட்டுப் போரானது சீனாவின் தோற்கடிக்கப்பட்ட குயோமின்டாங் அல்லது சீனத் தேசியவாதிகளை தைவான் தீவிற்குச் செல்வதைக் கட்டாயமாக்கியது.
- தைவான் நாடானது தன்னகத்தே ஆட்சி செய்யக் கூடிய மற்றும் சட்டப்படியான ஒரு சுதந்திர தேசமாகும். இது சீன நிலப் பகுதியிலிருந்து சுதந்திரம் பெற்றதாக அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.
- இது "ஒரு நாடு, இரண்டு நிர்வாகம்" என்றறியப்படுகின்றது.
- இது நாள் வரை தைவான் உலக சுகாதார அமைப்பின் உறுப்பினராக இல்லை.
- தைவான் உலக வர்த்தக அமைப்பு, ஆசிய-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றில் பல்வேறு பெயர்களுடன் உறுப்பினராக உள்ளது.
- 2010 ஆம் ஆண்டு முதல் "ஒரே சீனா" என்ற கொள்கையை அங்கீகரிக்க இந்தியா மறுப்பு தெரிவித்து வருகின்றது.
- இவற்றிற்கிடையே நெறிசார்ந்த ராஜதந்திர உறவுகள் இல்லையென்றாலும், தைவான் மற்றும் இந்தியா ஆகியவை பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு நல்கி வருகின்றன.




## WTO-ன் தலைமை

- உலக வர்த்தக அமைப்பின் தலைவரான பிரேசிலைச் சேர்ந்த ராபர்ட்டோ அளவெடோ என்பவர் அப்பதவியிலிருந்து விலகியுள்ளார்.
- இவர் ஆகஸ்ட் 31 ஆம் தேதியன்று தனது பொறுப்பிலிருந்து விலக இருக்கின்றார்.
- இவரது 2வது 4 ஆண்டு கால பதவிக் காலமானது 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் முடிவடைய இருக்கின்றது.

## காலாபானி பிரச்சினை

- நேபாளமானது காலாபானி, லிபுலேஹ் மற்றும் லிம்பியாதுரா ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய அதன் தேசிய வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- எனினும், இந்த பகுதிகள் இந்தியாவினால் உரிமை கோரப் படுகின்றன.
- இந்தியாவானது காலாபானி பகுதியை உத்தரகாண்டின் பித்தோராகர் மாவட்டத்தின் ஒரு பகுதியாக உரிமை கோருகின்றது. நேபாளம் இதை அந்நாட்டின் தர்சுலா மாவட்டத்தின் ஒரு பகுதியாக உரிமை கோருகின்றது.
- லிபுலேஹ் எல்லைக் கணவாய் ஆனது இந்தியா, சீனா, மற்றும் நேபாளம் ஆகிய மூன்று நாடுகள் சந்திக்கும் பகுதியில் காலாபானியின் உச்சியில் உத்தரகாண்ட்டில் அமைந்துள்ளது.




## 73வது உலக சுகாதார மன்றத்தின் சந்திப்பு

- இந்தியா உள்ளிட்ட 120 நாடுகளைக் கொண்ட ஒரு கூட்டணியானது உலக சுகாதார நிறுவனத்தில் (WHO - World Health Organization) ஆஸ்திரேலியா முன்மொழிந்த ஒரு தீர்மானத்திற்கு தங்களது ஆதரவை அளித்துள்ளன.
- கோவிட் – 19 தொற்றின் பூர்வீகம் குறித்து சீனா மீது விசாரணை நடத்துவதற்காக "கோவிட் – 19 எதிர்வினை மீதான தீர்மானம்" என்ற தீர்மானத்திற்கு இவை ஆதரவு அளித்துள்ளன.
- இது கோவிட் – 19 வைரஸின் பூர்வீகம் குறித்து நடத்தப்படும் ஒரு தனிச்சுதந்திர விசாரணைக்கான ஒரு தீர்மானமாகும்.
- சீனா மற்றும் அமெரிக்கா ஆகியவை இந்தத் தீர்மானத்தின் ஒரு பகுதியாக இல்லை.
- மேலும் சீனா இந்த விசாரணைக்கு எதிராக உள்ளது.
- தற்பொழுது கிடைத்திருக்கும் தகவல்கள் கொரானா வைரஸ் ஒரு விலங்குவழி நோய் என்பதனை உறுதி செய்கின்றன.
- விலங்குவழி நோய் என்பது விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவும் ஒரு நோயாகும்.
- உலக விலங்கு நல அமைப்பானது இந்த வைரஸின் விலங்குவழி நோயின் பூர்வீகம் குறித்து ஆய்வு செய்வதற்காக கள அடிப்படையிலான திட்டங்களை மேற்கொள்ள இருக்கின்றது.

- உலக சுகாதார மன்றமானது WHO-ன் முடிவு எடுக்கும் ஒரு அமைப்பாகும்.
- இந்தச் சபையின் உறுப்பினர்கள் ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தின் போது சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவாவில் சந்தித்துக் கொள்வர்.

## பால்டிக் பயணக் குமிழி

- உள்நாட்டில் கோவிட்-19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதில் நல்ல அளவிலான வெற்றியைக் காட்டிய நாடுகள் அல்லது பிராந்தியங்களை மீண்டும் இணைப்பதை இந்த பயணக் குமிழியை உருவாக்குதல் என்ற திட்டம் உள்ளடக்குகிறது.
- அத்தகைய ஒரு குமிழி ஒரு குழுவின் உறுப்பு நாடுகள் ஒருவருக்கொருவர் வர்த்தக உறவுகளை மறுதொடக்கம் செய்யவும் பயணம் மற்றும் சுற்றுலாவை திறந்து விடவும் அனுமதிக்கும்.
- பால்டிக் நாடுகள் தங்கள் எல்லைகளை ஒருவருக்கொருவர் திறந்து அவ்வகையான ஒரு “பயணக் குமிழியை” உருவாக்க உள்ளன.
- பால்டிக் நாடுகள் என்பவை வடக்கு ஐரோப்பாவிலும் பால்டிக் கடலின் கிழக்கு கடற்கரையிலும் உள்ள நாடுகளாகும்.
- எஸ்தோனியா, லித்துவேனியா மற்றும் லாட்வியா ஆகியவை பால்டிக் நாடுகளாக குறிப்பிடப் படுகின்றன.
- ரஷ்யா, சுவீடன், டென்மார்க், எஸ்தோனியா, பின்லாந்து, லாட்வியா, ஜெர்மனி, போலந்து, லித்துவேனியா ஆகியவை பால்டிக் கடலை எல்லையாகக் கொண்ட நாடுகளாகும்.




## இஸ்ரேல் பிரதமர்

- இஸ்ரேலில் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான அரசாங்கத்திற்கு இஸ்ரேல் பாராளுமன்றமான நெசெட்டில் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப் பட்டது.
- இது நெதன்யாகுவின் ஐந்தாவது பதவிக் காலத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. மேலும் இது அவரது தொடர்ச்சியான நான்காவது ஆட்சிக் காலமாகும்.
- நெதன்யாகு பதவியேற்ற பின்னர் பென்னி காண்ட்ஸ் மாற்றுப் பிரதமராகவும் எதிர்காலப் பிரதமராகவும் பதவியேற்றுக் கொண்டார்.

## புதிய நீர் வழிகள்

- வங்க தேசத்தில் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து மற்றும் வர்த்தக நெறிமுறையின் இரண்டாவது ஒப்பந்தத்தில் இந்தியாவும் வங்க தேசமும் கையெழுத்திட்டுள்ளன.
- இது பூடான் சரக்குகள், கற்சில்லுகள் மற்றும் வடகிழக்கு மாநிலத்தின் சரக்குகளை வங்க தேசத்திற்கு ஏற்றுமதி செய்ய வேண்டி உதவ இருக்கின்றது.
- இது வங்கதேசம் மற்றும் கீழை அசாமின் பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்ய இருக்கின்றது.
- இந்த 2 நாடுகளும் 4 புதிய வழிகளுடன் திரிபுராவில் கோமதி நதியின் மீது சோனமுரா-தௌத்கண்டி வழி மற்றும் வங்க தேசத்தில் ராஜ்சஹி – துளியன் – ராஜ்சஹி வழி ஆகியவற்றை இந்தியா – வங்கதேச நெறிமுறை வழிகளின் பட்டியலில் சேர்ந்துள்ளது.
- மையா, கோலாகாட், சோனமுரா, துளியன் மற்றும் ஜோகிகோபா ஆகியவை இந்தியாவிடம் உள்ள 5 புதிய வழிப் பாதைத் துறைமுகங்களாகும்.
- வங்க தேசத்திடம் சுல்தான்கன்ஞ், ராஜ்சாஹி, சில்மாரி, பகதூராபாத் மற்றும் தௌத்கண்டி ஆகிய வழிப் பாதைத் துறைமுகங்கள் உள்ளன.
- ஜோகிகோபாவின் இணைப்பானது மேகாலயா, பூடான் மற்றும் அசாம் ஆகியவற்றோடுத் தொடர்பை ஏற்படுத்த உதவ இருக்கின்றது.
- தற்பொழுது இந்தியா மற்றும் வங்கதேசத்திற்கு இடையே வழிப் பாதை துறைமுகங்கள் 6 என்ற எண்ணிக்கையில் இருக்கின்றன.
- இந்தியாவிடம் ஹால்தியா, கொல்கத்தா, பாண்டு, கரீம்கஞ்ச், துப்ரி மற்றும் சில்காட் ஆகியவை உள்ளன.
- வங்க தேசத்திடம், குல்னா, நாராயண்கஞ்ச், சிராஜ்கஞ்ச், மோங்லா, பங்கோன் மற்றும் அசுகஞ்ச் ஆகியவை உள்ளன.



### உலக சுகாதார அமைப்பு நிறுவனம்

- உலக சுகாதார அமைப்பு நிறுவனம் அமைக்கப்படும் என்று உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.
- இது ஒரு தனிச் சுதந்திர நிதியளிப்பு நிறுவனமாகும்.
- இது மிகவும் கொடிய உலக சுகாதாரப் பிரச்சினைகளைக் களைவதற்காக வேண்டி அந்த அமைப்பின் முயற்சிகளுக்கு உதவ இருக்கின்றது.
- இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் அமைந்துள்ளது.

### புதிய வளர்ச்சி வங்கியின் புதிய தலைவர்


- மர்க்கோன் ட்ரோய்ஜோ என்பவர் புதிய வளர்ச்சி வங்கியின் (NDB - New Development Bank) புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- இவர் பிரேசிலின் முன்னாள் துணைப் பொருளாதார அமைச்சர் ஆவார். இந்தப் பன்னாட்டு நிதியியல் நிறுவனத்தின் தலைவராக இருந்த இந்தியாவைச் சேர்ந்த K.V. காமத் என்பவருக்குப் பதிலாக இவர் நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்தியாவைச் சேர்ந்த அனில் கிஷோரா என்பவர் இந்த வங்கியின் துணைத் தலைவர் மற்றும் தலைமை இடர்பாட்டு அதிகாரி ஆவார்.
- இந்தியாவைச் சேர்ந்த K.V. காமத் என்பவர் NDBயின் முதலாவது தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் ஆவார்.
- மேலும் இது பிரிக்ஸ் வளர்ச்சி வங்கி என்றும் அழைக்கப் படுகின்றது.
- இதன் தலைமையகம் சீனாவில் உள்ள ஷாங்காய் நகரில் அமைந்துள்ளது.
- NDBயின் முதலாவது பிராந்திய அலுவலகம் தென்னாப்பிரிக்காவில் ஜோகன்ஸ்பெர்க்கில் அமைந்துள்ளது.
- இது 2014 ஆம் ஆண்டில் பிரிக்ஸின் போர்த்தலீசா பிரகடனத்தின் மூலம் அமைக்கப் பட்டதாகும்.

## பொருளாதாரச் செய்திகள்

### ஒரே தேசம் ஒரே குடும்ப அட்டை (ரேஷன் அட்டை)

- பஞ்சாப், பீகார், உத்தரப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம் மற்றும் டாமன் & டையூ ஆகியவை "ஒரே தேசம் ஒரே குடும்ப அட்டை" என்ற திட்டத்துடன் இணைந்துள்ளன.
- இதற்கு மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது வழங்கல் துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டத்தின் நோக்கம் மாநிலங்களுக்கிடையே குடும்ப அட்டையைப் பயன்படுத்திக் கொள்ளுதல் என்பதாகும்.
- இது அனைத்துப் பயனாளிகளுக்கும் குறிப்பாக இடம்பெயரும் மக்களுக்கு உதவுவதை உறுதி செய்கின்றது.
- இவர்கள் தங்களது சொந்தத் தேர்வின் அடிப்படையில் நாடெங்கிலும் உள்ள எந்தவொரு PDS (PDS-Public Distribution system) கடையையும் அணுக முடியும்.
- ஏற்கெனவே 12ற்கும் மேற்பட்ட மாநிலங்கள் இந்தத் திட்டத்தில் இணைந்துள்ளன.

- மத்தியப் பிரதேசம், கேரளா, ஜார்க்கண்ட், ஆந்திரப் பிரதேசம், குஜராத், கோவா, ஹரியானா, கர்நாடகா, மகாராஷ்டிரா, தெலுங்கானா, ராஜஸ்தான் மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்கள் இத்திட்டத்தில் இணைந்துள்ளன.




## E – NAM

- முதன்முறையாக, கர்நாடகாவில் உள்ள ஒரு சந்தையானது மின்னணு - தேசிய வேளாண் சந்தை (E - National Agriculture Market) தளத்தில் இணந்துள்ளது.
- மேலும், E-NAM ஆனது கர்நாடகாவின் ராஷ்டிரிய மின்னணு-சந்தைச் சேவையுடன் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது.
- தற்பொழுது முதன்முறையாக, இந்தியாவில் வேளாண் பொருட்களின் 2 வேறு வர்த்தகத் தளங்கள் ஒன்றிணைக்கப் பட்டுள்ளன.





- தற்பொழுது வரை, ஒடிசா, ஆந்திரப் பிரதேசம், குஜராத், இராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், கர்நாடகா ஆகிய மாநிலங்களில் உள்ள சந்தைகள் (785 சந்தைகள்) இதில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

- E-NAM ஆனது 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது விவசாயிகள், நுகர்வோர் மற்றும் வர்த்தகர்கள், தங்களது பொருட்களை நிகழ்நேரத்தில் வர்த்தகம் செய்ய அனுமதிக்கின்றது.

## முக்கியத் துறைகள்

- மார்ச் மாதத்தில் முக்கியத் தொழிற்துறைகளின் உற்பத்தியானது 6.5% என்ற அளவில் குறைந்துள்ளது.
- இந்தத் தரவானது மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.
- 2012 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஏற்பட்ட முதல் மிகப்பெரிய வீழ்ச்சி இதுவாகும்.
- கச்சா எண்ணெய், எஃகு, இயற்கை வாயு, சுத்திகரிக்கப்பட்ட பொருள், சிமெண்ட், உரங்கள், மின்சாரம் மற்றும் நிலக்கரி ஆகியவை இந்தியாவின் முக்கியத் தொழில்துறைகளாகும்.
- முக்கியமான 8 துறைகள் தொழிற்துறை உற்பத்திக் குறியீட்டில் (IIP - Index of Industrial Production) 40.27% அளவைக் கொண்டுள்ளன.
- IIP ஆனது மத்தியப் புள்ளியியல் அமைப்பால் வெளியிடப்படுகின்றது.
- IIP குறிகாட்டியானது சுரங்கத் துறை, மின்சாரம் மற்றும் உற்பத்தி ஆகிய மூன்று முக்கியமான துறைகளை அளவிடுகின்றது.
- IIP ஆனது 2004-05 ஆண்டை அடிப்படையாக வைத்துக் கணக்கிடப்படுகின்றது.




## காடுகளின் சிறு உற்பத்திப் பொருட்கள்

- சமீபத்தில் மத்திய அரசானது காடுகளின் சிறு உற்பத்திப் பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையைத் (MSP - Minor Support Price) திருத்தியமைத்துள்ளது.
- MFP (Minor Forest Produce) என்பது தாவரத்திலிருந்து உருவாகிய மரம் அல்லாத அனைத்து வன உற்பத்திப் பொருள்களையும் உள்ளடக்கியுள்ளது.
- இது மூங்கில், பிரம்புகள், தீவனங்கள், இலைகள், கோந்து, மெழுகுகள், சாயங்கள், பிசின் மற்றும் பல்வேறு வகையான உணவுகளான கொட்டைகள், காடுகளில் விளையும் பழங்கள், தேன், அரக்கு, பட்டு போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

- MFPகளுக்கான MSP ஆனது மத்தியப் பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் கீழ் அமைக்கப்பட்ட விலைப் பிரிவுக் குழுவினால் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப் படுகின்றது.
- MSP என்பது அரசாங்கமானது விவசாயிகள் மற்றும் பழங்குடியினரிடமிருந்து வாங்கப்படும் உற்பத்திப் பொருளின் விலையைக் குறிக்கின்றது.

## மீன்வளத் துறைக்கான அறிவுறுத்தல்கள்


- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (ICAR - Indian Council of Agricultural Research) மீன்வளத் துறைக்கான அறிவுறுத்தல்களை 12 மொழிகளில் வெளியிட்டுள்ளது.
- இந்தி மற்றும் ஆங்கிலத்தைத் தவிர, இந்த அறிவுறுத்தல்கள் 10 மொழிகளில் வழங்கப் பட்டுள்ளன.
- இவை பாரக்பூரில் உள்ள ICAR – மத்திய உள்நாட்டு மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தினால் (CIFRI - Central Inland Fisheries Research Institute) தயாரிக்கப்பட்டு, வெளியிடப் பட்டுள்ளது.
- மீன்வளத் துறைக்கான இந்த அறிவுறுத்தல்கள் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் (FAO - Food and Agriculture Organization) உலகளாவிய அறிவுறுத்தல்களின் ஒரு பகுதியாக உள்ளது.

## இந்தியாவில் நிலக்கரி (Coking Coal)

- நிலக்கரி தொடர்பாக ரஷ்யாவுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியா முயற்சித்து வருகின்றது.
- 2030-31 ஆம் ஆண்டு வாக்கில் இந்தியாவிற்கு 180 மில்லியன் டன் நிலக்கரி தேவைப்படும்.
- இது முக்கியமாக எஃகு தொழிற்துறையின் தேவையைப் பூர்த்தி செய்ய உள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் எஃகு உற்பத்தியை 300 மில்லியன் டன்களாக உயர்த்துவதை தேசிய எஃகு கொள்கையானது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும், இந்தியா தனது நிலக்கரித் தேவைகளை 35% அளவிற்கு உள்நாட்டிலேயே பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியாவில் தேங்காய் நார் உற்பத்தி


- தேங்காய் நார் வாரியமானது மதராஸ் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- தேங்காய் நார் உற்பத்தியில் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் முன்னிலையில் (90%) உள்ளன.
- உலகின் தேங்காய் நார்ப் பொருள்கள் தேவையில் மூன்றில் இரண்டு பங்கை இந்தியா பூர்த்தி செய்கின்றது.




*Source: Coconut Development Board*

## PM CARES நிதி

- கோவிட் – 19 நோய்த் தொற்றிற்காக PM CARES நிதியிலிருந்து ரூ.3100 கோடியானது ஒதுக்கப் பட்டுள்ளது.
- இது பிரதமரால் நிர்வகிக்கப் படுகின்றது.
- இதன் மற்ற உறுப்பினர்கள் உள்துறை அமைச்சர், பாதுகாப்புத் துறை அமைச்சர் மற்றும் நிதியமைச்சர் ஆகியோராவர்.
- இந்தியாவின் தலைமைக் கணக்குப் பதிவாளர் இந்த நிதியைத் தணிக்கை செய்ய அனுமதிக்கப் படுவதில்லை.
- தணிக்கை நோக்கத்திற்காக இந்த அறக்கட்டளை உறுப்பினர்களால் தனிச்சுதந்திர தணிக்கையாளர்கள் அதற்கு நியமிக்கப் படுகின்றனர்.
- இந்த நிதியானது நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து நன்கொடையாக வசூலிக்கப் படுகின்றது.



## PM – KISAN திட்டம்

- மத்திய வேளாண் துறை அமைச்சகமானது PM – கிசான் திட்டத்தின் கீழ் ரூ.18,517 கோடியைப் பயனாளிகளுக்கு விடுவித்துள்ளது.
- இந்த நிதியானது பிரதான் மந்திரி கரீப் கல்யாண் அன் யோஜனா என்பதின் ஒரு பகுதியாக விடுவிக்கப் பட்டுள்ளது.
- பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதி யோஜனாவானது 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி 24 அன்று தொடங்கப் பட்டது.
- இந்தத் திட்டத்தின் கீழ், அனைத்து சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் ஒரு ஆண்டில் 3 தவணைகளில் ரூ.6000 என்ற நிதியுதவியானது அளிக்கப்படுகின்றது.

## ஆத்மநிர்பர் திட்டம் – இரண்டாவது நிதித் தொகுப்பு

- மத்திய நிதித்துறை அமைச்சரான நிர்மலா சீதாராமன் மத்திய அரசின் "ஆத்மநிர்பர் (தற்சார்பு) திட்டத்தின்" இரண்டாவது நிதித் தொகுப்பை அறிவித்துள்ளார்.

***முக்கியமான நடவடிக்கைகள்***

- 2 மாதங்களுக்கு அதாவது 2020 ஆம் ஆண்டு மே மற்றும் ஜுன் மாதம் ஆகிய காலகட்டங்களில் இலவச உணவு தானியங்கள் அனைத்து இடப்பெயர்வுத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட இருக்கின்றன.
- இந்தியாவில் எந்தவொரு நியாய விலைக் கடையிலிருந்தும் இடப்பெயர்வுத் தொழிலாளர்களுக்குப் பொது வழங்கல் முறையை அனுமதிக்க தொழில்நுட்ப முறை பயன்படுத்தப்பட இருக்கின்றது. எனவே "ஒரு தேசம் ஒரு குடும்ப அட்டை" என்ற திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாத வாக்கில் 100% தேசிய உள்ளடக்கலை அடைய முடியும்.
- ஈடு செய்யும் காடு வளர்ப்பு மேலாண்மை மற்றும் திட்டமிடல் ஆணையத்தின் கீழ் உள்ள ரூ. 6000 கோடி நிதியானது காடு வளர்ப்பு மற்றும் தோட்டப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட இருக்கின்றது.



## ஆத்மநிர்பர் பிரச்சாரம் – 3வது நிதித் தொகுப்பு

- மூன்றாவது நிதித் தொகுப்பானது விவசாயம் மற்றும் வேளாண் சார்ந்த நடவடிக்கைளுக்கு வேண்டி ஒதுக்கப் பட்டுள்ளது.
- ஏறத்தாழ 1 இலட்சம் கோடியானது வேளாண் பொருள் உற்பத்தி அமைப்பு மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்காக ஒதுக்கப் பட்டுள்ளது.
- ரூ.10,000 கோடியானது குறு உணவு நிறுவனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
- இது தொகுப்பு அடிப்படையிலான அணுகுமுறையில் செயல்பட இருக்கின்றது.
- இந்த முன்னெடுப்பின் கீழ் காஷ்மீர் கும்குமப்பூவின் மீதும் பீகார் மக்கானாவின் மீதும் தமிழ்நாடு மரவள்ளிக் கிழங்கின் மீதும் கர்நாடகா கேழ்வரகின் மீதும் ஆந்திரப் பிரதேசம் மிளகாயின் மீதும் கவனம் செலுத்த முடியும்.
- மத்திய அரசானது மீன்களின் மீதான மதிப்புச் சங்கிலியில் உள்ள சிக்கலான இடைவெளியைக் குறைப்பதற்கு வேண்டி கடல்சார் மற்றும் உள்நாட்டு மீன்வளத் துறைகளின் ஒருங்கிணைந்த, நீடித்த, பிரத்தியேக வளர்ச்சிக்காக பிரதான் மந்திரி மத்சயா சம்பாதா யோஜனா என்ற ஒரு திட்டத்தைத் தொடங்க இருக்கின்றது.
- பசுமை நடவடிக்கையானது தக்காளி, வெங்காயம், உருளைக் கிழங்கு ஆகியவற்றிலிருந்து அனைத்துப் பயிர்களுக்கும் நீட்டிக்கப் பட்டுள்ளது.

## ஆத்மநிர்பர் பிரச்சாரம் – நான்காவது நிதித் தொகுப்பு

- இந்திய அரசானது 8 துறைகளில் கொள்கை சார்ந்த சீர்திருத்தங்களைக் கொண்டு வர இருக்கின்றது.
- வணிக ரீதியிலான சுரங்கப் பணியானது நிலக்கரித் துறையில் கொண்டு வரப்பட இருக்கின்றது.
- உலகளவில் இந்தியா மூன்றாவது மிகப்பெரிய நிலக்கரி இருப்புகளைக் கொண்டிருந்த போதிலும் இந்தியா தற்பொழுதும் நிலக்கரியை இறக்குமதி செய்து வருகின்றது.
- நிலக்கரியின் வணிகமயமாக்கலானது நிலக்கரி இறக்குமதியைக் குறைக்க இருக்கின்றது.
- மத்திய தாதுக்கள் துறை அமைச்சகமானது தாதுக் குறியீட்டை வெளியிட இருக்கின்றது.
- பாதுகாப்புத் துறையில் அந்நிய நேரடி முதலீடானது 49%லிருந்து 74% ஆக அதிகரிக்கப் பட்டுள்ளது.
- ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள மின் விநியோக நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்பட இருக்கின்றன.
- மத்திய அரசானது மருத்துவ ஐசோடோப்புகளை உருவாக்குவதற்காக பொது-தனியார் பங்களிப்பு முறையில் ஒரு ஆராய்ச்சி அலகை ஏற்படுத்த இருக்கின்றது.
- மத்திய அரசானது இந்தியாவை விமானத்தின் பராமரிப்பு, பழுது பார்த்தல், முழுவதும் சரி செய்தல் (MRO - Maintenance, repair and overhaul of aircraft) என்ற ஒரு மையமாக மாற்ற இருக்கின்றது.
- இந்தியாவில் உள்ள பெரும்பாலான விமானங்கள் தங்களது பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகளுக்காக வெளிநாட்டிற்குச் செல்கின்றன.

## GOAL திட்டம்

- மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் துறை அமைச்சரான அர்ஜுன் முண்டா என்பவர் முகநூல் நிறுவனத்துடன் இணைந்து "GOAL" என்ற ஒரு திட்டத்தை தொடங்கியுள்ளார்.
- GOAL திட்டம் என்பது "தலைவர்களாக நிகழ்நேரத்திற்கு மாறுதல்" என்பதாகும்.
- இந்தத் திட்டமானது டிஜிட்டல் முறையில் பழங்குடியின இளைஞர்களுக்கு வழிகாட்டுவதற்காகத் தொடங்கப்பட்டுள்ளது.

## FME

- அகில இந்திய அளவில் அமைப்புசாரா தொழிற்துறைக்காக "நுண் உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் தொழிற் நிறுவனங்களின் உருவாக்கத்திற்கான திட்டம் (FME - Formalization of Micro food processing Enterprises)" என்ற மத்திய அரசினால் ஆதரிக்கப்படும் ஒரு புதிய திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை தனது ஒப்புதலை வழங்கியுள்ளது
- இது இலட்சிய நோக்கு மாவட்டங்களில் தற்பொழுது இருக்கும் நுண் உணவுப் பதப்படுத்தல் தொழில்முனைவோர்கள், மகளிர் தொழில்முனைவோர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் ஆகியோரால் வாங்கப்படும் கடன் அணுகுதலை அதிகரிக்க உதவுகின்றது.




- இது தொகுப்பு ரீதியான ஒரு அணுகுமுறையைக் கொண்டிருக்கின்றது. இது அழுகிப் போகும் உணவுப் பொருட்கள் மீது கவனம் செலுத்த இருக்கின்றது.
- இது 5 ஆண்டு காலத்திற்கு, அதாவது 2020-21லிருந்து 2024-25 வரையிலான காலகட்டத்திற்குச் செயல்படுத்தப்பட இருக்கின்றது.

- இது மத்திய அரசினால் ஆதரிக்கப்படும் ஒரு திட்டமாகும்.
- இதற்கான செலவினமானது மத்திய அரசு மற்றும் மாநில அரசினால் 60 : 40 என்ற அளவில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.

### ECLGS

- சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் முத்ரா திட்டத்தின் கீழ் கடன் வாங்குபவர்கள் ஆகியோருக்காக அவசரகால கடன் தொடர் உறுதித் திட்டத்திற்கு (ECLGS - Emergency Credit Line Guarantee Scheme) மத்திய அரசு தனது ஒப்புதலை வழங்கி உள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், தகுதியுள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் விருப்பமுள்ள முத்ரா கடன் வாங்குபவர்கள் ஆகியோருக்கு ரூ.3 இலட்சம் கோடி அளவிலான கூடுதல் கடனிற்காக 100% கடன் உத்தரவாதமானது தேசியக் கடன் உத்தரவாத அறக்கட்டளை நிறுவனத்தினால் வழங்கப் படுகின்றது.

### பிரதான் மந்திரி மத்சய சம்பாதா யோஜனா

- இந்த் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு தனது ஒப்புதலை வழங்கி உள்ளது.
- இது நீலப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான ஒரு திட்டமாகும்.
- இது அடுத்த 5 ஆண்டு காலத்திற்கு, அதாவது 2020-21 நிதியாண்டிலிருந்து 2024-25 ஆம் நிதியாண்டு வரையிலான காலத்திற்குச் செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- மத்திய மீன்வள, கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால் வளத் துறை அமைச்சகமானது இதனைச் செயல்படுத்தும் அமைப்பாகும்.




- இது மத்திய அரசுத் திட்டம் (CS - Central Sector Scheme) மற்றும் மத்திய அரசினால் ஆதரிக்கப்படும் திட்டம் (CSS - Centrally Sponsored Scheme) ஆகிய 2 கூறுகளின் மூலம் செயல்படுத்தப்பட இருக்கின்றது.

- மத்திய அரசுத் திட்டம் (CS) – முழுத் திட்டத்திற்கான செலவும் மத்திய அரசினால் மேற்கொள்ளப்படும் (100% மத்திய அரசு நிதியுதவி).
- CSS கூறானது பயனாளியைச் சாராத மற்றும் பயனாளியைச் சார்ந்த என்ற 2 துணைக் கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- இதன் கீழ், முழுத் திட்டத்திற்கான செலவினமும் மத்திய மற்றும் மாநில அரசினால் பயனாளியைச் சாராத துணைக் கூறின் அடிப்படையில் பின்வருமாறு பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.
    - வட கிழக்கு மற்றும் இமயமலை மாநிலங்கள் - 90% மத்திய அரசினாலும் 10% மாநில அரசினாலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.
    - இதர மாநிலங்கள் - 60% மத்திய அரசினாலும் 40% மாநில அரசினாலும் பகிர்ந்து கொள்ளப் படுகின்றது.
    - ஒன்றியப் பிரதேசங்கள் (சட்டமன்றம் கொண்டுள்ளவை மற்றும் சட்டமன்றம் இல்லாதவை) - 100% நிதி மத்திய அரசினால் அளிக்கப்படுகின்றது.

## பாதுகாப்புச் சோதனை உள்கட்டமைப்புத் திட்டம்

- பாதுகாப்புச் சோதனை உள்கட்டமைப்புத் திட்டத்தைத் தொடங்க மத்திய அரசானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இது உள்நாட்டுப் பாதுகாப்பு உபகரணம் மற்றும் விண்வெளி உபகரணம் ஆகியவற்றின் உற்பத்திக்கு ஊக்கமளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள திட்டங்களுக்கு 75% வரை அரசு நிதி உதவியின் நோக்கில் வழங்கப் படும்.
- மீதமுள்ள 25% திட்ட செலவைச் சிறப்பு நோக்குக் குழுவைக் கொண்ட நிறுவனம் ஏற்க வேண்டும். அதன் பங்குதாரர்கள் இந்தியத் தனியார் நிறுவனங்கள் மற்றும் மாநில அரசுகளாக இருக்க வேண்டும்.
- ஒரு சிறப்பு நோக்குக் குழு என்பது நன்கு வரையறுக்கப்பட்ட, ஒரே மற்றும் குறுகிய நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட ஒரு சட்ட நிறுவனமாகும்.
- மத்திய அரசு 2019 ஆம் ஆண்டில் உத்தரப் பிரதேசம் மற்றும் தமிழகத்தில் பாதுகாப்புத் தொழில்துறைப் பெருவழிப் பாதைகளை அமைத்துள்ளது.
- லக்னோ, கான்பூர், ஆக்ரா, அலிகார், சித்திரகூட் மற்றும் ஜான்சி ஆகியவை உத்தரப் பிரதேசத்தின் பாதுகாப்புத் தொழில்துறைப் பெருவழிப் பாதைகளுள் அடங்கும்.
- தமிழகத்தின் பாதுகாப்புத் தொழில்துறைப் பெருவழிப் பாதைகளுள் சென்னை, ஓசூர், சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியவை அடங்கும்.






## பிரதான் மந்திரி வய வந்தனா யோஜனா

- 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரை பிரதான் மந்திரி வய வந்தனா யோஜனா திட்டத்தை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது கொண்ட மூத்தக் குடிமக்களின் நலனுக்காகவும் முதியோர்களின் வருமான உத்தரவாதத்திற்கான பாதுகாப்பைச் செயல்படுத்தவும் பயன்படும் ஒரு பிரத்தியேகமான ஓய்வூதியத் திட்டமாகும்.
- பிரதான் மந்திரி வய வந்தனா யோஜனா திட்டத்தின் கீழ் ஒருவர் அதிகபட்சமாக ரூபாய் 15 லட்சம் வரையில் முதலீடு செய்யலாம்.
- இதன் காலவரையறை 10 ஆண்டுகளாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- இந்தியாவின் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு இந்த திட்டத்தை இயக்குவதற்கான சிறப்புரிமை வழங்கப் பட்டுள்ளது.




## பொது நிதியியல் விதிகள்

- மத்திய அரசானது ரூ.200 கோடிக்குக் குறைவான மதிப்பு கொண்ட சரக்குகள் மற்றும் சேவைகளை உள்நாட்டு நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்வதை உறுதி செய்வதற்காக பொது நிதியியல் விதிகளை (GFR- General Financial Rules) திருத்தியுள்ளது.
- இதற்காக GFR 2017 ஆனது மத்திய அரசினால் திருத்தப் பட்டுள்ளது.
- புதிய திருத்தத்தின்படி, இனி உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகள் ரூ.200 கோடி மதிப்பு வரையிலான அரசாங்கக் கொள்முதலில் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டாது.
- "உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகள் அனுமதிக்கப்பட மாட்டாது" என்பது உள்நாட்டு நிறுவனங்களை ஊக்கப்படுத்துவதற்காக வேண்டி ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு அந்நிய முதலீட்டைத் தடை செய்தல் என்பதாகும்.

## புவிசார் தேங்காய் நார் ஜவுளிகள்

- பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனாவின் மூன்றாவது கட்டத்தில், ஊரக சாலை வளர்ச்சியில் புவிசார் தேங்காய் நார் ஜவுளிகள் பயன்படுத்தப்பட இருக்கின்றன.
- இது தேசிய ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி ஆணையத்தினால் மேற்கொள்ளப் படுகின்றது.
- புவிசார் தேங்காய் நார் ஜவுளிகள் மட்கிய நிலை கொண்டதாக உருமாறுகின்றன.
- இது மண்ணை வளம் கொண்டதாக மாற்றுகின்றது.
- பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனாவின் மூன்றாம் கட்ட நிலையானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது.
- இதன் நோக்கம் கிராமிய வேளாண் சந்தைகள், மருத்துவமனைகள் மற்றும் உயர்கல்வி இடைநிலைப் பள்ளிகள் ஆகியவற்றை இணைப்பதாகும்.



## அரசின் கடன் குறித்த நிலை அறிக்கை

- மத்திய நிதித்துறை அமைச்சகமானது 2018-19 ஆம் ஆண்டிற்கான அரசின் கடன் குறித்த நிலை ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- மத்திய அரசின் கடனானது 2017-18 ஆம் ஆண்டில் 45.8% என்ற அளவிலிருந்து 2019 ஆம் ஆண்டில் 45.7% என்ற குறைந்த அளவில் சரிந்துள்ளது.
- அயலகக் கடனானது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.7% ஆகும்.
- இந்தியாவில் தற்போதையக் கடனானது ரூ.1.3 கோடி கோடிகளாக உள்ளது.
- ஏறத்தாழ 94% என்ற அளவில் மத்திய அரசின் கடன்கள் உள்நாட்டுக் கடன்களாக உள்ளன.
- இந்த அறிக்கையின்படி, மத்திய அரசு மற்றும் மாநிலங்களின் ஒட்டு மொத்தக் கடன் அளவானது 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 68.7% என்பதிலிருந்து 2019 ஆம் ஆண்டில் 68.6% ஆகக் குறைந்துள்ளது.

## உலக எஃகு அறிக்கை

- உலக எஃகுச் சங்கமானது உலக எஃகு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- அந்த அறிக்கையின்படி, இந்தியாவில் கச்சா எஃகு உற்பத்தியானது 65 சதவீதம் குறைந்துள்ளது.
- இந்தியா தற்போது அதன் தேசிய எஃகு கொள்கை 2017 என்ற கொள்கையின் கீழ் செயல்பட்டு வருகிறது.

- இந்தக் கொள்கையின் கீழ், இந்தியா தனது எஃகு உற்பத்தியை 2030 ஆம் ஆண்டிற்குள் 300 மில்லியன் டன்னாக உயர்த்த உள்ளது.
- எஃகு உற்பத்தியில் சீனா 1.7% சரிவைக் கண்டுள்ளது.
- சீனா உற்பத்திச் சரிவை எதிர்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

## FSDC

- சமீபத்தில் மத்திய அரசானது டிஜிட்டல் பொருளாதாரத்தின் மீது அதிகரிக்கப்பட்டு வரும் கவனத்தைக் கருத்தில் கொண்டு மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை செயலாளரை நிதியியல் நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சி ஆணையம் (FSDC - Financial Stability and Development Council) என்ற அமைப்பிற்குள் கொண்டு வந்துள்ளது.
- FSDC ஆனது 2010 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டதாகும்.
- இது மத்திய நிதி அமைச்சரால் தலைமை தாங்கப் படுகின்றது.
- இதன் உறுப்பினர்கள் பின்வருமாறு
    - இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர்
    - நிதித்துறை செயலாளர்/மத்தியப் பொருளாதார விவகாரங்கள் துறை
    - செயலாளர், நிதியியல் சேவைகள் துறை
    - தலைமைப் பொருளாதார ஆலோசகர், மத்திய நிதி அமைச்சகம்
    - இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் தலைவர்.

## இந்திய அணிகலன்கள் குறித்த அறிக்கை

- உலகத் தங்க ஆணையமானது "சில்லறை வியாபாரத் தங்கக் கண்ணோட்டம்; இந்திய அணிகலன்கள் அறிக்கை" என்ற தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின் படி, ஏறத்தாழ 37% இந்தியப் பெண்கள் அணிகலன்கள் வாங்கியதே இல்லை.
- ஆடைகள் மற்றும் பட்டுச் சேலைகளுக்கு அடுத்து, "அலங்கார மற்றும் ஆடை அணியும் வாழ்க்கைப் பாணி" நுகர்வோர்களிடையே இரண்டாவது மிகவும் புகழ்பெற்ற பொருள் தங்க அணிகலன்கள் என்று இந்த அறிக்கை கூறுகின்றது.

## இந்தியாவில் அந்நிய நேரடி முதலீடு – 2019 / 20

- இந்தியாவில் அந்நிய நேரடி முதலீட்டானது (FDI – Foreign Direct Investment) 2019 - 20 ஆம் ஆண்டில் 18% அதிகரித்துள்ளதன் மூலம் 73 பில்லியன் அமெரிக்க டாலர் அளவை அடைந்துள்ளது.
- இது குறித்த தரவானது தொழில்துறை ஊக்குவிப்பு மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறையினால் (DPITT - Department for Promotion of Industry and Internal Trade) வெளியிடப் பட்டுள்ளது.
- கடந்த 4 ஆண்டுகளில் அந்நிய நேரடி முதலீட்டில் மேற்கொள்ளப்பட்ட மிக உயரிய அதிகரிப்பு இதுவாகும்.
- மொத்த FDI ஆனது 2013-14 ஆண்டிலிருந்து தற்போது வரை இருமடங்காக அதிகரித்துள்ளது. அப்போது இது 36 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.

- மீண்டும் ஒரு முறை சிங்கப்பூர் நாடானது மிகப்பெரிய ஒரு FDI மூலதாரமாக உருவெடுத்து உள்ளது.

## மின்னணு நிரந்தரக் கணக்கு எண் (e-PAN/electronic Permanent Account Number)

- மத்திய நிதி அமைச்சர் உடனடி PAN எண் ஒதுக்கீட்டு வசதியைத் தொடங்கி வைத்து உள்ளார்.
- இந்த வசதியானது சரியான ஆதார் எண் மற்றும் ஆதார் எண்ணுடன் பதிவு செய்யப் பட்ட கைபேசி எண்ணைக் கொண்டுள்ள PAN விண்ணப்பதாரர்களுக்குக் கிடைக்கும்.
- இந்தச் செயல்முறையானது காகிதமற்ற முறையில் இருக்கும். இந்த e-PAN ஆனது இலவசமாக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட இருக்கின்றது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## 19 விண்மீனிடை சிறுகோள்கள்

- ஒரு நிரந்தர சிறுகோள்கள் கூட்டமானது முதல் முறையாக புதிய ஆய்வு ஒன்றில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- ராயல் வானியல் சங்கத்தின் மாதாந்திர அறிவிப்புகள் இதழில் இந்த ஆய்வு வெளியிடப் பட்டுள்ளது.
- இது பிரேசிலைச் சேர்ந்த வானியலாளர்களால் வியாழன் மற்றும் நெப்டியூன் கோள்களுக்கு இடையே கண்டுபிடிக்கப் பட்டது.
- இது சூரிய மண்டலத்தின் மாபெரும் கிரகங்களுக்கு இடையில் சுற்றித் திரிகிறது.
- 'ஓமுவாமுவா' என்று அழைக்கப்படும் முதல் விண்மீனிடை சிறுகோளானது 2017 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்டது.
- லைரா எனும் விண்மீன் கூட்டத்தில் உள்ள வேகா என்ற நட்சத்திரத்திலிருந்து இந்த சிறுகோள் வெளி வந்துள்ளது.
- சிறுகோள்கள் சென்டார்ஸ் எனப்படும் குழுவைச் சேர்ந்தவையாகும்.
- நமது சூரிய மண்டலத்திற்கு வெளியில் இருந்து இந்தச் சிறுகோள்கள் உருவாகின்றன.
- பில்லியன் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு மற்ற நட்சத்திரங்களிலிருந்து சிறுகோள்கள் கவர்ந்து இழுக்கப் பட்டதாக நம்பப் படுகிறது.

- பேரண்டம் விரிவடையத் தொடங்கியதும், சூரியன் பிறந்தது. அதன் பின்னர் அதிகரித்து வரும் சூரியனின் ஈர்ப்பு விசை இந்த சிறுகோள்களை சூரிய மண்டலத்திற்குள் உள் இழுத்தது.
- ஒரு காலத்தில் மற்றொரு நட்சத்திரத்தைச் சேர்ந்த இந்தச் சிறுகோள்கள் தற்போது வியாழனுக்கும் நெப்டியூனுக்கும் இடையில் சுற்றி வருகின்றன.
- அவை நம் சூரியனைச் சுற்றிக் கொண்டு வெற்றுப் பாதையில் ஒளிந்து கொண்டு இருக்கின்றன.
- புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட சிறுகோள்கள் 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நமது சூரிய குடும்பம் பிறந்ததிலிருந்து இருப்பதாக நம்பப் படுகிறது.
- நட்சத்திரங்களிடையேயான மிக அதிக நெருக்கமானது இன்றையக் காலத்தை விட ஆரம்ப நாட்களில் நட்சத்திரங்களுக்கிடையே ஈர்ப்பு விசை மிகவும் வலுவாக இருந்தமையை அவை கொண்டிருந்ததைச் சுட்டிக் காட்டுகின்றது.
- இது சிறுகோள்களை ஒரு நட்சத்திர அமைப்பிலிருந்து இன்னொரு நட்சத்திர அமைப்பிற்கு இழுக்க உதவியது.
- பேரண்டம் விரிவடைந்து சூரியன் வேகமாக வளர்ந்து, அதன் சொந்த ஈர்ப்பு விசையை அதே உருவாக்கியதன் மூலம் விண்வெளிப் பாறைகள் அது இருந்த இடத்திலிருந்து அகற்றப் பட்டதாக வானியலாளர்கள் நம்புகின்றனர்.
- வளர்ந்து வரும் நட்சத்திரத்தின் மகத்தானச் சக்தியானது பாறைகளை சூரிய மண்டலத்திற்குள் உள்ளே வரும்படி உறிஞ்சியது. அன்றிலிருந்து அவை இங்கேயே இருக்கின்றன.



## கோவிட் நோய்த் தொற்றிற்கான மருத்துவச் சோதனைகள்


- மனிதர்களின் மீதான கோவிட்-19 தடுப்பூசியின் முதல் மருத்துவப் பரிசோதனைக்கு ஜெர்மனி ஒப்புதல் அளித்துள்ளது.
- ஜெர்மன் பயோடெக்னாலஜி நிறுவனமான பயோஎன்டெக்கின் தடுப்பூசித் திட்டம் மனிதர்கள் மீதான மருத்துவப் பரிசோதனைகளுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- பயோஎன்டெக் மற்றும் ஃபைசர் நிறுவனங்கள் கூட்டாக இணைந்து பிஎன்டி162 மருந்தை உருவாக்குகின்றன.
- இது உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட நான்காவது மருத்துவச் சோதனை ஆகும்.
- பிரிட்டனில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் ஒரு சோதனை முயற்சியாக தன்னார்வலர்களுக்கு முதல்முறையாக ஒரு சக்திமிக்க தடுப்பூசி மருந்து கொடுக்கப்பட்டு அவர்கள் பரிசோதிக்கப்பட உள்ளனர்.

- இது மனிதக் குரங்குகளில் காணப்படும் நச்சுயிரியை அடிப்படையாகக் கொண்டது.
- பயோன்டெக் மற்றும் ஆக்ஸ்போர்டு தவிர, மனிதர்கள் மீதான மற்ற மூன்று மருத்துவப் பரிசோதனைகள் உலகளவில் அங்கீகரிக்கப் பட்டுள்ளன.
- இந்தச் சோதனையை மேற்கொள்வதில் சீனா மற்றும் அமெரிக்கா முதலிடத்தை நோக்கி நகர்கின்றன.
- இராணுவ ஆதரவுடைய ராணுவ மருத்துவ அறிவியல் நிறுவனம் மற்றும் ஹாங்காங்கைத் தளமாகக் கொண்ட கன்சினோ பயோ உருவாக்கிய தடுப்பூசிக்கான முதல் சோதனைக்கு பெய்ஜிங் ஒப்புதல் அளித்தது.
- அமெரிக்க மருந்து உருவாக்குநரான மாடர்னா நிறுவனம் ஏற்கனவே அமெரிக்கத் தேசிய சுகாதார நிறுவனங்களுடன் இணைந்து சோதனையைத் தொடங்கி உள்ளது.
- மற்றொரு அமெரிக்க ஆய்வகமான சான் டியாகோவைத் தளமாகக் கொண்ட இன்னோவியோ பார்மாசூட்டிகல்ஸ் என்ற நிறுவனமும் முதல் கட்ட மனிதச் சோதனைகளைத் தொடங்கியுள்ளது.

| Name of Vaccine | Developer Name | Current stage of clinical Trials | Start Date |
|---|---|---|---|
| **AD5-NCOV (Adenovirus Type 5 Vector)** | CanSino Biological & Beijing Institute of Biotechnology | Phase 2 | 10 April |
| **ChAdOx1** | University of Oxford | Phase 1/2 | 23 April |
| **INO-4800 DNA plasmid vaccine** | Inovio Pharmaceuticals | Phase 1 | 3 April |
| **Inactivated** | Beijing Institute of Biological Products | Phase 1 | 10 April |
| **PiCoVacc (Inactivated + alum)** | Sinovac | Phase 1 | 13 April |
| **BNT162 mRNA** | BioNTech/Fosun Pharma/Pfizer | Phase 1/2 | Approved, not started |
| **LNP-encapsulated mRNA-1273** | Moderna/NIAID | Phase 1 | 3 March |

## ஹப்பிள் விண்வெளித் தொலைநோக்கி

- நாசா தனது ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி ஏவப்பட்டதின் 30வது ஆண்டு அனுசரிப்பை ஏப்ரல் 24 அன்று கொண்டாடியது.
- இது உலகில் மிக நீண்ட காலமாகச் செயல்பாட்டில் உள்ள விண்வெளித் தொலைநோக்கிகளில் ஒன்றாகும்.
- ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் கூட்டுடன் இணைந்து பிரபஞ்சத்தின் விரைவான விரிவாக்கத்தைக் கண்டுபிடித்ததில் இத்தொலைநோக்கி ஒரு முக்கிய பங்கைக் கொண்டுள்ளது.
- அதன் 30வது ஆண்டு விழாவில், ஹப்பிள் தொலைநோக்கி ஒரு அண்ட நட்சத்திரத் திட்டைப் படம் பிடித்துள்ளது.



- நட்சத்திரத் திட்டு என்பது நட்சத்திரங்களின் ஒரு கூட்டமாகும்.
- இந்தக் கூட்டத்தில் உள்ள ஒவ்வொரு நட்சத்திரமும் சூரியனை விடவும் அளவில் பத்து மடங்கு பெரிதாகும்.
- இந்நட்சத்திரங்கள் ஒரு விண்மீன் முகிற்படலத்தில் (நெபுலாவில்) உள்ளன.
- விண்மீன் முகிற்படலம் என்பது வாயு மற்றும் தூசியைக் கொண்ட ஒரு பெரிய மேகமாகும்.
- நட்சத்திரத் திட்டுகள் தன்னைச் சுற்றிலும் ஒளிரும் சிவப்பு நிறத்தைக் கொண்டுள்ளது.
- நைட்ரஜன் மற்றும் ஹைட்ரஜன் வாயுவின் ஒளிருதல் காரணமாக சிவப்பு நிறமாக அது ஒளிர்கிறது.
- ஆக்சிஜன் இருப்பதால் நட்சத்திரத் திட்டுகளில் நீல நிறம் தோன்றுகின்றது.

## நானோ – நுண்ணுயிர் கிருமி நாசினி

- பஞ்சாப்பின் மொஹாலியில் உள்ள நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தை (INST - Institute of nano science and technology) சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்ணிற்குப் புலப்படும் ஒளிக்கு உள்ளாகக் கூடிய சூழலின் கீழ் ஆடைகளின் மீதான கிருமி நாசினிகளுக்காக குறைந்த செலவு கொண்ட உலோகமற்ற ஒரு நானோ பொருளைக் கண்டறிந்துள்ளனர்.
- இது வெள்ளி மற்றும் இதர உலோகத்தினாலான பொருட்களுக்கு மாற்றாகவும் விளங்குகின்றது.

## மைக்கோபாக்டீரியம் MW

- அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றமானது கோவிட் – 19 தொற்றிற்கு எதிராக தொழுநோய் எதிர்ப்பு மருந்துச் சோதனைகளைத் தொடங்கியுள்ளது.
- இந்த மருந்துச் சோதனையானது மைக்கோபாக்டீரியம் MW என்பதின் உதவியுடன் மேற்கொள்ளப் படுகின்றது.
- இது வெப்பத்தின் மூலம் அழிக்கப்பட்ட ஒரு பாக்டீரியா ஆகும்.

## திறன்மிகு குப்பைக் கூடை

- மதராஸ் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தினால் (IIT - Indian Institute of Technology) ஆதரிக்கப்படும் "அந்தாரிக்ஸ்" என்ற ஒரு ஸ்டார்ட் அப் நிறுவனமானது "திறன்மிகு குப்பைக் கூடை அமைப்பை" வடிவமைத்துள்ளது.
- இது மருத்துவமனைகள், அதன் வளாகங்கள், பொது இடங்கள் மற்றும் தனிமைப் படுத்தப்பட்ட மண்டலங்களில் உற்பத்தியாகும் கழிவுகளின் மூலம் கோவிட் – 19 பரவலைத் தடுப்பதற்காகப் பணியாற்றுகின்றது.
- "ஏர் பின்" அல்லது காற்றுக் கூடை என்று அழைக்கப்படும் இந்த கூடையானது IIT-மதராஸினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது திறன் பேசிகளின் மூலம் கழிவுகள் சேரும் நிலைகளின் மீது இயந்திரத்தினாலான கண்காணிப்பை அனுமதிக்கின்றது.



## கோவிட் நடவடிக்கை ஒத்துழைப்பு

- இது கேட்டலிஸ்ட் குழுமத்தினால் கருத்தாக்கம் செய்யப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.
- இது தற்பொழுது கோவிட் – 19 வைரஸின் இருப்பைக் கண்டறிவதற்காக வேண்டி கழிவுநீரைப் பரிசோதிக்க இருக்கின்றது.
- இந்த முன்னெடுப்பின் முக்கிய நோக்கம் புதிய நோய்த் தொற்றுகளைத் தடுப்பதற்காகவும் நோய்க்குச் சிகிச்சை அளிப்பதற்காகவும் வேண்டி முன்கூட்டியே கோவிட் – 19 நோய்த் தொற்றைக் கண்டறிவதாகும்.
- கோவிட் – 19 நோயாளிகள் மலம் மற்றும் சிறுநீர் மூலம் இந்த வைரஸை வெளியேற்றுகின்றனர்.

## நானோ பிளிட்ஸ் முப்பரிமாணம் (NanoBlitz-3D)


- துகள் உலோகம் மற்றும் புதிய பொருட்களுக்கான சர்வதேச மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சி மையமானது (ARCI - International Advanced Research Centre for Powder Metallurgy and New Materials) "NanoBlitg 3D" (நானோ பிளிட்ஸ் முப்பரிமாணம்) என்ற ஒரு மேம்படுத்தப்பட்ட கருவியைக் கண்டறிந்துள்ளது.
- இது பல நிலை கொண்ட கலவைகள், கலவைகள் மற்றும் பல நிலை கொண்ட பூச்சுகள் போன்ற பொருட்களின் நானோ இயந்திரவியல் பண்புகள் அளவிடுவதற்காகப் பயன்படுத்தப் படுகின்றது.
- இது தரப்பட்ட பொருளின் கடினத் தன்மை மற்றும் மீள் தொகுதி ஆகியவற்றை அளவிடும் திறன் கொண்டது.

## கோவிட் – 19 கூறுகளைத் துரிதப்படுத்துதல்

- உலக சுகாதார அமைப்பானது உலகளாவிய நிதியம், UNITAID, தொற்றுநோய் தடுப்பில் புதுமைகளுக்கான கூட்டணி போன்ற சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து கோவிட் – 19 கூறுகளைத் துரிதப்படுத்துதல் என்ற ஒன்றைத் தொடங்கி உள்ளது.
- இந்த ஒத்துழைப்பானது கோவிட் – 19னிற்கான சிகிச்சை முறைகளை அணுகுதல், நோய்க் கண்டறிதல், நோய்த் தடுப்பு மருந்தின் வளர்ச்சி, அவற்றின் உற்பத்தி ஆகியவற்றை வேகப்படுத்துவதற்கு உதவுகின்றது.


## விலங்குவழித் தொற்று நோய்கள்

- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் படி (UNEP - United Nations Environment Programme) மனிதர்களில் ஏற்படும் 60% தொற்று நோய்கள் விலங்குவழித் தொற்றின் மூலமும், 75% புதிதாக ஏற்பட்டு வளர்ந்து வரும் தொற்று நோய்கள் விலங்குவழித் தொற்றுத் தன்மையுடையதாகவும் உள்ளன.
- விலங்குவழித் தொற்று நோய்கள் என்பது மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கிடையேப் பரவும் கிருமிகளின் மூலம் ஏற்படும் நோய்களாகும்.
- UNEP அமைப்பால் கண்டறியப்பட்டுச் சமீபத்தில் ஏற்பட்ட மற்றும் மீள் உருவாக்கம் பெற்ற விலங்கு வழி நோய்கள் பின்வருமாறு
    - எபோலா
    - பறவைக் காய்ச்சல்
    - மத்தியக் கிழக்கு சுவாசக் கோளாறு (MERS)
    - பிளவுப் பள்ளத்தாக்குக் காய்ச்சல்
    - கடுமையான சுவாசக் கோளாறுப் பிரச்சினை (சார்ஸ்)
    - மேற்கு நைல் வைரஸ்
    - ஜிகா வைரஸ் நோய்
    - கோவிட் – 19




**PRACRITI**

- ❖ ஐஐடி – தில்லியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இந்தியாவில் கோவிட் – 19 பரவலைக் கணிப்பதற்காக இணைய வழியில் இயங்கும் ஒரு முகப்புப் பலகையை உருவாக்கியுள்ளனர்.
- ❖ இந்த முகப்புப் பலகையானது “PRACRITI – இந்தியாவில் கொரானா நோய்த் தொற்று மற்றும் பரவலின் கணிப்பு & மதிப்பீடு” (Prediction and Assessment of Corona Infections and Transmissions in India) என்று பெயரிடப் பட்டுள்ளது.
- ❖ இந்த முகப்புப் பலகையானது அடிப்படை மறு உருவாக்க எண்ணான “R இன்மை” (R naught) என்பதனை அளிக்கின்றது.
- ❖ R0 என்பது இந்த வைரஸானது ஒரு நபரிடமிருந்து மற்றவர்களுக்குப் பரவியுள்ளவர்களின் எண்ணிக்கையைக் குறிக்கின்றது.
- ❖ இந்த முகப்புப் பலகையானது தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம், மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றிடம் இருக்கும் தரவின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாநிலத்திற்கும் RO மதிப்பினை அளிக்கின்றது.
- ❖ எனவே RO-வின் உதவியுடன், நோய்ப் பரவலின் எதிர்காலக் கணிப்புகளைப் பெற முடியும்.



## ருதார் செயற்கை சுவாசக் கருவி

- மும்பை இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் ஸ்ரீ நகரில் உள்ள தேசியத் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த பொறியியல் மாணவர்களைக் கொண்ட ஒரு குழுவானது செயற்கை சுவாசக் கருவிகளின் தேவை குறித்த பிரச்சினையைத் தீர்க்க முன்வந்துள்ளது.
- இக்குழுவானது உள்ளூரில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்தி ருதார் என்ற குறைந்த செலவு கொண்ட செயற்கை சுவாசக் கருவிகளை உருவாக்கி உள்ளது.
- இந்த செயற்கை சுவாசக் கருவியானது ஜம்மு காஷ்மீர் அறிவியல் & தொழில்நுட்பத்தின் இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் உள்ள வடிவமைப்புப் புத்தாக்க மையத்தின் உதவியைப் பெற்று வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இந்த மையமானது இந்திய அரசின் மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் ஒரு முன்னெடுப்பாகும்.





## இரண்டு கருந்துளைகள் ஒன்றிணைதல்

- சமீபத்தில் முதன்முறையாக லேசர் குறுக்கீட்டுமானி ஈர்ப்பு அலை ஆய்வகத்தைச் (LIGO - Laser Interferometer Gravitational Wave Laboratory) சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கருந்துளைகளின் முதலாவது ஒன்றிணைதலைப் பதிவு செய்துள்ளனர். இந்தக் கருந்துளைகள் சமமற்ற நிறைகளைக் கொண்டுள்ளன.
- இந்த நிகழ்வானது GW190412 என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இந்த நிகழ்வானது பொதுச் சார்பியலின் ஐன்ஸ்டீன் கோட்பாட்டை மீண்டும் ஒரு முறை உறுதி செய்துள்ளது.
- இந்தக் கோட்பாடானது உயர் ஒத்திசைவுகள் இருப்பதை உறுதி செய்துள்ளது. அதாவது ஈர்ப்பு அலைகள் அடிப்படை அதிர்வெண்ணை விட 2 அல்லது 3 மடங்கு அதிகமாகும்.
- இவற்றில் ஒன்றானது சூரியனின் நிறையை விட 30 மடங்கு அதிகமானதாகவும் மற்றொன்று சூரியனின் நிறையை விட 8 மடங்கு அதிகமானதாகவும் உள்ளன.
- சூரிய நிறை என்பது வானியலில் உள்ள இதர மற்ற நிறைகளின் நிறைகளைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு நிறை மதிப்பீடாகும்.
- 1 சூரிய நிறை என்பது 2 x 1030 கிலோ கிராமிற்குச் சமமானதாகும்.
- 5 ஆண்டுகளுக்கு முன்னர் சக்தி வாய்ந்த உணர்த்துக் கருவிகளினால் முதன்முறையாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஈர்ப்பு அலை சமிக்ஞைகளுக்குப் பின்னர் இது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இந்த உண்மையான ஒன்றிணைதல் நிகழ்வானது 2.5 பில்லியன் ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் நிகழ்ந்துள்ளது.

***LIGO பற்றி***

- LIGO என்பது ஒரு மிகப்பெரிய அளவிலான இயற்பியல் சோதனை மற்றும் ஆய்வு மையமாகும்.
- இது காஸ்மிக் அல்லது அண்ட ஈர்ப்பு அலைகளைக் கண்டறிவதற்காகவும் ஈர்ப்பு அலை கூர் நோக்குகளை ஒரு வானியல் கூறாக மேம்படுத்துவதற்கும் வேண்டி பணியாற்றுகின்றது.
- லேசர் குறுக்கீட்டு மானியின் உதவியுடன் ஈர்ப்பு அலைகளைக் கண்டறியும் நோக்கத்துடன் அமெரிக்காவில் 2 மிகப்பெரிய ஆய்வு மையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.
- கருந்துளை என்பது எந்தவொரு துகள் (பொருள்) அல்லது ஒளியானது அதன் இழுவிசையிலிருந்து வெளியேற்றப் படாத, வலிமையான ஈர்ப்பு விசையைக் கொண்ட மிகவும் அடர்த்தியான விண்வெளியில் உள்ள ஒரு பொருளாகும்.
- ஏனெனில் எந்தவொரு ஒளியும் இதிலிருந்து வெளியேற முடியாது. அதனால் இது கருப்பு நிறத்தாலும் கண்ணுக்குத் தெரியாத வடிவிலும் உள்ளது.



## பெலுடா மற்றும் Crispr தொழில்நுட்பம்

- இது அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றத்தின் மரபணுவியல் மற்றும் ஒருங்கிணைந்த உயிரியியல் மையத்தை (CSIR – IGIB/ Institute of Genomics and Integrative Biology) சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப் பட்டுள்ளது.
- இது புதிய கொரானா வைரஸ் தொற்றை 1 மணி நேரத்திற்குள் கண்டறியும் வகையில் விலை குறைந்த மற்றும் காகிதத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சோதனையாகும்.
- இச்சோதனையானது cas9 என்று அழைக்கப்படும் ஒரு பாக்டீரிய நோய் எதிர்ப்பு அமைப்புப் புரதத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
- இது வளர்ந்து வரும் தொழில்நுட்பமான மரபணு தொகுத்தல் கூறான Crispr-Cas9 என்ற முறையைப் பயன்படுத்துகின்றது.
- CRISPR தொழில்நுட்பமானது அடிப்படையில் மரபணுத் தொகுத்தல் தொழில்நுட்பம் ஆகும்.
- இது ஒரு உயிரினத்தின் மரபணுவை மாற்றுதல் அல்லது மரபணுவின் செயல்பாடுகளை மாற்றுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.
- இந்தத் தொழில்நுட்பமானது முழுமையான மரபணுக் குறியின் குறிப்பிட்ட பகுதியை இலக்காகக் கொள்ள அல்லது குறிப்பிட்ட பகுதியில் டிஎன்ஏ-வைத் தொகுப்பதற்காகப் பயன்படுத்தப் படுகின்றது.

## மீன் செவுள்களிலிருந்து வினையூக்கி

- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும் நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையமானது மீள்நிரப்பக் கூடிய வகையில் உலோக மின்கலனுக்கான சுற்றுச்சூழலுக்கு உகந்த வினையூக்கியைத் தயாரித்துள்ளது.
- அதில் பயன்படுத்தப்படும் இந்த வினையூக்கி ஆனது மீன் செவுள்களிலிருந்து தயாரிக்கப் பட்டுள்ளது.
- இது குறைந்த செலவு கொண்டதாகவும் ஆற்றலை மாற்றும் சாதனங்களில் பயன்படுத்தும் தன்மை உடையதாகவும் உள்ளது.
- இது உலோக – காற்று மின்கலன், எரிபொருள் கலன் மற்றும் உயிரி எரிபொருள் போன்ற சேமிப்புத் தொழில்நுட்பங்களில் உள்ள சவால்களை எதிர்கொள்ள இருக்கின்றது.

## ஓசோன் அடுக்கு

- சி 3 எஸ் (கோப்பர் நிக்கஸ் காலநிலை மாற்றச் சேவை) மற்றும் கோப்பர்நிக்கஸ் வளிமண்டல கண்காணிப்புச் சேவை (CAMS - Copernicus Atmosphere Monitoring Service) ஆகியவை ஓசோன் அடுக்கில் உள்ள துளையானது மீண்டும் சீரடைந்துள்ளது என்பதை உறுதி செய்துள்ளது.
- இந்தத் துளை மீண்டும் தானே சீரடைவதற்குக் காரணம் துருவ சுழல் பகுதி ஆகும். (Polar Vertex)
- அறிவியலாளர்களின் கூற்றுப் படி, இந்தத் துளை மூடப்பட்டதற்கான காரணம் கோவிட் – 19 ஊரடங்கின் காரணமான மாசுபாடு குறைந்ததன் காரணத்தினால் அல்ல என்று குறிப்பிடப் பட்டுள்ளது.
- இந்தத் துளையானது ஆர்க்டிக்கின் மேல் பகுதியில் 1 மில்லியன் சதுர கிலோ மீட்டர் வரை பரவியுள்ள ஒரு துளையாகும்.
- ஓசோன் அடுக்கு வரலாற்றில் கண்டறியப் பட்ட மிகப்பெரிய துருவம் இதுவாகும்.
- இது வழக்கமற்ற காலநிலை மாற்றங்களின் காரணமாக உருவாகியுள்ளது.
- Polar Vertex என்பது ஒரு குளிர்காலக் கூறாகும்.
- Polar Vertex ஆனது மிகவும் உயரிய வளிமை மிக்கதாகவும் அதனுள் உள்ள வெப்ப நிலையானது மிகவும் குளிர்ந்ததாகவும் உள்ளது.
- துருவ சுழல் என்பது அடுக்கு மண்டலத்தில் அல்லது ஸ்ட்ரடோ அடுக்கில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வீசும் சூறாவளி வடிவக் காற்றாகும்.
- Polar Vertex ஆனது ட்ரோபோபாஸ் பகுதியிலிருந்து நீண்டு அடுக்கு மண்டலத்தில் ஊடுருவி மத்திய மண்டலத்தில் உள்ளது.
- சுழல் ஆனது வலிமையாக இருந்தால், குளிர் காற்றானது வட அமெரிக்கா அல்லது ஐரோப்பாவிற்குள் எளிதில் நுழையாது.
- ஓசோன் அடுக்கு என்பது புவியின் மேற்பரப்பிலிருந்து 10 கி.மீ. முதல் 50 கி.மீ. வரையுள்ள அடுக்கு மண்டலம் என்று அழைக்கப்படும் வளிமண்டல மேல் அடுக்கில் காணப் படுகின்றது.

## திரவ ஒப்புருவாக்கக் குறியீடு


- இந்தியப் புவிக் காந்தவியல் நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பூமியின் காந்தகப் புலத்தில் உள்ள மின்புலக் கட்டமைப்பு குறித்து ஆய்வு செய்வதற்காக திரவ

ஒப்புருவாக்கக் குறியீட்டை உருவாக்கியுள்ளனர்.

- இந்த ஆய்வானது எதிர்கால விண்வெளித் திட்டங்களைத் திட்டமிடுவதற்கு உதவ இருக்கின்றது.
- சூரியன் பிளாஸ்மாவின் முக்கிய ஆதாரமாக விளங்குகின்றது. இது பூமியைச் சுற்றிலும் பிளாஸ்மாவைக் குவித்து வைக்கிறது.
- இது தனது சூரிய ஒளிக் காற்றின் மூலம் பூமியை நோக்கி பிளாஸ்மாவை நகர்த்துகின்றது.
- சூரிய ஒளியின் காந்தப் புலத்தினால் கொண்டு வரப்பட்ட கிரகங்களுக்கிடையிலான காந்தப் புலத்தை இது உருவாக்குகின்றது.
- பூமியின் காந்தப் புலம் மற்றும் கிரகங்களுக்கிடையிலான காந்தப் புலத்தின் இடையீடானது பூமியின் காந்தப் புலத்தை உருவாக்குகின்றது.
- பூமியின் காந்தப் புலமானது விண்ணில் சுழன்றுக் கொண்டிருக்கும் ஏராளமான செயற்கைக் கோள்களைக் கொண்டுள்ளது.

*காந்தப்புலம் பற்றி*

- இது ஒரு கிரகத்தின் காந்தப் புலப் பகுதியினால் மேலாதிக்கம் செய்யப் பட்ட பகுதியினைச் சுற்றியுள்ள பகுதியாகும்.
- பாறைநிலம் கொண்டுள்ள அனைத்து கிரகங்களைக் காட்டிலும் புவியானது வலுவான காந்தப் புலத்தைக் கொண்டுள்ளது.
- இப்பகுதி புவியின் உள்ளகப் பகுதியின் வெளிச் சுவட்டின் சமதளப் பகுதிக்கும் வெகுமளவில் அடியிலிருந்து உருவாகிய உருகிய இரும்பு மற்றும் மின்னூட்டம் செய்யப்பட்ட வெப்பச் சலன இயக்கம் ஆகியவற்றினால் உருவாக்கப்பட்டு இருக்கின்றது.




## BUBBLE – வங்காள விரிகுடா எல்லையடுக்கு சோதனை

- இது மத்தியப் புவி அறிவியல் துறை அமைச்சகம் மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தின் இயற்கை சுற்றுச்சுழல் ஆராய்ச்சி மன்றம் ஆகியவற்றினால் நிதியளிக்கப்படும் ஒரு திட்டமாகும்.
- பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனம் மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள கிழக்கு அங்கிலியா ஆகியவற்றைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் குழுவானது பருவகாலம், வெப்ப மண்டலச் சூறாவளிகள் மற்றும் இதர காலநிலை தொடர்பான

முன் அறிவிப்பின் துல்லியமான கணிப்பிற்கான ஒரு செயல்திட்டத்தை உருவாக்கியுள்ளது.

- ❖ இந்தக் குழுவானது தெற்கு வங்காள விரிகுடாவில் R.V. சிந்து சாதனா கப்பலின் மீது பயணம் மேற்கொண்டு கடல்சார் பண்புகள் குறித்து ஆய்வு செய்து வருகின்றது.

## தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரியைக் கண்டறிதல் (Bug Snifer)

- ❖ புனேவில் உள்ள அகார்கர் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் விரைவாக பாக்டீரயாவைக் கண்டறிவதற்காக திறன்மிக்க மற்றும் விலை குறைந்த உணர்வியான “Bug Snifer” என்ற கருவியை வடிவமைத்துள்ளது.
- ❖ இது 30 நிமிடத்திற்குள் 1 மில்லி லிட்டரில் 10 செல்களைக் கண்டறியும் வரம்புடன் நுண்ணுயிரிகளைக் கண்டறியும் திறன் கொண்டது.
- ❖ நோய் ஏற்படுத்தும் பொதுவான பாக்டீரியாக்கள் எஸ்செரிச்சியா கோலி மற்றும் சாலமோனெல்லா தைபீமூரியம் ஆகியவையாகும்.
- ❖ Bug Snifer என்பது பாக்டீரியாவின் இருப்பைக் கண்டறிவதற்காக செயற்கை பெப்டைடுகள், காந்தத் தன்மை கொண்ட நானோ துகள்கள், குவாண்டம் புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தும் ஒரு உயிரி உணர்வியாகும்.
- ❖ ARI (Agharkar Research Institute) என்பது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும் ஒரு தனிச் சுதந்திர அமைப்பாகும்.



## ரெம்டெசிவிர் மருந்து

- ❖ கோவிட் – 19 நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக “ரெம்டெசிவிர்” என்ற வைரஸ் எதிர்ப்பு மருந்தை அவசர காலத்தில் பயன்படுத்த அமெரிக்க உணவு மற்றும் மருந்து ஒழுங்குமுறை அமைப்பு அனுமதி வழங்கியுள்ளது.
- ❖ ரெம்டெசிவிர் மருந்தானது எபோலா வைரஸ் மற்றும் மார்பர்க் வைரஸ் ஆகியவற்றிற்குச் சிகிச்சை அளிப்பதற்காக உருவாக்கப்பட்டது.

## eCovSens

- ❖ ஹைதராபாத்தில் உள்ள தேசிய விலங்கு உயிரித் தொழில்நுட்ப மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் (NIAB - National Institute of Animal Biotechnology) “ecorsens” என்ற ஒரு உயிரி உணர்வியை உருவாக்கியுள்ளனர்.

- இது ஒரு ஊடுருவாத உயிரி உணர்வி சோதனைச் சாதனமாகும்.
- இந்த உணர்வியானது எச்சில் மாதிரிகளில் கோவிட் – 19 வைரசைக் கண்டறிவதற்காகப் பயன்படுத்தப் படுகின்றது.
- NIAB ஆனது 2010 ஆம் ஆண்டில் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள உயிரித் தொழில்நுட்பத் துறையால் ஏற்படுத்தப் பட்டது.

NIAB
National Institute of Animal Biotechnology

## புறஊதாக் கதிர் வெடிப்பமைவு

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது ரசாயனமற்ற மற்றும் விரைவான நோய்த் தொற்று நீக்கத்திற்காக புற ஊதாக் கதிர் நோய்த் தொற்று நீக்கக் கோபுரத்தை உருவாக்கியுள்ளது.
- இது கணினிகள், மின்னணு சாதனங்கள் மற்றும் இதர மின்னணுப் பொருட்கள் போன்ற உயர் தொழில்நுட்ப பொருள்களின் மேற்பரப்பில் இருக்கும் நோய்த் தொற்றை நீக்க உதவுகின்றது.
- புற ஊதாக் கதிர் நோய்த் தொற்று நீக்கக் கோபுரமானது கைபேசி அல்லது மடிக்கணினியின் மூலம் தொலை தூரத்திலிருந்தே இயக்கப் படுகின்றது.



## ஆரோக்கிய சேது மித்திர்

- டெக் மகேந்திரா, டாடா குழுமம் மற்றும் சுவஸ்த் ஆகியவை இணைந்து ஆராக்கிய சேது மித்திர் என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளன.
- இந்த வசதியானது ஆரோக்கிய சேது செயலியில் உள்ளது.
- இது 3 தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகளினால் வழங்கப்பட்ட தரவுகளுடன் கோவிட் – 19 நோயாளிகளுக்கு இலவச ஆன்லைன் (நிகழ்நேர) அறிவுரைகளை வழங்க இருக்கின்றது.
- இது ஒரு தனித் தளமாகச் செயல்பட இருக்கின்றது.
- இது ஆரோக்கிய சேது செயலியிலிருந்துத் தரவுகளை அணுகாது.
- இது நிதி ஆயோக், பிரதமரின் முதன்மை அறிவியல் ஆலோசகர் ஆகியோரின் அறிவுரையின்படி தொடங்கப்பட்டுள்ளது.




## புதிய கோவிட் அறிகுறிகள்

- பிரிட்டன் தோல் நோய் பத்திரிக்கையின் ஆராய்ச்சியாளர்கள் கோவிட் – 19 நோய் பாதிப்புகளின் மீதான 5 தோல் அமைப்புகளை இதுவரை கண்டறிந்துள்ளனர்.
- இந்த தோல் நிலைகள் கால் விரல்களில் ஊதா, நீலம் மற்றும் சிவப்பு நிறமிழப்பிற்குக் காரணமாக இருக்கின்றன.
- சர்வதேச தோல் நோய் பத்திரிக்கையின் ஆய்வானது இதனை சில்பிலெய்ன் போன்ற புண்கள் கொண்ட நிலை என்று குறிப்பிடுகின்றது.
- இவை பின்வருமாறு:
    - சிவப்பு நிறத்தில் தடித்தல் (சூடோ – சில்பெல்ய்ன் புண்கள்) / கோவிட் விரல்
    - மூட்டுகள் மற்றும் உடலின் பின்பகுதிகளில் சிறு கொப்புளங்கள்
    - இளஞ்சிவப்பு நிறத் தோலில் வெள்ளை நிறம்
    - வெண் கொப்புளம்
    - தோலில் நிறமாற்றத் திட்டு

## ஓரின நகல் சமநிலைப்படுத்தும் எதிர்ப் பொருள்

- இஸ்ரேல் உயிரியல் ஆராய்ச்சி மையமானது கோவிட் – 19க்கான எதிர்ப்புப் பொருளைப் பிரித்தெடுத்துள்ளது.
- இந்த மையத்தினால் மேம்படுத்தப்பட்ட ஓரின நகல் சமநிலைப்படுத்தும் எதிர்ப் பொருளானது நோய் பாதிக்கப்பட்ட நபரில் கோவிட் – 19 வைரஸைக் கட்டுப்படுத்தும் திறன் கொண்டது.
- குணமடைந்த ஒற்றைச் செல்லிலிருந்துப் பிரித்தெடுக்கப்பட்ட இந்த எதிர்ப்புப் பொருள் ஓரின நகல் எதிர்ப்பொருள் என்று அழைக்கப் படுகின்றது.
- ஓரின நகல் எதிர்ப் பொருளிலிருந்து கோவிட் – 19 எதிர்ப் பொருள் பிரித்தெடுக்கப் படுவது இதுவே முதல்முறையாகும்.
- இந்த எதிர்ப் பொருளானது மாற்று மருந்தாக இருக்கும் திறன் கொண்டது.
- தற்பொழுது வரை, பிரித்தெடுக்கப்பட்ட நோய் எதிர்ப்புப் பொருள்கள் பலநகல் எதிர்ப்புப் பொருளாகும்.
- பலநகல் எதிர்ப்புப் பொருள் என்பது குணமடைந்த பல்வேறு உயிரணுக்களிலிருந்து நோய் எதிர்ப்புப் பொருளைப் பிரித்தெடுப்பதாகும்.
- நோய் எதிர்ப்புப் பொருள் என்பது மனித உடலில் நுழையும் அயல் சக்திகளுக்கு எதிர்வினையாற்றும் வகையில் மனித உடலில் இயற்கையாக உற்பத்தியாகும் புரதங்களாகும்.

## ஹைபோக்சியா

- சமீபத்தில் மருத்துவப் பயிற்சியாளர்கள் அமைதி அல்லது மகிழ்ச்சிகர ஹைபோக்சியா என்ற ஒரு நிலை நோயாளிகளுக்கு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டு இருக்கின்றனர்.
- இதில், கோவிட் – 19 நோயாளிகள் மிகக் கடுமையான குறைந்த அளவிலான ரத்த ஆக்ஸிஜன் அளவைக் கொண்டுள்ளனர். இவர்களுக்கு சுவாசக் கோளாறுப் பிரச்சினை போன்ற அறிகுறிகள் எதுவும்' தென்படவில்லை.
- ஹைப்போக்சியா என்பது இரத்தம் மற்றும் உடல் திசுக்களுக்கு தேவைப்படும் போதிய அளவு ஆக்ஸிஜன் கிடைக்கப்படாத பெரு பற்றாக்குறையுள்ள நிலை ஆகும்.
- துடிப்பு ஆக்ஸிமீட்டர் என்று அழைக்கப்படும் ஒரு மருத்துவச் சாதனமானது அமைதியான ஹைப்போக்சியாவின் முன்கூட்டிய கணிப்பிற்குப் பயன்படுத்தப் படுகின்றது.

## டாக்கிஸ் – இத்தாலிய நிறுவனம்

- டாக்கிஸ் நிறுவனத்தைச் சேர்ந்த இத்தாலிய ஆராய்ச்சியாளர்கள் உலகின் முதலாவது கொரானா வைரஸ் தடுப்பு மருந்தை உருவாக்கியுள்ளதாகக் கூறி உள்ளனர்.
- இந்த திறன்மிகு கொரானா வைரஸ் தடுப்பு மருந்தானது முதல்முறையாக மனித உயிரணுக்களில் இந்த வைரஸைக் கட்டுப்படுத்துகின்றது.
- அனைத்துத் திறன்மிகு கொரானா வைரஸ் தடுப்பு மருந்துகளும் "ஸ்பைக்" (முள்புரதம்) என்ற டிஎன்ஏ புரதத்தின் ஒரு மரபணுப் பொருளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப் பட்டுள்ளது.

- "ஸ்பைக்" என்பது மனித உயிரணுக்களுக்குள் நுழைவதற்காக கொரானா வைரசால் பயன்படுத்தப்படும் ஒரு மூலக்கூறு முனை ஆகும்.




## கொரானா வைரஸ் ஆய்வுக் கூடச் சோதனை முறை

- இந்தியாவில் ஹைதராபாத்தில் உள்ள செல் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையமானது (CCMB - Centre for Cellular and Molecular Biology) நாட்டில் கோவிட் – 19 வைரஸின் மாதிரிகளைக் கலந்து ஆராய்ச்சி செய்யும் ஒரே மையமாகும்.
- மாதிரிகள் கலப்புச் சேகரிப்பு முறை என்பது வைரஸ் மாதிரிகளைச் சேகரிக்கும் ஒரு செயல்முறையாகும்.
- ஹைதராபாத்தில் உள்ள CCMB ஆனது பெங்களூருவில் உள்ள ஐஸ்டெம் ஆராய்ச்சி நிறுவனத்துடன் (தனியார் நிறுவனம்) இணைந்துள்ளது.
- இது மனித உயிரணுக்களில் புதிய கொரானா வைரசை வளர்க்கும் ஒரு முயற்சியாகும். இது வைரசிற்காக சாத்தியமுள்ள தடுப்பு மருந்துகள் மற்றும் நோய் தீர்க்கும் மருந்துகளின் ஆய்வகச் சோதனைக்கு அனுமதிக்கின்றது.
- இந்தக் குழுவானது ஐஸ்டெமின் மனித நுரையீரல் தோல் மேற்புறச் செல் கலாச்சார முறையைப் பயன்படுத்துகின்றது.
- இது கோவிட் – 19 நோய்த் தொற்றின் நோயியல் மற்றும் மூலக்கூறுப் பண்புகளை அறிந்து கொள்ள உதவுகின்றது.
- ஆய்வகத்தில் (கண்ணாடியில்) மேற்கொள்ளப்படும் இந்தச் சோதனை என்பது பிரித்தெடுக்கப் பட்ட திசுக்கள், உயிரணுக்கள் மற்றும் உறுப்புகள் ஆகியவற்றைக் கொண்டு வாழும் உயிரினத்திற்கு வெளியே மேற்கொள்ளப்படும் ஒரு சோதனையாகும்.

## CARD திட்டம்

- நிதி ஆயோக் மற்றும் உயிரியல் தொழில்நுட்பத்துறை ஆகிய இரண்டும் இணைந்து கட்டுப்படியாகக் கூடிய மற்றும் விரைவான நோயறிதலுக்கான ஒரு கூட்டமைப்பை (CARD - Consortium for Affordable & Rapid Diagnostics) அறிமுகப் படுத்தியுள்ளன.
- கொரோனா வைரஸ் சோதனைக் கருவிகளை உருவாக்கும் இந்தியாவின் திறனை விரிவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- CARD திட்டத்தின் முதல் குறிக்கோளானது, கோவிட் -19 தொற்றுக்கு வேண்டி குறைந்த பட்சம் 10 மில்லியன் விரைவான நோய் எதிர்ப்பொருள் சோதனைகளை ஜூலை மாதத்திற்குள் மேற்கொள்வதாகும்.

## ஆயுஷ் மருத்துவப் பரிசோதனைகள்

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகமானது ஆயுஷ் மருந்துகளின் மருத்துவப் பரிசோதனைகளைத் தொடங்கி உள்ளது.
- ஆயுஷ் மருந்துகளான அஸ்வகந்தா, குடுச்சி, யஷ்திமது மற்றும் ஆயுஷ் 64 போன்ற மருத்துவப் பரிசோதனைகள் தன்னார்வ சுகாதார ஊழியர்கள் மீது நடத்தப்பட உள்ளன.
- இந்த முயற்சியை ஆயுஷ் அமைச்சகமானது, அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றம் (CSIR - Council of Scientific and Industrial Research) மற்றும் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்துடன் இணைந்து நடத்துகிறது.
- ஏற்கனவே, ஆயுர்வேத மருந்தான ஜிங்கிவிர் மீது சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## முதல் துணியாலான முகமூடி

- டெல்லி இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தின் புத்தாக்க நிறுவனம் ஒன்று நுண்ணுயிர்க்கு எதிரான முகமூடியைக் கண்டறிந்துள்ளது. இதனை 50 முறை கழுவப் பட்டு மீண்டும் பயன்படுத்தப் படலாம்.
- ஐ.ஐ.டி டெல்லியில் உள்ள நானோசேஃப் சொல்யூஷன்ஸ் என்ற நிறுவனம் கோவிட் -19 தொற்றுக்கு எதிராகப் போராட பாதுகாப்பு முகமூடிகளை உருவாக்கி உள்ளது.
- NSAFE முகமூடியானது 99.2% அளவிற்கு பாக்டீரியா வடிகட்டலை வழங்குகிறது.
- நுண்ணுயிர்க்கு எதிராக மற்றும் துவைக்கக் கூடிய அளவில் முதல் துணி அடிப்படையிலான முகமூடி இதுவாகும்.

## ஒளிக் கண்டுபிடிப்பான்

- மேம்பட்ட அறிவியல் ஆராய்ச்சிக்கான ஜவஹர்லால் நேரு மையத்தின் (JNCASR - Jawaharlal Nehru Centre for Advanced Scientific Research) விஞ்ஞானிகள், பொருளாதார மற்றும் ஆற்றல் திறன் கொண்ட மெல்லிய அளவிலான ஒரு ஒளிக் கண்டுபிடிப்பானை உருவாக்கியுள்ளனர்.
- இந்த மெல்லிய ஒளிக் கண்டுபிடிப்பானது பாதுகாப்புப் பயன்பாடுகளுக்காக தங்கம் - சிலிக்கான் இடைமுகத்தைப் பயன்படுத்துகிறது.
- பலவீனமான மற்றும் சிதறிய ஒளியைக் கண்டறிய இந்தத் தொழில்நுட்பம் உதவக் கூடும்.
- எந்தவொரு ஒளி மின்னணுவியல் சுற்றுப் பாதையிலும் ஒளிக் கண்டுபிடிப்பான்கள் மிக முக்கியமான அங்கம் வகிக்கின்றன.


## பழுப்பு நிற குள்ளக் கோள்கள்

- சர்வதேச வானியல் அறிஞர்களைக் கொண்ட ஒரு குழுவானது லுஹ்மேன் 16A என்ற பழுப்பு நிற குள்ளக் கோளின் மேற்பரப்பின் மீது சில மேகப் பட்டைகளைக் கண்டறிந்துள்ளது.
- லுஹ்மேன் 16A என்பது மிகப் பரவலாக பழுப்பு நிற குள்ளக் கோள் என்று அறியப் படுகின்றது.

- இது வேலா நட்சத்திரக் கூட்டத்தில் உள்ள பைனரியான பழுப்பு நிறக் குள்ளக் கோள்களின் ஜோடிகளில் ஒன்றாக உள்ளது.
- இவை சனி மற்றும் வியாழன் ஆகிய கோள்களில் காணப்படுவதைப் போன்றே உள்ளன.
- லுஹ்மேன் ஆனது பைனரி அமைப்பின் ஒரு பகுதியாக உள்ளது. மேலும் இது இரண்டாவது பழுப்பு நிற குள்ளக் கோளையும் (லுஹ்மேன் 16B) கொண்டுள்ளது.
- ஆல்பா சென்டாவுரி மற்றும் பர்னார்டு போன்ற நட்சத்திரங்களுக்குப் பிறகு, இது நமது சூரியனுக்கு மிக அருகில் 6.5 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள மூன்றாவது குள்ளக் கோளாக விளங்குகின்றது..
- முதன்முறையாக ஆராய்ச்சியாளர்களால் போலாரிமெட்ரி என்ற செயல்முறை பயன்படுத்தப்பட்டது.
- ஆராய்ச்சியாளர்கள் சிலியில் உள்ள ஒரு மிகப்பெரிய தொலைநோக்கியில் இந்த உபகரணத்தைப் பயன்படுத்தினர்.
- இது மேகக் கூட்டங்கள் அல்லது சூரிய மண்டலத்திற்கு வெளியே உள்ள வளிமண்டல மேகங்களின் பண்புகளைத் தீர்மானிக்க இருக்கின்றது.

***இது பற்றி***

- பழுப்பு நிறக் குள்ளக் கோள்கள் என்பவை நட்சத்திரங்களை விட இலகாகவும் ஆனால் கோள்களை விட மிகக் கனமாகவும் உள்ள பொருள்களாகும்.
- பழுப்பு நிறக் குள்ளக் கோள்களின் நிறையானது மிகப்பெரிய கோள்களுக்கிடையே இடைநிலைத் தன்மை கொண்டதாகவும் மிகச்சிறிய முக்கிய தொடர் நட்சத்திரங்களைக் கொண்டதாகவும் உள்ளதன் காரணமாக இவை இழந்த நட்சத்திரங்கள் என்று அழைக்கப் படுகின்றன.
- இவை பொதுவாக வியாழனின் நிறையைப் போன்று 13 முதல் 80 மடங்கு நிறையைக் கொண்டுள்ளன.
- இவற்றின் நிறை மிகவும் சிறியதாக உள்ளதால் இது ஆற்றலை உற்பத்தி செய்வதற்காக அவற்றின் ஹைட்ரஜனின் இணைவைத் தக்க வைத்துக் கொள்ளாது.



## மனித ஒரின நகல் நோய் எதிர்ப்பொருள் – இந்தியா

- அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றமானது ஒரின நகல் நோய் எதிர்ப்பொருளை (hmAbs - human monoclonal antibodies) மேம்படுத்துவதற்கான திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.
- இது கோவிட் – 19 நோய்த் தொற்றிற்கான ஒரு சிகிச்சை முறையாக செயல்பட இருக்கின்றது.
- இந்தத் திட்டமானது கோவிட் – 19 நோயிலிருந்து குணமாகிய நபரிடமிருந்து hmAbs ஆனது பெறப்பட இருக்கின்றது.
- ஒரின நகல் நோய் எதிர்ப்பொருள் ஆனது வைரசைச் சமநிலைப்படுத்த இருக்கின்றது. இது வைரசைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நோய்த் தொற்றைத் தடை செய்யும் திறன் கொண்டது. இது கோவிட் – 19 நோய்த்தொற்றை திறனற்றதாக மாற்றுகின்றது.
- ஒரின நகல் நோய் எதிர்ப்பொருளைப் பிரித்தெடுத்த முதலாவது நாடு இஸ்ரேல் ஆகும்.
- இந்த மன்றமானது தனது தலைமைத்துவ திட்டமான "புதிய புத்தாயிரம் இந்தியத் தொழில்நுட்ப தலைமைத்துவ முன்னெடுப்புத் திட்டம்" (NMITLI - New Millennium Indian Technology Leadership Initiative Programme) என்பதின் கீழ் இதனை மேற்கொண்டு வருகின்றது.
- இது நாட்டில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் மிகப்பெரிய பொது-தனியார் பங்களிப்பாகும் (PPP - Public-private partnership).
- இந்தத் திட்டத்தில் பொதுச் சுகாதார அவசர நிலைக்காக இந்தூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம், புனேவில் உள்ள தேசிய நுண்ணுயிரி அறிவியல் மையம், குருகிராமில் உள்ள பிரெட்டோமிக்ஸ் மற்றும் பாரத்-பயோடெக் தொழில்நுட்பத் தொழிற்சாலை ஆகியவை கலந்து கொள்ள இருக்கின்றது.

## இந்தியாவில் பாவிபிரவிர் மருந்துச் சோதனை

- அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றமானது (CSIR - Council of Scientific and Industrial Research) பாவிபிரவிர் மற்றும் பைட்டோ பார்மாசூட்டிக்கல் போன்ற மருந்துகள் மீதான தனது மருத்துவச் சோதனையைத் தொடங்கியுள்ளது.
- பாவிபிரவிர் என்பது இன்புளுயன்சாவிற்குச் சிகிச்சையளிப்பதற்காக சீனா, ஜப்பான் மற்றும் இதர நாடுகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஒரு மருந்தாகும்.
- CSIR ஆனது உள்ளூர் மூலிகைகளை உயிரியல் மருந்தாகப் பயன்படுத்தவும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றது.
- இந்தியாவின் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டாளர் ஆணையம் இந்தச் சோதனைக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

## PiCoVacc – சீனாவின் தடுப்பு மருந்து

- சீனா "PiCoVacc" என்ற ஒரு கொரானா வைரஸ் தடுப்பு மருந்தை உருவாக்கியுள்ளது.
- இது பெய்ஜிங்கில் உள்ள சினோவேக் உயிரித் தொழில்நுட்ப நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டுள்ளது.
- இது குரங்குகளில் மிகவும் செயலாக்கம் உடையதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.
- கொரானா வைரஸ் தடுப்பு மருந்திற்கான உலகின் முதல் விலங்குச் சோதனையாக இது கருதப் படுகின்றது.

## இந்தியக் கொரானா வைரஸ் தடுப்பு மருந்து

- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது இந்தியாவின் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதலாவது கொரானா வைரஸ் தடுப்பு மருந்தை மேம்படுத்துவதற்காக பாரத் பயோடெக் நிறுவனத்துடன் இணைந்துள்ளது.
- பாரத் பயோடெக் என்பது ஹைதராபாத்தில் உள்ள ஒரு முன்னணி தடுப்பு மருந்து உற்பத்தி நிறுவனமாகும்.
- இது புனேவில் உள்ள ICMRன் தேசிய நுண்ணுயிரியல் நிறுவனத்தில் பிரித்தெடுக்கப்பட்ட வைரஸ் திரளைப் பயன்படுத்தி மேம்படுத்தப்பட இருக்கின்றது.




## கோவிட் கவச் எலிசா சோதனை

- புனேவில் உள்ள தேசிய நுண்ணுயிரியியல் மையமானது (NIV - National Institute of Virology) கோவிட் – 19 நோய்த் தொற்றிற்காக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நோய் எதிர்ப்புப் பொருள் கண்டறிதல் சாதனத்தை உருவாக்கியுள்ளது.
- இந்தச் சாதனமானது இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR - Indian Council of Medical Research) மற்றும் NIV-யினால் கூட்டாக இணைந்து மேம்படுத்தப்பட்டது.
- இது மாதிரியில் உள்ள ஐஜிஜி நோய் எதிர்ப்புப் பொருளின் இருப்புத் தன்மையை சோதனை செய்ய இருக்கின்றது.
- இந்தச் சோதனையானது ஒரு குறிப்பிட்ட ஆர்என்ஏ-வின் எண்ணிக்கையைச் சோதனை செய்ய இருக்கின்றது.
- ஆர்டி-பிசிஆர் (RT-PCR) சோதனையுடன் ஒப்பிடும் போது இதற்குக் குறைந்த அளவிலான உயிரிப் பாதுகாப்பு முறைகள் மட்டுமே தேவைப்படுகின்றன.
- இது ஒரு திறன்மிக்க, விலை குறைந்த மற்றும் விரைவுச் சோதனைக் கருவி ஆகும்.
- இது 90 மாதிரிகளை ஒன்றாகச் சேர்த்து ஒரே நேரத்தில் 2.5 மணி நேரத்தில் அவற்றைச் சோதனை செய்யும் திறன் கொண்டது.
- குஜராத்தில் உள்ள சைடஸ் கேடிலா என்ற நிறுவனம் இந்த உபகரணங்களை மிகப்பெரிய அளவில் உற்பத்தி செய்ய இருக்கின்றது.
- NIV ஆனது இந்த நிறுவனத்திற்கு தொழில்நுட்பப் பரிமாற்றத்தை செய்ய இருக்கின்றது.
- கோவிட் – 19 நோய்த் தொற்றிற்கு எதிரான இந்தியாவின் போராட்டச் செயல்பாடுகளின் மிகப்பெரிய முன்னேற்றம் இதுவாகும். இந்தியா மிகப்

பெரும்பாலான அளவில் தனது நோய்க் கண்டறிதல் உபகரணங்களை இறக்குமதி செய்கின்றது.

- எலிசா என்பது நொதியுடன் தொடர்புடைய நோய் எதிர்ப்பு சோர்பென்ட் வகைச் சோதனையாகும் (ELISA - Enzyme-linked Immunosorbent Assay).
- எலிசா என்பது மிகப் பரவலான நோய்த் தொற்றிற்கான, அதிலும் குறிப்பாக எச்ஐவி போன்ற தொற்று நோய்க்கான நோய் எதிர்ப்புப் பொருளைக் கண்டறிவதற்குப் பயன்படுத்தப் படுகின்றது.


ICMR and Zydus Cadila develops IgG ELISA test for antibody detection

## DRUVS சிற்றறை (கேபினெட்)

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் முதன்மை ஆய்வகமான இமாராத் ஆராய்ச்சி மையமானது பாதுகாப்பு ஆராய்ச்சி புற ஊதா சுத்திகரிப்பான் (DRUVS - Defence Research Ultraviolet Sanitizer) என்று அழைக்கப்படும் தொடர்பற்ற தானியங்கி முறையிலான புற ஊதா சுத்திகரிப்பான் சிற்றறை ஒன்றை உருவாக்கி உள்ளது.
- இது நேரடியான தொடர்பில்லாத செயல்பாடுகளைக் கொண்டிருக்கும்.
- இது கைபேசிகள், ஐ-பேடுகள், மடிக்கணினிகள், நாணயத்தாள்கள், காசோலைத் தாள்கள், இரசீதுகள், வங்கிக் கணக்கு புத்தகங்கள், தாள்கள், உறைகள் ஆகியவற்றைச் சுத்திகரிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- மேலும் RCI (Research Centre Imarat) நிறுவனமானது "NOTESCLEAN" என்று அழைக்கப் படும் தானியங்கி முறையிலான புற ஊதா நாணயச் சுத்திகரிப்புச் சாதனத்தையும் வடிவமைத்துள்ளது.



## சூரிய ஒளி சக்திக்கான சந்தையில் இந்தியா முன்னிலை 2020 - அறிக்கை

- மெர்காம் இந்திய ஆராய்ச்சியகம் சமீபத்தில் இந்த தரவு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்தியா 2019 ஆம் ஆண்டில் 7.3 ஜிகாவாட் கொள்திறன் அளவிற்கு சூரிய ஒளி மின்சக்தியை நிறுவி, அமெரிக்கா மற்றும் சீனாவுக்குப் பிறகு உலகின் மூன்றாவது பெரிய சூரிய ஒளிசக்திக்கான சந்தையாக தனது இடத்தைப் பிடித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டு டிசம்பரின் இறுதியில் சுமார் 35.7 ஜிகாவாட் அளவிற்கு ஒட்டு மொத்த சூரிய ஒளி சக்தி நிறுவல்களை நாடு கொண்டிருந்தது.
- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் நிலவரப்படி அதானி நிறுவனமானது ஒட்டு மொத்த சூரிய ஒளி சக்தி நிறுவல்களின் அடிப்படையில் மிகப்பெரிய திட்ட உருவாக்குநராக இருந்தது.
- ஒட்டு மொத்த சூரிய ஒளி சக்தியின் கூரை நிறுவல்களிலும் சரி 2019 ஆம் ஆண்டிற்கான கூரை நிறுவல்களிலும் சரி டாடா பவர் சோலார் நிறுவனமானது முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் நாட்டின் முன்னணி சூரிய அலை மின்மாற்றி வழங்குநராக ஹுவாவே (Huawei) நிறுவனம் அமைந்தது.

## ஸ்வஸ்த் வாயு

- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக் குழுவின் கீழ் இயங்கும் பெங்களூருவை மையமாகக் கொண்ட தேசிய விண்வெளி ஆய்வகங்கள் நிறுவனம் ஸ்வஸ்த் வாயு என்ற பெயரில் ஒரு பைபாப் (BiPAP) செயற்கை சுவாசப் பெருக்கி கருவி ஒன்றை உருவாக்கியுள்ளது.
- கோவிட் -19 நோயின் தீவிர தாக்குதலிற்கு உட்படாத மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை தேவைப்படாத நோயாளிகளுக்குப் பயன்படும் இது உடலின் வெளிப்புறத்தில் பொருத்தப்படும் ஒரு சுவாச ஆதரவு சாதனமாகும்.
- பைபாப் என்பது (BiPAP - Bilevel Positive Airway Pressure) ஒரு வகை நேர்மறை அழுத்த சுவாசக் கருவியாகும்.
- இது 36 நாட்கள் என்ற குறுகிய காலத்திற்குள் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இதில் ஆக்ஸிஜன் செறிவூட்டியை வெளிப்புறமாக இணைப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளன.
- இந்த செயற்கை சுவாசக் கருவி சோதனை மற்றும் அளவுத் திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தினால் (National Accreditation Board for Testing and Calibration Laboratories) அங்கீகரிக்கப் பட்டுள்ளது.



## COBAS 6800

- மத்திய சுகாதாரத் துறை அமைச்சரான டாக்டர் ஹர்ஷ வர்தன் COBAS 6800 ஆர்டி-பிசிஆர் உபகரணத்தை நாட்டிற்கு அர்ப்பணித்தார்.
- இந்த சாதனமானது முழுவதும் தானியங்கு தன்மையுடையதாகவும் உயர் செயல்திறன் கொண்ட ஆர்டி-பிசிஆர் சோதனைகளை மேற்கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.
- இந்தச் சாதனமானது நாட்டின் சோதனையிடும் திறனை அதிகரிக்க உதவ இருக்கின்றது.
- இது 1200 மாதிரிகளின் சோதனை முடிவுகளை 24 மணி நேரத்தில் அறிவிக்கும் திறன் கொண்டது.
- இது தில்லியில் உள்ள தேசிய நோய்க் கட்டுப்பாட்டு மையத்தில் பொருத்தப் பட்டுள்ளது.
- இந்தச் சாதனமானது ஹெபடைடிடிஸ், சலமைடியா, எச்ஐவி, பாபிலோமா, எம்டிபி, சிஎம்வி, நைசீரியா போன்ற நுண்ணுயிரிகளைக் கண்டறியும் திறன் கொண்டது.
- இந்தச் சாதனமானது ரோச்சி நோய்க் கண்டறிதல் நிறுவனத்தால் உருவாக்கப் பட்டு உள்ளது.




## Z – சோதனை (ஸ்கேன்) முறை

- சமீபத்தில் தன்பாத்தில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் (இந்திய சுரங்கப் பள்ளி) மற்றும் சிஎஸ்ஐஆர் – இந்திய இரசாயன உயிரியல் மையம் (கொல்கத்தா) ஆகியவற்றைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் Z – சோதனை (ஸ்கேன்) முறையை மேம்படுத்தியுள்ளனர்.
- இது மனிதர்களில் பார்கின்சன் நோயின் உருவாக்கம் மற்றும் அவற்றின் செயல்பாடுகளைக் கண்காணிக்க உதவுகின்றது.
- இது Asyn-யின் திரட்டல் மற்றும் நியூரான் செல்களின் இறப்பு ஆகியவற்றில் ஆரம்ப கால நிலை மற்றும் இறுதிக்கட்ட நிலை ஆகிய இரண்டையும் கண்காணிக்க உதவும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- "ஆல்பா - சைநியூக்ளின்" (Asyn) என்று அழைக்கப்படும் ஒரு புரதத்தின் திறன் ஆனது பார்கின்சன் நோயின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றுகின்றது.
- பார்கின்சன் நோய் என்பது மத்திய நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் ஒரு நாள்பட்ட, சிதைவு கொண்ட நரம்புப் பிரச்சினையாகும்.


## உட்செலுத்தக் கூடிய பட்டு-பட்டிழைப் புரதத்தை அடிப்படையாகக் கொண்ட ஹைட்ரோ கூழ்மம் (ஹைட்ரோ ஜெல்)

- மேம்படுத்தப்பட்ட அறிவியல் ஆராய்ச்சிக்கான ஜவஹர்லால் நேரு மையமானது (JNCASR - Jawaharlal Nehru Centre for Advanced Scientific Research) நீரிழிவு நோயாளிகளுக்கு இன்சுலினை உட்செலுத்தக் கூடிய பட்டு-பட்டிழை புரதத்தை அடிப்படையாகக் கொண்ட ஹைட்ரோ ஜெல்லை (silk-fibroin based hydrogel) உருவாக்கியுள்ளது.
- இது உயிரி-ஒத்த சேர்க்கைகளை (biocompatible additives) பயன்படுத்தி உருவாக்கப் பட்டுள்ளது.
- இது நீண்ட காலத்திற்கு இரத்தத்தில் இன்சுலின் அளவை அதிகரிக்கின்றது.
- பட்டிழைப் புரதம் என்பது நீரில் கரையாத ஒரு புரதமாகும்.
- பட்டிழைப் புரதமானது பட்டுப் புழுவினால் உருவாக்கப் படுகின்றது.
- பட்டு தனது மூல நிலையில் செரிசின் மற்றும் பிப்ரியான் ஆகிய 2 புரதங்களைக் கொண்டுள்ளது.




## இலகுரக கார்பன் (கரிமப்பொருள்) நுரை

- அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஒருவர் இலகுரக கார்பன் நுரையை உருவாக்கியுள்ளார். இது ஈய மின்கலன்களுக்கு மாற்றாகச் செயல்பட இருக்கின்றது.
- இந்த கார்பன் நுரையானது உருவாக்குவதற்கு எளிதானதாகவும் நச்சு அற்றதாகவும் விலை குறைந்ததாகவும் உள்ளது.




- இது வெப்ப உமிழ்வைத் தயாரித்தல், விண்வெளியில் மின்காந்த இடையீட்டுப் பாதுகாப்பு அரண் அமைத்தல், ஈய-அமில மின்கலன்களுக்கு மின்முனையாக இருத்தல், ஹைட்ரஜன் சேமிப்பகம் மற்றும் நீர் சுத்திகரிப்பு அமைப்புகளில் பயன்படுகின்றது.
- இந்த கார்பன் நுரையானது நுண்ணியத் துளைகள் கொண்டதாக உள்ளது.


- மின்கலன்களில் உள்ள இந்தத் துளைகள் அதன் செயல்படும் திறனை அதிகரிக்க உதவுகின்றன.

## சூப்பர் பூமி (மிகப்பெரிய பூமி)

- நியூசிலாந்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் "சூப்பர் பூமியைக்" கண்டுபிடித்து உள்ளனர்.
- இது மனிதர்கள் உயிர் வாழ்வதற்கு ஏற்ற சாதகமான சூழ்நிலைகளைக் கொண்டு இருக்கின்றது.
- பூமியைப் போன்று ஒரே அளவுடையதாகவும் ஒரே சுற்றுவட்டப் பாதை தொலைவைக் கொண்டதாகவும் கண்டுபிடிக்கப் பட்டுள்ள சில கோள்களில் இதுவும் ஒன்றாகும்.
- இது பூமியை விடப் மிகப் பெரியதாக இருப்பதனால் "சூப்பர் பூமி" (மிகப்பெரிய பூமி) என்று இதற்கு பெயரிடப்பட்டுள்ளது.

## சூரிய ஒளி மந்த நிலை

- சூரியன் ஆனது "சூரிய ஒளி மந்த நிலை" என்ற ஆழ்ந்த காலத்திற்குள் செல்ல இருக்கின்றது.
- சூரியன் "குறைந்த பட்ச சூரிய ஒளி" என்ற நிலைக்குள் சென்றுள்ளது.
- இது சூரியன் தனது நிலையைக் மாற்றிக் கொண்டிருக்கின்றது என்பதைச் சுருக்கமாகக் குறிக்கின்றது.
- சூரியன் இந்த வருடத்தில் சூரியப் புள்ளிகளை வெளியிட்டு 100 நாட்களுக்கு மேல் ஆகின்றன.
- சூரியனின் சுழற்சியானது 11 ஆண்டுகளுக்கு இருக்கும்.
- இது "சூரிய ஒளி சுழற்சி" என்றும் "சூரிய ஒளி காந்தச் செயல்பாட்டுச் சுழற்சி" என்றும் அழைக்கப்படுகின்றது.
- சூரிய ஒளி சுழற்சியின் கீழ், அதிகபட்ச சூரிய ஒளி மற்றும் குறைந்தபட்ச சூரிய ஒளி ஆனது முறையே அதிகபட்சம் மற்றும் குறைந்தபட்ச சூரியப் புள்ளிகளின் காலத்தைக் குறிக்கின்றது.
- சூரியப் புள்ளிகள் ஒவ்வொரு 11 ஆண்டுகளுக்கும் ஒரு முறை மங்கி விடுகின்றன.
- சூரியப் புள்ளிகள் காந்தத் தன்மை உடையதாக உள்ளன.
- சூரியப் புள்ளிகள் 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கண்டறிப்பட்டன.
- இது கலீலியோ கலிலி என்பவரால் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது.



## 12,000 எச்பி மின்சார இரயில் என்ஜின்

- இந்திய இரயில்வேயானது முதலாவது 12,000 எச்பி மின்சார இரயில் என்ஜினைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளது.
- இந்த இரயில் என்ஜின் ஆனது இந்தியாவில் தயாரிப்போம் என்ற முன்னெடுப்பின் கீழ் பிரெஞ்சு நாட்டின் அல்ஸ்டோம் என்ற நிறுவனத்தினால் கட்டமைக்கப் பட்டு உள்ளது.
- இந்த இரயில் என்ஜின் ஆனது பீகாரில் உள்ள மாதேபுரா மின்சார இரயில் என்ஜின் தளத்தில் கட்டமைக்கப் பட்டுள்ளது.
- இதன் மூலம், உயர் குதிரைத் திறன் கொண்ட இன்ஜினை உருவாக்கிய உலகின் 6வது நாடு இந்தியா ஆகும்.




## அகாப்பே சித்திர மாக்னா

- இது கோவிட் – 19 நோய்த் தொற்று கண்டறிதலின்போது பயன்படுத்தப்படும் காந்த நானோ துகளை அடிப்படையாகக் கொண்ட ஆர்என்ஏ பிரிப்பு உபகரணமாகும்.
- இது கொச்சினில் உள்ள அகாப்பே நோய் கண்டறிதல் நிறுவனத்துடன் இணைந்து ஸ்ரீ சித்திரைத் திருநாள் மருத்துவ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இந்த உபகரணமானது சார்ஸ் – COV2 நோய்த் தொற்றினைக் கண்டறிவதற்காக ஆர்டி-எல்ஏஎம்பி, ஆர்டி-க்யூபிசிஆர், ஆர்டி-பிசிஆர், இதர வெப்பமானிகள், பிசிஆர் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட நெறிமுறைகளுக்கு ஆர்என்ஏ பிரிப்பிற்காக வேண்டி பயன்படுத்த முடியும்.

## சிண்டெமிக்

- கோவிட் -19 தொற்று நோயை முடிவிற்குக் கொண்டு வருவதற்கான சாத்தியக் கூறுகள் குறைவு (எப்பொழுதும் உள்ள நோயாக மாறக் கூடும் - என்டெமிக்) என்று உலக சுகாதார அமைப்பானது அறிவித்துள்ளது.
- நோய்களின் அதிகரித்த சுமையை உலகம் எதிர்கொள்ளும் வாய்ப்பு உள்ளதால் சிண்டெமிக் (கூட்டுநோய்) என்ற நிலைமை ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது..
- சிண்டெமிக் (கூட்டுநோய்) என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொற்றுநோய்கள் ஒரு மக்கள்தொகையின் மீது அந்த நோய்களின் அதிகரித்தச் சுமையை உருவாக்க ஒருங்கிணைந்த முறையில் இணைந்து கொள்ளும் ஒரு சூழ்நிலை ஆகும்.




## சாதனமற்ற முறையில் சுயப் பரிசோதனை

- சமீபத்தில், S.N. போஸ் தேசிய அடிப்படை அறிவியல் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் எலக்ட்ரான் இணைகள் பிணைந்த நிலையில் உள்ளனவா என்பதைக் கண்டறிவதற்காக ஒரு புதிய நெறிமுறையை உருவாக்கி உள்ளனர்.
- எலக்ட்ரான் இணைகள் பிணைந்த நிலையில் உள்ளனவா என்பதைக் கண்டறிவதற்கான இந்த நெறிமுறையானது சாதனமற்ற முறையில் மேற்கொள்ளப்படும் சுயப் பரிசோதனை முறை என்றழைக்கப் படுகின்றது.
- குவாண்டம் பிணைந்த நிலை என்பது ஒரு இணை அல்லது துகள் குழுக்கள் உருவாக்கப் படும் போது ஏற்படும் ஒரு இயற்பியல் சார்ந்த முறையாகும். மேலும் இவை ஒரு இணை அல்லது குழுவில் உள்ள ஒவ்வொரு துகளின் குவாண்டம் நிலையானது பிற துகள்களின் நிலையைச் சுதந்திரமாக விவரிக்க முடியாத முறையின் படி உள்ள வகையில் எதிர்வினையாற்றும்.

## ANTIA


- அண்டார்டிக் பிராந்தியத்தில் பனியில் இருந்து அதிக ஆற்றல் துகள்கள் வெடிப்பதை நாசா ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த துகள்கள் நமது பிரபஞ்சத்திற்கு இணையான மற்றோரு பிரபஞ்சத்திற்கு ஆதாரம் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.
- ANTIA (Antarctic Impulsive Transient Antenna) – அண்டார்டிக் உந்துவிசையாலான நிலையற்ற ஆண்டெனா அண்டார்டிக் பகுதியின் பனிக்கட்டிகளால் வெளியேற்றப் படும் ரேடியோ கதிர் துடிப்புகளைக் கண்டறியும்.



- அஸ்காரியன் விளைவு காரணமாக பனியில் உள்ள நியூட்ரினோக்கள் ரேடியோ கதிர் துடிப்புகளை உருவாக்குகின்றன.
- அஸ்காரியன் விளைவு என்பது ஒரு துகள் ஒரு அடர்த்தியான மின்சார ஊடகத்தில் ஒளியை விட வேகமாக பயணிக்கும் ஒரு நிகழ்வு ஆகும்.
- இது நாசாவின் நியூட்ரினோக்களுக்கான முதல் ஆய்வகமாகும்.
- நியூட்ரினோக்கள் மட்டுமே தன் வீரியம் குறையாமல் பூமியை வந்து சேரும் ஒரே துகளாகும்.
- நியுட்ரினோக்கள் நமக்கு எந்த வித ஆபத்தையும் தராத உயர்சக்தி துகள்களாகும். இது யாரும் அறியா வண்ணம் பெருமளவில் திடப் பொருட்களின் வழியே ஊடுருவிச் செல்கின்றது.
- நியுட்ரினோக்கள் தொடர்ச்சியாக புவியைத் தாக்கிக் கொண்டு தான் இருக்கின்றன. மேலும் 100 ட்ரில்லியன் நியுட்ரினோக்கள் ஒவ்வொரு நொடியும் நமது உடலின் வழியே ஊடுருவிச் செல்கின்றது.
- அரிதாகவே அவை ஏதேனும் ஒரு நிறையின் மீது எதிர்ச் செயலாற்றுகின்றது.
- ஆனால் ஒருவேளை அவை ஏதேனும் ஒரு அணுவைத் துளைத்து அதனுள் உட்சென்றால், நாம் உணரும் வகையில் இருக்கும் இரண்டாம்நிலை மின்னேற்றத் துகள்களின் பொழிவைத் தூவுகின்றது.
- அது நம்மை அத்துகள்கள் இப்பிரபஞ்சத்தில் எங்கிருந்து வருகின்றன என்பதை ஆராயச் செய்திடும்.

## WFIRST

- அமெரிக்க விண்வெளி நிறுவனமானது தனது முதலாவது தலைமை வானியல் அறிஞரான நான்சி கிரேஸ் ரோமன் என்பவரின் நினைவாக தனது பரந்த வெளி அகச்சிவப்பு ஆய்வுத் தொலைநோக்கிக் கருவிக்கு (WFIRST - Wide-Field Infrared Survey Telescope) மறுபெயரிட்டுள்ளது.



- இந்த அடுத்த தலைமுறை விண்வெளி தொலைநோக்கியானது நான்சி கிரேஸ் ரோமன் விண்வெளித் தொலைநோக்கி என்றறியப்பட இருக்கின்றது. இது 2015 ஆம் ஆண்டில் செலுத்தப்பட இருக்கின்றது.
- நான்சி கிரேஸ் ரோமன் ஹப்பிள் விண்வெளித் தொலைநோக்கியின் தாய் என்றும் அறியப்படுகின்றார்.

## மேக வரைபடம்

❖ கனடா, அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தைச் சேர்ந்த வானியல் துறை வல்லுநர்கள் ஒரு மேக வரைபடத்தை உருவாக்கியுள்ளனர்.

❖ இது வியாழன் கோளைப் போன்று இருக்கும் வெப்பமான வெளிக்கோள்களில் எந்த வகையான மேகம் இருக்கும் என்பதைக் கணிக்க உதவ இருக்கின்றது.

❖ இந்த மேகமானது பனிப்புகை மீத்தேன் கொண்ட பனியார்ந்த நிலையிலிருந்து நீலக் கடல் நிலை கொண்டதாக இருக்கும்.

## ஆர்டி-விளக்கை அடிப்படையாகக் கொண்ட சோதனை

❖ அறிவியல் மற்றும் தொழில்துறை மையத்தின் கீழ் இயங்கும் ஒருங்கிணைந்த மருத்துவத்திற்கான இந்திய நிறுவனம் (CSIR-IIIM/Council of Scientific & Industrial Research - Indian Institute of Integrative Medicine) மற்றும் ரிலையன்ஸ் தொழிற்துறை நிறுவனம் ஆகியவை இணைந்து கொரானா வைரஸ் நோய்த் தொற்றிற்காக இந்தச் சோதனையை உருவாக்கியுள்ளன.

❖ ஆர்டி-விளக்குச் சோதனை என்பது தலைகீழ் டிரான்ஸ்கிரிப்டேஸ்-வளையத்தை மையமாகக் கொண்டுள்ள மத்திய சமவெப்பப் பெருக்கம் என்பதைக் குறிக்கின்றது.

❖ உட்கரு அமிலத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தச் சோதனையானது நோயாளிகளின் நாசி மற்றும் தொண்டைச் சளி மாதிரியிலிருந்து மேற்கொள்ளப் படுகின்றது.

❖ தற்பொழுது கோவிட் – 19 சோதனையானது நிகழ்நேர – பிசிஆர் மூலம் மேற்கொள்ளப் படுகின்றது. இதன் உபகரணங்கள் அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப் படுகின்றன.

❖ மேலும் இது அதிக செலவு மிக்கதாகவும், அதிக மனித சக்தி தேவைப்படுவதாகவும் உள்ளது.

❖ மறுபுறம், ஆர்டி-விளக்குச் சோதனையானது குறைந்தபட்ச நிபுணத்துவத்துடன் அடிப்படை ஆய்வக அறிவுடன் ஒற்றைக் குழாயைக் கொண்டு மேற்கொள்ளப் படுகின்றது.





## விரைவான நிலையற்ற நீல ஒளியியல் (FBOT)

❖ ரேடியோ அலைநீளங்களில் வேகமாகவும் பிரகாசமாகவும் கனமாகவும் இருக்கும் ஒரு புதிய வானியல் நிலையற்ற நிலையானது கண்டறியப் பட்டுள்ளது.

❖ அமெரிக்காவின் வடமேற்குப் பல்கலைக்கழகத்தின் தலைமையிலான குழுவானது இதனை எக்ஸ் கதிர் மற்றும் ரேடியோ அலைநீளங்களில் சேகரிக்கப்பட்ட மூன்றாவது வரைவான நிலையற்ற நீல ஒளியியல் (FBOT - Fast blue optical transient) என்று

தீர்மானித்துள்ளது.

- பூமியிலிருந்து 500 பில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் ஒரு சிறிய விண்மீன் தொகுதியில் வானியல் அறிஞர்களால் 2016 ஆம் ஆண்டில் கண்ணிற்குப் புலப்பட்ட ஒரு பிரகாசமான வெடிப்பினைக் கண்டறிந்த நிகழ்விற்குப் பிறகு இது நிகழ்ந்துள்ளது.
- மிகவும் புகழ்பெற்ற FBOT என்பது A72018COW (The COW) – நியூட்ரான் நட்சத்திரம் அல்லது கருந்துளையின் உருவாக்கம் எனத் தோன்றிய ஒரு அரிய நிகழ்வு ஆகும்.




## SERS உணர்தல்

- நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையமானது மாலிப்டினம் டைசல்பைடின் கலப்புத் தன்மை கொண்ட இராமன் நிறப்பிரிகை (MoS2, ஒரு கனிமப் பொருள்) என்ற தங்க நானோ துகள்களுடன் மேற்பரப்பு – மேம்படுத்தப்பட்ட அலங்கரிக்கப்பட்ட ஒரு நானோ அமைப்பை உருவாக்கியுள்ளது (SERS - Surface-Enhanced Raman Spectroscopy).
- SERS என்பது பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஒரு உணர்திறன் நுட்பமாகும். இதில் மூலக்கூறுகள் வெள்ளி (அ) தங்க நானோ துகள்கள் போன்ற நெளி உலோக மேற்பரப்புகளில் உறிஞ்சப்படும் போது அவை நெகிழ்வற்ற ஒளிச்சிதறலால் பெரிதும் மேம்படுகின்றன.
- SERS கண்டறிதலானது அதன் மிக அதிக உணர்திறன் மற்றும் கைரேகை அங்கீகாரத் திறன் ஆகியவற்றின் காரணமாக பல்வேறுப் பகுப்பாய்வின் கண்டறிதலுக்காக வளர்ந்து வரும் மிக வலிமை வாய்ந்த ஒரு கூறாக விளங்குகின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## JNTBGRI

- ஜவஹர்லால் நேரு வெப்பமண்டலத் தாவரவியல் பூங்கா மற்றும் ஆராய்ச்சி நிறுவனமானது (JNTBGRI - Jawaharlal Nehru Tropical Botanic Garden and Research Institute) புவி உயிரி மரபணு வரிசைப்படுத்துதல் மீதான இந்திய முன்முயற்சி (IIEBS - Indian Initiative on Earth Bio Genome Sequencing) குறித்த உயிரியல் அறிவு மற்றும் வள மையங்களில் ஒன்றாகத் தேர்வு செய்யப் பட்டுள்ளது.
- நாட்டில் அறியப்பட்ட அனைத்து வகையான தாவரங்கள் மற்றும் விலங்குகளின் மரபணுத் தகவல்களை குறி விளக்கம் (decode) செய்வதற்கான ஒரு நாடு தழுவிய திட்டமாக அமைய இது திட்டமிட்டுக் கொண்டு இருக்கின்றது.

- புது தில்லியில் உள்ள தேசியத் தாவர மரபணு ஆராய்ச்சி நிறுவனமானது, மொத்தம் 24 நிறுவனங்களை உள்ளடக்கிய நாடு தழுவிய இத்திட்டத்தை ஒருங்கிணைக்கும் ஒரு மையமாகும்.
- இந்தத் திட்டம் புவி உயிரி மரபணுத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். மேலும் அது ஒரு சர்வதேச முயற்சியாகும். அது பூமியின் யூகாரியோடிக் பல்லுயிர் பெருக்கத்தின் அனைத்து மரபணுக் குறியீடுகளையும் 10 ஆண்டுகளில் வரிசைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மரபணு வரிசைப்படுத்துதல் என்பது ஒரு உயிரினத்தின் மரபணுவின் முழுமையான டி.என்.ஏ வரிசையை ஒரே நேரத்தில் தீர்மானிக்கும் மேம்போக்கானச் செயல்முறை ஆகும்.

## சூறாவளிப் பெயர்களின் புதிய பட்டியல்

- இந்திய வானிலை அமைப்பானது வங்காள விரிகுடா மற்றும் அரபிக் கடல் உள்ளிட்ட வட இந்தியக் கடல் பகுதிகளில் ஏற்படும் வெப்பமண்டலச் சூறாவளிகளின் பெயர்களைக் கொண்ட ஒரு புதிய பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இந்தப் புதிய பட்டியலானது இந்தியாவிலிருந்து 13 பெயர்கள் உள்பட 169 பெயர்களைக் கொண்டுள்ளது.
- உலக வானிலைச் சங்கத்தின் 13 உறுப்பினர் நாடுகளால் (13 நாடுகளால் 13 பெயர்கள்) இது பரிந்துரை செய்யப் பட்டது.
- இந்தியா, இலங்கை, மாலத் தீவுகள், மியான்மர், ஓமன், தாய்லாந்து, கத்தார், ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா, ஏமன், பாகிஸ்தான், வங்கதேசம் மற்றும் ஈரான் ஆகியவை இந்த 13 நாடுகளாகும்.
- காடி, தேஜ், ஆஷ், நீர், வியோம், ஜார், ஜலாதி, முரசு, புரோபஹோ, பிரபஞ்சன், கும்பி, அம்புட் மற்றும் லேகா ஆகிய பெயர்கள் இந்தியாவினால் வழங்கப் பட்டு உள்ளன.
- அதில் நீர் மற்றும் முரசு என்பவை தமிழ்ப் பெயர்களாகும்
- புது தில்லியில் உள்ள சிறப்புப் பிராந்திய வானிலை மையமானது வங்காள விரிகுடா மற்றும அரபிக் கடலில் ஏற்படும் சூறாவளிகளுக்கு பெயரிடும் பணியினை மேற்கொள்கின்றது.
- 2004 ஆம் ஆண்டுப் பட்டியலில் உள்ள ஒரே ஒரு பெயர் மட்டும் இன்னும் வைக்கப் படவில்லை – அது தாய்லாந்தால் அளிக்கப்பட்ட அம்பன் எனும் பெயர். மற்ற 63 பெயர்கள் அனைத்தும் வைக்கப்பட்டு விட்டன.
- 2004 ஆம் ஆண்டில் 8 நாடுகள் ஒவ்வொன்றும் 8 பெயர்கள் என்ற அளவில் மொத்தம் 64 பெயர்களை அளித்தன.
- 2004 ஆம் ஆண்டின் பட்டியலில் உள்ள 8 நாடுகள் இந்தியா, வங்கதேசம், மாலத்தீவுகள், மியான்மர், பாகிஸ்தான், ஓமன், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகியனவாகும்.
- தற்போது இதில் சேர்க்கப் பட்டுள்ள நாடுகள் கத்தார், ஐக்கிய அரபு அமீரகம், சவூதி அரேபியா, ஏமன் மற்றும் ஈரான் ஆகியனவாகும்.

### *சூறாவளியின் இதரப் பெயர்கள்*

- சீனக் கடல் மற்றும் பசுபிக் கடலில் - டைபூன்கள்.
- கரீபியன் கடல் மற்றும் அட்லாண்டிக் கடலில் உள்ள மேற்கு இந்தியத் தீவுகளில் - ஹரிக்கேன்கள்.
- மேற்கு ஆப்பிரிக்கா மற்றும் தெற்கு அமெரிக்காவின் கினியா பகுதியில் - டோர்நடோஸ்.

- வடமேற்கு ஆஸ்திரேலியாவில் - வில்லி-வில்லிஸ்.
- இந்தியப் பெருங்கடலில் - வெப்பமண்டலச் சூறாவளிகள்.

Annexure-I

New list of tropical cyclone names adopted by WMO/ESCAP Panel Member Countries in April 2020 for naming of tropical cyclones over North Indian Ocean including Bay of Bengal and Arabian Sea
(To be used after the name 'Amphan' from the previous list is utilised)

| WMO/ESCAP Panel Member countries | Column 1 | | Column 2 | | Column 3 | | Column 4 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Name | Pron' | Name | Pron' | Name | Pron' | Name | Pron' |
| Bangladesh | Nisarga | Nisarga | Biparjoy | Biporjoy | Arnab | Ornab | Upakul | Upokul |
| India | Gati | Gati | Tej | Tej | Murasu | Murasu | Aag | Aag |
| Iran | Nivar | Nivar | Hamoon | Hamoon | Akvan | Akvan | Sepand | Sepand |
| Maldives | Burevi | Burevi | Midhili | Midhili | Kaani | Kaani | Odi | Odi |
| Myanmar | Tauktae | Tau'Te | Michaung | Migjaum | Ngamann | Ngaman | Kyarthit | Kyathi |
| Oman | Yaas | Yass | Remal | Re-Mal | Sail | Sail | Naseem | Naseem |
| Pakistan | Gulab | Gul-Aab | Asna | As-Na | Sahab | Sa-Hab | Afshan | Af-Shan |
| Qatar | Shaheen | Shaheen | Dana | Dana | Lulu | Lulu | Mouj | Mouj |
| Saudi Arabia | Jawad | Jowad | Fengal | Feinjal | Ghazeer | Razeer | Asif | Aasif |
| Sri Lanka | Asani | Asani | Shakhti | Shakhti | Gigum | Gigum | Gagana | Gagana |
| Thailand | Sitrang | Si-Trang | Montha | Mon-Tha | Thianyot | Thian-Yot | Bulan | Bu-Lan |
| United Arab Emirates | Mandous | Man-Dous | Senyar | Sen-Yaar | Afoor | Aa-Foor | Nahhaam | Nah-Haam |
| Yemen | Mocha | Mokha | Ditwah | Ditwah | Diksam | Diksam | Sira | Sira |

## பீட்டர்ஸ்பெர்க் காலநிலை உரையாடல்

- 11வது மற்றும் முதலாவது காணொலி (மெய்நிகர்) மூலமான பீட்டர்ஸ்பெர்க் காலநிலை உரையாடல் ஆனது நடத்தப்பட்டது.
- இது 2010 ஆம் ஆண்டு முதல் ஜெர்மனியினால் நடத்தப்பட்டுக் கொண்டு இருக்கின்றது.
- இந்த உரையாடல் ஆனது ஜெர்மனி மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தினால் இணைந்து தலைமை தாங்கப் பட்டது.
- இது ஆரம்பத்தில் 2009 ஆம் ஆண்டின் கோபன்ஹேகன் காலநிலை மாற்ற மாநாட்டின் தோல்விக்குப் பின்னர் ஜெர்மனியின் நாட்டுப் பிரதமரான ஏஞ்சலா மெர்க்கல் அவர்களால் மேற்கொள்ளப் பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.
- இதில் இந்தியாவுடன் சேர்ந்து 30 நாடுகள் கலந்து கொண்டன.



## இந்தியாவில் காற்று மாசுபாடு

- இந்தியாவில் காற்று மாசுபாடானது கடந்த 20 ஆண்டுகளை விடக் குறைவாக பதிவாகியுள்ளதாக நாசா அறிவித்துள்ளது.
- நாசாவினால் வெளியிடப்பட்ட தரவின் படி, 2020 ஆம் ஆண்டின் கண்ணுக்குப் புலப்படும் தூசுப் படலத்தின் ஆழமானது (AOD - Aerosol Optical Depth) 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான AOD-ன் சராசரியுடன் ஒப்பிடப் படும் பொழுது மிகக் குறைந்ததாக உள்ளது.
- AOD என்பது வளிமண்டலத்தில் உள்ள காற்றுத் துகள்களினால் ஈர்க்கப்படும் ஒளியாகும்.
- காற்றுப் படலம் என்பது மனிதர்களின் நடவடிக்கைகளின் காரணமாக வெளியிடப் படும் வளிமண்டலத்தில் உள்ள துகள்களாகும்.
- AOD என்பது வளிமண்டலத்தில் இருக்கும் காற்றுப் படலத்தின் அளவுகளை அளவிடும் ஒரு அளவீட்டு நடவடிக்கையாகும்.
- இது வளிமண்டலத்திற்குள் ஒளி செல்லும் போது, ஒளி சென்றடைந்த இடத்தை அளவிடுவதாகும்.
- AOD அதிகரித்தால், ஒளியின் அழிவு விகிதமானது அதிகரிக்கும்.

## CRISIL ஆராய்ச்சி அறிக்கை – புதுப்பிக்கத்தக்க ஆற்றல்

- CRISIL அமைப்பானது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் குறித்த தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- மொத்தம் நிறுவப்பட்ட ஆற்றல் திறனில் கர்நாடகா (15232 மெகா வாட்) முதல் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- 7278 மெகா வாட் என்ற அளவில் சூரிய ஒளிக்கான மிக அதிக நிறுவப்பட்ட ஆற்றல் திறனை கர்நாடக மாநிலம் கொண்டுள்ளது.
- கர்நாடகாவின் காற்றாலை ஆற்றல் திறன் 4791 மெகா வாட் ஆகும்.
- 2020 ஆம் நிதியாண்டில் குஜராத்தின் மொத்தப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன் 10,000 மெகா வாட்டைக் கடந்துள்ளது.
- கர்நாடகா மற்றும் தமிழ்நாடு (14347 மெகா வாட்) ஆகிய மாநிலங்களுக்குப் பிறகு நிறுவப்பட்ட ஆற்றல் திறனில் 10 ஜிகா வாட் ஆற்றலைக் கடந்த மூன்றாவது மாநிலம் குஜராத் (10586 மெகா வாட்) ஆகும்.
- 2020 ஆம் நிதியாண்டில் ஒட்டு மொத்த சூரிய ஒளி ஆற்றல் திறன் என்ற அளவில், முதலில் உள்ள மூன்று மாநிலங்கள் குஜராத், தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா ஆகியவையாகும்.

***இந்தியாவில் உள்ள முக்கியமான சூரிய ஒளி ஆற்றல் ஆலைகள் பின்வருமாறு***

- பட்லா சூரிய ஒளிப் பூங்கா – ஜோத்பூர் மாவட்டம், இராஜஸ்தான் – உலகின் மிகப்பெரிய சூரிய ஒளிப் பூங்கா (2245 மெகா வாட்)
- பவகடா சூரிய ஒளிப் பூங்கா – தும்கூர் மாவட்டம், கர்நாடகா – உலகின் 2வது மிகப்பெரிய சூரிய ஒளி மின்னழுத்த ஆற்றல் நிலையம் (2050 மெகா வாட்)
- கமுதி சூரிய ஒளிப் பூங்கா – ராமநாதபுரம் மாவட்டம், தமிழ்நாடு – உலகின் 12வது மிகப்பெரிய சூரிய ஒளிப் பூங்கா (648 மெகா வாட்)

- ஒரே இடத்தில் அமைந்த உலகின் மிகப்பெரிய சூரிய ஒளிப் பூங்காக்களில் இதுவும் ஒன்றாகும்.
- இது அதானி குழுமத்தால் ஏற்படுத்தப்பட்டதாகும்.

## உலக ஆற்றல் ஆய்வு – 2020

- சர்வதேச ஆற்றல் ஆணையமானது (IEA - International Energy Agency) இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- உலகளாவிய ஆற்றல் தேவையானது 2020 ஆம் ஆண்டில் 6% என்ற அளவில் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- கடந்த 70 ஆண்டில் சதவிகித அளவில் மிகப்பெரிய சரிவு இதுவாகும். அறுதி அளவில் இதுவரை இல்லாத அளவில் ஏற்பட்ட மிகப்பெரிய வீழ்ச்சி இதுவாகும்.
- இந்தியாவில், 2019 ஆம் ஆண்டில் குறைவான தேவை வளர்ச்சியைத் தொடர்ந்து தற்பொழுது முதன்முறையாக ஆற்றல் தேவையானது குறையத் தொடங்கும்.
- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பின் (OECD - The Organisation for Economic Co-operation and Development) கட்டமைப்பின்படி 1974 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்ட IEA ஆனது தனிச் சுதந்திரம் கொண்ட அரசாங்கங்களுக்கு இடையேயான ஒரு அமைப்பாகும்.
- இதன் தலைமையகம் பிரான்சின் பாரிஸில் அமைந்துள்ளது.
- இதற்கு உறுப்பினராக வேண்டி விண்ணப்பிக்கும் நாடு OECD அமைப்பில் கட்டாயம் உறுப்பினராக இருக்க வேண்டும்.
- ஆனால் OECD அமைப்பின் அனைத்து உறுப்பு நாடுகளும் IEA அமைப்பில் உறுப்பினராக இல்லை.

***IEAவின் அறிக்கைகள்***

- உலக ஆற்றல் & கார்பன் டை ஆக்ஸைடின் நிலை குறித்த அறிக்கை
- உலக ஆற்றல் கண்ணோட்டம்
- உலக ஆற்றல் புள்ளி விவரம்
- உலக ஆற்றல் சமநிலை
- ஆற்றல் தொழில்நுட்ப வாய்ப்புகள்

## விசாகப்பட்டினம் வாயுக் கசிவு

- ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் உள்ள தென்கொரிய நிறுவனமான எல்ஜி பாலிமர்ஸ் ஆலையிலிருந்து ஸ்டைரின் என்ற வாயு கசிந்து விபத்து ஏற்பட்டது.
- ஸ்டைரின் என்பது நரம்பு – நச்சாக அடையாளம் காணப்பட்ட ஒரு ரசாயனப் பொருளாகும்.
- இது மேலும் எத்தினைல்பென்சின், வினைல்பென்சின் மற்றும் பினைல்எத்தீன் என்றும் அழைக்கப்படுகின்றது.
- இதன் வேதியியல் வாய்ப்பாடு $C_6H_5CH=CH_2$ என்பதாகும்.
- ஸ்டைரின் வாயு என்பது நிறமற்ற, மணமற்ற ஒரு வாயு ஆகும்.
- ஸ்டைரின் வாயு என்பது அதிக அளவில் எரியக்கூடிய மூலப் பொருளான ஸ்டைரினின் வழிப் பொருளாகும்.

- ஸ்டைரின் ஆனது மின் விசிறி இறக்கைகள், கோப்பைகள் மற்றும் வெட்டுக் கருவிகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் பொருள்களைத் தயாரிப்பதற்கான ஒரு மூலப் பொருளாக பயன்படுத்தப்படுகின்றது.
- இது பாலிஸ்டைரின் நெகிழிகள், கண்ணாடியிழை, இரப்பர் மற்றும் மரப்பாய் ஆகியவற்றை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் ஒரு எரியக்கூடிய திரவம் ஆகும்.
- இது வாகன வெளிசெல் நீர்மம், புகையிலைப் புகை, மற்றும் பழங்கள் & காய்கறிகள் போன்ற இயற்கை உணவுகள் ஆகியவற்றிலும் காணப் படுகின்றது.




## வங்காளப் புலி

- 2019/20 ஆம் ஆண்டுக்கான கணக்கெடுப்பின் படி சுந்தர வனக்காடுகளில் ராயல் வங்காளப் புலிகளின் எண்ணிக்கை 96 ஆக உயர்ந்துள்ளதாக மேற்கு வங்க வனத்துறை அறிவித்துள்ளது.
- சர்வதேச இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் கீழ், ராயல் வங்காளப் புலிகளானது அழிந்து வரும் உயிரினங்களாக பட்டியலிடப்பட்டுள்ளது.
- இந்தியாவில் 4,262 சதுர கி.மீ பரப்பளவில் அமைந்துள்ள சுந்தரவனக் காடுகளில் சதுப்புநிலப் பகுதி மட்டும் 2,125 சதுர கி.மீ ஆகும்.
- இது உலகின் மிகப்பெரிய அலையாத்திக் காடு மற்றும் தெற்காசியாவின் மிகவும் தனித்துவமான சுற்றுச்சூழல் அமைப்புகளில் ஒன்றாகும்.
- இது யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- சுந்தரவனக் காடுகள் வங்கப் புலிகளின் தாயகமும் ஆகும்.
- இந்தியாவின் மொத்த அலையாத்தி (மாங்குரோவ்) காடுகளின் பரப்பில் இந்தியாவின் சுந்தரவனக் காடுகள் மட்டும் 60 சதவிகித பரப்பைக் கொண்டுள்ளன.
- இது இந்தியாவின் 27வது ராம்சார் தளமாகும்.
- இது இந்தியாவின் மிகப்பெரிய பாதுகாக்கப்பட்ட ஈரநிலமாகும் (4,23,000 ஹெக்டர்கள்).
- இது மிகவும் வெகுவாக அருகிவரும் வடக்கு நதி வகை ஆமை, அருகிவரும் ஐராவதி டால்பின் மற்றும் பாதிக்கப்படக் கூடிய வேட்டையாடும் பூனை போன்ற அதிக அளவிலான, அரிதான மற்றும் உலகளவில் ஆபத்துக்குள்ளான உயிரினங்களுக்கான புகலிடமும் ஆகும்.




## கடுமையான பொறுப்புடைமை

- விசாகப்பட்டினம் வாயுக் கசிவு குறித்த தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்தின் ஆணையானது "கடுமையான பொறுப்புடைமை" என்ற சட்டக் கொள்கையின் கீழ் LG பாலிமர்ஸ் நிறுவனத்தை ஒரு முதன்மைப் பொறுப்பு கொண்ட நிறுவனமாக மாற்றியுள்ளது.
- இந்தப் பொறுப்புடைமையானது 1986 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தினால் இந்தியாவில் கொண்டு வரப்பட்ட ஒரு முக்கியமான அம்சம் ஆகும்.
- 1986 ஆம் ஆண்டில், இந்திய உச்ச நீதிமன்றமானது தில்லி ஒலியம் வாயுக் கசிவு வழக்கில் "அறுதி பொறுப்புடைமைக் கொள்கை" என்பதற்குப் பதிலாக இதனை மாற்றியுள்ளது.
- இந்த அறுதிப் பொறுப்புடைமைக் கொள்கையானது சரத்து 21-ன் (வாழ்வதற்கான உரிமை) ஒரு பகுதியாகும்.
- "கடுமையான பொறுப்புடைமைக் கொள்கை" என்பதின் கீழ், அபாயகரமான பொருள்கள் விபத்தாலோ அல்லது இதர சூழ்நிலைகளின் கீழ் இயற்கையின் ஒரு செயலாலோ அந்த நிறுவனத்தின் வரம்பிற்கு வெளியே சென்றால், அந்த நிறுவனம் இந்த நிகழ்விற்குப் பொறுப்பாகாது. இந்த நிகழ்விற்கு வேண்டி அந்த நிறுவனம் எந்தவொரு இழப்பீட்டையும் வழங்க வேண்டியதில்லை.


**Rule of Strict Liability :-**

There are situation when a person may be liable for some harm even though he is not negligent in causing same. In other word, sometimes law recognized **'No fault'** liability. In this, connection, the rule laid down in two cases, firstly, in the decision of house of lords in **Rylands v/s Fletcher,**(1868) and secondly, in decision of supreme court of India **M.c Mehta v/s Union of India,**(1987) may be noted.

## ஸ்பைனோசாரஸ் எஜிப்டிகஸ்

- இது தற்போதைய வட ஆப்பிரிக்காவில் 95 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த (கிரட்டேசியஸ் காலம்) ஒரு மிகப்பெரிய டைனோசர் வகை இனமாகும்.
- சமீபத்தில் இதன் எலும்புக் கூடானது சஹாரா பாலைவனப் பகுதியின் மொராக்கோ பிரிவில் உள்ள கெம் கெம் பகுதியில் காணப் பட்டது.
- இந்தப் பழைமையான மாமிச உண்ணி விலங்கின் (பிற விலங்குகளைக் கொன்று உண்கின்ற விலங்கு) தற்போது உள்ள ஒரேயொரு எலும்புக்கூடு உலகில் இது ஒன்றேயாகும்.
- நீரில் வாழும் அசலான டைனோசராக இது இருக்கக்கூடும் என்று இந்த ஆய்வு கூறுகின்றது.
- அதன்படி முதலாவது நீரில் நீந்தும் டைனோசராக இது அறியப்பட்டுள்ளதால் இந்தக் கண்டுபிடிப்பு வரலாற்றுச் சாதனை ஒன்றைப் படைத்துள்ளது.




## பயிர்கள் மீதான காசநோய் மருந்துகளுக்குத் தடை

- சமீபத்தில், மத்தியப் பூச்சிக்கொல்லி வாரியம் மற்றும் பதிவு ஆணையமானது (CIBRC - Central Insecticides Board and Registration Committee) நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளான ஸ்ட்ரெப்டோமைசின் மற்றும் டெட்ராசைக்கிளினின் போன்ற மருந்துகளின் பயன்பாட்டிற்குத் தடை விதிக்கப் பரிந்துரை செய்துள்ளது.
- ஸ்ட்ரெப்டோமைசின் ஆனது முன்னதாக காசநோய் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கான ஒரு முக்கியமான பயன்பாட்டைக் கொண்டுள்ளது.
- மேலும் இது பலமருந்து எதிர்ப்பு காசநோய் நோயாளிகளுக்கும் மெனின்ஜிட்டிஸ் காசநோய் (மூளைக் காசநோய்) போன்ற சில வகை நோய்களைக் கொண்ட நோயாளிகளுக்கும் பயன்படுத்தப் படுகின்றது.
- ஸ்ட்ரெப்டோமைசின் போன்ற நோய் எதிர்ப்பு மருந்துகளுக்கு ஆட்படும் போது மனிதர்கள் மற்றும் விலங்குகளில் அது நோய் எதிர்ப்புத் தடைகளின் வளர்ச்சிக்கு வழி வகுக்கின்றது.
- CIBRC ஆனது பூச்சிக்கொல்லிகளின் இறக்குமதி, உற்பத்தி, விற்பனை, போக்குவரத்து, விநியோகம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக 1970 ஆம் ஆண்டில் மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலன் அமைச்சகத்தால் ஏற்படுத்தப் பட்டது.





## இந்தியாவில் கார்பன் டை ஆக்ஸைடு உமிழ்வுகள்

- இந்தியாவில் கார்பன் டை ஆக்ஸைடு உமிழ்வுகளானது கடந்த 40 ஆண்டுகளில் முதன்முறையாக வெகுவான அளவில் மிகக் குறைந்த அளவிற்குச் சரிந்துள்ளது.
- இந்த ஆய்வானது ஆற்றல் மற்றும் தூய்மைக் காற்றிற்கான ஆராய்ச்சி மையத்தினால் மேற்கொள்ளப் பட்டது.
- இது மார்ச் மாதத்தில் 15% என்ற அளவிலும் ஏப்ரல் மாதத்தில் 30% என்ற அளவிலும் குறைந்துள்ளது.
- நிலக்கரியின் மூலம் உற்பத்தி செய்யப் படும் மின்சாரத்தின் அளவு குறைந்ததன் காரணமாக கார்பன் டை ஆக்ஸைடு உமிழ்வானது வெகுவாக குறைந்துள்ளது.
- மின்சாரப் பயன்பாட்டின் வீழ்ச்சி மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையிடமிருந்து வரும் போட்டி ஆகியவை கோவிட் – 19 நோய்ப் பாதிப்பிற்கு முன்பே புதைபடிவ எரிபொருள்களுக்கான தேவையைச் சரிவடையச் செய்துள்ளது.




## உலகளாவிய ஆற்றல் மாற்றக் குறியீடு (GET Index - Global Energy Transition Index)


- உலகப் பொருளாதார மன்றமானது (WEF - World Economic Forum) “WEF வளரும் திறன்மிகு ஆற்றல் மாற்றம் 2020” என்ற பெயருடன் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 75% நாடுகள் தங்களது சுற்றுச்சூழல் நிலைப்புத் தன்மையை மேம்படுத்தியுள்ளன.
- இந்தியா இந்தக் குறியீட்டில் 74வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- இந்தக் குறியீட்டில் சுவீடன் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது.
- இதற்கு அடுத்து சுவிட்சர்லாந்து மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன.
- இதன் முதல் 10 இடங்களில் G20 அமைப்பைச் சேர்ந்த பிரான்சு (8வது இடம்) மற்றும் ஐக்கிய ராஜ்ஜியம் (7வது இடம்) ஆகிய நாடுகள் மட்டுமே இடம் பிடித்துள்ளன.
- முதன்முறையாக, அமெரிக்கா, முதல் 25 இடங்களில் இடம் பெறவில்லை.
- இந்தத் தரவரிசையின் படி, உலகில் ஆற்றல் தேவையுள்ள வளரும் நாடுகளாக இந்தியாவும் சீனாவும் உள்ளன.




## உலகளாவிய வன வளங்கள் குறித்த ஆய்வு – 2020

- இது ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் வேளாண் அமைப்பினால் வெளியிடப் படுகின்றது.
- இது 1990 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் 236 நாடுகள் மற்றும் நிலப் பிரதேசங்களில் உள்ள வனங்களின் நிலைமை குறித்து ஆய்வு செய்துள்ளது.
- உலகமானது 1990 ஆம் ஆண்டு முதல் 178 மில்லியன் ஹெக்டேர் பரப்பிலான வனத்தை இழந்துள்ளது. இது லிபியாவின் நிலப்பகுதிக்குச் சமமானதாகும்.
- ஆப்பிரிக்கக் கண்டமானது 2010-2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் நிகர வன இழப்பில் ஒரு மிகப்பெரிய வருடாந்திர இழப்பு விகிதத்தைக் கொண்டுள்ளது. இதற்கு அடுத்து தென் அமெரிக்கா உள்ளது.




- மறுபுறம், 2010-2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் நிகர வனப்பகுதி அதிகரிப்பை ஆசியா கொண்டுள்ளது. இதற்கு அடுத்து ஓசியானியா மற்றும் ஐரோப்பா உள்ளன.
- உலகின் மொத்த வனப் பகுதி 4.06 பில்லியன் ஹெக்டேராகும். இது மொத்த நிலப்பரப்பில் 31 சதவீதமாகும்.
- உலக வனங்களின் மிகப்பெரிய விகிதமானது வெப்ப மண்டல (45%) காடுகளாக உள்ளது. இதற்கு அடுத்து வடதுருவக் காடுகள், மித வெப்ப மண்டலக் காடுகள், மற்றும் உப வெப்ப மண்டலக் காடுகள் உள்ளன.
- மொத்த அளவில் 54%ற்கு மேற்பட்ட உலகக் காடுகளானது ரஷ்யக் கூட்டமைப்பு, பிரேசில், கனடா, அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய 5 நாடுகளில் மட்டுமே காணப் படுகின்றது.
- விகிதாச்சார அடிப்படையில் அதிக அளவிலான தோட்டக் காடுகள் தென் அமெரிக்காவில் உள்ளன. அதே சமயம் இது ஐரோப்பாவில் குறைவாக உள்ளது.

## ஃபெரல் குதிரை (Feral horse)

- அசாமில் உள்ள திப்ரு-சைகோவா தேசியப் பூங்காவினுள் நிலத்திற்கடியில் இந்திய எண்ணெய் (ஆயில் இந்தியா) நிறுவனமானது நீர்மக் கரிமங்களை (ஹைட்ரோகார்பன்) துளையிட்டு எடுத்து சோதனைச் செய்வதை விரிவாக்கம் செய்யும் திட்டத்திற்கான ஒரு முக்கிய சுற்றுச்சூழல் அனுமதியை சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திடமிருந்துப் பெற்றுள்ளது.
- ஃபெரல் குதிரைகளுக்கு மூல ஆதாரமாக விளங்கும் இந்தியாவின் ஒரே பகுதி இந்தப் பூங்காவாகும்.
- ஃபெரல் குதிரை என்பது உண்மையான ஒரு காட்டுக் குதிரை அல்ல.
- தற்போது இருக்கும் ஒரே உண்மையான காட்டுக் குதிரையானது மத்திய ஆசியாவைப் பூர்வீகமாகக் கொண்ட ப்ரெஸ்வால்ஸ்கியின் குதிரை (Przewalski's horse) மட்டுமே ஆகும்.



- ஆஸ்திரேலியா மட்டுமே உலகில் ஃபெரல் குதிரைகளை அதிக எண்ணிக்கையில் கொண்டு உள்ளது.

## சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பகுதி (ESA)

- மேற்குத் தொடர்ச்சி மலையின் சுற்றுச்சுழல் பாதுகாப்புப் பகுதி குறித்து முன்கூட்டிய அறிவிப்பு வெளியிடுவதைத் துரிதப்படுத்த 6 மாநிலங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன.
- கேரளா, கர்நாடகா, கோவா, மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகியவை இந்த 6 மாநிலங்களாகும்.
- மத்திய அரசானது மேற்குத் தொடர்ச்சி மலையின் பன்முகத் தன்மையைப் பாதுகாப்பதற்காக டாக்டர் கஸ்தூரி ரங்கன் தலைமையில் ஓர் உயர் மட்டப் பணிக் குழுவை அமைத்தது.
- அதற்கு முன்பு காட்கில் தலைமையில் ஒரு குழுவானது அமைக்கப் பட்டிருந்தது.
- கஸ்தூரி ரங்கன் அறிக்கையானது மேற்குத் தொடர்ச்சி மலையின் 37% பகுதியை ESA என்ற பகுதியின் கீழ் கொண்டு வர முயல்கின்றது. காட்கில் அறிக்கையானது இதனை 64% (ESA - Ecologically Sensitive Area) ஆகப் பரிந்துரைத்திருந்தது.
- ESAகள் என்பவை பாதுகாக்கப்பட்ட பகுதிகள், தேசியப் பூங்காக்கள், வனவிலங்கு சரணாலயங்கள் ஆகியவற்றைச் சுற்றிலும் 10 கிலோ மீட்டருக்குள் இருக்கும் ஒரு பகுதியாகும்.
- ESA ஆனது சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986 என்ற சட்டத்தின் கீழ் மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தினால் அறிவிக்கப் படுகின்றன.




## பல்லுயிர்ப் பாதுகாப்பு குறித்த 5 முன்னெடுப்புகள்

- ❖ ஐக்கிய நாடுகள் அமைப்பானது 2010 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் செயல்படுத்தப்பட வேண்டிய 20 உலகளாவியத் திட்டங்களை வகுத்துள்ளது.
- ❖ இது பல்லுயிர்ப் பாதுகாப்பிற்கான உத்திசார் திட்டம் என்றழைக்கப் படுகின்றது.
- ❖ 2020 ஆம் ஆண்டானது பல்லுயிர்ப் பாதுகாப்பிற்கான சிறந்த ஆண்டாகும்.
- ❖ மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சகமானது பல்லுயிர்ப் பாதுகாப்பு குறித்த 5 முன்னெடுப்புகளைத் தொடங்கியுள்ளது.
  - ○ சம்ரக்சன் பல்லுயிர் பெருக்கத்திற்கான உள்ளகப் பயிற்சித் திட்டம் - இது முதுகலைத் திட்டத்தில் 20 மாணவர்களை 1 ஆண்டுக் காலத்திற்கு ஈடுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
  - ○ ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் பிரச்சாரமான அருகி வரும் உயிரினங்களின் சட்ட விரோதக் கடத்தல்.
  - ○ வனவிலங்கு மீதான குற்றத் தடுப்பு அமைப்பின் பிரச்சாரமான "அனைத்து உயிரினங்களும் விருப்பத்தின் அடிப்படையில் இடம்பெயர்வதில்லை".
  - ○ பங்காளர் நாடுகளின் உலக வனவிலங்கு நிதிய மாதிரிக் கருத்தரங்கு.
  - ○ பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் உயிரியல் பன்முகத் தன்மைச் சட்டம், 2002 என்ற சட்டம் குறித்த இணையவழிக் கருத்தரங்குத் தொடர்கள்.

## உலகளவில் முக்கியத்துவம் வாய்ந்த பாரம்பரிய வேளாண் முறைகள் (GIAHS)


- ❖ சமீபத்தில் உணவு மற்றும் வேளாண் அமைப்பானது (FAO - Food and Agriculture Organization) சீனா, கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் 4 தேயிலை சாகுபடித் தளங்களை உலகளவில் முக்கியத்துவம் வாய்ந்த பாரம்பரிய வேளாண் முறைகளாகத் தேர்ந்தெடுத்துள்ளது.
- ❖ GIAHS (Globally Important Agricultural Heritage Systems) ஆனது வேளாண் பாரம்பரிய முறைகளைப் பாதுகாத்து, ஆதரவளிப்பதற்காக FAOவினால் தொடங்கப் பட்டதாகும்.
- ❖ GIAHS ஆனது வேளாண் பன்முகத் தன்மை, இடர் தாங்கும் சூழல் அமைப்புகள் மற்றும் மதிப்புமிக்க கலாச்சாரப் பாரம்பரியங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ள அழகியல் சார்ந்த தலைசிறந்த நில அமைப்புகளாகும்.
- ❖ இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்டுள்ள 3 GIAHS தளங்கள் பின்வருமாறு:
  - ○ கேரளாவில் கடல் மட்டத்திற்குக் கீழே மேற்கொள்ளப் படும் குட்டநாடு வேளாண் முறை
  - ○ ஒடிசாவின் கோராபுட் பாரம்பரிய வேளாண்மை
  - ○ காஷ்மீரின் பாம்பூர் குங்குமப்பூ பாரம்பரிய வேளாண்மை
- ❖ FAO என்பது பட்டினியை ஒழித்தல், ஊட்டச்சத்து மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தல் ஆகியவற்றிற்கான சர்வதேச அளவிலான முயற்சிகளை வழிநடத்தும் ஐக்கிய நாடுகளின் ஒரு சிறப்பு நிறுவனமாகும்.





## மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்துப் புதிய தாவர இனங்கள்

- கேரளா மற்றும் தமிழ்நாட்டில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் தெற்கு முனையின் பசுமையான வனப்பகுதிகளில் மூன்று புதிய தாவர இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- அவை பின்வருமாறு
    - மைர்டேசி அல்லது பன்னீர் கொய்யா குடும்பத்தின் யூஜீனியா ஸ்பேரோகார்பா வகை (Eugenia sphaerocarpa of the Myrtaceae or Rose apple family) - கக்காயம் பகுதியில் (கேரளா) உள்ள மலபார் வனவிலங்கு சரணாலயத்தில் காணப் படுகிறது.
    - சீத்தாப்பழத்தின் அன்னோனேசி குடும்பத்தின் கோனியோதலாமஸ் செரிசியஸ் வகை (Goniothalamus sericeus of the Annonaceae family of custard apple) - தமிழ்நாட்டின் கன்னியாகுமரி வனவிலங்குச் சரணாலயத்தில் காணப் படுகிறது.
    - மெலஸ்டோமாடேசியின் மெமசிலோன் நெர்வோசம் (Memecylon nervosum of the Melastomataceae).



## இந்தியாவில் வெட்டுக் கிளிகள் தாக்குதல்

- மிக அதிக அளவிலான பாலைவன வெட்டுக்கிளித் தொகுதியானது பாகிஸ்தான் வழியாக இந்தியாவில் உள்ள இராஜஸ்தானிற்குள் நுழைந்துள்ளது.
- மிகப் பரந்த வெட்டுக்கிளித் தொகுதியானது 2019 ஆம் ஆண்டு ஈரானில் தொடங்கி, அதன் பிறகு பாகிஸ்தானிற்கு இடம்பெயர்ந்து, தற்பொழுது இந்தியாவில் உள்ள இராஜஸ்தான், பஞ்சாப், குஜராத் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்குள் நுழைந்துள்ளது.
- இந்த வெட்டுக் கிளித் தாக்குதலானது இந்தியாவின் வேளாண் பொருளாதாரத்தைச் சீரழித்து இந்தியாவின் உணவுப் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்க இருக்கின்றது.
- வெட்டுக்கிளி எச்சரிக்கை அமைப்பானது வெட்டுக் கிளிகளைக் கொல்லுவதற்கு வேண்டி இரசாயனங்களைத் தெளிப்பதற்கு ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தப் பரிந்துரைத்துள்ளது.



## சேல்கி பரிந்துரைக்கப்பட்ட காப்புக் காடுகள் (PRF)

- சமீபத்தில் தேசிய வனவிலங்கு வாரியமானது ஒரு திறந்தவெளி நிலக்கரி சுரங்கத் திட்டத்திற்காக வேண்டி சேல்கி பரிந்துரைக்கப்பட்ட காப்புக் காடுகளிலிருந்து (PRF - Proposed Reserve Forest) 98.59 ஹெக்டேர் நிலத்தை மாற்றுவதற்கான ஒரு பரிந்துரை குறித்து விவாதித்துள்ளது.
- சேல்கி என்பது மேலை அசாமில் நிலக்கரி சுரங்கத் திட்டத்திற்காக திஹாங் – பட்கைய் யானைகள் காப்பகத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்தக் காப்பகமானது அசாமின் திப்ருகார்க் மற்றும் டின்சுகியா ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளது.
- திஹாங் – பட்கைய் இந்தியாவில் மிகப் பரந்த வெப்ப மண்டல தாழ்நில மழைக்காடுகளை கொண்டு இருக்கின்றது.


## பஞ்சாப்பில் தாளடி எரிப்பு

- பஞ்சாபில் இந்த ஆண்டில் தாளடி எரிப்பு நிகழ்வுகள் அதிக அளவில் உயர்ந்து உள்ளன.
- பயிர்க் கழிவுகளை எரிக்கும் மக்களுக்கு எதிரான தடை மற்றும் நடவடிக்கைகள் (காற்று மாசுபாட்டைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சட்டம், 1987 கீழ் ஒழுங்குபடுத்தப் படுகின்றன.
- இது நவம்பர் மாதத்தில் கோதுமையைப் பயிரிடுவதற்கு நிலங்களைத் தயார்படுத்துவதற்காக விவசாயிகளால் பின்பற்றப்படும் ஒரு பொது நடைமுறை ஆகும். ஏனெனில் அங்கு நெல் அறுவடை மற்றும் கோதுமை விதைப்பு ஆகியவற்றிற்கு இடையே மிகக் குறைந்தகால அளவே உள்ளது.
- தாளடி எரிப்பானது நுண்மத் துகள்களுடன் கார்பன் டை ஆக்ஸைடு, சல்பர் டை ஆக்ஸைடு, நைட்ரஜன் ஆக்ஸைடு போன்ற தீங்கு விளைவிக்கும் வாயுக்களின் உமிழ்வை ஏற்படுத்துகின்றது.
- திறந்தவெளித் தாளடி எரிப்பானது மீத்தேன், கார்பன் மோனாக்சைடு, எளிதில் ஆவியாகும் கரிமப் பொருள் மற்றும் கார்சினோஜெனிக் பாலிசைக்ளிக் அரோமேடிக் ஹைட்ரோகார்பன்கள் போன்ற தீங்கு விளைவிக்கும் வாயுக்களைக் கொண்டு அதிக அளவிலான நச்சு மாசுபடுத்திகளை வளிமண்டலத்தில் உமிழ்கின்றது.
- இறுதியாக இது பனிப்புகை ஏற்படக் காரணமாக அமையலாம்.
- நிலப்பகுதியில் உமி எரிப்பானது மண்ணில் உள்ள ஊட்டச்சத்துகளை அழித்து, அதனை வளம் அற்றதாக மாற்றுகின்றது.
- தாளடி எரிப்பினால் உற்பத்தி செய்யப்படும் வெப்பமானது மண்ணிற்குள் ஊடுருவி, ஈரப்பதம் மற்றும் பயனுள்ள நுண்ணுயிரிகளின் இழப்பிற்கு காரணமாக அமைகின்றது.
- ஒரு புத்தாக்க முயற்சியானது கௌதன் என்ற பகுதியை அமைப்பதன் மூலம் சத்தீஸ்கர் மாநில அரசினால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- ஒரு கௌதன் என்பது ஒவ்வொரு கிராமத்திலும் பொதுவில் உள்ள ஒரு பிரத்தியேக 5 ஏக்கர் நிலப்பகுதியாகும். மக்களின் நன்கொடைகளின் மூலம் அனைத்துத் தாளடிகளும் இங்கு சேகரிக்கப் படுகின்றது.
- அதன் பிறகு, இது மாட்டுச் சாணம் மற்றும் இயற்கை நொதிகளைக் கலப்பதன் மூலம் கரிம உரமாக மாற்றப் படுகின்றது.



## அனல் காற்று

- ❖ ராஜஸ்தான், ஹரியானா, உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசத்தில் உள்ள பல மாவட்டங்கள் உள்பட வட இந்தியாவின் பல பகுதிகள் கடுமையான அனல் காற்றினை எதிர்கொள்கின்றன. இங்கு 45° செல்ஷியஸிற்கும் மேல் வெப்பநிலை அல்லது வழக்கமான வெப்பநிலையை விட 5° செல்ஷியஸ் அதிகமான வெப்பநிலை நிலவுகின்றது.
- ❖ அனல் காற்று என்பது கோடைக் காலத்தின் போது நிகழும் வழக்கமான மிக அதிகமான வெப்பநிலையை விட அதிக வெப்பநிலை கொண்ட ஒரு காலமாகும்.
- ❖ இந்திய வானிலை ஆய்வு மையமானது அனல் காற்றிற்காகப் பின்வரும் தகுதிநிலைகளை வழங்கியுள்ளது.
- ❖ ஒரு பகுதியின் மிக அதிகபட்ச வெப்பநிலைச் சமவெளிகளுக்கு 40° செல்ஷியஸ் என்ற அளவிலும் மலைப் பகுதிகளில் 30° செல்ஷியஸ் என்ற அளவிலும் செல்லும் வரை அது அனல் காற்றாகக் கருதப்பட மாட்டாது.
- ❖ வழக்கமான மிக அதிகமான வெப்பநிலை 45° செல்ஷியஸ் ஆக உள்ள போது அல்லது வழக்கமான மிக அதிக வெப்பநிலைக்கு மாறாக வெப்பநிலை உயரும் போது, அது அனல் காற்றாக அறிவிக்கப் படுகின்றது.



## கங்கை ஓங்கில் (டால்பின்) சரணாலயம்

- பீகார் மாநில அரசானது பஹல்பூர் மாவட்டத்தில் உள்ள விக்கிரமசீலா கங்கை ஓங்கில் சரணாலயத்தில் பாலூட்டிகளுக்கான இந்தியாவின் முதலாவது ஆய்வு மையத்தை அமைக்க இருக்கின்றது.
- பீகார் மாநிலமானது இந்தியாவில் இருக்கும் ஏறத்தாழ 2500-3000 கங்கை ஓங்கில்களில் பாதிக்கும் மேற்பட்ட ஓங்கில்களுக்கான வாழ்விடமாக விளங்கி வருகின்றது.
- கங்கை ஆற்று ஓங்கில் முக்கியமாக கங்கை மற்றும் பிரம்மபுத்திரா நதிகளிலும் இந்தியா, வங்க தேசம் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் பாயும் அவற்றின் துணையாறுகளிலும் காணப்படுகின்றது.
- கங்கை ஆற்று ஓங்கில் ஆனது இந்திய அரசினால் தனது தேசிய நீர் விலங்காக 2009 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- அப்போதைய இந்தியப் பிரதமரான டாக்டர் மன்மோகன் சிங் தலைமையிலான தேசிய கங்கை நதி நீர்ப் படுகை ஆணையத்தின் முதலாவது கூட்டத் தொடரில் இந்த முடிவானது எடுக்கப் பட்டுள்ளது.
- மேலும் இது இந்திய நகரான குவஹாத்தியின் அதிகாரப்பூர்வ விலங்காகவும் இருக்கின்றது.



## சாரு கடற்காய்

- சாரு கடற்காய் என்பது, தெற்கு மற்றும் மத்திய அமெரிக்கக் கடற்கரைகளில் இருக்கும் ஓர் ஊடுருவிய கடற்காயாகும்.
- இது மற்ற கடற்காய்களை வெளியேற்றி கேரளாவில் உள்ள உப்பங்கழிகளில் வேகமாக பரவி வருகின்றது.
- 2017 ஆம் ஆண்டில் இந்தப் பகுதியில் ஏற்பட்ட ஒக்கிப் புயலின் காரணமாக சாரு கடற்காயானது (மைடெல்லா ஸ்டிகாட்டா) வேகமாகப் பரவி வருகின்றது.



# மாநிலச் செய்திகள்


## காஷ்மீர் குங்குமப் பூ

- இதற்கு புவிசார் குறியீடு வழங்கப் பட்டுள்ளது.
- இது ஜம்மு காஷ்மீரின் கரேவாஸ் (உயர்நிலப் பகுதிகளில்) பயிரிடப்பட்டு, அறுவடை செய்யப் படுகின்றது.
- சராசரி கடல் மட்ட அளவில் இருந்து 1600மீ – 1800 மீ உயரத்தில் பயிரிடப்படும் உலகின் ஒரே குங்குமப்பூ வகை இதுவாகும்.
- இது "நீல மாணிக்கம் மற்றும் குங்குமப் பூவின் நிலம்" என்று சிறப்பாக அறியப் படும் கிஸ்த்துவார் பகுதியில் வளர்க்கப்படுகின்றது.
- இது கிமு 1 ஆம் நூற்றாண்டில் மத்திய ஆசியாவிலிருந்து இடம் பெயர்ந்த மக்களால் இந்தியாவில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- இது பண்டைய சமஸ்கிருத இலக்கியத்தில் (அமரகோசரா) "பகுகாம்" என்று அறியப் படுகின்றது.



## கஜோங் மற்றும் சக்மா

- மத்திய அரசின் வட கிழக்குப் பகுதி மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது கோவிட் – 19 தொற்று மேலாண்மையில் கஜோங் மற்றும் சக்மா சமுதாயங்களையும் இணைக்குமாறு அருணாச்சலப் பிரதேச மாநில அரசை அறிவுறுத்தியுள்ளது.
- சக்மா மற்றும் கஜோங் சமுதாயங்கள் என்பது அப்போதைய கிழக்குப் பாகிஸ்தானின் (வங்க தேசம்) சிட்டகாங் மலையில் இருந்து இடம்பெயர்ந்த மக்களைக் குறிக்கின்றது.
- இவர்கள் தற்பொழுது வரை அருணாச்சாலப் பிரதேசத்தில் உள்ள நிவாரண முகாம்களில் தங்கியுள்ளனர்.
- சக்மா இனத்தைச் சேர்ந்தவர்கள் புத்த மதத்தைச் சார்ந்தவர்களாகவும் கஜோங் இனத்தைச் சேர்ந்தவர்கள் இந்துக்களாகவும் உள்ளனர்.
- தற்பொழுது, இந்தப் பழங்குடியினர் இந்தியாவில் குடியுரிமை அல்லது நில உரிமைகளைக் கொண்டிருக்கவில்லை.




## ஆப்பிரிக்கப் பன்றிக் காய்ச்சல்

- அசாம் மாநிலத்தில் ஆப்பிரிக்கப் பன்றிக் காய்ச்சலின் காரணமாக 2500ற்கும் மேற்பட்ட பன்றிகள் கொல்லப் பட்டதை அம்மாநில அரசு உறுதிப்படுத்தி யுள்ளது.
- ஆப்பிரிக்கப் பன்றி வைரஸ் என்பது இருமடங்கு அளவிற்குத் தனித்து விடப்பட்டிருக்கும் ஒரு மிகக் கொடிய டிஎன்ஏ வைரஸ் ஆகும். இந்த வைரஸ் ஆப்பிரிக்கப் பன்றிக் காய்ச்சலுக்குக் காரணமாக இருக்கின்றது.

## மத்தியப் பிரதேசத்தின் கோவிட் – 19 நோய்த் தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகள்

- மத்தியப் பிரதேச மாநிலக் காவல் துறையானது அதன் மூத்தக் குடிமக்களுக்கு 24 மணி நேரமும் உதவியளிப்பதற்காக "சங்கல்ப் திட்டம்" என்ற ஒன்றைத் தொடங்கி உள்ளது.
- மத்தியப் பிரதேச மாநில அரசானது கோவிட் – 19 நோய்த் தொற்றை எதிர்த்துப் போராடுவதற்கு வேண்டிய அளவில் மக்களின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்காக "ஜீவன் அம்ரித் யோஜனா" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- இந்த யோஜனாவின் கீழ், அம்மாநில அரசானது ஆயுஷ் துறையினால் தயாரிக்கப்பட்ட "திரிகுத் சூரணம்" (மூன்று மிளகுகள்) என்ற ஒரு ஆயுர்வேதப் பொருளை அதன் குடிமக்களுக்கு இலவசமாக வழங்க இருக்கின்றது.
- மத்தியப் பிரதேச மாநில அரசானது ஜீவன் சக்தி யோஜனா என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், நகர்ப்புறப் பகுதிகளில் இருக்கும் பெண்கள் முகவுறைகளைத் தயார் செய்து, அதன் மூலம் இலாபம் ஈட்ட இருக்கின்றனர்

## ப்ரூ – ரியாங் அகதிகள் பிரச்சினை

- வடக்குத் திரிபுரா மாவட்டத்தின் கஞ்சன்புர் துணை மண்டலத்திற்கு ப்ரு அகதிகள் இடம் மாற்றப்படலாம் என்று பரிந்துரைக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.
- 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மத்திய அரசு ப்ரூ அகதிகள் பிரச்சினைக்கு வேண்டி ஒரு நிரந்தரத் தீர்விற்கான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டது.
- இந்த ஒப்பந்தமானது மத்திய அரசு, திரிபுரா அரசு, மிசோரம் அரசு மற்றும் ப்ரூ ரியாங் பிரதிநிதிகள் ஆகியோருக்கு இடையே கையெழுத்தானது.
- இந்த ஒப்பந்தத்தின்படி, ப்ரூ குடிமக்களுக்கு திரிபுராவில் வசிக்க நிலம் தரப்பட இருக்கின்றது.
- ரியாங் என்றும் அழைக்கப்படும் ப்ரூ பழங்குடியினர் திரிபுரா, அசாம், மணிப்பூர் மற்றும் மிசோரம் ஆகிய வடகிழக்கு மாநிலங்களில் பரவியுள்ளனர்.
- திரிபுராவில், இவர்கள் குறிப்பாகப் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினக் குழு ஆக அங்கீகரிக்கப் பட்டுள்ளனர்.
- 30,000ற்கும் மேற்பட்ட ப்ரூ பழங்குடியினர் 1997 ஆம் ஆண்டில் மிசோரத்திலிருந்துத் தப்பிச் சென்றனர்.
- இவர்கள் 1997 ஆம் ஆண்டு முதல் திரிபுராவில் உள்ள பல்வேறு முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.




## ஆயுஷ் கவச் செயலி

- உத்தரப் பிரதேச மாநில அரசானது மருந்து குறித்த அறிவுரைகளை மக்கள் பெறுவதற்கு உதவுவதற்காக "ஆயுஷ் கவச்" என்ற ஒரு செயலியைத் தொடங்கி உள்ளது.
- இது பண்டைய முறைகளான ஆயுர்வேதம் மற்றும் யோகா ஆகியவற்றின் மூலம் மக்களின் நோய் எதிர்ப்புச் சக்தியை வலுப்படுத்துவதற்காக அவர்களுக்கு உதவ இருக்கின்றது.

## பிஷ்னு சேந்திரா பார்வா

- பிஷ்னு சேந்திரா பார்வா என்பது ஜார்க்கண்ட் மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஒடிசா மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த பழங்குடியினரால் அனுசரிக்கப் படும் ஒரு வருடாந்திர வேட்டையாடல் திருவிழாவாகும்.
- வரலாற்றில் முதன்முறையாக, முழு ஊரடங்கின் காரணமாக இந்த ஆண்டு அந்த விழாவில் ஒரு விலங்கு கூட கொல்லப் படவில்லை.



## நிஹாக்

- இமாச்சலப் பிரதேச அரசானது "நிஹாக்" என்ற ஒரு புதிய திட்டத்தைத் தொடங்க இருக்கின்றது.
- இந்தத் திட்டமானது நாட்டின் பிற பகுதிகளில் இருந்து அம்மாநிலத்திற்கு வரும் குடும்ப உறுப்பினர்களுக்குக் கல்வி அளித்தலை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உத்தரப் பிரதேசத்தில் தொழிலாளர் சட்டங்கள்

- உத்தரப் பிரதேச மாநில அரசானது அம்மாநிலத்தில் அடுத்த 3 ஆண்டுகளுக்கு தொழிலாளர் சட்டங்களை நிறுத்தி வைப்பதற்கான ஒரு அவசரச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.
- இருந்த போதிலும், இந்த அவசரச் சட்டமானது கட்டுமானம் & இதரக் கட்டுமானத் தொழிலாளர்கள் சட்டம், கொத்தடிமைச் சட்டம், தொழிலாளர் இழப்பீட்டுத் தொகைச் சட்டம் மற்றும் பணவழங்கீட்டு ஊதியச் சட்டம் ஆகியவற்றை உள்ளடக்க வில்லை.
- தொழிலாளர் விவகாரம் என்பது பொதுப் பட்டியலில் உள்ள ஒரு கூறாகும்.
- எனவே, மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் இரண்டும் தங்களது சொந்தச் சட்டங்களை உருவாக்கிக் கொள்ளலாம்.
- இருப்பினும், அதற்கு மத்திய அரசின் அனுமதி தேவையாகும்.

## பெங்களூருவில் மிகப்பெரிய அளவில் ஏற்பட்ட ஒலி


- ஒலி அதிகரிப்பானது ஒரு பொருள் காற்றில் ஒலியின் வேகத்தை விட அதிக வேகத்தில் செல்லும் போது நிகழ்கின்றது. அப்பொழுது இது அதிர்வு அலைகளை உருவாக்குகின்றது.
- ஒரு விமானம் குறைந்த உயரத்தில் பறந்தால், அதன் மூலம் ஏற்படும் ஒலி அதிகரிப்பானது நிலநடுக்கம் மற்றும் கண்ணாடி உடைதல் போன்ற அதிர்வுகளுக்கு வழிவகுக்கும்.

## ஒடிசாவில் ஒப்பந்தப் பண்ணையம்

- ஒடிசா மாநில அரசானது ஒப்பந்தப் பண்ணையத்திற்காக முதலீட்டாளர்கள் மற்றும் விவசாயிகள் ஒரு ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட அனுமதிக்கும் வகையில் ஓர் அவசரச் சட்டத்தை இயற்றியுள்ளது.
- இது வேளாண் பதப்படுத்துல்/ஏற்றுமதி அல்லது வர்த்தக அலகுகள் (மொத்த கொள்முதலாளர்கள்) விவசாயிகளிடமிருந்து குறிப்பிட்ட அளவுள்ள வேளாண் பொருட்களை முன்கூட்டியே ஒப்புக் கொள்ளப்பட்ட விலையில் வாங்குவதற்காக, அவர்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் ஒரு பண்ணைய முறையாகும்.
- இந்தியாவில் ஒப்பந்தப் பண்ணையானது இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872ன் கீழ் ஒழுங்குமுறைப் படுத்தப்படுகின்றது.
- மாதிரி வேளாண் உற்பத்திப் பொருள் சந்தைக் குழுச் சட்டம், 2003 (APMC - Agricultural Produce Market Committee) என்ற சட்டமானது ஒப்பந்தப் பண்ணையத்திற்காக சில விதிகளை வழங்குகின்றது.
- வேளாண் துறை அமைச்சகமானது வரைவு மாதிரி ஒப்பந்தப் பண்ணையச் சட்டம், 2018 என்ற ஒரு மாதிரியை வெளியிட்டுள்ளது.

## புத்திமாரி நதி

- இது இந்தியாவில் அசாமில் உருவாகும் ஒரு நதியாகும்.
- இது பிரம்மபுத்திரா நதியின் துணை நதியாகும்.
- இது வெள்ளம் மற்றும் அதிக வண்டல் சுமைக்குப் பெயர் பெற்றது.
- சமீபத்தில் ஏற்பட்ட ஆம்பன் புயலிற்குப் பிறகு இதில் வெள்ளம் ஏற்பட்டதாக செய்தி வெளியானது.




## பீகாரின் புவிசார் குறியீடு கொண்ட தயாரிப்புகள்

- ஷாஹி லிச்சி, கட்டர்னி அரிசி, சர்தலு / ஜர்தலு மாம்பழம் மற்றும் மாகஹி வெற்றிலை ஆகியவை பீகார் மாநிலத்தைச் சேர்ந்த உணவுப் பொருட்கள் ஆகும். இவற்றிற்குப் புவிசார் குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளன.
- பீகாரின் முசாபர்பூர், வைஷாலி, சமஸ்திபூர், சம்பாரன், பெகுசராய் ஆகிய மாவட்டங்கள் ஷாஹி லிச்சிப் பழத்தின் சாகுபடிக்குச் சாதகமான காலநிலையைக் கொண்டுள்ளன.
- நாட்டில் வளர்க்கப்படும் லிச்சியில் 40 சதவீதத்தைப் பீகார் உற்பத்தி செய்கின்றது இதில் 60 சதவீதம் ஷாஹி லிச்சிகள் ஆகும்.
- பாகல்பூரின் (பீகார்) சர்தலு மாம்பழம் அதன் தனித்துவமான மணம் மூலம் உலகில் பிரபலமானது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## சர்வதேச அரபி மொழி புனைவுப் பரிசு – 2020

- அப்தெலோகப் அய்சோய் (Abdelouahab Aissaoui) என்பவரின் "ஸ்பார்ட்டான் கோர்ட்" என்ற புனைவானது 13வது சர்வதேச அரபி மொழி புனைவுப் பரிசினை வென்று உள்ளது.
- இப்பரிசை வென்ற முதலாவது அல்ஜீரிய நாட்டவர் அய்சோய் ஆவார்.
- இது ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் உள்ள எமிரேட்ஸ் கூட்டமைப்பினால் ஆதரிக்கப் படுகின்றது.
- இந்தப் பரிசானது இலண்டனில் உள்ள புக்கர் பரிசுக் கூட்டமைப்பினை அதன் வழிகாட்டியாகக் கொண்டும் அபுதாபியில் உள்ள கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத் துறையினால் ஆதரிக்கப் பட்டும் வருகின்றது.

## புலிட்சர் பரிசு 2020

- ஜம்மு-காஷ்மீரைச் சேர்ந்த 3 புகைப்படக் கலைஞர்கள் புகைப்படத் துறையில் 2020 ஆம் ஆண்டிற்கான புலிட்சர் பரிசனை வென்றுள்ளனர்.
- யாசின் தர், முக்தர் கான் மற்றும் சன்னி ஆனந்த் ஆகியோர் இந்த விருதினை வென்றுள்ளனர்.
- இந்த விருதானது 1917 ஆம் ஆண்டில் ஜோசப் புலிட்சரால் ஏற்படுத்தப் பட்டது.
- இந்த விருதானது கொலம்பியா பல்கலைக் கழகத்தினால் நிர்வகிக்கப் படுகின்றது.
- இது புத்தக வெளியீடு, பத்திரிக்கை, நிகழ்நேர/இணையப் பத்திரிக்கைத் துறை, இசைத் தொகுப்பு மற்றும் இலக்கியம் ஆகியவற்றில் நிகழ்த்தப் பட்ட சாதனைகளுக்காக வழங்கப் படுகின்றது.




## ஆர்டர் ஆஃப் ரைசிங் சன் (உதய சூரியனின் ஆணை) விருது

- ஜப்பான் அரசானது மணிப்பூர் மருத்துவரான தங்ஜம் தபாலி சிங்குக்கு 'ஆர்டர் ஆஃப் ரைசிங் சன்' எனும் விருதை வழங்கியுள்ளது.
- இந்தியாவில் ஜப்பானைப் பற்றி நன்கு புரிந்து கொள்ளவும், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை ஆழப்படுத்தவும் உதவிய அவருக்கு இது வழங்கப் பட்டுள்ளது.

- இரண்டாம் உலகப் போரின் போது போரிடப்பட்ட இம்பால் போரின் 70வது ஆண்டு நிறைவு விழாவை சிங் ஏற்பாடு செய்திருந்தார்.
- இந்த விருதை ஜப்பானியப் பேரரசர் மீஜி 1875 ஆம் ஆண்டில் ஏற்படுத்தினார்.
- இது சர்வதேச உறவுகளில் சாதனைகள், ஜப்பானியக் கலாச்சாரத்தை மேம்படுத்துதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நலன் புரிதல் அல்லது தமது துறைகளில் சாதனைகள் புரிந்தவர் ஆகியோருக்கு வழங்கப் படுகிறது.



## 2019 ஆம் ஆண்டின் அலெக்சாந்தர் டால்ரிம்பிள் விருது

- இந்திய அரசின் தேசிய நீர்ப்பரப்பியல் துறை வல்லுநரான துணைக் கடற்படை அதிகாரி வினய் பத்வாருக்கு இந்த விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது.
- இந்திய நீர்ப்பரப்பியல் துறை மற்றும் மிகப் பரந்த இந்தியப் பெருங்கடல் பகுதியில் இவரது தலைசிறந்தப் பங்களிப்பிற்காக இந்த விருதானது இவருக்கு வழங்கப் பட்டுள்ளது.
- இது ஐக்கிய இராஜ்ஜியத்தின் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தால் வழங்கப் பட்டுள்ளது.
- இது கடற்படையின் முதலாவது நீர்ப்பரப்பியல் துறை வல்லுநரான அலெக்சாந்தர் டால்ரிம்பிள் என்பவரின் நினைவாக இந்தப் பெயரிடப்பட்டுள்ளது.



## ராம்கின்கர் பாய்ஜ்

- மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் தேசிய நவீனக் கலை கூடமானது "ராம்கின்கர் பாய்ஜ், அமைதியான மாற்றம் மற்றும் வெளிப்பாடுகளின் (உணர்ச்சிகளின்) மூலம் பயணம்" என்ற தலைப்பு கொண்ட ஒரு மெய்நிகர் சுற்றுலாவை நடத்தியுள்ளது.
- இது 2020 ஆம் ஆண்டு மே 26 அன்று ராம்கின்கார் பாய்ஜ் அவர்களின் 115வது பிறந்த தினத்தை அனுசரிப்பதற்காக நடத்தப்பட்டது.
- ராம்கின்கர் பாய்ஜ், (1906 – 1980) என்பவர் புகழ்பெற்ற சிற்பக் கலை வல்லுநர், ஓவியர் மற்றும் வரைபட விளக்கக் கலைஞர் ஆவார்.
- இவர் மேற்கு வங்காளத்தில் உள்ள பான்கூராவில் பிறந்தார்.
- நந்தலால் போஸ் மற்றும் பெனோடேபெஹரி முகர்ஜி ஆகியோருடன் இணைந்து இவர் இந்தியாவின் சுதந்திரத்திற்கு முன்பு நவீனக் கலைக்கான முக்கிய மையங்களில் ஒன்றான சாந்தி நிகேதனை ஏற்படுத்துவதில் முக்கியப் பங்காற்றியுள்ளார்.

## ஆண்டின் ராணுவப் பாலின ஆதரவாளர் விருது

- சமீபத்தில் இந்தியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மகளிர் அமைதிப் படையினர் கூட்டாக 2019 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் ராணுவப் பாலின ஆதரவாளர் விருதினை வென்றுள்ளனர்.
- இந்திய ராணுவத்தைச் சேர்ந்த தளபதி சுமன் கவானி மற்றும் பிரேசிலைச் சேர்ந்த கார்லா மோன்டியிரோ டி கேஸ்ட்ரோ அராஜோ என்ற கமாண்டர் ஆகியோர் இந்த விருதிற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.
- இந்த விருதினைப் பெறும் முதலாவது இந்தியர் தளபதி சுமன் கவானி ஆவார்.
- இந்த விருது 2016 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.
- இது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புத் தீர்மானத்தின் கொள்கைகளை ஊக்குவிக்கும் ராணுவ அமைதிப் படைவீரரின் (தனிநபர்) அர்ப்பணிப்பு மற்றும் முயற்சிகளை அங்கீகரிக்கின்றது.
- தெற்கு சூடானில் ஐக்கிய நாடுகள் அமைதித் திட்டமானது சமீபத்தில் விடுதலை பெற்ற தெற்கு சூடானிற்கான புதிய ஐக்கிய நாடுகள் அமைதிப் படைத் திட்டமாகும். இந்த நாடு 2011 ஆம் ஆண்டு ஜூலை 09 அன்று விடுதலை பெற்றது.
- இது 1996 ஆம் ஆண்டின் ஐக்கிய நடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.



# விளையாட்டுச் செய்திகள்

## MRF சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் டெஸ்ட் போட்டித் தரவரிசை

- டெஸ்ட் கிரிக்கெட் போட்டித் தர வரிசையில் இந்தியா ஆஸ்திரேலியாவிடம் முதலிடத்தை இழந்து உள்ளது.
- சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் டெஸ்ட் போட்டித் தர வரிசையில் ஆஸ்திரேலியா முதலிடத்தைப் பிடித்த நிலையில், இந்தியா 3வது இடத்தையும், நியூசிலாந்து 2வது இடத்தையும் பெற்றுள்ளன.
- 2016 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குப் பிறகு முதல் முறையாக இந்தியா டெஸ்ட் பட்டியலில் முதலிடத்தில் இருந்து மாற்றப் பட்டுள்ளது.

## உமிழ்நீரைப் பயன்படுத்தத் தடை

- முன்னாள் இந்தியக் கிரிக்கெட் அணி வீரரான அனில் கும்பளே தலைமையிலான ஐசிசி கிரிக்கெட் குழுவானது (சர்வதேச கிரிக்கெட் குழு) கிரிக்கெட் பந்து பிரகாசிப்பதற்காக அதன் மீது உமிழ்நீரைப் பயன்படுத்தத் தடை விதித்துள்ளது.
- பந்து சுழல்வதற்காக மேற்கொள்ளப்படும் இந்த நடைமுறையானது கோவிட் – 19 நோய்த் தொற்றின் காரணமாக சுகாதார அபாயமாகக் கருதப்படுகிறது.
- எனினும் ஐசிசி கிரிக்கெட் குழுவானது பந்து சுழல்வதற்காக வேண்டி வியர்வையைப் பயன்படுத்துவதில் எந்தவிதத் தீங்கும் இல்லை என்று கண்டறிந்து உள்ளது.

# முக்கிய தினங்கள்

## தொழிலாளர் தினம் - மே 01

- இந்த நாள் சர்வதேச தொழிலாளர் தினம் மற்றும் மே தினம் என்றும் அழைக்கப் படுகிறது.
- இந்தியாவில், தொழிலாளர் தினத்தின் மதராஸில் (இப்போது சென்னை) இந்துஸ்தான் தொழிலாளர் கிசான் கட்சியால் 1923 மே 1 அன்று முதன் முதலில் கொண்டாடப் பட்டது.
- அமெரிக்காவின் சிகாகோவில் 1886 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் தேதி ஹேமார்க்கெட் படுகொலை நிகழ்த்தப் பட்டதை நினைவு கூறும் வகையில் தொழிலாளர் தினம் கொண்டாடப் படுகிறது.


## மகாராஷ்டிரா / குஜராத் தினம் - மே 01

- 1960 ஆம் ஆண்டில், பம்பாய் மறுசீரமைப்புச் சட்டமானது இந்தியாவின் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப் பட்டது. பம்பாய் என்ற பன்மொழி மாநிலத்தை குஜராத் மற்றும் மகாராஷ்டிராவாக இது பிரித்தது.
- இந்தச் சட்டமானது 1960 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.




## உலக சூரை மீன் தினம் – மே 2

- இது சூரை மீன் இனங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகளால் அனுசரிக்கப்படுகின்றது.
- இது 2017 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- சூரை மீன் இனமானது மொத்தக் கடல் மீன் பிடிப்பில் 20% பங்கையும் உலக அளவில் வர்த்தகம் செய்யப்படும் கடல் உணவில் 8% பங்கையும் கொண்டுள்ளது.





## சர்வதேச வானியல் தினம் – மே 2

- இது ஆண்டிற்கு இரு முறை, அதாவது செப்டம்பர் 26 மற்றும் மே 2 ஆகிய தினங்களில் அனுசரிக்கப் படுகின்றது.
- இது சர்வதேச வானியல் ஒன்றியத்தினால் (IAU - International Astronomical Union) ஒருங்கிணைக்கப் படுகின்றது.
- IAU ஆனது 1919 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டதாகும்.
- இந்தியா IAU அமைப்பில் உறுப்பினராக உள்ளது.
- இதன் தலைமையகம் பிரான்சில் அமைந்துள்ளது.
- சர்வதேச வானியல் ஆண்டானது 2009 ஆம் ஆண்டு அனுசரிக்கப் பட்டது.

- இது கலிலியோவின் கண்டுபிடிப்புகளின் 400வது ஆண்டு நினைவு தினத்தை அனுசரிப்பதற்காகவும் 17ம் நூற்றாண்டில் கெப்ளரின் கண்டுபிடிப்புகளை அனுசரிப்பதற்காகவும் வேண்டி 2009 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- 1609 ஆம் ஆண்டில், விண்வெளி குறித்த பார்வையில் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் கலிலியோ முதன்முறையாக நிலவில் உள்ள பள்ளங்கள் மற்றும் மலைகளைக் கண்டறிந்தார்.

## உலகப் பத்திரிக்கைச் சுதந்திர தினம் – மே 03

- இது 1993 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் பறை சாட்டப்பட்டது.
- மே 3 என்ற தினமானது விண்ட்ஹூக் பிரகடனத்தின் (Windhoek Declaration) நினைவு தினத்தைக் குறிக்கின்றது.
- இது 1991 ஆம் ஆண்டில் நமீபியாவின் தலைநகரான விண்ட்ஹூக்கில் ஆப்பிரிக்க செய்தித்தாள் பத்திரிக்கையாளர்களால் கொண்டு வரப்பட்ட சுதந்திரமான பத்திரிக்கைக்கான கொள்கைகளின் கூற்றாகும்.
- யுனெஸ்கோ ஆனது யுனெஸ்கோ/கில்லிரிமோ கேனோ உலகப் பத்திரிக்கைச் சுதந்திரப் பரிசை வழங்குவதன் மூலம் இத்தினத்தை அனுசரிக்கின்றது.
- இது உலகம் முழுவதும் பத்திரிக்கைச் சுதந்திரத்தின் பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பிற்காக தலைசிறந்த பங்களிப்புகளை ஆற்றிய தனிநபர்கள், அமைப்பு மற்றும்/அல்லது நிறுவனங்களுக்கு வழங்கப் படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "சாதகமும் பயமும் அற்ற பத்திரிக்கைத் துறை" என்பதாகும்.
- 1993 ஆம் ஆண்டு முதல், ஆண்டுதோறும் உலகளாவியக் கருத்தரங்கானது நடத்தப் படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டின் உலகப் பத்திரிக்கைச் சுதந்திரக் கருத்தரங்கை நடத்தும் நாடு நெதர்லாந்து ஆகும்.




## உலகச் சிரிப்பு தினம் – மே 03


- இது முதன்முதலில் 1998 ஆம் ஆண்டு மே 10 அன்று இந்தியாவில் உள்ள மும்பையில் அனுசரிக்கப்பட்டது.
- இத்தினமானது 1998 ஆம் ஆண்டில் உலகளாவிய சிரிப்பு யோகா இயக்கத்தின் நிறுவனரான டாக்டர் மதன் கட்டாரியாவினால் ஒருங்கிணைக்கப் பட்டது.

## சர்வதேசத் தீயணைப்பு வீரர்கள் தினம் – மே 04

- இது 1999 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.
- ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட மிகப்பெரிய காட்டுத் தீ நிகழ்வின் போது 5 தீயணைப்பு வீரர்கள் உயிரிழந்ததன் காரணமாக உலகம் முழுவதும் இத்தினத்தின் அனுசரிப்பு குறித்த ஒரு பரிந்துரையானது அப்போது வைக்கப்பட்டது.
- சர்வதேச தீயணைப்பு வீர்கள் தினத்திற்கான குறியீடு சிவப்பு மற்றும் நீல நிற நாடாவாகும்.
- சிவப்பு நிறம் தீயையும் நீல நிறம் நீரையும் குறிக்கின்றது.

## நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் தினம் – மே 04

- நிலக்கரிச் சுரங்கத்தின் மிகக் கடுமையான தொழில் மற்றும் அதில் பணியாற்றும் மக்கள் ஆகியவற்றை எடுத்துக் காட்டுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் மே 4 ஆம் தேதியன்று நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- பூமியில் மிகப் பரவலாகக் காணப்படும் புதைபடிவ எரிபொருள் நிலக்கரி ஆகும். நிலக்கரிச் சுரங்கம் என்பது பூமியிலிருந்து நிலக்கரியைப் பிரித்தெடுக்கும் ஒரு செயல்முறையாகும்.
- இந்தியாவில் சுரங்கத் தொழிலானது 1774 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஜான் சம்னெர் மற்றும் சுடோனியஸ் கிராண்ட் ஹெல்த்தி ஆகியோர் மேற்கு தாமோதர் நதிப் பகுதியில் மேற்கு வங்கத்தில் உள்ள ராணிகஞ்ச் நிலக்கரிச் சுரங்கத்தில் வணிக ரீதியான சுரங்கத் தொழிலைத் தொடங்கினர்.
- ஒடிசா, ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம், சத்தீஸ்கர், மற்றும் அதையொட்டி இருக்கும் நாட்டின் மத்திய மற்றும் தெற்குப் பகுதிகள் ஆகியவை நிலக்கரி அதிகமுள்ள பகுதிகளாகும்.
- பாதிக்கும் மேற்பட்ட இந்தியாவின் வணிக ரீதியிலான மின்சார ஆற்றல் தேவைகள் நிலக்கரியினால் பூர்த்தி செய்யப் படுகின்றன.




## உலக ஆஸ்துமா தினம் – மே 05

- 2020 ஆம் ஆண்டின் உலக ஆஸ்துமா தினத்தின் கருத்துரு, "ஆஸ்துமாவினால் ஏற்பட்ட இறப்புகள் போதும்" என்பதாகும்.
- இந்த வருடாந்திர அனுசரிப்பானது ஆஸ்துமாவிற்கான உலகளாவிய முன்னெடுப்புகளினால் (GINA - the Global Initiative for Asthma) ஒருங்கிணைக்கப் படுகின்றது.

- இது 1993 ஆம் ஆண்டில் தேசிய சுகாதார நிறுவனம் தேசிய இதய, நுரையீரல் மற்றும் இரத்த நிறுவனம் மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றினால் இணைந்து தொடங்கப் பட்டது.
- ஆஸ்துமா என்பது மிகவும் முக்கியமான தொற்றா நோய்களில் ஒன்றாகும்.

## சர்வதேச மருத்துவத் தாதிகள் தினம் – மே 05

- இத்தினமானது சர்வதேச மருத்துவத் தாதிகள் கூட்டமைப்பினால் (ICM - International Confederation of Midwives) அனுசரிக்கப் படுகின்றது.
- இது மருத்துவத் தாதிகளின் நிலை குறித்தும் தாய்மார்கள் மற்றும் அவர்களின் பிறந்த குழந்தைகளுக்கு இவர்கள் ற்றும் பணிகள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “கொண்டாடுதல், செயல் விளக்கமளித்தல், தயாராக இருத்தல், ஒன்றிணைதல்” என்பதாகும்.

## வெசாக் – புத்த பூர்ணிமா - முழு நிலவு தினம் – மே 07

- இது உலகம் முழுவதும் உள்ள புத்தத் துறவிகளுக்கான ஒரு புனித தினமாகும்.
- இரண்டரை நூற்றாண்டுகளுக்கு முன்பு கி.மு. 623 ஆம் ஆண்டில் வெசாக் தினத்தின் போது புத்தர் பிறந்தார்.
- மேலும் மற்றொரு வெசாக் தினத்தன்று புத்தர் ஞானோதயத்தையும் பெற்றார்.
- மேலும் மற்றொரு வெசாக் தினத்தன்று புத்தர் தனது 80வது அகவையில் காலமானார்.
- இந்தத் தினமானது 2000 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஐக்கிய நாடுகளால் அனுசரிக்கப் படுகின்றது.



## உலகத் தடகள தினம் – மே 07

- இது முதன்முறையாக 1996 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- இந்தத் தினத்தை சர்வதேச முறைசாராத தடகளக் கூட்டமைப்பு (IAAF - International Amateur Athletic Federation) அறிமுகப் படுத்தியது.
- இது தடகளப் போட்டிகளில் இளைஞர்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதற்காக அனுசரிக்கப் படுகின்றது.

## உலக செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறை நாள் – மே 8

- ❖ இது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறை இயக்கத்தின் கொள்கைகளின் ஆண்டுக் கொண்டாட்டமாகும்.
- ❖ இந்தத் தினம் 1828 ஆம் ஆண்டு மே மாதம் 8 தேதி அன்று பிறந்த ஹென்றி டுனன்ட் அவர்களின் பிறந்தநாள் ஆகும்.
- ❖ இவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நிறுவனர் மற்றும் முதல் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் ஆவார்.
- ❖ உலக செஞ்சிலுவைச் சங்கம் உணவுப் பற்றாக்குறை, இயற்கைப் பேரழிவுகள், போர்கள் மற்றும் கொள்ளை நோய்களின் போது உதவியை வழங்குகிறது.

## ஐரோப்பாவின் வெற்றி தினம் – மே 8





- ❖ இது 1945 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் தேதியன்று நாஜி ஜெர்மனி தனது ஆயுதப் படைகளை நிபந்தனையின்றிச் சரணடையச் செய்ததை இரண்டாம் உலகப் போரின் நட்பு நாடுகள் முறையாக ஏற்றுக் கொண்டதைக் கொண்டாடும் நாள் ஆகும்.
- ❖ இது ஐரோப்பாவில் இரண்டாம் உலகப் போரின் முடிவைக் குறிக்கிறது.
- ❖ இரண்டாம் உலகப் போரின் போது உயிர்களை இழந்தவர்களுக்கு நினைவு அஞ்சலியும் ஆறுதலும் கூறும் நேரம் என்ற தினமும் இந்த நாளில் கொண்டாடப் படுகிறது.
- ❖ இந்த நாள் 2004 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்டது. அன்றிலிருந்து இத்தினம் ஐக்கிய நாடுகள் சபையால் நினைவு கூறப்பட்டு வருகின்றது.

## உலக இரத்த அழிவுச்சோகை தினம் – மே 8

- ❖ 2020 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் என்னவென்றால் - 'இரத்த அழிவுச்சோகைக்கு வேண்டி ஒரு புதிய சகாப்தத்தின் விடியல் - சிறந்த சிகிச்சை முறைகளை நோயாளிகளுக்கு அணுகக் கூடியதாகவும், விலை மலிவாகவும் வேண்டிய முறையில் மாற்றுவதற்கான உலகளாவிய முயற்சிக்கான நேரம்' என்பதாகும்.
- ❖ இது இரத்த அழிவுச்சோகை சர்வதேசக் கூட்டமைப்பால் 1994 ஆம் ஆண்டு முதல் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.
- ❖ இது ஒரு மரபுவழி இரத்தக் கோளாறாகும். இது நமது உடலில் இயல்பை விட குறைவான சிவப்பணுப் புரதம் இருக்கக் காரணமாகிறது.
- ❖ சிவப்பணுப் புரதமானது சிவப்பு இரத்த அணுக்கள் ஆக்ஸிஜனை எடுத்துச் செல்ல உதவுகிறது.

- இரத்த அழிவுச்சோகை நோயாளிகள் குறைந்த அளவு சிவப்பணுப் புரதம் காரணமாக இரத்தச் சோகையால் பாதிக்கப் படுகின்றனர்.
- இரத்த அழிவுச்சோகையால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள மாநிலம் மேற்கு வங்கம் ஆகும்.




## உலக இடம்பெயரும் பறவைகள் தினம் (WMBD) – மே 09

- இது அமெரிக்காவிற்கான சுற்றுச்சூழல் (EFTA - Environment for the Americas) என்ற அமைப்புடன் இணைந்து இடம்பெயரும் உயிரினங்கள் மீதான ஒப்பந்தம் (CMS - Convention on Migratory Species), ஆப்பிரிக்க-யூரேசிய நீர்ப்பறவை ஒப்பந்தம் (AEWA - African-Eurasian Waterbird Agreement) ஆகியவற்றினால் ஒருங்கிணைக்கப்படுகின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “பறவைகள் நமது உலகத்தை இணைக்கின்றன” என்பதாகும்.
- 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர், சர்வதேச இடம்பெயரும் பறவைகள் தினம் (IMBD - International Migratory Bird Day) மற்றும் உலக இடம்பெயரும் பறவைகள் தினம் (WMBD - World Migratory Bird Day) என்று 2 உலகின் மிகப்பெரிய பறவை விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.
- 2017 ஆம் ஆண்டில், மணிலாவில் நடைபெற்ற CMS பங்காளர்கள் மாநாட்டின் 12வது அமர்வின் போது EFTA, CMS மற்றும் AEWA ஆகியன இணைந்து உலகம் முழுவதும் இடம்பெயரும் பறவைகளின் பயணம் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக ஒரு புத்தாக்கப் பங்களிப்பை அறிவித்துள்ளன.
- 2018 ஆம் ஆண்டு முதல், ஒரு புதிய கூட்டுப் பிரச்சாரமானது WMBD என்ற ஒற்றைப் பெயரை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இந்தத் தினத்தை அனுசரிப்பதற்கான முக்கியமான நிகழ்வுகளானது ஆண்டிற்கு 2 முறை, அதாவது மே மற்றும் அக்டோபர் ஆகிய மாதங்களின் 2வது சனிக்கிழமையன்று அனுசரிக்கப் படுகின்றது.

### *CMS பற்றி*

- தனது உறுப்பு நாடுகள் முழுவதிலும் இடம்பெயரும் உயிரினங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் கீழ் CMS ஆனது நடைமுறையில் உள்ளது.
- இது பான் ஒப்பந்தம் (Bonn Convention) என்றும் அழைக்கப்படுகின்றது.
- CMS என்பது உறுப்பு நாடுகள் முழுவதும் இருக்கும் நிலப் பகுதி மற்றும் நீர்ப் பகுதியைச் சார்ந்த வகையிலான பறவை இனங்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை ஆகியவற்றிற்காக ஏற்படுத்தப்பட்ட உலகளாவிய மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கங்களுக்கிடையேயான ஒரே அமைப்பு இதுவாகும்.




## உலக நியாயமான வர்த்தக தினம் – மே 09

- இது உலக நியாயமான வர்த்தகக் கூட்டமைப்பினால் வலியுறுத்தப்படுகின்றது.
- இது உலகம் முழுவதும் 75 நாடுகளிலிருந்து 450ற்கும் மேற்பட்ட அமைப்புகளை கொண்ட நியாயமான வர்த்தகம் குறித்த ஒரு உலகளாவிய ஆணையமாகும்.
- இந்த ஆண்டின் கருத்துரு, "பூமியில் நியாயமான வர்த்தகம், புதிய பொருளாதாரத்திற்கான நிறுவனங்கள்" என்பதாகும்.

## உலக கை சுகாதார தினம் – மே 05

- உலக சுகாதார நிறுவனமானது இத்தினத்தை அனுசரிக்கின்றது.
- இந்த ஆண்டின் கருப்பொருள், "உயிர்களைக் காப்பாற்றுதல்; உங்களது கைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்" என்பதாகும்.
- இது செவிலியர்கள் மற்றும் மருத்துவ தாதிகளுக்கான ஆண்டுடன் ஒன்றிப் பொருந்துகின்றது.




## உலக அன்னையர்கள் தினம் – மே 10

- இது ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தின் இரண்டாவது ஞாயிறன்று மிகப்பெரிய அளவில் அனுசரிக்கப் படுகின்றது.
- அமெரிக்காவில் நவீன கால அன்னையர்கள் தினமானது 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அன்னா ஜார்விஸ் என்பவரின் முன்னெடுப்பின் மூலம் தொடங்கப் பட்டது.
- 1914 ஆம் ஆண்டில், அமெரிக்காவின் ஜனாதிபதி உட்ரோ வில்சன் மே மாதத்தின் 2வது ஞாயிற்றுக் கிழமையைத் தேசிய விடுமுறையாக அறிவிக்கும் ஒரு தீர்மானத்தில் கையெழுத்திட்டார்.

## தேசியத் தொழில்நுட்ப தினம் – மே 11

- ஒவ்வொரு ஆண்டும் இத்தினமானது இந்தியாவின் சிறந்த தொழில்நுட்ப முன்னேற்றங்களை நினைவு கூர்வதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- இந்த ஆண்டின் கருப்பொருள், "அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்துவதின் மீது கவனம் செலுத்துதல்" என்பதாகும்.
- 1998 ஆம் ஆண்டு மே 11 ஆம் தேதியன்று, இந்தியா தனது முதலாவது வெற்றிகரமான சக்தி – 1 என்ற அணு ஆயுத ஏவுகணையை சோதனை செய்தது.
- இந்த ஏவுகணையானது இராஜஸ்தானில் உள்ள இந்திய ராணுவத்தின் பொக்ரான் சோதனைத் தளத்தில் சோதனை செய்து பார்க்கப்பட்டது.
- இந்தச் சோதனையானது, "சக்தி நடவடிக்கை" (பொக்ரான் II) என்று அழைக்கப் படுகின்றது.
- இந்த வெற்றிகர சோதனைக்குப் பின்பு, பிரதமர் வாஜ்பாய் இந்தியாவை அணு ஆயுத நாடாக அறிவித்தார்.
- இது நமது நாட்டின் முன்னாள் குடியரசுத் தலைவரான டாக்டர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.
- இது P5 எனப்படும் ஐநா நிரந்தர உறுப்பு நாடுகளுக்குப் பிறகு அணு ஆயுத மன்றத்தில் இணையும் 6வது நாடாக இந்தியாவை மாற்றியுள்ளது.
- மேலும் இது அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் (NPT - Non- Proliferation of Nuclear Weapons Treaty) இணையாத முதலாவது நாடாகவும் இந்தியாவை மாற்றி உள்ளது.
- இதற்கு முன்பு இந்தியாவின் முதலாவது அணு ஆயுதச் சோதனை "சிரிக்கும் புத்தர்" (பொக்ரான் - 1) என்பதாகும்.
- இது 1974 ஆம் ஆண்டு மே மாதத்தில் பொக்ரானில் மேற்கொள்ளப்பட்டது.
- மே 11 ஆனது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது திரிசூல் ஏவுகணையைச் சோதனை செய்த நாளையும் குறிக்கின்றது.
- மேலும் இது "ஹன்சா – 3" என்ற முதலாவது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட விமானத்தின் விமானப் பயணத்தையும் குறிக்கின்றது.




## சர்வதேச செவிலியர்கள் தினம் – மே 12

- ப்ளோரின்ஸ் நைட்டிங்கேலின் பிறந்த தினமானது சர்வதேச செவிலியர்கள் தினமாக அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தத் தினத்தை சர்வதேச செவிலியர்கள் மன்றம் முன்னின்று அனுசரிக்கின்றது.

- இந்த ஆண்டின் கருப்பொருள், "செவிலியர்கள் : தலைமைக்கான ஒரு குரல் - ஆரோக்கியத்திற்கு வேண்டி உலகிற்கு செவிலியப் பணி அவசியம்" என்பதாகும்.




- இது உலகளாவிய சுகாதார நலத்தை அடைவதற்காக உலக சுகாதார அமைப்பினால் அனுசரிக்கப் படுகின்றது.
- நைட்டிங்கேல் "விளக்குடன் உள்ள பெண்மணி" என்று அழைக்கப் படுகின்றார்.
- இவர் இத்தாலியில் ஒரு செல்வமிக்க ஆங்கிலேயக் குடும்பத்தில் பிறந்தார்.




## அருகி வரும் உயிரினங்கள் தினம் – மே 15

- இது முதன்முறையாக 2006 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- இது அருகி வரும் உயிரினங்கள் மற்றும் அவற்றின் வாழிடங்களைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்படும் தேசிய அளவிலான பாதுகாப்பு முயற்சிகளை அங்கீகரிக்கின்றது.
- அருகி வரும் உயிரினங்கள் என்பது சுற்றுச்சூழலின் நேரடி அல்லது புவியியல் மற்றும் உயிரியியல் நிலைகளில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக அழியும் நிலையில் உள்ள உயிரினங்களைக் குறிக்கின்றது.
- பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் (IUCN - International Union for Conservation of Nature) சிவப்பு தரவுப் பட்டியலானது, மிகப் பரந்த அளவிலான அருகிவரும் இனங்களை உள்ளடக்கியுள்ளது
- IUCN-ன் கூற்றுப் படி, அருகிவரும் இனங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளவற்றில் ஏதேனும் ஒன்றைப் பூர்த்தி செய்ய வேண்டும். அவையாவன
  - கடந்த 10 ஆண்டுகளில் அந்த இனத்தின் எண்ணிக்கையில் 50-70% குறைதல்.
  - மொத்தப் புவியியல் வாழிடப் பகுதியானது 5000 சதுர கிலோ மீட்டருக்குக் குறைவாக அல்லது உள்ளூர் உயிரின எண்ணிக்கையின் வாழிடப் பரப்பானது 500 சதுர கிலோ மீட்டருக்குக் குறைவாக இருத்தல்.
  - ஒரு இனத்தின் பதின்ம வயது எண்ணிக்கையானது 2500ற்குக் குறைவாக இருத்தல்.
  - கட்டுப்படுத்தப்பட்ட பதின்ம வயது இனத்தின் எண்ணிக்கை 250 அல்லது அடுத்த 20 ஆண்டுகளுக்குள் அந்த இனம் அழியப் போகும் என்ற புள்ளியியல் கணிப்பு.

## சர்வதேச குடும்பங்கள் தினம் – மே 15

- இது 1994 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த ஆண்டின் கருப்பொருள், "வளர்ச்சிப் பாதையில் குடும்பங்கள்: கோப்பன்ஹேகன் & பெய்ஜிங்+25" என்பதாகும்.

- இந்த ஆண்டானது கோப்பன்ஹேகன் பிரகடனம் மற்றும் செயல்திட்டத்திற்கான பெய்ஜிங் தளம் (1995) என்பதின் 25வது ஆண்டாகும்.
- கோப்பன்ஹேகன் பிரகடனம் என்பது 1995 ஆம் ஆண்டில் சமூக மேம்பாட்டிற்கான உலக மாநாட்டில் வெளியிடப்பட்ட ஒரு பிரகடனமாகும்.
- பெய்ஜிங் பிரகடனம் என்பது 1995 ஆம் ஆண்டில் 4வது உலகப் பெண்கள் கருத்தரங்கின் முடிவில் ஐ.நா. பொதுச் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தீர்மானமாகும்.

## சர்வதேச ஒளி தினம் – மே 16

- இது 1960 ஆம் ஆண்டில் இயற்பியல் வல்லுநர் மற்றும் பொறியாளரான தியோடர் மெய்மன் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது வெற்றிகரமான லேசர் செயல்பாடுகளின் நினைவைக் குறிக்கின்றது.
- இது 2018 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவினால் தொடங்கி வைக்கப்பட்டது.


## 45வது சிக்கிம் தினம் – மே 16

- இது 1975 ஆம் ஆண்டில் முடியாட்சியிலிருந்து நாட்டின் 22வது மாநிலமாக சிக்கிம் உருவெடுத்த தினத்தைக் குறிக்கின்றது.
- நாட்டின் முதலாவது முழுவதுமான கரிம வேளாண் மாநிலம் சிக்கிம் ஆகும்.
- தற்பொழுது வரை, இந்தியாவில் கோவிட் நோய்த் தொற்று இல்லாத ஒரே மாநிலம் சிக்கிம் மட்டுமே ஆகும்.



## உலக உயர் இரத்த அழுத்த தினம் – மே 17

- இது உலக உயர் இரத்த அழுத்தக் குழுமத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடங்கப் பட்ட ஒரு தினமாகும்.
- 2020 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "உங்களது இரத்த அழுத்தத்தை அளவிடுங்கள், அதைக் கட்டுப்படுத்துங்கள், நீண்ட காலம் வாழ்வீர்கள்" என்பதாகும்.
- இது ஆரம்பக் கட்டத்தில் எந்தவொரு அறிகுறியையும் வெளிக்காட்டாததால் "மெதுவாகக் கொல்லும் நோய்" என்றறியப் படுகின்றது.




## உலகத் தகவல் சமூக தினம் – மே 17

- இத்தினமானது இதற்கு முன்பு "உலக தொலைத் தொடர்பு" தினமாக அறியப்பட்டது. இது 1865 ஆம் ஆண்டு மே 17 அன்று சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் தொடங்கப் பட்டதை நினைவு கூர்வதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- இது 2005 ஆம் ஆண்டில் துனிசியாவின் தலைநகரான துனிசில் நடைபெற்ற உலகத் தகவல் சமூக மாநாட்டைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் ஒரு தீர்மானத்தினால் ஒரு சர்வதேச தினமாகப் பறை சாட்டப் பட்டது.
- இந்த ஆண்டின் கருத்துரு, "2030ஐ இணைத்தல்: வளம் குன்றா வளர்ச்சி இலக்குகளுக்கு வேண்டிய தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பம்" என்பதாகும்.

## உலக எய்ட்ஸ் தடுப்பு மருந்து தினம் – மே 18

- இது கிளிண்டன் உரையின் நினைவு தினத்தை அனுசரிப்பதற்காக 1998 ஆம் ஆண்டு மே 18 அன்று அனுசரிக்கப் பட்டது.
- அதற்கு சரியாக ஒரு வருடத்திற்கு முன்பு, அதாவது 1997 ஆம் ஆண்டு மே 18 அன்று அப்போதைய அமெரிக்க அதிபரான பில் கிளிண்டன் இந்தக் கொடிய நோய்க்கு ஒரு தடுப்பு மருந்தை உருவாக்குவதன் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்.
- தேசிய ஒவ்வாமை மற்றும் தொற்று நோய் நிறுவனமானது உலக எய்ட்ஸ் தடுப்பு மருந்து தினம் அல்லது எச்ஐவி வைரஸ் (தீநுண்மி) விழிப்புணர்வுத் தினத்தை அனுசரிக்கிறது.

## சர்வதேச அருங்காட்சியக தினம் – மே 18

- இது சர்வதேச அருங்காட்சியகங்கள் ஆணையத்தினால் ஒருங்கிணைக்கப் படுகின்றது.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "சமத்துவத்திற்காக வேண்டி அருங்காட்சியகங்கள் : பன்முகத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கல்" என்பதாகும்.




## உலக தேனீ தினம் – மே 20

- இது ஐக்கிய நாடுகளினால் அனுசரிக்கப் படுகின்றது.
- இது 2018 ஆம் ஆண்டில் அதிகாரப் பூர்வமாக தொடங்கப்பட்டது.
- இந்த ஆண்டின் கருத்துரு, "தேனீக்களைப் பாதுகாத்தல்" என்பதாகும்.
- இது ஸ்லோவேனியாவைச் சேர்ந்த தேனீ வளர்ப்பின் முன்னோடியான அன்டோன் ஜன்சா என்பவரின் பிறந்த தினத்தை நினைவு கூர்வதற்காக அனுசரிக்கப் படுகின்றது.

## உலக அளவையியல் தினம் – மே 20

- இத்தினமானது 1875 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் தேதி அன்று மீட்டர் ஒப்பந்தம் கையெழுத்தானதை அனுசரிக்கின்றது.
- சர்வதேச எடைகள் மற்றும் அளவீடுகள் அமைப்பானது இந்த ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப் பட்டதாகும்.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "உலக வர்த்தகத்திற்காக வேண்டி அளவீடுகள்" என்பதாகும்.

## உரையாடல் மற்றும் வளர்ச்சிக்கான கலாச்சாரப் பன்முகத் தன்மைக்கான உலக தினம்

- இது பன்முகத் தன்மை சார்ந்த விவகாரங்களை ஊக்குவிப்பதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒரு சர்வதேச விடுமுறையாகும்.
- இது 2001 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானில் பாமியானில் புத்தர் சிலைகள் உடைக்கப் பட்டதன் விளைவாக ஏற்படுத்தப் பட்டது.

## முதலாவது சர்வதேச தேயிலை தினம் – மே 21

- இந்தியாவின் தொடர் முயற்சிகளின் காரணமாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது மே 21 ஆம் தேதியை "சர்வதேச தேயிலை தினமாக" அறிவிப்பது குறித்த ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- இது ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பினால் 2019 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- சீனாவிற்குப் பிறகு தேயிலையை அதிகளவில் உற்பத்தி செய்யும் இரண்டாவது மிகப்பெரிய நாடு இந்தியா ஆகும்.

- இந்தியா உலகின் மொத்தத் தேயிலை உற்பத்தியில் 23%ஐக் கொண்டுள்ளது.
- மேலும் கருப்புத் தேயிலையை உற்பத்தி செய்து அதனை நுகரும் உலகின் மிகப்பெரிய நாடு இந்தியா ஆகும்.

## தேசிய தீவிரவாத எதிர்ப்பு தினம் – மே 21

- இத்தினமானது 1991 ஆம் ஆண்டில் படுகொலை செய்யப்பட்ட இந்தியாவின் முன்னாள் பிரதமரான இராஜீவ் காந்தியின் நினைவு தினத்தை அனுசரிப்பதற்காக இந்தியாவில் மே 21 அன்று அனுசரிக்கப்படுகின்றது.
- இது அதிகரித்து வரும் தீவிரவாதம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வேண்டி அனுசரிக்கப்படுகின்றது. எனவே இதன்மூலம் குடிமக்கள் தீவிரவாத நடவடிக்கைகளைத் தடுக்க முடியும்.

## சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மை தினம் – மே 22

- இது உயிரியல் பன்முகத் தன்மை ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த தினத்தைக் குறிப்பதற்காக டிசம்பர் 29 அன்று அனுசரிக்கப் பட்டது.
- இது பின்னர் 1992 ஆம் ஆண்டின் ரியோ புவி மாநாட்டு ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளப் பட்டதை அனுசரிப்பதற்காக மே 22 என்ற தேதிக்கு மாற்றப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டின் கருத்துரு, "நமக்கான தீர்வுகள் இயற்கையில் உள்ளன" என்பதாகும்.




## உலக ஆமைகள் தினம் – மே 23

- இது ஆமைகள் மற்றும் அவற்றின் வாழிடங்கள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- 2000 ஆம் ஆண்டு முதல், "அமெரிக்க ஆமை மீட்பு" என்ற ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பானது இத்தின அனுசரிப்பிற்காக வேண்டி தனது ஆதரவினை வழங்குகின்றது.
- இந்த ஆண்டானது உலக ஆமைகள் தினத்தின் 20வது நினைவு ஆண்டாகும்.

## சர்வதேச மகப்பேறியல் புழை ஒழிப்பு தினம் மே – 23

- ஐக்கிய நாடுகள் அமைப்பானது இத்தினத்தை 2013 ஆண்டு முதல் அனுசரித்து வருகின்றது.
- 2020 ஆம் ஆண்டின் கருத்துரு, "பாலினப் பாகுபாட்டை ஒழித்தல்! சுகாதார சமத்துவமின்மையை ஒழித்தல்! தற்பொழுது புழையை ஒழித்தல்" என்பதாகும்.


- மகப்பேறியல் புழை என்பது குழந்தைப் பிறப்பின் போது ஏற்படும் மிகவும் கடுமையான மற்றும் துயரம் நிறைந்த காயங்களில் ஒன்றாகும்.

## உலக கடல் பசு தினம் – மே 28

- கடல் பசுக்களானது கடல் ஆமைகள், கடல் குதிரைகள், கடல் வெள்ளரிகள் மற்றும் இதர இனங்கள் போன்ற அருகிவரும் கடல்சார் உயிரினமாகும்.
- இது இந்தியாவில் வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம், 1972ன் பட்டியல் I-ன் கீழ் பாதுகாக்கப் படுகின்றது.
- 2013 ஆம் ஆண்டில் இந்திய வனவிலங்கு ஆய்வு மையத்தின் அறிக்கையின்படி தமிழ்நாட்டின் மன்னார் வளைகுடா, அந்தமான் நிக்கோபர் தீவு, மற்றும் குஜராத்தின் கட்ச் வளைகுடா ஆகியவற்றில் ஏறத்தாழ 250 கடல் பசுக்கள் உள்ளன.
- ஒடிசாவின் சிலிக்கா ஏரியில் உள்ள கடல் புற்கள் கடல் பசுக்களுக்கான ஒரு மிகச்சிறந்த வாழிடமாகும்.
- எனினும் தற்பொழுது சிலிக்கா ஏரியில் கடல் பசுக்கள் இல்லை.

## சர்வதேச ஐக்கிய நாடுகள் அமைதி காப்புப் படையினர் தினம் – மே 29

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அமைதி காக்கும் பணியில் பெண்கள் : அமைதிக்கான ஒரு வழி" என்பதாகும்.
- இது பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்த ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைத் தீர்மானம் 1325 என்ற தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளப்பட்டதின் 20வது ஆண்டு நினைவு தினத்தை அனுசரிக்க உதவுகின்றது.
- 1948 ஆம் ஆண்டு மே மாதத்தில் 29 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையானது குறைந்த எண்ணிக்கையிலான ஐ.நா. ராணுவக் கண்காணிப்பாளர்களை மத்தியக் கிழக்கில் பணியில் அமர்த்த அனுமதி வழங்கி அதன் மூலம் முதலாவது ஐ.நா. அமைதிப் படைத் திட்டமானது ஏற்படுத்தப் பட்டது.
- ஒவ்வொரு அமைதி காக்கும் திட்டத்திற்கும் பாதுகாப்புச் சபையினால் ஒப்புதல் அளிக்கப் பட வேண்டும்.
- ஐ.நா. அமைதிப் படையினர் நீலத் தொப்பியினர் அல்லது நீலத் தலைக் கவசத்தினர் என்று அழைக்கப் படுகின்றனர்.



## கோவா மாநில தினம் – மே 30

- 1987 ஆம் ஆண்டு மே 30 ஆம் தேதியன்று கோவா ஆனது இந்திய ஒன்றியத்தின் 25வது மாநிலமாக உருவெடுத்தது.
- இதற்கு முன்பு, டாமன் & டையூவுடன் சேர்ந்து கோவா ஆனது ஒன்றியப் பிரதேசமாக இருந்தது.
- 1961 ஆம் ஆண்டு டிசம்பர் 19 அன்று, இந்திய ராணுவம் போர்ச்சுக்கீசியரின் மீது விஜய் ராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு கோவாவுடன் சேர்த்து டாமன் & டையூ ஆகிய தீவுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைத்தது.




## உலகப் புகையிலை எதிர்ப்பு தினம் – மே 31

- உலக சுகாதார நிறுவனம் மற்றும் அதன் உலகளாவியப் பங்காளர்கள் உலகப் புகையிலை எதிர்ப்பு தினத்தை அனுசரிக்கின்றனர்.
- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "தொழிற்சாலைகளின் புரட்டிலிருந்து இளைஞர்களைப் பாதுகாத்தல் மற்றும் புகையிலை & நிக்கோடின் பயன்பாட்டிலிருந்து அவர்களைத் தடுத்தல்" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★